# வரலாற்றுக்கு முன்
# வடக்கும் தெற்கும்

பேராசிரியர்
**அ. மு. பரமசிவானந்தம், M.A., M.Litt.**
நிறுவனர், வள்ளியம்மாள் கல்வி அறம்,
சென்னை-102

**வள்ளியம்மாள் கல்வி அறம்**
F. 40, முதல் பெருந் தெரு,
அண்ணாநகர் கிழக்கு,
சென்னை-102

524

# வரலாற்றுக்கு முன்
# வடக்கும் தெற்கும்


*பேராசிரியர்*

**அ.மு. பரமசிவானந்தம், M.A., M.Litt.**

*நிறுவனர்*, வள்ளியம்மாள் கல்வி அறம்

சென்னை-102



**வள்ளியம்மாள் கல்வி அறம்**

F. 40, முதல் பெருந் தெரு

அண்ணாநகர் கிழக்கு

சென்னை-102

*முதற் பதிப்பு : மார்ச், 1961*
*திருந்திய இரண்டாம் பதிப்பு : மே, 1990*

**விலை: ரூ. 16-00**

திசை அனைத்தும் தெரிப்பதற்கு முன்னொ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே *(அப்பர்)*

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-600 014.

# முதற்பதிப்பின் முன்னுரை

அண்மையில் இந்து மாபெருங்கடலை ஆழ்ந்து ஆராய்ந்த எழுபது பேரைப்கொண்ட இரஷியாவின் விஞ்ஞான அறிவுக் குழுவினர் அம்மாகடலின் அடிப்பொருள்களை ஆராய்ந்ததன் பயனாக அங்கே 1000 லட்சம் ஆண்டுகளுக்கு முன் (100 Million) நிலப்பரப்பு இருந்ததென்றும், இலங்கைக்குத் தென்கிழக்கில் 550 கல் தொலைவில் ஆழ்கடலில் 10,000 அடி உயர மலை உள்ளதென்றும் முடிவு செய்து அந்த உண்மையை உலகுக்கு உணர்த்தியுள்ளனர். அந்த ஆய்வுக் குழுவின் தலைவராகிய பேராசிரியர் P. பெஸ்ருகௌ (Prof. P. Bezrukov) கல்கத்தாவில் 20-2-61ல் இவ்வுண்மையை வெளியிட்டதோடு, கண்டுபிடிக்கப்பட்ட அந்த ஆழ்கடல் மலைக்கு 15-ஆம் நூற்றாண்டில் இந்துப் பெருங்கடலில் முதல் முதல் கப்பலோட்டிய இரஷியப் பெருமகனாரின் பெயரையே[1] சூட்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.[2] இந்த ஆராய்ச்சியை உலகம் ஏற்று வியக்கின்றது. இத்தகைய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுமானால், நம் நினைவில் உள்ள பல உண்மைகள் வெளியாவதோடு, நாம் நினைத்தே அறியாத பலப்பல புது உண்மைகளும் புலனாகும். இமயம் கடலுள் ஆழ்ந்த காலமும், குமரிக்கண்டம் சிறப்புறத் திகழ்ந்த காலமும் உண்டு என்றால் எள்ளி நகையாடிய காலம் மறையத் தொடங்கிவிட்டது. ஆகவே, அறிவியல் ஆராய்ச்சி நன்கு வளர வளர நமக்குப் பல உண்மைகள் தெரியும். அவற்றுள் பல மனித வரலாற்று ஆராய்ச்சி எல்லையைக் கடந்து நெடுந்தூரம் முன்னே சென்று காண வேண்டிய நிலையில் உள்ளன. பரந்த அண்ட கோளத்தின் ஓர்

---

1. Afanasy Nikitin. 2. The Mall (Daily) 22-2-61.

அணுவாகிய உலகில் நின்றுகொண்டு, கணக்கிட்டறிய முடியாத கால எல்லையில் ஒரு நொடியே நிற்கும் மனித இனத்தின்—வாழும் இன்றைய மனிதன், வரலாற்றை வரையறுக்க முடியாது என்பதை இன்றைய விஞ்ஞான ஆய்வுகள் நிறுவுகின்றன. சிறப்பாகப் பரந்த இந்தியத் துணைக் கண்டத்திலும், அதன் பகுதியாய் உள்ள தமிழகத்திலும் இந்தக் கருத்துக்கள் விளக்கம் பெறாவிட்டாலும், பன்னெடுங் காலமாக நாட்டில் நிலவிக்கொண்டே வருகின்றன.

இந்திய நாட்டு வரலாற்றின் எல்லையை ஆராயத் தொடங்கின், காணும் வரலாற்று மூலங்கள் வழி சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் நம்மால் செல்ல முடியாது என்பது உண்மைதான். என்றாலும், அதற்கு முன் ஒன்றுமே இல்லாத அநாகரிக நாடாய் இது இருந்து, இதன்மேல் 'மையல் கொண்டு' அலெக்ஸாந்தர் வந்தார் என்று ஆராய்ந்து, அதிலிருந்து வரலாற்றைக் கணிக்க முடியுமோ! அலெக்ஸாந்தர் படையெடுப்பே இன்று இந்திய நாட்டு வரலாற்று எல்லைக் கல்லாய் அமைகின்றது.[1] தமிழ் நாடாகிய தென்னகத்தைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் காலத்தை அறுதியிட முடியவில்லை எனச் சிலர் நினைத்தாலும், அதன் காலமாகிய சுமார் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கால எல்லையே வரலாற்று எல்லையாகின்றது. இன்னும் சற்று முன் சென்றால் 5000 ஆண்டுகள் வரை தெளிவற்ற வரலாற்றை ஓரளவு காண இயலும். 'அதற்கு முன் என்ன?' என்னும் கேள்விக்கு வருங்கால ஆராய்ச்சிகளே பதில் சொல்ல வேண்டும்.

தெளிந்த வரலாற்றுக் கால எல்லையாகிய தமிழ்நாட்டுக் கடைச்சங்க கால எல்லையிலும், வடநாட்டு வரலாற்றை வரையறுத்துக் காட்டும் அசோகர் கால எல்லையிலும் கீழ் வரம்பை அறுதியிட்டுக்கொண்டு, தெளிவு பெறாத 5000

---

1. India's Past, by A. A. Macdonell, p. 9.

ஆண்டுவரை செல்லும் அந்தச் சிந்துவெளி - குமரி முனைக் கால எல்லையை மேல் வரம்பாகக்கொண்டு, இரண்டிற்கும் இடையில் நாடு இருந்த நிலையை ஓரளவு காண முற்படுவதே இந்த நூலின் நோக்கமாகும். குமரி தாழ இமயம் உயர்ந்த நாள் எது என்று சொல்ல முடியாவிட்டாலும் அதுவும் உலக வாழ்நாளில் ஒருநாள்தானே என்ற எண்ண அடிப்படையில் தொடங்கி, கடைச்சங்ககால இலக்கியங்கள் காட்டும் வரலாற்று எல்லை வரையில் தெரியும் ஒரு சில பொருள்களை ஆராய்ந்தே இந் நூல் நாட்டுக்குச் சில கருத்துக்களைத் தருகின்றது. இக் கருத்துக்களின் அடிப்படையில் பல அறிஞர் கள் மேனாட்டிலும் வடநாட்டிலும் ஒரு சிலர் தென்னாட்டிலும் ஆராய்ந்துள்ளார்கள். எனினும், அக் காலத்தில் இந்திய நாட்டின் வடக்கும் தெற்கும் இணைந்த நிலையை அவர்கள் தொகுத்துக் காட்டவில்லை. எனவே அவர்களது ஆய்வின் துணைகொண்டே இத்தொகுப்பை நான் வெளியிட நினைத்தேன். இதில் கூறப்பட்ட முடிபு களோ, அன்றிக் கருத்துக்களோ, முடிந்த முடிபினைப் பெற்று விட்டன என்று நான் வாதிட விரும்பவில்லை. இன்று வரலாற்றுலகில் காணும் பல்வேறு பொருள்களும் அவை பற்றி எழுந்த நூல்களும், பிறவும் இந்த முடிபுகளையே நமக்குத் தருகின்றன என்றே நான் காட்ட முயன்றுள்ளேன். வருங்கால ஆராய்ச்சி உலகம் எத்தனையோ புதுப்புது உண்மைகளைக் கண்டு விளக்கலாம். அக்காலையில் இவ்வர லாற்று எல்லையின் வாழ்க்கை முறைகளும் பிறவும் எவ்வாறு அமைந்ததென்று யார் சொல்ல இயலும்? இந்திய நாட்டு வரலாற்றையே 'சிந்துவெளி அகழ்ந்தெடுப்பு' (Indus Valley Civilization) மாற்றி அமைத்ததை உலகம் அறியுமே. எனவே, வருங்கால ஆராய்ச்சிக்கு ஏற்ப ஒரு சில முடிபுகள் மாற்றமும் பெறலாம். எனினும், இன்றைய ஆய்வு நெறிவழி இம்முடிபுகள் ஏறகத்தக்கனவே என எண்ணுகிறேன். அன்றி இப்போதும் முடிபுகள் மாற்றம் பெற வழியும் விளக்கமும் இருப்பினும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளவும் தயங்கேன். இத்துறையில் இது முதல் முயற்சி. வரலாற்றுக்கு முன்

தெற்கையும் வடக்கையும் பிணைத்துப் பார்த்துத் தொகுத்து எழுதியவர் உளரோ என எண்ணுகின்றேன். எனவே, எனது இந்த முதல் முயற்சியில் தவறோ மாறுபாடோ இருப்பின், எடுத்துக்காட்ட அறிஞர்களை வேண்டுகிறேன்.

'வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும்' என்ற இந்நூல் பரந்த பாரத நாடாகிய இந்தியாவின் பழங்கால நிலையினையும், அன்றைய வாழ்க்கை முறை நாகரிகம் முதலியவற்றையும் ஓரளவு காட்டும் என்ற நம்பிக்கையோடு நாட்டு மக்கள் முன் இந்த நூலை வைக்கிறேன். 'வடக்கும் தெற்கும்' பற்றி இன்று வளரும் பல்வேறு கருத்துக்களுக்கு இடையில் அவ்விரண்டின் பிணைப்பினையும் அதன் வழித் தெரிந்த வரலாற்றையும் இந்நூல் எடுத்துக் காட்டும் என்னும் துணிபுடையேன்.

இந்நூல் வெளிவருங்கால், ஒப்பு நோக்கிப் பிழை திருத்தி நல்ல முறையில் அச்சிட்டு வெளிவர உதவிய அறிஞர் மகா வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழ்க்கலை இல்லம்,
சென்னை-30, 24-2-61

பணிவார்ந்த,
**அ. மு. பரமசிவானந்தம்**
தமிழ்த்துறைத் தலைவர்
பச்சையப்பன் கல்லூரி சென்னை 30

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

இந்நூல் எழுதி முப்பது ஆண்டுகள் கழிந்துவிட்டன. இதில்வரும் கட்டுரைகளுள் சில அதற்கு முன்பே இதழ்களில் வெளிவந்தவை. இந்நூலைப் பயின்ற பலரும்; (வங்கநாட்டு நன்னெற்முருகன்—சுனீத்குமார் சாட்டர்ஜி உட்பட, நான் கூறியவை அனைத்தும் ஏற்புடையன என்றனர் 'இராமனும் இராவணனும்' என்ற கட்டுரையினைக் காலஞ்சென்ற பெரியார் அவர்களுக்குப் படித்துக் காண்பித்த காலத்தில், அவர்'' எழுது; நீ உன் கருத்தை , எழுதிக் கொண்டே இரு' என்று தான் சொன்னார்கள். தமிழ்நாட்டுப் பிறவரலாற்று அறிஞர்களும் ஏற்றுக்கொண்டனர் என்றே சொல்லலாம். இதற்கு மாறுபட்ட கருத்தோ—மறுத்த எழுத்தோ இதுவரை வரவில்லை. எனினும் இன்னும் இந்தவகையில் ஆழ்ந்தஆய்வு காணவேண்டுமென வரலாற்று அறிஞர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நூலில் காட்டிய பல மேற்கொள்கள் பலப்பல ஆங்கில—தமிழ் நூல்களிலிருந்து எடுக்கப்பெற்றன. அந்த நூல்கள் பலவும்—ஏன்—அனைத்தும் இன்று நாட்டில் உலவ வில்லை. புதிதாக அச்சிடப் பெறவில்லை. தமிழ் நலம் காணும்-திராவிட இனப்பெருமை பேசும் இன்றைய தமிழ் நாட்டு அரசு இவற்றுள் சிலவற்றையாயினும் விரைந்து அச்சிட்டு உதவின் நலம் விளையும். சென்னைப் பல்கலைக் கழகம் தன் வெளியிடுகளை (Foreign notices of South India போன்றன) மறுபடி வெளிக் கொணரலாம், உண்மை வரலாற்றினை மேலும்தெளிவாக வெளியிட அவை உதவும்.

இந்நூல் முப்பது ஆண்டுகள் கழித்துவரினும் கருத்துகள் அனைத்தும் இன்றும் முற்றும் ஏற்புடையனவே. இந்தப் பதிப்பிணை அச்சிடும்போது ஒப்புநோக்கி உதவிய பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் சா. வள்வன் அவர்களுக்கு நன்றி உடையேன். பயன்கருதி, நாட்டின் உண்மை வரலாறு தெரிய, என்னை மறுபடியும் இந்நூலை வெளிக்கொணர வேண்டும்எனத் தூண்டிய என் மாணவர் களுக்கும் பிறருக்கும் நன்றியும் வாழ்த்தும்.

பணிவார்ந்த,

தமிழ்க்கலை இல்லம்
சென்னை 30

அ. மு. பரமசிவானந்தம்
30-5-90

# உள்ளே

கட்டுரை பக்கம்


| | | | |
|---|---|---|---|
| | முன்னுரை | ... | 3 |
| 1. | வடக்கும் தெற்கும் | ... | 9 |
| 2. | இரண்டையும் இணைத்த எழுத்துக்கள் | ... | 31 |
| 3. | இமயமும் குமரியும் | ... | 55 |
| 4. | சிந்து வெளியும் தென்னாடும் | ... | 73 |
| 5. | வடமொழி, ஆரியம், சமஸ்கிருதம் | ... | 93 |
| 6. | அகத்தியர் யார்? எங்கே? | ... | 101 |
| 7. | தொல்காப்பியத்துக்கு முன்னும் பின்னும் | ... | 112 |
| 8. | சோறளித்த சேரன் | ... | 135 |
| 9. | இராமனும் இராவணனும் | ... | 148 |
| 10, | நந்தரும் மௌரியரும் | ... | 162 |

# 1. வடக்கும் தெற்கும்

வரலாறு வரையறுத்த எல்லைக்கு அப்பாற்பட்டது. அதை எல்லை இட்டு அறுதியிடச் சில அறிஞர்கள் நினைக்கின்றார்கள். உலகத்தின் வரலாறு விஞ்ஞானம் வளர்வதன் முன் வெறுங் கதை வடிவத்தில் இருந்தது. இந்திய நாட்டிலே இந்த உலகம் பற்றி எழுதப்பட்ட கதைகள் எத்தனையோ! இன்றும் அவற்றுள் பல வாழ்கின்றன. ஆயினும், அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்த பின்னர் உலக வரலாறே புது உருப் பெற்றது. உயிர்த் தோற்ற வளர்ச்சியின் வரலாறும், மனித இனத்தின் தோற்ற வளர்ச்சி வரலாறும் இப்படியே புதுப்புது ஆராய்ச்சிகளின் வழி மாறிக்கொண்டே வருகின்றன. பல கோடி ஆண்டுகளுக்கு இடைப்பட்ட இந் நில வரலாறும் உயிரின வரலாறும் மட்டுமல்லாது, பிற நாகரிக, பண்பாட்டு வரலாறுகளும் இந்த இருபதாம் நூற்றாண்டின் ஆராய்ச்சிகளின் வழியே புதுப்புது உண்மைகளை உலகுக்கு உணர்த்தித் தம்மை அறிமுகம் செய்துகொள்ளுகின்றன. மனித இனம் தோன்றி மெள்ள மெள்ள வளர்ந்த கடந்த கால நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வரையறுத்துக் காட்ட முடியவில்லை. ஏன்? மனிதன் வாழ்ந்த நெடுங்கால வாழ்வே நம் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாததாகவே அமைந்துள்ளது. ஒருவேளை இன்றைய அறிவியல் நெறி அழிவுப்பாதையை விட்டு ஆக்கத்துறையில் கருத்திருத்தித் தொன்மைப் பொருள்களை ஆராயப் பெருமுயற்சி செய்யின் ஓரளவு பழங்கால உண்மைகள் பலவற்றை உணரலாம். ஆனால், இன்று நாம் காண்பது எல்லையற்றதாகக்

கணக்கிடப்பெறும் மனித வரலாற்றில் ஓர் ஐயாயிரமாண்டுக் கான வரலாறேயாகும்; ஆனால், அந்த வரலாறும் தெளிவு பெற்ற நிலையில் இல்லை.

இத்தகைய குறைந்த அளவில் உள்ள கால எல்லையை ஆராயும் வரலாற்றாசிரியர் எத்தனையோ வகைகளில் மாறு படுகின்றனர்; தத்தம் கொள்கைகளையே உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினாலே பலப்பல வகையில் தம் எழுத்துக்களை எழுதி வைக்கின்றனர். இந்த வரலாற்று எல்லையிலே மொழிப் பூசலும், இனப் பூசலும் பிற பூசல்களும் தலை விரித்தாடுகின்றன. காய்தல் உவத்தல் அகற்றி ஆராய வேண்டுவது எல்லாத் துறைக்கும் உலகில் ஏற்புடைத்து என்றாலும், சிறப்பாக வரலாற்றுத் துறைக்கு அஃது இன்றியமையாததாகும். ஆயினும், சிலர் அந்த நிலைமாறித் தத்தம் கொள்கை வழியே தம் மொழி இனம் இவையே வரலாற்றில் முற்பட்டன என எழுதுகின்றனர். என்றாலும், மேல் நாட்டு ஆய்வாளர் சிலரும் இந்திய வரலாற்றாசிரியரும் உண்மையை உணர்ந்து எழுதுகின்றமையின், ஓரளவு கடந்த ஐயாயிரமாண்டுகளுக் குரிய வரலாற்றைச் சற்றுத் தெளிவாக அறிய முடிகின்றது.

தமிழ் நாட்டு வரலாற்றைப் பற்றியும் வடவிந்திய வரலாற்றைப் பற்றியும் புராண மரபுகளும் பிற கதைகளும் எத்தனை வகையில் கற்பனை செய்து காண்கின்றன! அவற்றை வரலாறு என்றே கொள்ள இயலாது. தென்னாட்டு மொழி, கலை, ஆட்சி அமைப்பை எத்தனை எத்தனையோ ஆயிரமாயிரமாண்டுகளுக்கு முன் கொண்டு செல்கின்ற கதைகள் பலப்பல. அவற்றையெல்லாம் வரலாற்றுக்குத் துணையாகக் கொள்ளின், உண்மை வரலாற்றை உணர இயலாது. அப்படியே வடநாடு பற்றிய வரலாற்றுக் கதைகளுமாம். எனவே, அவற்றை விடுத்துக் கடந்த ஐயாயிரமாண்டுகளில் வடக்கும் தெற்கும் எந்தெந்த வகை யில் இணைந்திருந்தன எனக் காண்பதும், அதற்கு முன் அறிவியல் வழியில் கண்ட நிலப்பரப்பும் மக்கள் வாழ்க்கை

நெறியும் அமைந்த வகையைக் காண்பதும் வரலாற்றுக்கு ஏற்பனவாகும். இவ்வாறு காணும்போது தமிழ் நாட்டில் கடைச் சங்க காலத்துக்கு முன் தெளிந்த வரலாறு இல்லை. வடக்கிலும் மெளரியப் பேரரசுக்கு முன் - அலெக்சாந்தர் படையெடுப்புக்கு முன் - வரையறுத்த வரலாறு இல்லை. அக்காலத்துக்குமுன் உள்ள சில வரலாற்றுச் சிதறல்களே நமக்கு இங்குத் தேவைப்படுவன. எனவே, தெளிந்த வரலாற்றுக் காலமாகிய கி.பி. முதல் நூற்றாண்டுக்கு முன் சுமார் மூவாயிரமாண்டுக் காலத்தும், அதற்கு முன்பும் வடக்கும் தெற்கும் எவ்வெவ்வகையில் இணைந்து நின்றன என்பதைக் காணவேண்டுவதே நம்முடைய பணியாகும். இந்தத் துறையை இவ்வாறு வரையறை செய்து கொண்டு யாரும் இதுவரையில் ஆராய்ச்சி செய்யவில்லை என்றாலும் பலர் தனித்தனி வகையில் ஒவ்வொரு முறையில் அக்காலத்தைச் சார்ந்த வரலாற்றை ஆராய்ந்துள்ளனர். அவர்கள் குறிப்புக்களின் அடிப்படையை ஒட்டியே நாமும் அக்கால வரலாற்றைக் காணல் நலம் பயப்பதாகும்.

உலகில் உள்ள மக்களை அவர்தம் மொழி, பண்பாடு. நாகரிகம் இவற்றை ஒட்டியும், அவர்தம் உடற்கூறுகளின் அமைப்பை ஒட்டியும் சில வகுப்புக்களாகப் பிரித்துள்ளனர். மக்கள் முதலில் தோன்றி வளர்ந்த இடங்களென இரண்டைத்தான் பெரும்பாலும் வரலாற்றை உணர்ந்தவர் கூறுகின்றனர். ஒன்று, இன்றைய குமரிமுனைக்குத் தெற்கே இருந்த பரந்த நிலப்பரப்பாகும், மற்றொன்று, மத்திய தரைக்கடற்பகுதியாகும். இந்த இரண்டிடங்களிலோ, அன்றி இரண்டில் ஒன்றிலோ, மக்களினம் முதல்முதல் தோன்றிப் பிறகு மெள்ள மெள்ள உலகெங்கணும் பரவியிருக்க வேண்டுமென்பது அறிஞர் பலர் கண்ட முடிந்த முடிபாய் உள்ளது. இவ்விரண்டில் 'லெமூரியா' என்னும் குமரிக் கண்டம் இழந்த ஒன்றாகி விட்டது. எனவே, அதன் அடிப்படையை வைத்து ஆராய வழி ஏற்படவில்லை. எனவே, குமரி முனை தொடங்கி, மத்திய தரைக்கடல்

எல்லை வரையில் உள்ள இன்றைய பகுதிகளை வைத்து மனித இனம் வளர்ந்த வரலாற்றை ஆராய்கின்றார்கள் நல்லாசிரியர்கள். தென்னிந்தியாவிற்கும் மத்தியதரைக் கடற்பகுதிக்கும் பலவகையில் ஒற்றுமைகள் இருப்பதைக் காண்கின்றோம். எகிப்திய கிரேக்க ரோம நாடுகளின் நாகரிகத்துக்கும் பழந்தமிழ் நாட்டு நாகரிகத்துக்கும் பல்வேறு தொடர்புகள் உள்ளன என வரலாற்று ஆராய்ச்சி விளக்குகின்றது. கிரேக்கர் தம் பழைய மொழியில் தம்மைத் 'தமிலி' (Tamili) என்றே வழங்கிக்கொண்டார்கள்.[1] திராவிடம், தமிழ் என்ற இரண்டு சொல்லையும் ஆராய்ந்த திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆசிரியர் தென்னாட்டுத் 'தமிழ், அமைப்பை நன்கு விளக்கி, அம்மொழி பேசுவோ ரைத் தமிழர் எனவே வழங்குவதோடு அவர்களைத் தொன்மை வாய்ந்தவர்கள் எனவே குறிக்கின்றார்,[2] கிரேக்க நாட்டில் 'ஹெலன் கால' எல்லைக்கு முன் இந்திய மக்களைத் 'தமிலி' (Tamil) எனவே வழங்கியுள்ளார்கள்.[3] இந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் திரு. சட்டர்ஜி அவர்கள் சில திராவிடக் குடும்பங்களாவது மத்தியத்தரைக் கடலில் இன்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு களுக்கு முன் வாழ்ந்திருக்க வேண்டும் என்று திட்டமாக வரையறுக்கின்றார்[4]. எனவே, இந்திய நாட்டுத் தொன்மை யான வரலாற்றையும் அதனுடன் தொடர்புடைய மத்திய ஆசியா, மத்திய தரைக்கடல் பகுதி ஆகியவற்றின் வரலாற் றையும் ஆராயும்போது தென்னாட்டு வரலாறு முக்கிய இடம் பெற வேண்டும் என்று ஸ்மித்து போன்றவர்கள்

---

1 The Vedic Age (Published by the Bharatiya Itihasa Samiti) p. 158

2. Dravidian Comparative Grammar, Introduction, p. 3, 4.

3. Vedic Age, p. 158

4. ibid. p. 158

திட்டவட்டமாகக் கூறுகின்றார்கள்[1]. இவற்றையெல்லாம் நோக்கும்போது மத்திய தரைக்கடற் பகுதியிலிருந்து குமரி முனை வரையில் ஒரு காலத்தில் ஒரே இன மக்கள் இருந்தார் களோ என எண்ண வேண்டியுள்ளது

இன்று இந்திய நாட்டு வரலாற்றை ஆராய்கின்ற பலர் ஆரிய திராவிட மாறுபாட்டையே முக்கியமாகக் குறிக்கின்றனர். சிலர் இந்த அடிப்படையில் பல வரலாற்றுக்கு ஒவ்வாத புதுப்புதுக் கருத்துக்களைத் தத்தம் ஏடுகளில் எழுதிவிடுகின்றனர். சிலர் இந்த அடிப்படையிலே நாட்டில் பலப்பல பிரிவுகளை உண்டாக்குகின்றனர். இந்த உணர்வெல்லாம் சற்று ஒய்ந்து சிந்தித்துப் பார்ப்பின், பல நல்ல உண்மைகள் உலகில் விளங்காமற் போகா. குமரி முதல் இமயம் வரையில் இன்று இணைந்துள்ள பரந்த இந்தியா, கடந்த ஐயாயிரமாண்டுகளிலோ, அதற்கு முன்போ இருந்த நிலையை ஒருவாறு உணர இன்று வரலாற்றுக் குறிப்புக்கள் அதிகம் உள்ளன. அவற்றின் வழி ஆராய்ந்தால், பல நல்ல உண்மைகளும் மறுக்க முடியாத பல முடிவுகளும் பெற முடியும் என்பது உறுதி. அத்துறையில் நாமும் ஓரளவு துருவி ஆராய்வோம்:

ஆரியர்கள் வடமேற்குக் கணவாய் வழியாகச் சிந்து வெளியில் குடியேறிய காலம் ஐயத்துக்கு இடமின்றி அறுதி செய்யப்பட்டுவிட்டது. அதாவது, அவர்கள் கி.மு. 1500ல், இன்றைக்குச் சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன் இந்தியா விற்கு வந்தவர்கள் என்பதாகும். அவர்கள் சிந்து வெளியில் வந்து மெள்ள மெள்ளக் கங்கைச் சமவெளியிலும் குடியேறித்

1. Smith rightly observed many years ago, "Early Indian History, as a whole, cannot be reviewed in the perspective until the Non-Aryan Institutions of the south receive adequate treatment."-History of India, (Sinha & Banerji) p. 26.

தமது நாட்டு அமைப்பை விரிவுபடுத்தினார்கள். அவர்கள் இந்தியாவுக்கு வந்தபோது இருக்குவேதம் உண்டாயிற்று. இரானிய நாட்டிலிருந்து ஆரியர் சிந்துவெளிக்கு வந்த காலம் கி.மு. 2000க்கும் 1500க்கும் இடையில் இருக்கலாம் எனக் கணக்கிட்டுள்ளனர்.[1] இருக்கு வேதம் உண்டானபோதிலும், அக்காலத்தில் எழுத்துக்கள் இன்மையின், அவர்கள் பரம்பரை பரம்பரையாக ஒருவர் மற்றவருக்குச் சொல்லியே அதைப் பாதுகாத்தார்கள். அதனாலேயே அது 'சொல்லப் பட்டது' என்ற பொருளில் வழங்கி வருகிறது போலும்! இருக்குவேதம் உண்டான பிறகு நெடுங்காலம் அவர்களுக்கு எழுத்தே இல்லை.[2] மற்றும், அதுவரை அவர்களுக்கு நிலைத்த வீடுகளோ, தெய்வங்களோ இருந்தனவாக அறிய இயலவில்லை. அவர்கள் தங்கள் கால்நடைகளாகிய ஆடு மாடுகளை நம்பியே பிழைத்து வந்தார்கள்; அவற்றைக் காக்க வேண்டுமெனவே, கடவுளரையும் உண்டாக்கி வழி பட்டார்கள்.[3] கலையும் அறிவியலும் அவர்கள் அறியாதன[4] அவர்கள் இந்திரனையே தங்கள் கால்நடைகளைக் காக்கும் தெய்வமாகக் கொண்டு வழிபட்டார்கள்[5]. பிரமன், திருமால், சிவன் என்ற மூன்று மூர்த்திகளும் அன்று அவர்களுக்குத் தெரியாதவர்கள். எனினும், சிவ வழிபாடு அவர்கள் வருகைக்கு முன்பே இந்தியாவில் இருந்த தென்பதைச் சிந்து வெளித் தொல்பொருளாராய்ச்சி நமக்கு நன்கு காட்டுகின்றது. கிருட்டிணனும் அவர்களுக்கு

1. Rig Veda, by Adolf Kaegi. (Prof. in the University of Zurich). Translated by R. Arrowsmith, Ph.D., p. 11.

2. Rig Veda, p. 20

3. ibid. p. 13.

4. ibid. p. 20

5. ibid. p. 13.

விரோதியே[1] அனுமனும் அவர்களுக்குப் பிற்பட்டோர்களின் கடவுளாக வேண்டும். வேதத்தில் அனுமன் என்ற பெயரே இல்லை.[2]

ஆரியர்கள் இங்கு வருமுன் வாழ்ந்த மக்கள் நாடு நகரங்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்ததைக் கண்டு தாங்களும் வீடுகள் கட்டக் கற்றுக்கொண்டார்கள்.[3] கட்டுப்பாடான குடும்பவாழ்க்கை முறையும் அதன் அடிப் படையில் அமைந்த நால்வகைச் சாதிப்பாகுபாடும் அக் காலத்தில் உண்டாயின.[4] அவர்கள் பல நம்பிக்கைகளால் ஏற்பட்ட அச்சத்தால் கடவுளைப் போற்றினார்கள். சிவப் புப் பசு வெள்ளைப் பால் தருவது தேவரால் நடைபெறுவ தென இருக்கு வேதம் எடுத்துக் காட்டுகின்றது[5]. சூரிய உதயம் அதிசயமான ஒன்று என அவர்கள் கொண்டார்கள்.[6] இந்திரனே முக்கிய தெய்வமாகக் கேட்கக் கேட்கத் தருபவனாக விளங்கினான்.[7] பசு எருது முதலியவற்றைப் பலி கொடுக்கும் வழக்கமும் அக் காலத்தில் இருந்து வந்தது. யாகமே இந்த ஆரிய அடிப்படையில் வளர்ந்த இந்தோ ஐரோப்பியர்தம் செயல் எனப் புலாஸ்கர் எடுத்துக் காட்டுகின்றார்.[8] ஆரியருக்கு அக்காலத்தில் மொத்தம்

1. Stone age In India, by P. T. Srinivasa Iyangar, p. 162.

2. Vedlic Age, Vol. 1. p. 163.

3. Rig Veda, p. 12.

4. Rig Veda, p. 20

5. இருக்கு, 1:62:9. 1:1:83, 2:40:2, 4:3:9, 6:17:6, 6:44:24, 6:72:4

6. Rig Veda, p. 27.

7. இருக்கு, 1:30:9, 8:69:2 & 3, 6;21:8, 3:49;3, 7: 29, 4:10.

8. A.D. Pulasker in Treditional History from the earliest time to the accession of Parikhit (Vedic Age. p. 263)

முப்பத்து மூவர் கடவுளர் இருந்தனர் என்றும், பதினொருவர் விண்ணிலும் பதினொருவர் மண்ணிலும், மற்றைப் பதினொருவர் நீரிலும் இருந்தனர் என்றும் வேதம் சொல்லுகின்றது.[1] இவர்களைப் பற்றிய விளக்கங்களெல்லாம் இங்கே நமக்குத் தேவையில்லை. இந்த இருக்கு, முன் கண்டபடி கி. மு. 2000க்கும் 1500க்கும் இடையில் தோன்றிக் காது வழியே கேட்கப்பெற்று, சுமார் 400 ஆண்டுகள் கழித்து எழுதி வைக்கப்பெற்றது. அதற்கு இடையில் இதில் உருத்திரனும், விஷ்ணுவும், பிற கடவுளரும் குறிக்கப் பெறுகின்றனர் என்றாலும் அவர்கள் முக்கியமாகப் போற்றப்படவில்லை. விஷ்ணு ஒரு பணியாளராகவே (worker) காட்டப்படுகின்றனர்.[2] உருத்திரனும் ஒரு குறையாகவே காட்டப்படுகின்றான். மங்கலமாகக் காணும் சிவனும் திருமாலும் சக்தியும் அவர்களுக்கு விளங்காதவர்களே. மற்றும் எங்கும் நிறைந்த பரம்பொருள் என்ற கடவுள் உணர்வு அவர்களுக்குத் தெரியாது[3]. பின்னால் சில நூற்றாண்டுகள் கழித்துக் கங்கைச் சமவெளியில் உருவாகிய அதர்வண வேதத்திலேதான் அந்தக் குறிப்பு ஓரளவு காட்டப்படுகின்றது.[4] அதிதி, ஆதித்தர், பிரகஸ்பதி போன்ற தெய்வங்கள் உள்ளன. அக்காலத்தில் அவர்கள் தங்களுக்கு முன் வாழ்ந்த பரந்த இந்திய நாட்டு மக்களோடு போரிட்டதோடு, அவர்களுக்குள்ளேயே ஒரு குழுவுக்கும் மற்றொரு குழுவுக்கும் போராட்டம் இருந்திருக்கிறது. அவர்கள் பாடல்கள் பெரும்பாலும் வெற்றிப் பாடல்களாய் இருப்பதால், அவர்கள் சென்ற இடமெல்லாம் வெற்றி பெற்றார்கள் எனக் கொள்ள இடமுண்டு. அவர்கள் கங்கை வெளிக்கு வருமுன்பும் வந்த பின்புமேதான், அப்பகுதிகளில்

1. இருக்கு. 1:130:11.
2. இருக்கு. 1:154:3, 1:22:161, 1;55:4.
3. Rig Veda, p. 64.
4. அதர்வணம், 4;16:15.

தங்கி வாழ்ந்த மற்றவர்களைப் பற்றியெல்லாம் எண்ணித் தங்கள் வாழ்க்கை பற்றியும், சுற்றுச் சூழல் பற்றியும், பிறவற்றைப் பற்றியும் எண்ணத் தொடங்கினார்கள். பிறகு அவர்கள் எண்ணத்தால் எழுந்த இலக்கியங்களும், வாழ்க்கை முறைகளும், பிறவும் அளப்பில. அவற்றுள் பெரும்பாலான இன்றளவும் வாழ்கின்றன என்பது பொருந்தும். அந்தக் காலத்தில் அவர்கள் எழுதிவைத்த இருக்கு வேதமோ பிறவோ இன்று நாம் காணும் சம்ஸ்கிருத அமைப்பில் இல்லை என்பதும் அன்றைய அவர்தம் மொழி இக்காலச் சம்ஸ்கிருதத்திற்குப் பல வகையிலும் வேறுபட்டது என்பதும் வரலாற்றறிஞர் காட்டும் உண்மையாகும்[1]. இன்றைய சம்ஸ்கிருதம் பெரும்பாலும் சுமார் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேதான் செம்மை செய்யப்பெற்றது என்பதும் மொழி ஆராய்ச்சி வழியும் பிற நிலையிலும் புலனாகும் ஒன்றாகும்.[2] இவற்றாலெல்லாம் ஏறக்குறைய இன்றைக்கு *3500* ஆண்டுகளுக்கு முன் வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவில் குடியேறிய ஆரியர் பற்றியும் அவர்தம் அக்கால வாழ்க்கை பற்றியும் நன்கு அறிய முடிகின்றது. இந்த அளவிலேதான் அவர்கள் இருக்கு வேதத்தை ஒரு சிறு அளவு வரலாற்று எல்லைக்கு உரியதாகக் கொள்ள லாமேயன்றி அதை முழுக்க முழுக்க வரலாற்றுக்கு ஏற்ற முழுநூலாகக் கொள்ள இயலாது[3]. இனி அவர்கள் வரும் காலத்தும் அவர்கள் வருகைக்கு முன்பும் இந்த இந்திய நாடு இருந்த நிலையையும் இதில் வாழ்ந்த மக்கள் வாழ்க்கை முறையையும் பற்றி சில சிந்தித்துப் பார்க்கலாமன்றோ!

---

1. Rig Veda, p. 22.

2. ibid. p. 7.

3. Rig veda, p. 91. 'Its historical importance, its value or the history of mankind, cannot easily be over rated.'

குமரி நாட்டிலிருந்து வடக்கு நோக்கி மெள்ளமெள்ளக் குடியேறி இந்தியா முழுதிலும் அதன் எல்லை கடந்தும் ஒரு காலத்தில் வாழ்ந்தவரே திராவிடர் என்றும், மத்திய ஆசியாவில் தோன்றிப் பல்வேறு திக்குகளில் பரவிச் சென்றவரே ஆரியர் என்றும் வரலாற்றறிஞர் பலர் எழுதி வந்தனர்; இன்றும் எழுதுகின்றனர். பரந்த குமரிக்கண்ட நிலப்பரப்பிலேதான் புராணங்களில் காணப்பெறுகின்ற பல வீரர்கள் வாழ்ந்தார்கள் எனக் கூறுவர். இலங்கையும் மகேந்திர மலையும், பிற நாடுகளும் அங்கிருந்தன என்பர். புராண மரபுகளை அப்படியே சரியெனக் கொள்ள முடியவில்லை என்றாலும், அழிந்த குமரி நாட்டில் சிறந்த வீரர் பரம்பரைகள் பல வாழ்ந்திருந்தன எனக் கூறல் தவறாகாது. அந்தப் பரம்பரையினர் மிகு பழங்காலத்தே உலகம் முழுதும் பரவியிருந்தார்கள் என்றும், அவர்கள் பரம்பரையினரே மத்தியதரைக் கடற்பகுதிகளில் குடியேறியிருந்தார்களென்றும், இங்கும் இமயத்தையும் தாண்டிச் சென்றார்கள் என்றும், பின் பெரு நிலப்பரப்பு அழிய, அவர்கள் முன் கொண்டிருந்த தொடர்பெலாம் அழிய, அங்கங்கே நிலைத்துவிட்டார்கள் என்றும் கூறுவர். இக்கூற்று உண்மையெனக் கொண்டாலும், அந்நிகழ்ச்சி எத்தனையோ, ஆயிரமாயிரமாண்டுகளுக்கு முன் நடைபெற்ற ஒன்றாக இருக்கவேண்டும். அந்தக் கால எல்லை இன்றைய வரலாற்று ஆராய்ச்சி எல்லைக்கு அப்பாற்பட்டதேயாகும். இந்துமகா சமுத்திரம் பரந்த நிலப்பரப்பாய் இருந்ததென்பதையும், இமயம் கடலுள் இருந்ததென்பதையும் தொல்பொருள் ஆராய்ச்சியாளரும், நில ஆராய்ச்சியாளரும், பிற தனித்துறை வல்லுநரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். எனினும், அங்கிருந்த மக்கள் இனமே உலகம் முழுவதும் பரவிற்று என்பதைத் தக்க சான்று கொண்டு காட்ட இயலவில்லை. ஆகவே, அது உண்மையென உணர்கின்ற வரையில் மக்களினம் நாட்டில் நுழைந்த வரலாறு பற்றிப் பிறர் கூறுவதை ஓரளவு சரி என்றே கருதி மேலே காண்போம்.

மத்திய தரைக்கடல் மக்களின் வாழ்வுக்கும் திராவிட மக்களின் வாழ்வுக்கும் பல தொடர்புகள் உள்ளன என்பதை மேலே கண்டோம். எனவே, திராவிடர்களும் ஆரியர்களைப் போன்று அங்கே இருந்து ஆரியருக்கு முன் உள்ளே புகுந்து வடவிந்தியப் பகுதிகளையெல்லாம் உரிமையாக்கிப் பின் மெள்ள மெள்ளத் தெற்கேயும் வந்து தங்கினார்களோ என்று காட்டும் ஆராய்ச்சி உண்மை எனக் கொள்ள வேண்டிய ஒன்று போலும்!

ஆரியர் இந்தியாவிற்கு வந்தபோது சிறந்த மக்களினத்தார் அவரினும் மேம்பட்டவராய் உயர்ந்த நாகரிகமும் பண்பாடும் நிறைந்தவராய் வாழ்ந்தனர் என்பதை வரலாற்று உலகம் கொண்டுள்ளது. அந்த இனத்தவரையே பலரும் திராவிட இனத்தவர் என்பர். அவ்வாறு கூற விரும்பாத சிலர் 'ஆரியருக்கு முற்பட்டவர்' என அவர்களை வழங்குவர். அப்படியாயின், அவர்கள் பெயரற்றவர்களாகவா வாழ்ந்தார்கள்? இல்லை. எனவே, அன்று பரந்த பாரதம் முழுவதிலும் இருந்தவர்களைத் திராவிடர் எனக் கொள்வதில் தவறு இல்லை. இந்த உண்மையை S. K. சட்டர்ஜி அவர்கள் நன்கு காட்டுகின்றனர்; ஆரியர் இந்தியாவிற்கு வருமுன் மத்திய தரைக்கடற் பகுதியிலிருந்து கிழக்கு நோக்கி வந்து, இந்தியா முழுதும் பரவிக் கோட்டைகளையும் நகரங்களையும் உண்டாக்கி, இமயம் முதல் குமரி வரை வாழ்ந்தவர்கள் திராவிடர்களே என அறுதியிட்டுக் காட்டுகின்றார்.[1] இந்த உண்மை, மொழி அடிப்படையிலும் வேறு பல வகைகளிலும் நன்கு விளக்கப் பெறுகின்றது. திராவிட மொழியின் மொழிச் சிதறல்கள்—கூறுகள்—வடமேற்கே பலுசிஸ்தானத்திலும் தென்கிழக்கிலே ஆசாமிலும், மத்திய சூடிய நாகபுரியிலும் உள்ளமை

1. Race movements and Pre-Historic culture, by S.K. Chatterji (Prof. Calcutta University) Vedic Age, p. 154.

இந்த உண்மையை நன்கு வலியுறுத்துமன்றோ? இன்று தென்னாட்டிலுள்ள திராவிடருடைய பழக்க வழக்கங்களும் பிற பண்பாட்டியல்புகளும் இன்றும் வட இந்தியாவில் பல பகுதிகளில் உள்ளமையும் இந்த உண்மையை நன்கு எடுத்துக் காட்டுவதாகும்.[1] A. D. புலாஸ்கர் என்பவரும், ஆரியர் வருமுன் இந்தியாவில் சிறந்த பல பேரரசுகளும், நாடுகளும், நகரங்களும், பண்பாடுகளும் மிக உயர்ந்த நிலையில் இருந்தன என்றும், அவை திராவிட அடிப்படையைச் சார்ந்தன எனக்கொள்ளல் தவறாகாது என்றும் எடுத்துக் காட்டுகின்றார்[2]. இந்த நாகரிகமும் பண் பாடும் பிற வழிபாடு, வாழ்க்கை, மொழி, கலை முதலியனவுமே சிந்துவெளி நாகரிகத்தால் நாம் அறிவன வாகும் எனவும், எனவே, சிந்துவெளி நாகரிகக் கால எல்லை யாகிய கி. மு. 3000 ஆண்டில் திராவிடர் இந்தியா முழுவதும் இருந்தார்கள் எனக் கொள்வது பொருந்தும் எனவும் சட்டர்ஜி அவர்கள் குறிப்பதும் இங்கு எண்ணத்தக்க ஒன்றாகும்.[3] ஆரியர் இந்திய நாட்டிற்கு வந்தபோது திராவிடர்கள் நகர்களும் கோட்டைகளும் கட்டிக்கொண்டு வாழ்ந்தார்கள் என வரலாற்று ஆசிரியர் பிறரும் நன்கு விளக்குகின்றனர்[4]. இவர், திராவிடர்கள் இந்தியாவின் பழங்குடிகளே எனக் காட்டுவர்[5]. இவர்களுடைய திராவிடப் பண்பாடு இங்கிருந்தே பிற உலகப் பகுதிகளுக்கு—பலுசிஸ் தானம், மத்திய தரைக்கடல் பகுதி ஆகியவற்றிற்குச் சென்றிருக்கலாம் எனக் கூறுவார்கள். திராவிடர்களின் வட்டெழுத்து முறையும் செமிட்டிக் (Semitic) அடிப்படை

1. Vadic India p. 155.

2. Treditional History from the earliest times to the accession of Parikshit, by A.D. Pulasker. p. 313.

3. Vedic Age, Vol. I, p. 158.

4. History of India, by Sinha & Banerji, p. 26.

5. Ibid. p. 25.

யில் உண்டாயிற்று எனக் கூறுவர்; சிந்துவெளி மொழி, திராவிட மொழியை ஒத்ததே எனவும் காட்டுவர்[1]. திராவிடரே மிகப் பழைமையான நாகரிகம் வாய்ந்த இந்திய மக்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றனர்[1]. திராவிடர்கள் ஆரியரினும் வேறுபட்ட நாகரிகம் உடையவர்களென்றும், உழவு அவர்களது முக்கியத்தொழிலாய் இருந்ததென்றும், நல்ல இலக்கியங்களை அவர்கள் பெற்றிருந்தார்கள் என்றும் குறிக்கின்றனர்.[3]

வரலாற்றுக்கு முற்பட்ட இந்தியாவை ஆராய்ந்த பானர்ஜி அவர்கள், இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து சில உண்மைகளை நிறுவியுள்ளனர். திராவிட மக்கள் இறந்தவரைத் தாழியில் புதைத்தார்கள் என்ற உண்மையைத் தமிழ் நாட்டுப் புதைபொருள்கள் இன்று நன்கு விளக்குகின்றன. இந்த முறையும் தாழிகள் அமைப்பும் பல நாடுகளில் தமிழ் நாட்டில் உள்ளவை போன்றே இருக்கின்றன எனக் காட்டியுள்ளார்.[4] மத்திய தரைக் கடல் நாடுகள், மெசபட்டோமியா, பாபிலோன், பிரஷ்யா, பலுசிஸ்தான், சிந்து வெளி ஆகிய பகுதிகளில் அவை அகழ்ந்தெடுக்கப்படுகின்றன எனக் காட்டியுள்ளனர். திராவிடர்களுக்குக் கொளுத்தும் பழக்கம் இல்லை என்றும், ஆரியரோடு கலந்த பிறகே அந்தப் பழக்கத்தை மேற்கொண்டார்கள் என்றும் காட்டியுள்ளனர். சிந்து, பலுசிஸ்தானம் ஆகிய நாடுகளில் கண்டெடுக்கப்பட்ட பழங்காலப் புதைபொருள்கள் அவை திராவிடர்களுடையன என்றும், அக்காலத்தில்

---

1. History of India. p. 27.
2. ibid p. 25.
3. History of India, p. 26.
4. Pre-Historic, Ancient and Hindu India, by Banerji, p. 12.

திராவிடர் செம்பைப் பயன்படுத்தினர் என்றும் காட்டு கின்றன என்பர்[1]. மற்றும் சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட தாழிகளில் பல, சென்னைச் செங்கற் பட்டு மாவட்டத்தில் பல்லவபுரம், பெரும்பெயர் ஆகிய ஊர்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தாழிகளை ஒத்துள்ளன எனவும் காட்டுவர். மற்றும் மத்திய தரைக்கடலில் பழங் காலத்தில் கிரீட்டில் (Crete) ஹெரடொட்டஸ் (Herodotus) காலத்தில் இத்தகைய தாழிகள் இருந்தனவாம். அப் புதைபொருள்கள் குமரி முனையையும் மத்திய தரைக் கடலையும் இணைக்கப் பயன்படுகின்றன என்பதையே எடுத்துக்காட்டுகின்றன அல்லவா?*

பழங்காலத் திராவிட மக்கள் நல்ல பணப் புழக்கம் உடையவர்கள் என்றும், நிரம்ப நாணயங்கள் வைத்திருந் தார்கள் என்றும், பல அணைகள் கட்டி உழவுத் தொழில் செய்தார்கள் என்றும், அவ்வாறு கட்டி அழிந்த அணையின் சிதறல்கள் இன்றும் பலுசிஸ்தானத்தில் உள்ளன என்றும் காட்டுகின்றனர்[2]. மற்றும், ஆரியர் இந்தியாவுக்கு வந்த போது, வடவிந்தியா முழுவதிலும் திராவிடர்களே பரவி இருந்தார்கள் என்றும், ஆரியர் கங்கைச் சமவெளிக்கு வந்த போது, மகதம், தெற்குப் பீகார், இராஜபுதனம் ஆகிய பகுதி களைத் திராவிடர்கள் ஆண்டார்கள் என்றும், அவர்களை ஆரியர்கள் அரக்கர் எனவே வழங்கினார்கள் எனவும் காட்டுவர்[3]. மற்றும் திராவிடர் இந்திய நாட்டில் மட்டுமன்றிக் கிழக்கே சுமத்திரா தொடங்கி மேற்கே மத்திய தரைக்கடல் வரை தம் பண்பாடும் நாகரிகமும் பரவ வாழ்ந்த ஒரு பெரும்பரம்பரையினர் எனவும் காட்டு கின்றனர்[4].

---

1. Pre Historic Anciient and Hundu Indla p. 13·

* இக்கட்டுரையின் இறுதியில் காண்க

2. Pre-Historic, Ancient and Hindu India, p. 13.

3. ibid. p. 20. 4. Ibid. p. 29.

இதுவரையில் நாம் கண்ட அனைத்தும் இன்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முற்பட்டவற்றை விளக்கும் சான்று களாகும். இவை பற்றி நாம் மேலே கண்ட சில ஆசிரியர்களைத் தவிர்த்து, எண்ணற்ற அறிஞர் எழுதி யுள்ளனர். மேலே கண்ட ஒவ்வொரு நூலிலும் அவர்கள் பலப்பல மேலை நாட்டு இந்திய நாட்டு வரலாற்று ஆசிரியர் களின் எழுத்துக்களைத் தத்தம் கூற்றுக்களுக்குச் சான்று களாக எடுத்துக் காட்டுகின்றார்கள். அவற்றையெல்லாம் ஈண்டு எடுத்துக் காட்டின், நூல் பெருகும் என்பதோடு, முடியாத ஒரு பெருஞ்சுமையுமாகிவிடும் என்று கூறி அமை கின்றேன். நூலுக்கு இடையில் கட்டுரைகளுக்குத் தேவை யான வரலாற்று மேற்கோள்களை ஆங்காங்கே எடுத்துக் காட்டியுள்ளேன். இன்னும் நல்ல விளக்கம் வேண்டுவோர், அவர்தம் முழு நூல்களையும், அவற்றின் துணையாய் உள்ள பிற வரலாற்றறிஞர் நூல்களையும் படித்து ஆராய்ச்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் இங்கே காட்ட விரும்பினவை ஒரு சிலவே. அவை, ஆரியர் இந்தியாவிற்கு வடமேற்குக் கணவாய் வழி யாக இன்றைக்கு மூவாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் வந்தார்கள் என்பதும், அவர்கள் வரும் காலத்தில் மிகச் சாதாரண மக்களாக, மொழி, பண்பாடு, நாகரிகம் முதலியவற்றுள் எங்கோ பின்னால் இருந்தார்கள் என்பதும், அவர்கள் வருங்காலத்தில் அவர்களுக்கு முன்னால் தெற்கி லிருந்தோ அன்றி மேற்கிலிருந்தோ வந்து இந்தியா முழுவதும் பரவி இருந்த பெருங்குடி மக்கள் திராவிட இனத்தவர் என்பதும், அவர்களை அப் பெயரால் வழங்க இயலவில்லை என்றாலும் பின்னால் அப்பெயரால் வழங்கப் பெற்ற அவர்தம் முன்னோர்கள் பரந்த பாரதம் முழுவதும் இருந்தார்கள் என்பதும், அவர்கள் சிறந்த நாகரிகமும் பண்பாடும் கொண்டவர்களாய், நகர் அமைத்து, அணை கட்டிப் பயிர்த்தொழில் செய்து பலவகையில் சிறந் திருந்தார்கள் என்பதும், புதியவராய் வந்த ஆரியர்

அவர்களைப் போரில் வென்று வென்று மெள்ள மெள்ளத் தெற்கே துரத்தினர் என்பதும், என்றாலும் இன்றளவும் அவர்கள் வாழ்ந்ததை விளங்கவைக்கும் பல சான்றுகளை அத்திராவிடர்கள் அவ்வடவிந்தியாவில் விட்டே வந்துள்ளார் கள் என்பதும், பின்னர் ஆரியர்கள் தங்கள் ஆணை வகையில் இந்தியநாட்டுப் பரப்பைப் பல வகையில் ஆளத் தொடங்கினார்கள் என்பதும் ஆகும். இன்று இந்திய வரலாற்றை ஆராயும் அறிஞர்கள் இந்த உண்மையை ஒத்துக் கொள்ளத்தக்க சான்றுகள் பலப்பல பல துறைகளிலும் உள்ளன. இப்படி உண்மையைக் கூறுவதால் ஒரு சாராருக்கு உயர்வோ மற்றொரு சாராருக்குத் தாழ்வோ உண்டாயிற்று என்று கூற முடியாது. அவரவர் கால எல்லையில் நின்று அவரவர் இனமும் பண்பாடும் வளருவதை உண்மையில் விளக்கிக் காட்டுவதுதான் வரலாறே அன்றி, அந்த அடிப்படை உண்மைகளை மாற்றித் தத்தம் விருப்பம் போல ஒருவரை உயர்த்துவதோ அன்றித் தாழ்த்துவதோ வரலாறு என்று எவ்வாறு கொள்ள முடியும்? இந்த அடிப்படையில் நின்றே அக்காலத்து வடக்கும் தெற்கும் ஒன்றிய வகையை சில கட்டுரைகளில் பின்னால் விளக்கியுள்ளேன். இனி ஆரியர் வடநாட்டில் மட்டுமன்றித் தென்னாட்டிலும் பரவி, அங்கு வாழ்ந்த மக்களோடு நெருங்கிக் கலந்த பிறகு எப்படி அவர்தம் கலப்பும் கொள்கையும் விரவின என்பதையும் காணலாம்.

சந்திரகுப்தப் பேரரசுக்கு முன்னே சிறந்த பேரரசுகள் வடவிந்தியாவில் இருந்தன எனினும், அவை பற்றிய திட்டவட்டமான குறிப்புக்கள் நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, அக்கால எல்லையில் நாமும் நின்று அக்காலத்தில் வடக்கும் தெற்கும் இணைந்ததைக் காட்டும் இரண்டொரு சான்றுகளையும் காணலாம். இதற்கும் நாம் முன் கண்ட ஆரியர் கங்கைக் கரைக்கு வந்த காலத்துக்கும் இடையில் ஓர் ஆயிரமாண்டுகள் கழிந்துவிட்டன. அந்த ஆயிரமாண்டுகளில் நாட்டில் என்னென்ன நடைபெற்றன என்பதைத் திட்ட

மாகக் காட்ட முடியவில்லை. என்றாலும், அந்த நீண்ட நாட்களிலேதான் சிந்து சமவெளியிலிருந்து கங்கைக் கரைக்கும் அடுத்து மெள்ள மெள்ளத் தெற்கு நோக்கித் தமிழ்நாடு வரையிலும் ஆரியர்கள் போராலும் பிறவற்றாலும் தம் ஆணையைப் பரப்பிக்கொண்டு வந்தார்கள் என்பது தெரிகின்றது. அக்காலத்திலேதான் சம்ஸ்கிருதத்தில் இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகள் எழுதப்பெற்றன. பாரதப் போர் ஏறக்குறைய, கி.மு. 1400ல் நடைபெற்றதென்பர். இராமாயணம் அதற்கு முந்தி என்பாரும் பிந்தி என்பாரும் உளர். இப் பாரத காலத்தை அப்படியே ஏற்றுக்கொண்டால், பிந்தியது என்பதே அதற்குப் பொருத்தமானதாக அமையும். எப்படியும் அவர்கள் கங்கை சிந்துசமவெளி வந்த பிறகு, பரந்த இந்திய நாட்டைப் பற்றியும் அறிந்த பிறகேதான் அவை எழுதப் பட்டிருக்க வேண்டும் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும். அவற்றைப் பற்றி இதிகாச வரலாற்றுக் கதைகள் நூல் வடிவிலே நெடுங் காலத்துக்குப் பின்னரே வந்திருக்க வேண்டும். வேதத்தைப் போன்றே இவையும் பல காலம் கேள்வி வழியாகவே வந்திருக்கலாம். அன்றி, முதலிலேயே எழுதப்பெற்றனவாயினும், இன்று நாம் காண்பதற்கும் இவற்றின் முதல் எழுத்துக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் இருந்திருக்கவேண்டும்.

மற்றும் இக்காலத்திலேதான் வடவிந்தியா 'ஆரியா வர்த்தம்' என்ற பெயர் பெற்றிருக்க வேண்டும். ஐம்பத்தாறு தேசத்து அரசர் பற்றிய கதைகள் பல இக்காலத்தனவே யாகும். வடவிந்தியாவைப் பல வகையில் துண்டாடித் தத்தமக்குக் கிடைத்த வரையில் அவரவர் கைப்பற்றி ஆண்டிருக்கவேண்டும். இக்காலத்திலேதான் இந்த நாட்டுப் பழங்காலப் பல வகைப் பண்பாடுகளையும் பழக்கவழக்கங் களையும் பிற நல்லியல்புகளையும் வந்தவர் கைக்கொண்டு தம்மவை ஆக்கிக்கொண்டிருக்க வேண்டும். மற்றும் சிவன், திருமால், சத்தி போன்ற கடவுளரைக் கண்டு வழிபடும்

முறைகளும் அவற்றையொட்டிய சமய நெறிகளும் உண்டான காலமும் இதுவேயாகவேண்டும். இக்காலத்திலேதான் அவர் தம் சமயம் வளர்ந்ததோடு, அவர்தம் வைதிக சமயத்துக்கு மாறாக வடவிந்தியாவில் சமண புத்த மதங்களும் தோன்றி ஒன்றற்கொன்று மாறுபட்டுப் போர்களை நடத்தியிருக்க வேண்டும். இப்படிச் சமயம், பண்பாடு, நாகரிகம் முதலியவற்றில் இரு சாரார்க்கும் வடநாட்டில் போராட்டம் நடந்த காலமாக அந்த ஆயிரமாண்டுகளையும் கொள்வது பொருத்தமாகும். முடிவில் வந்தவர்தம் வாழ்வே வெற்றி பெற்றது என்பதையும் வரலாறு காட்டுகின்றது.

அதே காலத்தில் தெற்கே தமிழ் நாட்டில் அமைதி நிலவிற்று என்று கொள்ள முடியும். தொல்காப்பியம் தோன்றிய காலம் அதுவேயாம். அதன் காலத்தைப் பல வரலாற்று அறிஞர்கள் இன்றைக்கு மூவாயிரமாண்டுகளுக்கு முற்பட்டது என்பர். அதாவது, ஆரியர் இந்தியாவுக்கு வந்து ஐந்நூறு ஆண்டுகள் கழித்து என்பதாம். அந்த ஐந்நூறு ஆண்டு இடைக்காலத்தில் ஆரியர் மெள்ள மெள்ள இந்திய நாட்டின் தென்கோடி வரையில் வந்துவிட்டனர் எனக் கொள்வதில் தவறு இல்லை. வருணப் பாகுபாடும், வருணன் போன்ற கடவுளர் வழிபாடும், பிற இரண்டொரு குறிப்புக் களும் தொல்காப்பியத்தில் வருவது கொண்டு அக்காலத்தே ஆரியர் தமிழ் நாட்டில் குடியேறிவிட்டனர் எனக் கொள்வது வரலாற்றுக்குப் பொருத்தமானதேயாகும். ஆயினும், அவர் கள் தங்கள் கொள்கை முதலியவற்றை வடநாட்டைப் போன்று இங்கு நிலைநாட்ட முடியவில்லை என்பதையும் உணரவேண்டும். அன்று மட்டுமன்றி, இன்றளவும் அவ் வேறுபாடு அப்படியேதான் நிற்கின்றது என அறிகின்றோம். எனவே, அந்த இரண்டொரு குறிப்புக்களை இடைச்செருகல் எனக் கொள்ளாது, அவற்றை அப்படியே கொண்டு, அக்காலத்தில் ஆரியர் தமிழ் நாட்டில் கால் வைத்துவிட்டனர் எனக் கொள்வதில் தவறில்லை எனல் பொருந்தும்.

ஆரியர்தம் மொழியியலும், பிற பண்பாடு முதலியனவும் பரந்த இந்தியா முழுவதும் பரவினவாயினும், தமிழ் நாட்டில் மட்டும் அன்று அவை இடம் பெறமுடியாது நின்றுவிட்டன. கடைச்சங்க கால எல்லை வரையில் தமிழ் நாடு ஒன்றிலும் மற்றவருக்கு முடிவணங்கா வகையில் நிமிர்ந்து வாழ்ந்தது. கடைச்சங்க காலத்தில் பல குறிப்புக்கள் வடக்குப் பற்றியும், அதன் வரலாறு கதை பண்பாடு பற்றியும் வருகின்றனவேனும், அவை தமிழ் நாட்டை வென்றதாகக் காண முடியவில்லை. மாறாகத் தமிழர் அவற்றை வென்று கொண்டனர் எனவே காண்கின்றோம். எனவே, இந்நூல் வரலாற்று எல்லையென நாம் கொள்ளும் கடைச்சங்க காலம் வரையில், தமிழ் நாட்டார் பிற நாட்டவர் இடையீடும் தொல்லையும் இல்லாமல் வாழ்ந்தனர் என்பது பொருந்தும்.

இக்கடைச்சங்க காலத்துக்கு முன்னும் இதை ஒட்டியும் பலர் இவ்வடக்கையும் தெற்கையும் பிணைத்துக் காட்டு கின்றனர். கி.மு. 4ஆம் நூற்றாண்டில் சந்திரகுப்த மௌரியனை வாழ வைத்த பெருமை கௌடில்லியர் என்ற சாணக்கியருக்கு உண்டு. அவர் தம் அர்த்தசாத்திரத்தில் தெற்கே உள்ள தமிழ் நாட்டைக் குறிக்கின்றார். தாமிர வருணியும், பாண்டி நாடும், ஈழமும் அதில் குறிக்கப்பெறு கின்றன. அக்காலத்தில் வடநாடும் தமிழகமும் வாணிபத்தில் ஒன்றையொன்று பற்றிப் பிணைந்து சிறக்க வாணிபத் தொழிலை நடத்தின என அவர் குறிக்கின்றார். அக்காலத்தில் தமிழ் நாட்டில் உயர்ந்த மணிகளாகிய நவரத்தினங்களும், பிற உயர்ந்த பொருள்களும் இருந்தன எனவும் அவை வடநாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டன எனவும் குறிக்கின்றார். வின்சென்டு ஸ்மித்து அவர்கள் இவற்றையெல்லாம் காட்டி அக்காலத்திலேயே வடநாடும் தென்னாடும் பல வகையில் இணைந்திருந்தன எனக் குறிக்கின்றார்.[1] சங்க இலக்கியத்தில் வரும் மாமூலனார்

1. Oxford History of India, (III Edition) p. 92

பாடல்கள் இவ்வுண்மைகளையே விளக்குகின்றன. 'இந்திய வரலாற்று நூலும்' இவ்வுண்மையை நன்கு குறிக்கின்றது.[1] மைசூர் நாட்டுக் கல்வெட்டு ஒன்று சந்திர குப்தர் வடக்கு மைசூரை ஆண்டதாகக் குறிக்கின்றது[2] இவ்வாறு ஸ்மித்து போன்ற வரலாற்று ஆசிரியர் பலர் ஆராய்ந்து கண்ட உண்மைகளைச் சிலர் தம் கருத்துக்கு ஏற்ப இல்லை எனக் கூற முன் வருவதை நினைக்க வருந்தாது என் செய்ய முடியும்?

இனி, ஏறக்குறைய இக்காலத்தில் வந்த பிற நாட்டார் குறிப்புக்களும் வடக்கையும் தெற்கையும் பிணைத்தே பேசுகின்றன. கி. மு. மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளில் இந்தியா வந்த மெகஸ்தனிஸ், தாலமி போன்ற வரலாற்றறிஞரெல்லாரும் சந்திரகுப்த மௌரியர் காலத்தில் தமிழ் நாட்டில் மூவேந்தர் இருந்தனரென்றும் குறிக்கின்றனர். இவ்வாறு அக்கால எல்லையில் வடக்கும் தெற்கும் இணைந்து நின்றன. அதை அடுத்து ஒரு சில நூற்றாண்டுகளிலும் இந்த நிலையைக் காண்கின்றோம். சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவனது வடநாட்டு யாத்திரைக்கு உதவியவர் நூற்றுவர் கன்னர் என்பதும், அவரை வரலாற்றறிஞர் 'சதகர்ணி' என முடிவு செய்தனர் என்பதும், அந்தச் 'சதகர்ணி' என்ற பரம்பரையினர் ஆந்திர நாட்டு எல்லையில் ஆரியருடனும் நாகருடனும் தொடர்பு கொண்டு ஆண்டனர் என்பதும் வரலாறு கண்ட உண்மைகளாகும்.[3] ஏறக்குறைய அக்காலத்தை ஒட்டியே பின்னர் பஞ்சாபு வழியாக வந்த மற்றொரு மரபினராகிய பல்லவர் மெள்ள மெள்ளத் தெற்கு நோக்கி வர வழி தேடிக்கொண்டிருந்தனர்

---

1. History of India, by Sinha & Banerji, p. 60.
2. ibid p.70.
3. Political History of India, by H. Ray Chowdri pp. 280—81.

என்பர். கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் வாகடகர் ஆட்சி எழுமுன் மத்திய இந்தியாவில் சாதவாகனர் ஆட்சியே சிறந்திருந்ததென்பதை ஸ்மித்தும் பிறரும் நன்கு காட்டுகின்றனர்.[1] மற்றும் ஸ்மித்து. கி. மு. 20ல் ரோமர் தமிழ் நாட்டில் இருந்தனரென்றும், அகஸ்தஸ் பாண்டியரிடம் தூதனுப்பினார் என்றும் குறிக்கின்றார்.[2] மற்றும் அவரே சங்க காலத்தில் ஆரியர் ஆதிக்கம் தென்னாட்டில் அதிகம் வளரவில்லை எனவும் காட்டுகின்றார்.[3] நாம் இங்கு இந்த நூலில் அந்தக் கால எல்லையில் நின்று, காப்பியக் காலத்துக்கு முன் கடைச்சங்க கால எல்லை வரையிற் காணல் நலமாகும். எனவே. வரலாற்று எல்லை விளங்காத அந்தப் பழங்காலத்தில், வடக்கும் தெற்கும் இணைந்த வகையில் ஒரு சிலவற்றை எண்ணி எழுதுவது பயன் உடைத்தாம் எனக் கருதுகின்றேன்.

குமரிக் கண்டம் வாழ்ந்த அந்த நெடுநாள் தொடங்கிக் கடைச்சங்க காலம் வரையில் வடநாடும் தென்னாடும் பல வகையில் இணைந்து நின்ற வரலாறு ஏட்டில் அடங்காதது. அதை ஆராய இன்னதென எல்லை காட்ட முடியாத நீண்டகால ஆராய்ச்சி தேவை. உலகெங்கணும் அறிஞர்கள் அந்த உண்மையைக் காணத் துடிதுடித்து ஆராய்ந்துகொண்டே இருக்கின்றார்கள். அவர்கள் ஆராய்ச்சிகளெல்லாம் வளர வளர, எத்தனையோ புதுப் புது உண்மைகள் புலப்படும் என்பது உறுதி. சிந்து வெளியின் அகழ்ந்தெடுப்பு, பழம்பெரிந்திய நாட்டு வரலாற்றையே மாற்றிவிடவில்லையா! எதிர்காலத்தில் அதுபோன்று இன்னும் எத்தனை எத்தனை புதுப் பொருள்

1. Oxford History of India. p. 140. Political History of India. p. 342.

2. Oxford History of India. p. 160.

3. Ibid p. 161.

கள் கண்டுபிடிக்கப்பட்டு வரலாற்றில் புதுப் புதுத் திருப்பு மையங்களை உண்டாக்குமோ, யார் அறிவார்? காலம் பதில் சொல்லும்.

நாம் இன்று கிடைக்கும் வரலாற்று நிலை பிறழாத சான்றுகளைக் கொண்டு, மிகு பழங்காலந் தொட்டுப் பரந்த இந்திய நாடு—வடக்கும் தெற்கும்—எவ்வாறு இணைந்துள்ளது என்பதை ஒருவாறு எண்ணிப் பார்க்கலாம் என நினைத்தேன். அந்த எண்ணத்தின் அடிப்படையில் எழுந்தவை அடுத்து ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து உருப்பெற்றன. இக் கருத்துக்களே முடிவென்று நான் கூறவில்லை. வரலாற்று ஆராய்ச்சி இவற்றை மாற்றியும் அமைக்கலாம். இன்றைய எல்லையின் வரலாற்றுச் சான்றுகள் நமக்கு அளிக்கும் முடிவுகளே இவை என்ற அந்த அளவோடு அமைதல் பொருந்துவதாகும்.

---

*பக்கம் 22ல் காணும் தாழிபற்றி*

புதைக்கும் இடுகாடு பற்றித் தென்னாடும மத்திய தரைப் பகுதியும் இணைந்து குறிப்புகள் தருகின்றன என்பதை, நான் அண்மையில் (1985ல்) இத்தாலி சென்றபோது உரோம் நகரின் புற எல்லையில் தாழிகள்—பழம் இடுகாடுகள் அமைந்த நிலையினை என் 'ஏழு நாடுகளில் எழுபது நாடுகள்' என்ற நூலில் 74ம் பக்கத்தில் விளக்கியுள்ளேன். இந்த வரலாற்று உண்மை எவ்வளவு தெளிவானது—தமிழக மத்திய தரைக் கடல் இணைப்பு எவ்வளவு உண்மையானது என்பது வெளிப்படையாயிற்று.

# 2. இரண்டையும் இணைத்த எழுத்துக்கள்

வடக்கு, தெற்கு என்ற சொற்கள் எல்லையை ஒத்து நோக்கும் வகையில் பொருள் உணர்த்துவனவேயாம். இங்கே நாம் இச்சொற்களை வடவிந்தியா தென்னிந்தியா என்னும் பொருள்களிலேதான் வழங்குகின்றோம். இன்று பரந்த பாரதம் ஒன்றான போதிலும், இன்னும் பல வகையில் வடக்கும் தெற்கும் வேறுபட்டே இருக்கின்றன. இந்த எல்லை அடிப்படையிலே எத்தனையோ மாறுபாடுகளும் போராட்டங்களும் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. மாறுபாடுகளுக்கு இடையில் ஒற்றுமை காண வேண்டும் எனச் சிலர் முயல்கின்றனர். இந்த நிலையில் இந்த இருநிலப் பகுதிகளும் வரலாற்றுக் காலத்திலிருந்து எவ்வெவ்வாறு இணைந்துள்ளன என்பதை வரலாற்று ஆசிரியர் பலர் காட்டுகின்றனர். ஆயினும், வரலாற்று எல்லைக்கு நெடுங்காலத்துக்கு முன்னரே இரண்டும் பல வகையில் இணைந்திருந்தன என்பதை நாட்டு இலக்கியங்களும், கல்வெட்டுக்களும், பிற நாட்டார் குறிப்புக்களும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ்நாட்டு வரலாற்றின் எல்லை கடைச்சங்க காலத்தை ஒட்டியது என்பர். வடநாட்டு வரலாற்று எல்லை மௌரியர் ஆட்சி அல்லது அலெக்ஸாந்தர் படையெடுப்பு என்பர். எனவே, இக்கால எல்லையில் நின்று காணின், இதற்கு முன்பே வடக்கும் தெற்கும் பல வகைகளில் பின்னிப்

பிணைந்து வாழ்ந்திருந்தன எனக் காட்ட இயலும். ஆட்சியினாலும், பண்பாடு, நாகரிகம், கலை, இன்ன பிறவற்றாலும் பெரிதும் இன்றுபோலவே அன்றும் இரண்டும் ஒன்றாய் இணைந்து வாழவில்லை என்றாலும், இரு நாட்டினரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருந்தனர் எனப் பல இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும், ஆரியர் வடநாட்டுக்கு வருமுன் அனைத்திந்தியாவிலும் ஒரே இனம் இருந்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவ்வுண்மையை வேறு ஓரிடத்தில் ஆராய்ந்து காணலாம். இங்கே தமிழ் இலக்கிய வடநாட்டு இலக்கிய வரலாற்றுக் காலந்தொடங்கி அவை ஒன்றை ஒன்று எவ்வாறு தழுவிக் காட்டுகின்றன என்பதையும் அக்காலத்தில் இந்தியாவுக்கு வந்த பிற நாட்டவர் எவ்வெவ்வாறு இணைத்துக் கண்டார்கள் என்பதையும் காண்பது போதும் என நினைக்கின்றேன். சிறப்பாகத் தமிழ் இலக்கியத்தில் வடநாட்டுக் கதைகளும் பிறவும் எவ்வெவ்வாறு எடுத்தாளப் பெறுகின்றன என்பதை முதலில் ஆராய்ந்து காணலாம், தொல்காப்பியர் காலந் தொடங்கிக் கடைச்சங்க காலம் வரையில் தோன்றி மறைந்தன போக, எஞ்சி வாழும் இன்றைய தமிழ் இலக்கியங்களைத் துருவி நோக்கின், பல உண்மைகள் விளங்கும் என்பது உறுதி.

பாரதம் இராமாயணம் என்னும் இரண்டும் வடநாட்டுக் கதைகளே. வேதத்தில் இராமனும் கண்ணனும் கூறப்படாவிடினும், பின்னர் அவர்கள் வடநாட்டு இலக்கியத் தலைவர்களாய் நிலைத்த இடம் பெற்றுவிட்டார்கள். P.T. சீனிவாச ஐயங்கார் காட்டுவது போன்று, கண்ணன் திராவிட இளைஞனாகக்[1] காணப்பெறினும், இருக்கு வேதத்தில் அவன் ஆரியர்களை எதிர்த்த திராவிடத் தலைவனாகப் பேசப் பெறினும், பிற்காலத்தில் கண்ணன், கிருட்டிணனாகிப் பல வகையில் போற்றப்பட்டுள்ளமை அறிகின்றோம். இராம

1. The Vedic Age, p. 162

னைப்பற்றியும் வேத காலத்துக்கு நெடுநாட்களுக்குப் பின்பே அறிய இயல்கின்றது. ஆரியர்கள் இன்றைக்கு 3500 ஆண்டுகளுக்குச் சற்று முன் பின்னாகச் சிந்துவெளி யிலும் அடுத்துச் சில ஆண்டுகளில் கங்கைச் சமவெளியிலும் குடியேறினார்கள் என்பது வரலாற்று அறிஞர் வரையறுத்த உண்மையாகிவிட்டது. எனவே, அதற்குப் பிறகே இராமாயண பாரதக் கதைகள் உண்டாகியிருக்கவேண்டும். தமிழில் அவை இரண்டும் நெடுங்காலத்திற்குப் பின்பே மொழி பெயர்க்கப்பட்டன. பாரதம் முதன்முதல் பல்லவர் காலத்தில் பெருந்தேவனாரால் வெண்பா யாப்பில் மொழி பெயர்க்கப்பட்டது என்பர். அதனாலேயே அவர் 'பாரதம் பாடிய பெருந்தேவனார்' என வழங்கப் பெற்றாராம். பின்பு பாரதம் வில்லிபுத்தூரர் என்னும் புலவரால் விருத்தப் பாவில் விரிந்த அளவில் மொழி பெயர்க்கப் பெற்றது. முன்னது முழுதும் கிடைத்திலது. இராமாயணம் கம்ப ராலேயே முதன்முதல் மொழி பெயர்க்கப்பட்டது என்பர். எனினும், இந்த மொழி பெயர்ப்பு நூல்கள் உண்டாவ தற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே—கடைச் சங்க காலத்திலேயே—இந்த இரண்டு கதைகளும் தமிழ்நாட்டுக்கு அறிமுகமானவைகளாகவே சிறந்து விளங்கின. சங்க இலக்கியங்களில் இக்கதைகளைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. மக்கள் வாழ்வொடு பின்னிய காப்பியங்களைச் செய்த அக்காலப் புலவர்கள், அவ்வாழ்வை விளக்கும் எடுத்துக்காட்டுக்களாகவும், விளக்கங்களாகவும் பல இராமாயண பாரதக் கதைக் குறிப்புக்களைக் கையாண்டுள் ளார்கள்; அன்றியும், சில கதைகளை உள்ளபடியே போற்றும் முகத்தான் தங்கள் சொற்களின் இடையிடை பெய்து விளக்கந் தந்துள்ளார்கள். அவற்றுள் ஒரு சில காணலாம்.

தலைவன் களவு மணத்தில் தலைவியைக் கூடி மகிழ்ந்த காலத்து அது அம்பலாய்—அலராய் ஊரிலே பரவ, ஊரில் உள்ள பெண்கள் அதைப் பழிக்கும் முகத்தான் பலப்பல

கூறியிருப்பார்கள். அவற்றையெல்லாம் எண்ணி எண்ணித் தலைவி மயங்கியிருப்பாள். பக்கத்தில் உள்ள தோழி அவளுக்குத் தேறுதல் சொல்லி ஆறியிருக்கச் செய்திருப்பாள். அதே வேளையில் தலைமகனும் அவளை வெளிப்படையாக மணந்துகொள்ள வரைவு மலிந்தான். இதை அறிந்தாள் தோழி; ஓடித் தலைவியிடம் தலைவன் வரைவு மலிந்தான் என்றும், வம்பு பேசிய ஊர்ப் பெண்டிர் வாயடங்கினர் என்றும் கூறினாள். அப்போது அவள் எடுத்துக்காட்டிய உவமையே நம்மை இராமாயணத்துக்கு அழைத்துச் செல்கின்றது. இராமன் இலங்கையின்மேல் படையெடுத்த காலத்தில் கடற்கரையில் வானர சேனைகளோடு இருந்து போர் பற்றி ஆலமரத்தின் கீழ் ஆராய்ந்தானாம். அப்போது அம்மரத்தில் இருந்த பறவைகள் கூச்சலிட்டனவாம். அதனால், கீழே இராமனது ஆய்வு தடைப்பட்டதாம். எனவே, அவன் அப் பறவைக் கூட்டத்தைக் கையமர்த்தி ஒலி அடங்கச் செய்தானாம். அவையும் ஒலி அடங்கின. அந்த அடக்கத்தைப் போன்று தலைவியைப் பழித்த ஊரில் ஒலி அடங்கிற்று என்பதே உவமை. இதைக் கம்பர்கூடக் காட்டவில்லை போலும்! சங்க காலத்தில் வாழ்ந்த மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார் அழகுபட எடுத்துக் காட்டுகிறார். இதோ அவர் வாக்கு:

'வென்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலி அவிந் தன்றுஇவ் வழுங்கல் ஊரே.' (அகம். 70)

இனி, புறநானூற்றில் இவ்விராமாயணம் பற்றிய மற்றொரு குறிப்பினைக் காணலாம். அதுவும் இராமாயணத்தில் பின்னர் காணப்படாத ஒன்றாகவே உள்ளது. 'ஊன் பொதி பசுங்குடையார்' உயர்ந்த புலவர்; மற்ற புலவர்களைப் போன்றே வறுமையால் வாடியவர். அவர் சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னியைக்

காணச் சென்றார்; கண்டார். அவன் பல பரிசுப் பொருள் களை வழங்கினான். அவற்றுள் பல அணிகளும் இருக்கக் கண்டார்கள் புலவரின் மனைவி மக்கள். அவர்கள் அது வரை அணிகளைக் காணாதவர்கள் போலும்! எனினும், அவை அணியத்தக்கன என்பதை முன்னே பிறர் அணி யக் கண்டு உணர்ந்திருப்பார்கள். எனவே, அவர்கள் அவற்றை எடுத்து அணிந்தார்கள். எனினும், அணியும் முறை தெரியவில்லை. கழுத்துக்கணிவதை இடுப்புக்கும், காதுக்கு அணிவதை மூக்குக்கும், கைக்கணிவதைக் காலுக்குமாக இவ்வாறு மாற்றி அணிந்துகொண்டார்கள். அதை எண்ணிப்பார்த்தார் புலவர் பசுங்குடையார். அவருடைய எண்ணத்தில் இராம காதை உருவாயிற்று. இராவணனால் தூக்கிச் செல்லப்பட்டபோது, சீதை தன் அணிகளை ஆடையின் நுனியில் முடிந்து கீழே விட, அவை கிட்கிந்தையில் விழ, அவற்றின் சிறப்பறியாக் குரங்குகள் மாறி மாறி அணிந்த காட்சி அவர் கண்முன் நிழலிட்டிருக்கும். இதையே உவமையாகக் கொண்டு தம் சுற்றத்தைக் காட்ட விரும்பினார் புலவர். பாட்டும் எழுந்தது :

“மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு
இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விறற்செறிக் குநரும்
அரைக்கு அமை மரபின மிடற்றுயாக் குநரும்
மிடற்றுஅமை மரபின அரைக்குயாக் குநரும்,
கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலம்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாஅங்கு
அறாஅ அருநகை இனிதுபெற் றிகுமே.” (புறம்.378)

என்பது அவர் வாக்கு. இக்கருத்தும் கம்பரது இராமா யணத்தில் காணப்படாத ஒன்று என்பது அறிந்தோர் கூற்று.

இன்னும், இவ்விராமாவதாரத்தைப் பற்றியும் வேறு பல அவதாரங்களைப் பற்றியும் கூறும் சங்க இலக்கியங்கள் பலவாகும்.

—'வடா அது
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்துறை
அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்
மரம்செல மிதித்த மாஅல் போல' (அகம். 59)

என்றும்,

'வண்டுஅடைந்த கண்ணி வளர்ஆய்ச்சி வாள் நெடுங்கண்
சென்றடைந்த நோக்கம் இனிப்பெறுவ தென்றுகொல்
கன்றுஎடுத்து ஒச்சிக் கனிவிளவின் காய்உகுத்துக்
குன்றெடுத்து நின்ற நிலை!'
(முல்லைப்பாட்டு, இறுதி)

என்றும்,

'கூந்தல் என்னும் பெயரொடு கூந்தல்
எரிசினம் கொன்றாய்' (பரிபாடல், 3:31,32)

என்றும் கண்ணனுடைய திருவவதாரத்தை விளக்கிக் காட்டுகின்றன சங்கப் பாடல்கள். மற்றும்,

'ஞாலம்மூன்று அடித்தாய முதல்வற்கு முதுமுறைப்
பால்அன்ன மேனியான் அணிபெறத் தைஇய
நீலநீர் உடைபோல' (கலி. 124: 1-3)

என்றும்,

'நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போல' (முல்லைப் .1-3)

என்றும்,

'திணிநிலம் கடந்தக்கால் திரிந்தயர்ந்து அகன்றோடி
நின்னஞ்சிக் கடற்பாய்ந்த பிணிநெகிழ்பு அவிழ்தண்டார்
அன்னவர்பட, அல்லா அவுணர்க்கும் முதல்வன்நீ.'

*(பரி. 3:54-56)*

என்றும் திருமால் கொண்ட பேருருவாம் திரிவிக்கிரம அவதாரத்தைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இன்னும், இரணியனைத் தடிந்த நரசிங்க அவதாரம் பற்றியும்[1] பரசுராம அவதாரம் பற்றியும்,[2] பலராம அவதாரம் பற்றியும்[3] வராகவதாரம் பற்றியும்[4] வேறுபல புராணக் கதைகள் பற்றியும் சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவற்றுள் ஒன்று மட்டும் கண்டு மேலே செல்லலாம்.

'இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமைஅமர்ந்து உயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல,

*(கலி. 38:1-5)*

என்று இராவணன் கைலை மலையை எடுக்க நினைத்து முயன்று வெற்றி பெறாது வாடிய நிலையினை நன்றாகப் புலவர் சித்தரித்துக் காட்டுகின்றார். இவ்வாறே பலப்பல இடங்களில் சங்க இலக்கியங்கள் வடநாட்டுக் காப்பியக் கதைகளையும் அவை ஒட்டிய பிற வரலாறுகளையும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. இப்பாடல்கள் அனைத்தும் ஒரே காலத்தைச் சேர்ந்தன என்று கொள்ள முடியாதன. கி.மு. ஐந்நூறு தொடங்கியும்—ஏன்?—அதற்கு முன்பும் கி.பி. 300 அல்லது 400 வரையும் பாடப்பட்ட பாடல்களல்லவா?

1. பரிபாடல், 4:10-21. 2. அகம், 220:3-9.
3. பரிபாடல், 2:20-23. 4. பரிபாடல், 2:16,17.

எனவே, வடநாட்டுக் கதைகளாகிய இராமாயண பாரதங்கள் தமிழில் முழுக்க முழுக்கக் காப்பியங்களாக மொழி பெயர்க்கப்படு முன்பே, அக்கதைகள் பற்றிய குறிப்புக்கள் தமிழ்நாட்டில் நன்கு வழங்கப் பெற்றிருந்தன என்பது தெரிகின்றது.

இவையன்றி ஆரிய அரசன் ஒருவன் பாடிய தாகவே குறுந்தொகையில் ஒரு பாட்டு உண்டு. அவன் பெயர் 'ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன்' என்பதாகும். அக்காலத்துச் சிறந்த புலவராகிய கபிலர் குறிஞ்சிப் பாட்டைப் பாடித் தமிழின் இனிமையை ஆரிய அரசன் பிரகத்தனுக்கு அறிவித்தார் என்று குறிஞ்சிப் பாட்டின் கடைசிக் குறிப்புக் காட்டுகின்றது. இருவரும் ஒருவராய் இருக்கலாம் என்று கொள்வதில் தவறு இல்லை. சான்றாண்மை மிக்க கபிலர் வழியே தமிழின் இனிமையையும் சிறப்பையும் அத்தமிழர்தம் காதல் வாழ்வையும் கண்டு களித்த அந்த ஆரிய மன்னன், தன்னை மறந்த நிலையிலே அக்குறுந்தொகைப் பாடலைப் பாடியிருப்பான் என்பதில் ஐயமில்லையன்றோ! அப்பாடலும் நல்ல கருத்தை உட்கொண்டு சிறந்ததாய் விளங்குகின்றது. இதோ அந்தப் பாட்டையே உங்கள் முன் வைக்கின்றேன்:

'அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை;
குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே;
இதற்குஇது மாண்டது என்னாஅ, அதற்பட்டு
ஆண்டொழிந் தன்றே மாண்டகை நெஞ்சம்;
மயிற்கண் அன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉம் கான லானே.' (குறுந். 184)

'கழறிய பாங்கற்குத் தலைவன் சொல்லியது' என்ற தலைப்பில் அந்த ஆரிய அரசன் பாடிய பாடல் எண்ணி எண்ணிப் போற்ற வேண்டிய ஒன்றன்றோ! எனவே, இப்படியே அக்காலத்தில் வடநாட்டவர் பலர் தமிழ் நாட்டுக்கு வந்து

தமிழ் துய்த்துத் தம்மை மறந்து உள்ளத்தால் தமிழராய் வாழ்ந்திருக்க வாய்ப்பிருந்திருக்கும். இப்பிரமதத்தன் அவருள் சிறந்தவனாகிப் பாட்டு இயற்றவும் ஆற்றல் பெற்றான். சென்ற சில நூற்றாண்டுகளில் மேலை நாட்டிலிருந்து வந்த வீரமாமுனிவர், போப்பு போன்றார் செயல் கண்டு போற்றும் நமக்கு இது வியப்பாமோ! இது நிற்க.

தமிழ்நாட்டுப் பண்பாட்டில் காணாத—தமிழர் அற வாழ்வுக்குப் புறம்பான சில பழக்கவழக்கங்கள் அக் காலத்திலேயே தமிழ் நாட்டில் இடம் பெற்றிருந்தன என்ற உண்மையினையும் பல சங்கப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. அவற்றுள் முக்கியமான ஒன்று, யாகம் செய்தல். 'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத் துண்ணாமை நன்று,' என்று வள்ளுவர் காட்டிய நாட்டில் பல யாகங்கள் செய்த மன்னர்கள் வாழ்ந்தார்கள் எனக் காண்கின்றோம். ஆரியப் பழக்க வழக்கங்களுக்கும், மொழிக்கும், வழிபாட்டு முறைக்கும், பிறவற்றிற்கும் முதல் இடம் கொடுத்துப் போற்றிய பிற்காலச் சோழர்களே யாகத்தை விரும்பவில்லை; யாகத்தினும் தானமே மேல் என்ற எண்ண அடிப்படையிலேதான் பலப்பல அறங்களைப் பலப்பல வகைகளில் செய்தார்கள். ஆயினும், சங்க காலத்தில் இரண்டொரு மன்னர் யாகம் செய்வதையே சிறப்பாகக் கொண்டனர் என்பது தெரிகின்றது. யாகம் வளர்த்தல் நாட்டு மக்களாலும் மன்னராலும் விரும்பப்பட்ட ஒரு வழக்கமாகக் கொள்ளப்படவில்லை என்பது தெளிவு. மாறாக, அதை விரும்பாது வெறுத்தார்கள் என்பதும் துணிபு. எனினும், இராச சூயம்வேட்ட பெருநற்கிள்ளியாகிய சோழ மன்னனும், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியாகிய பாண்டியனும், பல்யானைச் செல்கெழு குட்டுவனாகிய சேர மன்னனும் தமக்காக அன்றேனும் பிறர் பொருட்டாகவேனும் யாகங்களைச் செய்தார்கள் என்பதைக் காண்கின்றோம். எனவே, கடைச்சங்க காலத்தில் நாட்டினர் அவ்வப்பு

விரும்பவில்லை என்றாலும், ஒரு சிலர் இப்படிப் புதியராய் வடநாட்டவர்தம் வழக்கச் சூழலில் சிக்கி யாகம் செய்ததோடு, அவர்தம் பழக்க வழக்கங்களுள் சிலவற்றையும் மேற்கொண்டார்கள் என அறிகின்றோம். இப்படியே தமிழ் நாட்டு இலக்கியக் கடலுள் மூழ்கிக் காணின், அக்காலத்தில் வடக்கும் தெற்கும் இணைந்த பல காட்சிகளைக் காண முடியும். தொல்காப்பியத்தில் தொட்டதாகக் காணப்பெறும் இந்த இணைப்பு, கடைச்சங்க காலத்தில் நன்கு வளர்ந்து விட்டது என்று கொள்வதில் தவறு இல்லையன்றோ!

இவ்வாறு கதைகளும் பழக்கவழக்கங்களும் மட்டுமன்றி, மலையும், ஆறும், அரசும், பிறவும் சங்க இலக்கியங்களில் எடுத்தாளப் பெறுகின்றன என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன. இமயமும் கங்கையும் பேசப் பெறுகின்றன. மோரியரும் நந்தரும் இலக்கியத்தில் எடுத்துக்காட்டப் பெறுகின்றனர். இன்னும் சில வடநாட்டுப் பகுதிகளும் வரலாறுகளும் அன்றே தமிழ் நாட்டில் அறியப் பெற்றன வாய் விளங்கின.

இனி, வடநாட்டுப் பழம்பேரிலக்கியங்களில் தென்னாடு பேசப்படுவதையும் ஓரளவு காணல் பொருத்தமானதாகும். வேதங்களிலும் தென்னாடு விளக்கமாகப் பேசப் பெற வில்லை. ஒரு வேளை இருக்குவேதம் தோன்றிய அந்தக் காலத்தில் தென்னாட்டைப் பற்றி அவர்களுக்குத் தெரிந் திருக்க வழி இல்லை என்றாலும், தென்னாட்டு மக்களினத்த வர் வடக்கே இமயம் வரையில் ஆரியர் வரும்போது வாழ்ந் திருந்தார்கள் என்று வரலாற்றாளர் கொள்வதை அறிய வேண்டும். ஆரியர் அத் தென்னாட்டு இனத்தவராகிய கறுப்பரோடு மாறுபட்டுக் கலகம் விளைத்திருக்கின்றனர். பழங்குடிகளைக் கறுப்பர் எனவும் அவர்தம் தலைவனைக் கறுப்பன் (கிருஷ்ணன்) எனவும் பழித்துரைத்தமைக்கு வேதத்தில் பலசான்றுகள் உள்ளன. அவர்கள் இந்திரனை வழிபாடு கடவுளாகக் கொண்டார்கள். கிருஷ்ணன் அல்லது

கறுப்பன் அவர்தம் பகைவர் தலைவன். இந்தக் கதையைத் தான் பாகவதம் கண்ணன் இந்திரனுக்கு எதிராகப் போர் தொடுத்துக் குன்றைக் குடையாக்கி, தன் மக்களை இந்திரன் தொல்லையிலிருந்து காத்தான் எனக் கூறுகின்றது போலும்! ஆயினும், அந்த இந்திரனைப் போற்றும் வழக்கம் மெள்ள மெள்ள வடநாடு முழுவதும் பரவியதோடன்றித் தென்னாட்டிலும் புகுந்து, சிலப்பதிகார காலத்தில் சிறந்த விழாவாய்த் தமிழர் கொண்டாடத் தக்க வகையில் வளர்ந்து விட்டதெனக் காண்கின்றோம். எனவே, இன்றைக்கு 3500 ஆண்டுகளுக்குமுன் புகுந்த ஆரிய மக்கள், தம் கொள்கை, பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் முதலியவற்றை மெள்ள மெள்ள வடவிந்தியாவிலும் தென்னாட்டிலும் மாறுபாட்டுக்கும் வேறுபாட்டுக்கும் இடையிலும் நெடுநாட்களுக்கு முன்பே பரப்பிவிட்டார்கள் என்பது தெளிவு.

இனி அவர்தம் இராமாயண பாரத காவியங்களிலும் தென்னாடு பேசப்படுகின்றது. வான்மீகியார் தம் இராமாயணத்தே தமிழ்நாட்டைப் பற்றிக் குறிக்கின்றார் என்பதை அறிகின்றோம். சீதையைத் தேட அனுமனைத் தெற்கு நோக்கி அனுப்பிய சுக்கிரீவன், 'சேர சோழ பாண்டி நாடுகளைக் காணக் கடவீர்கள்,' என ஆணையிட்டதாக வான்மீகியார் காட்டியுள்ளாராம். மற்றும், பாண்டியர் தலைநகராகிய கபாடபுரத்திலும் காண வேண்டுமென ஆணையிட்டதாகவும் கூறுவர் எனவே, வான்மீகியார் காலத்தில் தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தர்கள் இருந்தது மட்டுமன்றி, பாண்டியர் தலைநகர் கபாடபுரமாய் இருந்ததெனவும் கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே, மிகு பழங்காலத்திலேயே வடக்கும் தெற்கும் இலக்கியவழி அறிமுகமானவையாகவே இருந்தன.

வியாச பாரதத்திலும் தமிழ் நாட்டைப் பற்றிக் குறிப்பு வருகிறதாம். அருச்சுனன் தீர்த்த யாத்திரையின் போது பாண்டிய மன்னன் மகளை மணந்ததாக ஒரு குறிப்பு உள்ளது.

போலும்! அந்தக் கருத்தைத்தான் பெரிதாக்கிப் பின்னாளிலே பிறர் 'அல்லி அர்ச்சுனன்' என்ற நாடகமாக்கி மேடையில் நடித்தனர்! மற்றும் தமிழ் வேந்தன் சேரலாதன் பாரதப் போரில் சோறளித்த சிறப்பை நம் இலக்கியங்கள் காட்டிய படி பாரதம் எடுத்துக் காட்டவில்லை என்றாலும், அது பாரதப் போரில் தமிழ் நாட்டு மன்னரின் பங்கு இருந்தது என்பதைக் காட்டுகின்றது என அறிகின்றோம். இவ்வாறே வேறு சில வடமொழிக் காவியங்களிலும் தென்னாடு குறிப் பிடப்படுவதை எடுத்துக் காட்டுவர் அறிஞர்.

இனி, இவ்வாறான இலக்கியங்களேயன்றிச் சில கல்வெட்டுக்களும் வடக்கையும் தெற்கையும் இணைத்துக் காட்டுகின்றன. சிறப்பாக அசோகர் காலத்துக் கல்வெட்டுக் கள் தென்னாட்டை மட்டுமன்றி, ஈழநாட்டையும் வட நாட்டுடன் பின்னிப் பிணைக்கின்றது. அசோகரே இந்திய வரலாற்று எல்லையில் முதன்முதல் விரிந்த நிலப்பரப்பைத் தம் ஆணையின்கீழ் வைத்து ஆண்டவர். ஆயினும், தமிழ் நாடு அவர் ஆணைக்கு உட்படாததாய்த் தனியாகவே உரிமை பெற்று வாழ்ந்தது. அவர் ஆட்சி வடக்கு மைசூர் வரையில் இருந்ததாக மைசூர் நாட்டைச் சேர்ந்த சித்தல் துர்க்கக் கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.[1] அவர் காலத்தில் கிரேக்க உரோம நாட்டு மக்கள் இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் வந்து தங்கினார்கள் என்றும், அவர்களை இந்நாட்டு மக்கள் யவனர்களென்ன வழங்கினார்களென்றும் அவர் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். அவர்கள் சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் 'யவனர்' என்றே வழங்கப் பெறுவதைக் காண்கின்றோமல்லவா! அலெக்சாந்தர் போர் மேல் விருப்புற்று நாட்டெல்லையைப் பெருக்க வடமேற்குக் கணவாய் வழியே இந்திய மண்ணில் கால் வைக்குமுன்பே, அவர் முன்னோர்கள் கடல் வழியாகத் தமிழ் நாட்டு மேலைக் கடற்கரையில் வந்து தங்கி இரு நாட்டு வாணிப

1. Asoka, by D. R. Bhandarkar, M.A. (Bomb), p 27

வளனையும் வளர்த்தார்கள் என்பதற்கு 'அரிசி' போன்ற சொல் ஆய்வுகளும், 'யவனர்' என்னும் பெயர் பல இலக்கியங்களில் எடுத்தாளப் பெறுவதும் சிறந்த சான்று களாகும்.

அசோகர் தம் கல்வெட்டுக்கள் வழி ஆராய்ச்சி செய்த ஸ்மித்து (V. A. Smith) அவர்கள், அக்காலத்தில் ஆந்திர நாடு கிருஷ்ணை ஆற்றங்கரைக்கு வடக்கும் மேற்கும் பரந்து விரிந்து இருந்ததென்றும், அதுவரை சோழ நாட்டு எல்லை விரிந்து சிறந்து நின்றதென்றும் காட்டுகின்றார்[1]. மற்றும் ஆய்வாளர்கள் சேர, சோழ, பாண்டிய நாடுகள் சேர்ந்த தமிழ் நாடு அசோகர் காலத்தில் தனி உரிமை பெற்று அசோகருடன் சம நிலையில் வாழந்தது எனக் காட்டு கின்றனர். அசோகர் நாட்டுக்குத் தென்னெல்லைக் கோடு வரைகின்ற வரலாற்றறிஞர் சென்னைக்கு வடக்கே இப்போதைய தமிழ்நாட்டு எல்லைக் கோட்டில் நிற்கும் புலிக்கட்டு (பழவேற்காடு) தொடங்கி மைசூர் நாட்டுச் சித்தலதுர்க்கம் வரை சென்று தென்கன்னட நாட்டு எல்லையில் மேற்குக் கடற்கரையில் முடிகிறது எனக் கணக்கிட்டுள்ளனர்.[2]

அசோகர் காலத்துக் கல்வெட்டு எழுத்தின் வழி, தமிழ் நாட்டைப் பற்றிப் பல நல்ல குறிப்புக்கள் நமக்குக் கிடைக்கின்றன. அசோகர் எல்லைக்கு உட்படாத நாடு களைத் தென்னாடுகள், வடநாடுகள் என இரு பிரிவாக்கு கின்றனர். தென்னாடுகளைக் குறிக்கும்போது சோழ, பாண்டிய, கேரள, சத்திய புத்திரரைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் முன் வருகின்றன. அசோகர் காலத்தில் தனி உரிமையோடு வாழ்ந்த தென்னாட்டு மக்களுள் இவ் வாறு மன்னர் சிலர் ஆட்சியில் சிறந்தனர் என அவர்

1. Asoka, p. p. 34, 35
2. ibid. p. 45.

கல்வெட்டுக்களே காட்டுகின்றன. இவர்கள் நமக்கு நன்கு பழக்கமானவர்களே எனினும், அசோகர் கல்வெட்டுக்கள் மூலம் இவர்களைப் பற்றிப் பல புதிய உண்மைகளை உணர்ந்துகொள்ள முடிகின்றது. அசோகர் கல்வெட்டுக்கள் சோழ பாண்டியரைப் பன்மையிலேயே குறிக்கின்றன. எனவே, இரு வேறு சோழர்களும் அப்படியே இருவேறு பாண்டியர்களும் அவர் காலத்தில் வாழ்ந்தார்கள் எனக் கொள்ளலாம். அவர் கல்வெட்டுக்களுக்கு ஏற்ற நிலையில் அக்காலத்தில் தமிழ் நாட்டுக்கு வந்த. வரலாற்றுக் குறிப்புக்கள் எழுதிய யவன யாத்திரிகர் தாலமி[1] பெரிபுளூஸ்[2] போன்றார் எழுத்துக்களும் அமைந்துள்ளன. சோழர் ஆட்சி தெற்கும் வடக்கும் என இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது, தெற்குச் சோழர்கள் திருச்சிக்கு அடுத்த உறையூரைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்தார்கள் என்பது அறிய முடிகின்றது. சோழர் தலைநகராக ஓர்தூரா (Orthura) என யவன ஆசிரியர் குறிப்பது உறையூரையேயாகும் எனக் கன்னிங்காம் அவர்கள் கருதுவது பொருத்தமானதாகும். இக் கருத்தை வலியுறுத்தி இந்தியப் பழமை பற்றி வெளி வந்த இதழ்த் தொகுதி[3] திட்டமாகவும் எழுதியுள்ளது. எனவே, தெற்கில் ஆண்ட சோழர் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்பது நன்கு தெளிவாகின்றது. இதனால், நாம் மற்றொன்றும் எண்ண வேண்டியுள்ளது. காவிரிப் பூம்பட்டினம் என்னும் புகார் அழிந்த பிறகுதான் உறையூர் தலைநகராய் வளர்ந்ததென்று கூறும் ஒரு சிலர் தம் கூற்றுக்கள் பொருந்தா என்பதும், புகார் அழியு முன்பே உறையூரும் சோழர் தலைநகராகவே இருந்தது என்பதும் உறையூர் உள் நாட்டுத் தலைநகராகவும் இருந்தது என்பதும்

1. Ptolemy
2. Periplus
3. Indian Antiquity

அறிதல் வேண்டும். இனி, வடக்குச் சோழர் தலைநகரை ஆர்க்காடு எனக் குறிக்கின்றனர்.[1] தமிழ் நாட்டு எல்லையில் செங்கற்பட்டு. வடவார்க்காட்டு மாவட்டங்களில் 'ஆர்' தொடர்புடைய ஊர்கள் சில உள்ளன. இன்றும் தமிழ்நாட்டு மாவட்டங்கள் இரண்டு தென்னார்க்காடு, வடவார்க்காடு எனவே வழங்கப்பெறுகின்றன அல்லவோ! 'ஆர்' சோழருக்கு உரிய மாலை. அந்த மலர் நிறை மரங்கள் செறிந்த காடு 'ஆர்க்காடு என வழங்கியிருக்கலாம். இன்றும் ஆர்க்கோணம், ஆர்ப்பாக்கம் போன்ற ஊர்கள் இப் பகுதியில் இப் பெயர் களோடேயே நிலவி வருவதை யாரும் அறியலாம். இவை அனைத்தும் சோழர் தொடர்புடையனவே; அவரது மாலையை மணம் பெறச் செய்தனவேயாம். இந்த உண்மை அறியாது இவற்றை 'ஆற்காடு', 'ஆற்பாக்கம்' எனத் தவறாக எழுதுகின்றார்கள் இக்காலத்து மக்கள். இனி, 'ஆர்க்காடு அக்காலத்து வடபகுதிச் சோழர் தலைநகராயின், காஞ்சிபுரம் இல்லையா?' என்ற கேள்வி எழும். காஞ்சிபுரம் அக்காலத்தில் ஒரு சிற்றூராய் இருந்திருக்கலாம். பின்பு கடைச்சங்க காலத்தில் கரிகாலனே அக்காஞ்சியையும் அதைச் சுற்றிய பகுதியினையும் வளமாக்கினான் எனக் காண்கின்றோம். பின்பு தொண்டைமான் இளந்திரையன் காலத்தில் அது தலைநகராகவே திகழ்ந்தது. பின்பு பல்லவர்கள் காலத்துச் சிறந்தோங்கி இன்றளவும் நலமுற்று நிற்கின்றது. இவற்றின்வழி அசோகர் கல்வெட்டுக்களிலும், அக்காலத்தில் வெளிநாட்டார் வரலாற்றுக் குறிப்புக்களிலும் அசோகர் காலத்தில் சோழநாட்டு எல்லை விரிவாய் இருந்த தெனவும், இரு வேறு தலைநகர்களில் இருவேறு சோழ மன்னர்கள் ஆண்டார்கள் எனவும் கொள்ள வேண்டியுள்ளது.

இனிப் பாண்டியரைப் பற்றிக் காண்போம். அசோகர் பாண்டியரையும் பன்மையாலேயே குறிக்கின்றார். எனினும்,

1. Asoka, p. 39; Ptolemy (A. D. 130, Indian Antiquity); Asoka, p. 40.

சோழரைக் குறித்ததுபோல, 'தாலமி' பாண்டியர் இருவரெனக் குறிக்கவில்லை. ஆயினும், பாண்டி நாட்டு எல்லை கன்னியாகுமரி தொடங்கி, கொங்கு நாட்டையும், மைசூர் நாட்டு ஒரு பகுதியையும் தன்னகத்துக் கொண்டிருந்ததென அசோகர் கல்வெட்டுக்கள் மூலம் அறிகின்றமையின், அப்பரந்த நிலப்பரப்பை இரு வேறு பாண்டியர்கள் ஆண்டார்கள் என்று கொள்வதே பொருத்தமாகும். மதுரையைத் தலைநகர் என யவன ஆசிரியர்கள் குறிக்கின்றார்கள். எனவே, மதுரையைத் தலைநகராகக் கொண்டு, பாண்டி நாட்டுத் தென்பகுதியை ஒரு பாண்டியரும், கொங்குநாட்டையும் அதைச் சார்ந்த பிற பகுதிகளையும் மற்றொரு பாண்டியரும் ஆண்டார்கள் என்று கொள்வது பொருத்தமானதாகும். பின்பு கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வந்த வராகமித்திரர், இருவேறு பாண்டியர் இருந்தனர் எனவும், அவருள் ஒரு சாரார் 'உருத்திர பாண்டியர்' எனவும் குறிக்கின்றார்.[1]

கேரள புத்திரரைப் பற்றியும் சத்திய புத்திரரைப் பற்றியும் திட்டமான முடிபுகள் அசோகர் கல்வெட்டு எல்லையில் நின்று காண முடியாவிட்டாலும், தாலமி, பெரிபுளூஸ் போன்ற யவன ஆசிரியர்கள் குறிப்புக்களைக் கொண்டும், பிற சூழல்களாலும் திருவனந்தையைத் தலைநகராகக் கொண்டு திருவாங்கூர்ப் பகுதியை ஆண்டவர்களைச் சத்தியபுத்திரர் என்றும், இக்காலக் கண்ணனூர் (Kranganur) நகரைத் தலைநகராகக் கொண்டு மலபார், கூர்க்கு, தென்கன்னடம் ஆகிய பகுதிகளை ஆண்டவர்களைக் கேரளபுத்திரர் என்றும் கொள்ள வழியுண்டு. இவர்களை வடநாட்டில் ஆண்ட இப்பெயர் கொண்ட சில பரம்பரையோடு சேர்த்தோ, அவர்தம் வழி வந்தவர்கள் என்றோ கூறுவது பொருந்தாது என டாக்டர் பண்டர் கார்

1. Brihat - Samhita, XVI : 10.

நன்கு விளக்குகிறார்.[1] இவ்வாறு அசோகர் கல்வெட்டுக் களாகிய எழுத்துக்கள் தென்னாட்டையும் அதன் பகுதிகளை யும் நன்கு விளக்கிக் காட்டுகின்றன.

அசோகர் காலத்தில் தென்னாட்டு மக்களுக்கும் வட நாட்டு மக்களுக்கும் உணவு, உடை, வாழ்க்கை முறை முதலியவற்றுள் பலப்பல வேறுபாடுகள் இருந்தன எனக் காண்கின்றோம். அசோகர் காலத்தில் வடக்கிலும், மத்திய இந்தியாவிலும், தெற்கிலும் தனித்தனி வகைப்பட்ட மொழிக் குடும்பங்கள் வாழ்ந்திருந்தன என்பதும், வடவிந்திய மொழிகளுக்கும் தென்னிந்திய மொழிகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதும் நன்கு தெரிகின்றன.[2] அசோகரின் கலை நலம் மேலை நாட்டுக் கிரேக்க 'ஹெலன்' கலை நலனை ஒத்ததென்பர் சிலர். எனினும், அம்மேலை நாட்டுக் கலை நலமும் அசிரியரிடமிருந்து[4] பெற்றதே என்றும், அந்த அசிரியர் மௌரியர்களுக்கு முன் இந்தியா வின் பல பாகங்களோடு தொடர்புகொண்டும் இந்தியா விலேயே வாழ்ந்தும் இருந்தார்கள் என்றும் காட்டுவர். அவர்களையே வேதம் அசுரர் எனக் குறிக்கின்றது என்பர். அவர்கள் ஆரியர் வருமுன் இந்தியா முழுதும் பெருநகரங்கள் அமைத்துச் சிறந்த நாகரிகம் பெற்று வாழ்ந்தவர்கள் என்பர் ஆய்வாளர். இந்தியநாட்டுக் கட்டடக் கலை பெரும்பாலும் அசுரரென்னும் அந்த அசிரியர்களாலேயே வளர்ச்சியுற்றதென்றும், அசோகர் காலத்தில் அது சிறந்து நின்றதென்றும், அசோகர் காலக் கலை நலமும் கலந்து அது அன்று தொட்டு இந்தியக் கலையாகவே அமைந்துவிட்ட

1. Asoka, pp. 41, 42.
2. ibid, pp. 198, 199.
3. Hellenic Art.
4. Assyrians.
5. Asoka, p. 215

தென்றும் பண்டர்கார் விளக்கியுள்ளார்கள்.[1] பாபிலோனியா விலிருந்த மக்களொடு இந்தியமக்கள் தொடர்பு கொண் டிருந்தார்கள் என்பதை நாகபுரிப் பொருட்காட்சிச் சாலை யில் உள்ள கி.மு. 2000-த்தைச் சேர்ந்த முத்திரை (Seal) நன்கு விளக்குகின்றது என்பர். அது மத்திய இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டதாம். இவற்றால் மிகு பழங்காலத் திலிருந்தே மத்தியதரைக் கடல் நாடுகள். மேற்காசிய நாடுகள் ஆகியவற்றுடன் இந்தியாவின் வடக்கும் தெற்கும் பல்வேறு வகைளில் இணைந்து நின்றன என்பதும், அந்த இணைப்பின் வழிப் பல நாகரிகங்களும் பண்பாடுகளும் கலந்து புதுப்புது மாற்றங்களை வரலாற்றில் உண்டாக்கின என்பதும் தெரிகின்றன. இந்த நிலையிலே தான் அந்தப் பகுதிகளில் வாழ்ந்த அசிரியரும் பின் வந்த ஆரியரும் கடல் வழி தென்கோடியிலுள்ள இலங்கை, தமிழ்நாடு முதலிய வற்றிற்குச் சென்றிருக்கக்கூடும் எனக் கொள்வதும் பொருந்துவதன்றோ!

இனி, அசோகர் தம் புத்த மதத்தைத் தம் ஆணையின் கீழ் இல்லாத் தென்னாட்டிலும், இலங்கையிலும் பரப்பினார் என்பது வரலாறு கண்ட உண்மை. அவர் தம் மக்களுள் சிலரையே இங்கு அனுப்பினார் எனக் காண்கின்றோம். தமிழ்நாடு வழியாக அசோகர் அனுப்பிய பௌத்தம் இன்னும் இலங்கையில் வாழ்கின்றது தமிழ்நாட்டில் பல சூழல்களுக்கு இடையில் வரலாற்றில் நின்றுவிட்ட ஒன்றாய் அது அமைந்துவிட்டது. எனினும், ஆட்சியால் அசோகர் காலத்தில் தென்னாட்டுக்கு அவருடைய நேரடித்தொடர்பு இன்றேனும், சமயத்தால் அவர் தென்னாட்டை மட்டுமன்றி, ஈழம், சீனநாடு முதலியவற்றையும் பிணைத்தார் எனக் கொள்ள வேண்டியுள்ளது. மேலை நாட்டில் கிரேக்கரல்லாத பிறரிடம் அக்கிரேக்க நாட்டு ஹெலன் கால நாகரிகம் பரவி நின்றது போன்றே, அசோகர் காலத்துக்கு முன்பே ஆரிய

1. Asoka. p. 216

நாகரிகம் ஓரளவு இந்தியா முழுவதும் பரவத் தொடங்கி விட்டது என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.[1]

அசோகர் கல்வெட்டுக்களைக் காணும்போது அக் காலத்தில் வந்த யவன மக்களுடைய குறிப்புக்கள் இரண் டொன்றைக் கண்டோமல்லவா? ஆம்! அவை போன்றே அக்காலத்தில் இந்திய நாட்டுக்கு வந்த பலர் வடக்கையும் தெற்கையும் கண்டு பல கருத்துக்களைக் கூறியுள்ளனர். அவற்றுள் ஒரு சில கண்டு மேலே செல்லலாம்.

மெகஸ்தனிஸ் போன்ற மேலை நாட்டவரும் பாஹியான் போன்ற கீழை நாட்டவரும் அந்த வரையறுத்த வரலாற் றுக்கு முற்பட்ட காலத்தில் இங்கே வந்து பல குறிப்புக்களை எழுதி வைத்துச் சென்றுள்ளனர். அவருட் சிலர் கடல் வழியாகவும், சிலர் தரை வழியாகவும் இந்தியாவுக்கு வந்துள்ளனர். கடல் வழி வந்துள்ள பலர் தென்னாட்டுக் கரைகளிலே இறங்கி, நாட்டில் உலவினர். தரை வழியாக வந்தவர்களோ, அகன்ற வடவிந்திய நிலப்பரப்பு வழியாக மெள்ள மெள்ளத் தென்னாட்டிலும் கால் வைத்தார்கள். மற்றும் மேலை நாட்டுக் கீழை நாட்டுக் கடல்வழி வாணிபத் திற்கு இடைநிலைக்களனாய்—நடு நாயகமாய்—இந்தியா, சிறப்பாகத் தென்னிந்தியா விளங்கிற்று. மற்றும் இந்தியா, சீன நாட்டுச் சமயமாகிய புத்த சமயத்தின் தாயகமாய் இருந்த காரணத்தாலே மிகு பழங்காலந்தொட்டே சமய நெறி போற்றிய சீனப் பேரறிஞர் பலர் இந்திய நாட்டுக்கு வந்து தென்கோடி வரையில் இதன் வளங்கண்டு எழுதி வைத்துள்ளனர். இவையெல்லாம் ஓரளவு வடக்கையும் தெற்கையும் பிணைத்தே பேசுகின்றன.

வரலாற்றுத் தந்தையாரென்று பேசப்பெறும் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டவரான ஹெரடோட்டஸ்[2] என்பவர்

---

1. Asoka, p. 243.
2. Herodotus

இந்தியாவைப் பற்றியும் அதன் மக்களைப் பற்றியும் முதன்முதல் விளக்கிக் காட்டுகின்றார். வெறுங்கற்பனைகளாக அன்றி, உள்ளன கூறும் வரலாற்று நிலைக்கு ஏற்ப அவர்தம் எழுத்துக்கள் அமைகின்றன. அவருக்கு முன் இந்தியாவைப் பற்றி எழுதியவர் உள்ளனரா என்பது அறியக் கூடவில்லை என நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் குறிக்கின்றார்கள்.[1] எனினும், மெகஸ்தனிஸ்[2] என்ற யவன ஆசிரியர் குறிப்பே நமக்குத் தென்னிந்தியாவைப் பிற நாட்டார் வழி முதல் முதல் காட்டுகின்றது. மேலே கண்ட அசோகர் காலத்தை ஒட்டி வந்த மெகஸ்தனிஸ் தெற்குக் கோடியில் வளம் நிறைந்த 'தாம்பிரபேன்' (Tamprobane) என்ற பகுதி இருந்ததாகக் குறிக்கின்றார். அவர் செலுக்கஸ் என்ற யவன மன்னரால் கி.மு. 302ல் இந்தியாவுக்கு அனுப்பப் பட்டவர்.[3] அவர் பாண்டிய நாட்டைக் குறிக்கும்போது, அது மகளிரால் ஆளப் பெற்றதென்றும், முதல் மகள் ஹெர்குலிஸ் (Hercules) மகள் என்றும் குறிக்கின்றார். யவனர்தம் பழங்காலக் கதைகளில் வரும் கடவுளர் பற்றிய குறிப்புக்களோடு பாண்டிய நாடு அந்தக் காலத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டித்தான் போலும் பின் வந்தவர்கள் பாண்டிநாடு தடாதகைப் பிராட்டியாராலும், இறைவனாலும் ஆளப்பட்டது எனத் தமிழ் நாட்டு முறைக்கேற்பப் புராணங்களை எழுதிச் சென்றார்கள்! தென்னிந்தியாவைச் சிறப்பாகக் கூறிய இவ்வாசிரியர், இந்நாட்டு ஆமை. யானை முதலியவற்றையும், மணி, பொன் முதலிய விலை உயர்ந்த பொருள்களைப் பற்றியும் குறிக்கின்றார். எனவே, அந்தப் பழைய காலத்தில்—கடைச்சங்க காலத்துக்கு முன்பே - தமிழகம் கிழக்கும் மேற்கும் நெடுந்தொலைவுக்கு அறிமுகமாகி இருந்ததோடு,

1. Foreign Notices of South India, p.4.
2. Megasthenes (B.C. 302)
3. Historical Inscriptions of South India, p.5.

சிறந்த செல்வவளமும் மக்கள் நலமும் பெற்று விளங்கியிருந்தது என்பதை அறிய மகிழ்ச்சி உண்டாகிறது!

பான்கௌ[1] என்ற சீனயாத்திரிகர் எழுத்தின் வழித் தென்னாட்டுக் காஞ்சிபுரத்துக்கும் சீன நாட்டுக்கும் தொடர்பு இருந்தமையை அறிய முடிகிறது.[2] கி.மு. 140-86ல் ஆண்ட சீன மன்னர் காலத்தில் (Emperor Wou) காஞ்சிபுரத்துக்குப் பல பொருள்கள் அனுப்பப்பட்டனவாம். இரு நாடுகளுக்கும் வாணிபத் தொடர்பும் இருந்ததாக அறிகின்றோம். அவர்கள் கடல் வழியே காற்றாலும் அலையாலும் அலைப்புண்டு நெடுங்காலம் பயணம் செய்தார்கள் என்று கொள்ளவேண்டியுள்ளது. (காஞ்சி என்பது அவர்கள் மொழியில் Houang--tche என வழங்கப்பெற்றுள்ளது.) அவர்கள் வழியில் பலநாடுகளைக் கடந்து காஞ்சித் துறைமுகத்துக்கு வந்தவர்கள் போலும்! அசோகர் காலத்தில் ஆர்க்காடு தலைநகராய் இருக்க, சிறிய நகராய் இருந்த காஞ்சிபுரம், சிறிது காலத்துக்குள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிகவும் வளர்ச்சியடைந்து, வெளி நாட்டு மக்களும் விரும்பி வந்து வாணிபம் செய்யும் நகரமாகிவிட்டது என எண்ண வேண்டியுள்ளது.

எகிப்திய ரோம நாடுகளிலிருந்து தரைவழி அலெக்சாந்தர் வடவிந்தியாவுக்கு வந்தது போன்றே கடல் வழியாகப் பலர் தெற்கே பாண்டி நாட்டுக்கு வந்துள்ளனர். பாண்டிய மன்னருடைய தூதுவர் கி.மு. 22ல் அகஸ்தஸ் (Caesar Agustus) அவையில் இருந்தனர் என்பது ஸ்டிராபோ[3] என்பார் குறிப்பிலிருந்து அறிய முடிகின்றது. அகஸ்தஸின் நண்பனாகிய ஏரோது என்னும் பெருமன்னனுக்கு நண்பரான

1. Pan kou
2. Foreign Notices of South India p. 44.
3. Strabo (A.D.20)

நிக்கோலஸ் டமாஸ்கோனஸ்[1] அவ்வாறு அகஸ்தஸிடம் அனுப்பப்பட்ட இந்தியத் தூதுவரைத் தாம் கண்டதாகக் கூறுகின்றார். இந்தக் குறிப்பாளர்க்கு நண்பனாகிய ஏரோது இயேசுவை இன்னலுக்குள்ளாக்கிய ஏரோது மன்னனோ பிறனோ என்பது எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. அகஸ்தஸ் கால எல்லையில் இதற்கு உண்மை காண முடியுமல்லவா? அகஸ்தஸ் அவையில் கி.மு. 22ல் பாண்டி நாட்டுத் தூதன் இருந்தான் என்று அறிதலால் இக்கூற்று உண்மையாகும் அல்லவா?

மற்றொரு யவன வரலாற்றுக் குறிப்பாளரான பிளினி என்பார் யவன நாட்டிலிருந்து இந்தியக் கரைக்கு வரும் கடற்பயணத்தையும் 'தாம்பிரபேன்' என்று ஈழச் செல்வ வளத்தையும் பிறவற்றையும் குறிக்கின்றார். அலெக்ஸாந்தர் படையெடுப்பை ஒட்டி அவருடன் இந்தியாவுக்கு வந்த அவர் சேனைத் தலைவர் ஒனெசிகிரிட்டோஸ்[3] வடநாட்டு எல்லையில் இருந்தாலும், இந்திய நாட்டு யானைகளினும் இத் தாம்பிரபேன் நாட்டு யானைகள் சிறந்தவை எனக் குறிக்கின்றார். மெகஸ்தனிஸ் குறிப்பும் ஈழம் ஓர் ஆற்றால் (தாம்பபேன்) பிரிக்கப்பட்டது எனவே குறிக்கின்றது. எனவே, இவர்கள் தரை வழித் தாமிர வருணி நதி வரை சென்று, அதன் வெள்ள வேகத்தைக் கடக்க இயலாது அத்துடன் கடல் வந்துவிட்டது எனவும், அதற்கப்பால் உள்ள நிலப்பரப்பே இலங்கை எனக் கொண்டார்கள் எனவும் கருதுவர் சிலர். என்றாலும், இரண்டுக்கும் இடையில் ஆழமற்ற நீர்த் தேக்கங்கள் இருந்ததாக அவர்கள் குறிக்கின்றமையின், அக்கூற்று ஆராய்தற்குரியதாகும். எப்படியாயினும், இந்திய வரலாற்றை வடமேற்கு மூலையில் தொடங்கிவைத்த அலெக்சாந்தர் வந்த அந்தநாட்களிலேயே

---

1. Nikolaos Damaskonos
2. Piliny (A.D. 77)
3. Onesikritos,

அவன் மக்கள் தென்கோடி நாடுகளிலும் வந்து சென்றார்கள் என்றும், இத்தென்னாட்டின் ஏற்றத்தைப் பாராட்டிச் சென்றார்கள் என்றும் அறியலாமன்றோ?

மற்றொரு குறிப்பாளரான பெரிப்புளூஸ்[1] இந்தியாவின் பல பாகங்களையும் கண்டு, காட்டி, அவற்றின் அமைப்புக் களையும் பிணைப்புக்களையும் விளக்குகின்றார். அவர் அலெக்ஸாந்தர் படையெடுப்புத் தொடங்கி, கங்கை சிந்து சமவெளி வந்ததைக் குறித்து, மெள்ள மெள்ளத் தெற்கே வந்து சேர, சோழ, பாண்டி நாடுகளையும் அவற்றின் கடற்கரைகளையும் துறைமுகப் பட்டினங்களையும் குறிக் கின்றார். மறைந்த கொற்கை, முசிறி, தொண்டி போன்ற தமிழ் நாட்டுத் துறைமுகங்களும் அவற்றுள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களும் அந்த யவன ஆசிரியர்தம் குறிப்பால் நன்கு விளங்குகின்றன.[2] மற்றொரு குறிப்பாளர் தமிழ்நாட்டுக் கடற்கரையில் முத்துக் குளித்த சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றார்.[3] இவர்களெல்லாம் தமிழ்நாட்டு வரலாற்றுக் கடைச்சங்க காலத்தும் அதற்குச் சற்று முன்னும் இந்திய நாட்டுக்கு வந்து கண்டவற்றைத் தொகுத்துக் காட்டிச் சென்றவர்களாவார்கள். எனவே, அந்தப் பழைய காலத்தில் வடக்கும் தெற்கும் பல வகையில் இணைந்து நின்றே வாழ்ந்தன என்ற உண்மையை நம் நாட்டு இலக்கியங்கள் மட்டுமன்றி, இந் நாட்டுக்கு வந்த பிற நாட்டார் எழுதிவைத்த குறிப்புக்களும் நன்கு விளக்கு கின்றன என்பதறிந்து, இத்துறையில் இன்னும் ஆழ்ந்த கருத்திருத்தின், மேலும் மேலும் புது உண்மைகள் பல புலப்படும் என்பது உறுதி.

1. Peri Plus (A.D. 75)
2. Foreign Notices of South India p. 87.
3, Aelian.

இவையன்றி, ஈழநாட்டு வரலாற்றைக் கூறும் 'மகா வமிசம்' என்ற வரலாற்றுக் குறிப்பின்வழி, கி.மு. 145ல் ஏலேரா என்ற தமிழ் நாட்டுச் சோழமன்னன் ஈழநாட்டு மன்னனாகப் பட்டம் சூட்டிக்கொண்டு அரியணை ஏறினான் என்ற குறிப்பும் கிடைக்கின்றது.[1] கி. மு. 43க்கும் 29க்கும் இடையில் பாண்டியர் ஈழநாட்டை ஆண்டனர் என்ற குறிப்பும் உண்டு.

இவ்வாறு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே—கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் தொடங்கியே – வடக்கும் தெற்கும் இணைந்து வாழ்ந்தன என்பது தெரிகின்றது. சங்க காலத்திற்குப் பிறகு இரு பகுதிகளும் இணைந்தமைக்கு எண்ணற்ற சான்றுகள் உள்ளன. மற்றும், அவை அனைத்தும் ஓரளவு வரலாற்று எல்லைக்குள் வந்து அமைந்துவிடுகின்றன. ஆகவே, இந்த அளவில் வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும் இணைந்தமைக்குள்ள சான்றுகள் சாலும் என அமைகின்றேன். இச்சான்றுகளுள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக விரித்துக் காணின், மிகப் பெருகும். வாய்ப்புள்ளவர்கள் ஆய்ந்து கண்டு, இத்துறையில் ஆராய்ச்சியை வளர்த்து, நாட்டுக்கு நலம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அறிஞர் ஆவன செய்வாராக!

1. Historical Inscriptions of South India, p. 13

# 3. இமயமும் குமரியும்

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழும் நமக்கு இமயமும் குமரியும் நன்கு விளங்குவனவேயாம். இந்திய நாட்டின் வடவெல்லையில் பனிச் சிகரங்களைக் கொண்டு வானோங்கி நிற்கும் இமய மலையையும், தென்கோடியில் உள்ள குமரி முனையையும் அறியாதவர் யார்? பலர் இமயத்தின் உச்சியில் நின்று அப்பனிச் சிகரங்களுக்கு இடையில் தம் மனத்தைப் பறிகொடுத்து இயற்கையில் தோய்ந்து நிற்பதும், மூன்று கடல்களும் தழுவிச் சிறக்கும் குமரிமுனையில் நின்று அதன் அமைதியில் தம்மைப் பறிகொடுப்பதும் நாள்தோறும் நாட்டில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகள்தாமே! இப்படி இரு பக்கமும் உயர்ந்த மலையும் ஆழ்கடலும் சூழ உள்ள இந்திய மண்ணில் வாழும் ஒவ்வொருவரும் உண்மையில் தம் நாட்டை எண்ணிப் பெருமைப்படத் தக்கவரே யாவர். எனினும், இந்த இரு எல்லைகளும் வரலாற்றுக் கால எல்லைக்கு முன் எவ்வாறு இருந்தன என்பதை எண்ணிப் பார்ப்பின் பல உண்மைகள் நமக்கு விளங்காமற் போகா.

இமயம் கடலுள் ஆழ்ந்த காலம் ஒன்று இருந்தது என்ற உண்மையை நிலவரலாற்றையும் தொன்மையையும் ஆய்கின்ற புலவர்கள் நன்றாக விளக்குகின்றார்கள். விந்திய மலைக்கு வடக்கே பெரிய கடற்பரப்பு ஒரு காலத்தில் இருந்ததென்றும், பின், உலக வரலாற்றில் மிகப் பிந்திய காலத்தில் இமயமும் பிற்பகுதிகளும் தோன்றின என்றும்

அவர்கள் ஆதாரங் கொண்டு காட்டுகிறார்கள். அதே நாளில் அந்த நினைவுக்கு எட்டாத வரலாற்றுக்கு முற்பட்ட சேய்மைக் காலத்தில் குமரி முனைக்குத் தெற்கே பரந்த நிலப்பரப்பு இருந்ததென்றும் அது மேற்கே மடகாஸ்கர் தொடங்கி கிழக்கே ஆஸ்திரேலியா வரையில் பரந்து இருந்த தென்றும் கூறுவர். அதைப்பற்றி ஸ்காட்டு எலியட்டு என்பவர் இழந்த லெமூரியாக் கண்டம்[1] என்னும் ஒரு நூலில் நன்றாக விளக்குகின்றார். இவ்வாறு மேலை நாட்டு ஆராய்ச்சியாளர் தம் கூற்றுக்களை மெய்ப்பிக்கும் வகையில் தமிழ் இலக்கியங்கள் பலப்பல சான்றுகளை நமக்குத் தருகின்றன. குமரிக்குத் தெற்கே ஆறுகளும் மலைகளும் இருந்தன என்றும் அவற்றை ஒரு காலத்தில் கடல் கொண்டது என்றும், அக்காலத்து ஆண்ட பாண்டியன் வடக்கே புதியனவாய் உண்டான கங்கையையும் இமயத்தை யும் தனதாக்கிக்கொண்டு வாழ்ந்தானென்றும் சிலப்பதிகாரம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. அந்தப் பழங்காலத்தி லிருந்தே பாண்டியர்கள் ஆண்ட காரணத்தினாலேதான் அவர்களுக்குப் பண்டையர் என்ற பெயர் வந்து, பிறகு பாண்டியர் என்னும் பெயராய் மருவியது என்பர் ஆராய்ச்சி யாளர் சிலர். எப்படியாயினும், அந்த நிலம் அழிந்த ஒரு பேரூழிக் காலத்தே பாண்டியர் ஆண்டார் என்று கொள் வதில் தவறு இல்லையன்றோ? சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டத்தைத் தொடங்க நினைத்த இளங்கோவடிகள், அப் பாண்டியன் இழந்த குமரி மலையையும் பஃறுளியாற்றை யும் கூறி, அவன் அவற்றிற்குப் பதிலாகக் கங்கையையும் இமயத்தையும் கொண்ட சிறப்பை விளக்குகின்றார்.

'அடியிற் றன்னள வரசர்க்கு உணர்த்தி,
'வடிவே லெறிந்த வான்பகை பொறுது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

1. The Lost Lemuria, by Scott Eliot.

வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!"[1]

என்னும் சிலப்பதிகார அடிகளின்படி ஆராயின், இக் காலத்துக் குமரி முனைக்குத் தெற்கே பஃறுளி என்ற பேராறும் குமரி மலையும் பிற மலைகளும் இருந்தன என்பதும், அவை அனைத்தும் ஒரு நீர் ஊழியால் அழிந்து விட்டன என்பதும் நன்கு தெரிகின்றன. அதற்குக் காரணமும் காட்டுகின்றார் ஆசிரியர். அதுபற்றி நாம் இங்கு ஆராயத்தேவையில்லை. பல மலைகளும் ஆறுகளும் குமரிக்குத் தெற்கே இருந்து அழிந்தன என்ற ஒன்றே நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இழந்த நாட்டுப்பரப்பைச் சரி செய்வதற்காகவே தென்னவனாகிய பாண்டியன் புதியனவாகத் தோன்றிய இமயத்தையும் கங்கையையும் கொண்டான் என்பதும் தெரிகின்றது. இழந்த அந்தப் பரப்பைக் 'குமரிக்கண்டம்' என்றே கூறுவர். அதில் நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன என்றும், அவை எழு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தன என்றும், அப்பகுதியில் தமிழ் மொழி நன்கு வளம்பெற்று நின்ற தென்றும் கூறுகின்றனர். அந்தப் பகுதியின் மலைத் தொடர்ச்சியே இன்று சுமத்திரா ஜாவா முதலிய இடங் களில் உள்ளன எனவும் காட்டுவர். அந்தப் பரப்பிலேதான் தமிழ் வளர்த்த முதல், இடைச் சங்கங்கள் இருந்தன என்பர். முதற்சங்கம் காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாய் இருந்த பாண்டிய மன்னர்புரக்க, 4440 ஆண்டுகள் தென்மதுரையில் இருந்ததென்றும், இடைச் சங்கம் வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாகக் கபாடபுரத்தில் 3700 ஆண்டுகள் இருந்ததென்றும், கடைச் சங்கம் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி ஈறாக இக்காலத்து மதுரையில் 1850 ஆண்டுகள் இருந்தது என்றும் இறையனார் களவியல் உரை கூறுகின்றது. இக்கூற்றை அப்

1. சிலப். 11 : 17-22

படியே உண்மை என ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றாலும், கபாடபுரம் போன்ற தலைநகர்கள் இருந்தன என்று கொள்வதில் தவறு இல்லை எனலாம். வான்மீகியார் தம் இராமாயணத்தில், சுக்கிரீவன் வானர சேனையைத் தேடவிட்ட காலத்தில், 'பாண்டியர் தலை நகராகிய கபாடபுரத்திலும் தேடக்கடவீர்கள்'' என ஆணையிட்டதாகக் கூறுவர். சமய இலக்கியங்களில்[1] குமரிக்குத் தெற்கில் மகேந்திரமலை என்ற ஒரு மலை இருந்ததாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. மற்றும் கந்தபுராணத்தில் திருச்செந்தூருக்குத் தெற்கில் கடலில் மகேந்திர மலையும் நாடும், வழியில் கந்தமாதனக் கிரியும் இருந்தனவென்றும், அவை இருந்த நாட்டின் பகுதியையே சூரபதுமன் ஆண்டான் என்றும் குறிப்புக்கள் உள்ளன.[2] கந்தபுராணத்தில் அந்த மகேந்திரத்திற்கும் செந்திலை ஒட்டியிருந்த கந்தமாதனக் கிரிக்கும் இடையிலேதான் இலங்கை இருந்ததென்றும் கடல் பாய்ந்து சென்ற வீரவாகு அதையும் கடந்து சென்றான் என்றும் காட்டுவர் கச்சியப்பர். அவர் காட்டும் முருகனுடைய வழியில் முறையாகத் தமிழ்நாட்டு ஊர்கள் வருகின்றன. செந்திலுக்குத் தெற்கே நிலப்பரப்பும் மலைகளும் காட்டப் பெறுகின்றன. எனவே, புராணங்கள் வழியும் இக்காலத்துக் குமரிக்குத் தெற்கே பரந்த நிலப்பரப்பு இருந்ததெனக் கொள்ள இடமுண்டு. இந்த மகேந்திரமும் பிற பகுதிகளும் சூரபதுமனுக்குப்பின் கடல் கொண்டது என்ற உண்மையைக் கந்தபுராணம் தெளிவுறக் காட்டுகின்றது[3] பரிபாடலில் இத்தகைய நீர் ஊழிகள் பலப்பல வரும் என்பதை ஆசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றார்கள். இன்றைய விஞ்ஞான முறைப்படி நிலத்தியல்பை ஆராயும் அறிஞர் அனைவரும் இத்தகைய ஊழிகள் உலகில் இயற்கையே என்றும், பழையன

1. சிவதருமோத்திரம்.
2. கந்தபுராணம்: மகேந்திரகாண்டம்.
3. கந்த. மீட்சிப்படலம், 15, 16

மறைவதும் புதியன தோன்றுவதும் இயல்பே என்றும் தக்க காரணங்கள் காட்டி விளக்குகின்றனர்.[1] எனினும், இந்த இலக்கியங்களில் வந்த குமரித்தென்பாலைக் கடல்கொண்ட ஊழி என்று உண்டாயிற்று என்பது திட்டமாகக் கூற முடிய வில்லை. சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முன் ஓர் ஊழி நடை பெற்றதென்றும், 5000 ஆண்டுகளுக்கு முன் மற்றோர் ஊழி நடைபெற்றதென்றும் கூறுவர். திட்டமாக இவற்றுள் ஒன்றாலேயே குமரிக்கண்டம் அழிவுற்றிருக்க வேண்டும் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

இனி, இந்த ஊழி பற்றி வடநாட்டுப் புராணங்களும் பிற ஆரியர் வரலாறுகளும் குறிக்கின்றன. வைவச்சுத மனுவின் காலம் கி. மு. 3100ஐ ஒட்டியதென்றும், அக் காலத்தில் ஒரு பெரிய நீர் ஊழி வந்ததென்றும், அதி லிருந்து ஒரு மீனின் உதவியால் அவன் உயிர் தப்பினான் என்றும், அந்த மீனுக்கு அவன் முன் செய்த உதவியே அவனை வாழவைத்தது என்றும், அவன் ஓர் உயரிய மலையின்மேல் ஏறிப் பிழைத்தான் என்றும் ஆரிய புராணங்கள் குறிக்கின்றன.[2] தமிழ் இலக்கியத்தில் வரும் மனுவேந்தனும் இவனும் ஒருவனோ என எண்ண வேண்டி யுள்ளது. இருவரும் சூரியகுல முதல்வர் எனவே குறிக்கப் பெறுகின்றனர். இந்த மனு தன் ஒரே மைந்தனை அவன் பசுவின் கன்றைக் கொன்றான் என்ற காரணத்தால் அறநெறி வழுவா வகையில், தேர்க்காலில் இட்டுக் கொன்று நீதி வழுவா நெறி முறையின் ஆண்டவன். தன்னினும் தாழ்ந்த உயிருக்கும் இரங்கிப் பசுவின் துயரத்தைத் துடைத்த வரலாறும், மீனின் துயர் நீக்கிய வரலாறும் ஒரே வகையில் அமைகின்றன. இங்கு நமக்கு அத்தகைய ஆராய்ச்சி தேவை இல்லை. ஆனால், அந்த மனுவின் காலத்தில் சுமார் 5100 ஆண்டுகளுக்குமுன் ஒரு நீர் ஊழி உண்டாயிற்று என்ற

---

1. கந்த மீட்சிப் படலம் பாடல் 16, 18.
2. The Vedic Age, Vol. p. 271

ஒன்றே போதும். இப்படிப் புராணங்களும், இலக்கியங்களும், வரலாறும், தொல்பொருள் ஆராய்ச்சியும், நில நூலும் ஒருசேரக் கூறுகின்றபடி இமயம் கடலுள் ஆழ்ந்திருந்த காலமும், குமரிக்குத் தெற்கே பரந்த நிலப் பரப்பு இருந்த காலமும் உலகில் உண்டு என்று கொள்வது முற்றும் பொருந்துவதேயாகும்.

இந்த இழந்த நிலப்பரப்பிலேதான் முதல் முதல் மனிதன் தோன்றினான் என்பர். மனிதத் தோற்ற வளர்ச்சி பற்றியும் மொழி பற்றியும் ஆராய்கின்ற அறிஞர்கள் இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். மனிதர் மத்திய ஆசியாவிலோ அன்றிக் குமரிக்கண்டத்திலோ தனித்தனியாகத் தோன்றிப் பல இடங்களுக்கு மெள்ள மெள்ளப் பரவினர் என்பர். இந்தியா முழுவதிலும் பரவி இருந்த திராவிடப் பெருங்குடி மக்களைப் பற்றி ஆராய்கின்ற வரலாற்றறிஞர்கள், இந்தக் கொள்கையின் அடிப்படையில், நாடு முழுவதும் பரவி யிருந்தும், இன்று தென்னாட்டில் தனிப் பண்பாட்டை வளர்த்தும் வாழ்ந்துவரும் திராவிட மக்கள் குமரிக் கண்டத் திலிருந்து மெள்ள மெள்ள இமயம் வரை வடக்கு நோக்கி வந்தவர் என்று கூறுகின்றார்கள். ஒருசிலர் மத்தியதரைக் கடலிலிருந்து வந்தவர்கள் என்பர். எனினும், முன்னதே வலியுடைத்தாகும். இன்றும் விந்திய மலைக்குத் தெற்கும், குமரிக்கு வடக்கும் உள்ள நிலப்பரப்பு வடவிந்திய நிலப் பரப்பினும் தொன்மை வாய்ந்தது என்று ஆராய்ந்து காட்டி யுள்ளனர். எனவே, பழமையான மண்ணில் மக்கள் தோன்றிப் பிற இடங்களுக்கு மெள்ள மெள்ளச் சென்றார்கள் என்று கொள்வது பொருத்தமாகும்.

இந்த நிலையில் நிலத் தோற்ற அழிவுகளைக் கண்டு அமைவோம். பரந்த குமரிக்கண்டம் அழியவும், புதிய வடவிந்தியப் பகுதி தோன்றவும் தென்னாட்டில் வாழ்ந்த மக்களும் அவர்களின் தலைவனாகிய மன்னனும் இழந்த குமரிக்கண்டத்துக்குப் பதிலாக வடவிந்தியப் பகுதியை

இமயம் வரையிலும் ஆப்கானிஸ்தானத்திலிருந்து அசாம் வரையிலும் கைப்பற்றி ஆரியர் நுழைவுக் காலம் வரையில் ஆண்டார்கள் என்றும், பரந்த இந்தியா முழுமையையும் தங்கள் வாழிடமாகக் கொண்டார்கள் என்றும் கொள்ளுதல் வேண்டும்.

தமிழ்நாட்டு மன்னருள் சிலர் அந்தக் கடல் அழியாக் காலத்து இருந்துள்ளார்கள் எனக் கொள்ளலாம் போலும்! அவருள் ஒருவனாகப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் குறிப்பர். அவனைப் பாராட்டிய புலவர் நெட்டிமையார் அவனை வாழ்த்தும்போது,

'எம்கோ வாழிய குடுமி-தம்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே!' (புறம். 9)

என வாழ்த்துகின்றார். இந்தப் பாட்டின் அடிப்படி அவன் காலத்தில் பஃறுளி இருந்தது எனக் கொள்ளத் தேவை இல்லை. அவனைப் பாராட்டிய புலவர் அவன் முன்னோன் ஒருவன் வாழ்ந்ததை எண்ணுகிறார். அவனுடைய அழியாத பரந்த நாடும், ஆறும், மலையும், பிறவும் அவர் உள்ளத்திரையில் நிழலிடுகின்றன. எனவே, அந்த ஆற்று மணலினும் பல நாள் வாழ்வானாக என அவனை வாழ்த்துகின்றார்; 'நெடியோன் நன்னீர்ப் பஃறுளி' எனவே குறிக்கின்றார். அந்நெடியோன் யாவன்? அவனைப் பற்றிப் புலவர் சிலர் பாராட்டுகின்றனர். அவன் 'நிலந்தரு திருவின் நெடியோன்' எனவே பாராட்டப்பெறுகின்றான். அவன் நிலந்தரு திருவிற் பாண்டியனாய் இருக்கலாம் அன்றோ!

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சிறந்த வீரமும் தமிழ்ப் பற்றும் உடைய மன்னன்; புலவர் வாய்ச் சொல்லுக்கு ஏங்கி நின்றவன். அவன் வஞ்சினம் கூறுங்கால்,

'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலையிய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை!' (புறம்.72)

எனக்கூறித் தான் புலவர் வாய்ச் சொல்லுக்கு ஏங்கி நிற்கும் நிலையை எடுத்துக் காட்டுகின்றான். அத்தகைய மன்னனைப் பாடவந்த புலவர் மாங்குடிமருதனார் அவனைப் பாடுகின்ற அதே வேளையில் அவனுடைய முன்னோர்களையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றார்; 'பல்யாகசாலை முதுகுடுமியின் சிறந்து வாழ்க' என்றும், 'நிலந்தரு திருவின் நெடியோன் போல இனிது உறைமதி' என்றும் அவனை வாழ்த்துகின்றார். புலவர் போற்றும் பண்பாட்டிலும் பிற நல்லியல்புகளிலும் அவர்கள் ஒத்திருந்தார்கள் போலும்! அதனாலேயே அவர்களை எண்ணுகின்றார் புலவர். நெடியோனைக் குறிக்கும்போது,

'தொல்ஆணை நல்லா சிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல'
(மதுரைக் காஞ்சி. 761-63)

என்றும், முதுகுடுமியைப்

'பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய (மதுரை. 759,60)

என்றும் காட்டுகின்றார். சிலர் இருவரையும் பிணைத்து ஒருவரே என்பர். அவர் கூற்றுக்கு ஆதாரமாக முன் கண்ட புறப்பாடலை எடுத்துக் காட்டுவர். ஆனால், நெட்டிமையார் அப் புறப்பாட்டிலே அம்மன்னனை, 'குடுமி' எனப் பிரித்துப் பின், நெடியோன் பஃறுளி மணலினும் பலவே வாழிய!' என்றே வாழ்த்துகின்றார். எனவே, இருவரும் ஒருவரே அல்லர் என்பது நன்கு தெரிகின்றது.

நிலந்தரு திருவின் பாண்டியன் இடைச்சங்க காலத்திருந்தவன். அவன் காலத்திலேதான் தொல்காப்பியம் அரங்கேறிற்று என்று தொல்காப்பியப் பாயிரம் நன்கு காட்டுகின்றது. தொல்காப்பியர்,

'நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி'த்
(தொல். பாயிரம், 9-12)

தம் தொல்காப்பியத்தை நிறைவேற்றினர். இதில் வரும் நான்மறை என்பதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் நன்கு விளக்கம் தருகின்றார். எனவே, தொல்காப்பியம் பாண்டியன் அவைக்களத்து நிறைவேறிற்று எனக் கொள்ளல் பொருந்தும். தொல்காப்பியம் கபாடபுரத்து இருந்த இடைச்சங்க நூலென இறையனார் களவியல் உரை குறிக்கின்றது. எனினும், தொல்காப்பியர் காலத்தை இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுக்குமுன் கொண்டு செல்ல முடியாது எனச் சிலர் வாதிடுகின்றனர். சிலர் அஃது ஐயாயிரமாண்டுகளுக்கு முற்பட்டதென்பர். பின்னவர் கூற்றுப்படி பார்ப்பின், மேலே நாம் கண்ட அந்தரத்தில் மனு உண்டான 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஊழிக்குமுன் அவர் வாழ்ந்ததாகக் கொள்ளலாம். இக்கொள்கை இன்னும் நன்கு ஆராய்தற்குரியது.

நிலந்தருதிருவின் நெடியோன் காலத்தில் பஃறுளி ஆறு இருந்ததென்பதே நமக்கு இங்குத் தேவை. அவனை நேராகப் பாராட்டிய புலவர் இவர். புலவரைப் போற்றும் நெடுஞ்செழியனைப் பாடவந்த மருதனாருக்கு அந் நெடியோன் பண்பும் தொல்லாணை நல்லாசிரியர் கூட்டுறவும் நினைவுக்கு வரவே, அவனைக் காட்டி, அவனைப்போல வாழ்க என்றார்! அவனுடன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியையும் பிணைத்தார். முதுகுடுமியைப் பாட

வந்த நெட்டிமையாரும் இதே நினைவிலேதான் நெடியோனை நினைந்து, 'அவனது ஆற்று மணலினும் பலவாக இவன் வாழ்வானாக!" என வாழ்த்தினார்.

இனி இதே தொடரில்,

'நிலந்தரு திருவின் நெடியோய்!' (பதிற், 82: 16)

என்று பெருங்குன்றூர் கிழார் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைக் காட்டி வாழ்த்துகின்றார். இங்கே வரும் தொடர், அவன் நிலத்தை நன்கு ஆளுகின்றான் எனவே குறிக்கின்றது. ஆகவே, இந்தத் தொடருக்கும் பாண்டியருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

பல்யாகசாலை முதுகுடுமியைப் பற்றிக் காண்போம். 'முதுகுடுமி' என்ற இவன் பெயரும் இவனைப் பாடியவரின் 'நெட்டிமையார்' என்ற பெயருமே ஓரளவு தொன்மையைக் குறிக்க வருவன எனக்கொள்ளலாம். இவனைப் பாடினவாகப் புறநானூற்றில் ஐந்து பாடல்கள்[1] உள்ளன. இவனைப் பாடியவர் காரி கிழார் (6), நெட்டிமையார் (9,12,15), நெடும்பல்லியத்தனார் (64) ஆவர். மூவர் பெயர்களுமே பழமையைக் குறிப்பன. இனி இவர் தம் பாடலுள் காரி கிழார் இவன் ஆட்சி எல்லையை இமயம் முதல் குமரி எல்லைக்கு அப்பாலும் குறிக்கின்றார்,

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்'
(புறம்.6:1,2)

இவன் உருவும் புகழும் சிறந்தனவாய் இருந்தன எனக் குறிக்கின்றார். எனவே, இவன் இமயம் வரை ஆண்டான் என்று கொள்ளலாம். ஆளவில்லை என்று சொல்லினும் இவன் புகழ் இமயம் வரை பரவி இருந்தது எனக் கொள்ளு

---

1. புறம். 6, 9, 12, 15, 64.

வதில் தவறு இல்லையன்றோ! இவனைப் பாராட்டும் பாடல்கள் இரண்டு. இவன் நான்மறை முனிவரைப் பணிந் தமையையும் வேள்வி வேட்டதையும் குறிக்கின்றன. இவன் பெயரே இவன் இராசசூய யாகம் வேட்டவன் எனக் குறிக் கின்றது. நான்மறை என்றதற்கு நச்சினார்க்கினியர் 'இருக்கு யசுர் சாமம் அதர்வணம்' என்ற நான்கும் அல்லாத வேறு வேதங்களைக் காட்டுவர். வேள்வி எத்தகையது எனக் கொள்ள முடியவில்லை. எனினும், சற்று ஆராய்ந்தால், இவன் ஆரியர் வேதத்தையும் யாகத்தையும் கொள்ள வில்லை என்று கூறுவதிலும், அவற்றைக் கொண்டான் என்பதிலும் தவறில்லை என்பது கொள்ளத்தகும். தொல்காப்பியர் காலத்து நிலந்தரு திருவின் நெடியோனுக் குப்பின், இவன் வாழ்ந்தவன் என்பது மேலே கண்ட வகையில் தெளிவாகின்றது. தொல்காப்பியத்தில் வேட்டல், வேட் பித்தல் போன்ற சடங்குகளும், பிற இரண்டோர் ஆரியர் பழக்க வழக்கங்களும் காட்டப்பெறுகின்றன. எனவே, இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இன்றேனும் அதற்குப் பிறகு கடைச்சங்க காலத்துக்கு முன் ஆரியர் தமிழ் நாட்டில் நுழைந்து தம் கொள்கையைப் பரப்ப முயன்றனர் எனக் கொள்ளல் பொருந்துவதாகும். தக்கணப் பழங்கால வரலாற்றை எழுதிய பண்டர்க்கார் என்பவர் ஆரியர் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் தென்னாட்டுக்கு வந்தார் எனவும், பதஞ்சலிக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே அவர் தம் கொள்கை தென்னாட்டில் பரவி இருக்க வேண்டும் எனவும் காட்டியுள்ளார்.[1] பதஞ்சலியின் காலத்தைச் சிலர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு என்றும், சிலர் ஐந்தாம் நூற்றாண்டு என்றும் காட்டுவர். எனவே, இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் அவர் தமிழ்நாட்டில் வாழ்ந்தனர் என்பது பெறப்படும். ஆகவே, அக்காலத்தை ஒட்டியோ அதற்குச் சற்றுப் பிந்தியோ கடைச்சங்க காலத்துக்கு முன்

1. Early History of Dekkan, by R.G. Bhandarkar, 18-21

வாழ்ந்தவனே பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று கொள்வது பொருந்துவதேயாகும். அவன் வாழ்ந்த காலத்தில் அவன் பேரும் புகழும் இமயம்வரை சிறந்திருந்தன என்பதும், எனவே அக்காலத்தில் தமிழர் இமயம் வரை பெருமையோடு பரந்து வாழ்ந்துவந்தனர் என்பதுமே நாம் கொள்ள வேண்டுவன.

இவனைத் தவிர்த்து, 'இமயவரம்பன்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற வேந்தர்களே தமிழகத்தில் வாழ்ந்துள் ளார்கள். தமிழ்நாட்டுச் சேர, சோழ, பாண்டியர் மூவருமே இமயம் வரை சென்றிருக்கின்றனர்; இமயம் வரை வென்றும் இருக்கின்றனர். மூவேந்தர் தம் இலச்சினையும் இமயத்தில் பொறிக்கப் பெற்றன. இவற்றையெல்லாம் தமிழ்நாட்டு இலக்கியங்களும், வடநாட்டுத் தென்னாட்டுத் தொன்மை காட்டும் வரலாறுகளும் நன்கு விளங்குகின்றன. பெருஞ் சோற்று உதியன் சேரலாதன் என்பவன் பாண்டவர் துரியோதனாதியர் போரில் இடையிடைச் சோறிட்டு உதவினான் என்பதைப் புறம் இரண்டாம் பாட்டு எடுத்துக் காட்டுகின்றது. அவனைப் பற்றித் தனியாகவே ஆராய்ந்து காணலாம் எனக் கருதுகின்றேன். புலவர் முரஞ்சியூர் முடி நாகராயர் அவனை வாழ்த்துமுறையே இங்கு நாம் காண வேண்டுவது. அவருக்கு அவன் வாழ்வையும் உயர்ச்சியையும் செம்மையையும் எண்ணும்போது வடக்கில் ஒரு மலையும் தெற்கில் ஒரு மலையும் நினைவுக்கு வருகின்றன. அக் காலத்தில் இமயத்தில் அந்தணர் அந்தி அருங்கடன் இறுக்கும் காட்சியும் அக்காட்சியைச் சூழ்ந்த இயற்கை எழிலும் மான் துஞ்சலும் அவருக்கு விளங்குகின்றன. அனைத்தையும் பிணைத்து,

'திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ அத்தை-அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்

முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே!'

(புறம் 2) என முடிக்கின்றார் அவர். எனவே, அந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே தமிழருக்கு இமயம் பொதியமலை ஒத்தே உரியதாகவும் சிறந்ததாகவும் விளங்கிற்று என்பது தெளிவு.

இமயத்தை எல்லையாகக் கொண்ட காரணத்தால் 'இமயவரம்பன்' என்ற பெயரைப் பெற்றனர் என்பது அக்கால அவ்வரசர்களுக்குப் பொருந்துவதாகும். வடநாட்டில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகர் ஆண்ட காலத்தில் அவருக்கும் தமிழ்நாட்டுக்கும் ஈழ நாட்டுக்கும் தொடர்பு இருந்துவந்தது எனக் காண்கின்றோம். அவர் காலத்துக்கு முன்னும் சந்திரகுப்தமௌரியர், நந்தர் காலத்திலும் தமிழ்நாட்டுக்கும் வடநாட்டுக்கும் தொடர்பு இருந்ததை அறிகின்றோம். எனவே, அசோகர் காலத்துக்கு முன்னோ பின்னோ, தமிழ்நாட்டு அரச மரபினருள் சிலர் ஒருவர்பின் ஒருவராக இமயம் வரை படை எடுத்துச் சென்று வெற்றி கண்டு இமயத்தில் இலச்சினையைப் பொறித்து வந்தனர் என்பது அறிய முடிகின்றது. தமிழ் நாட்டு மன்னர்கள் இமயத்தையும் குமரியையும் எல்லையாகக் கொண்டார்கள் என்பதை,

'தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லைத்
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுத்துஒழுகிய
கொற்றவர்தம் கோனாகுவை' (மதுரை.70-74)

என மாங்குடி மருதனாரும்,

'தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை, (புறம். 17: 1,2)

எனக் குறுங்கோழியூர் கிழாரும்,

'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறம்தபக் கடந்தே'

(பதிற். 11: 23-25)

எனக் குமட்டூர்க் கண்ணனாரும் வரைந்துள்ளனர். இவற்றுள் நாம் முன்கண்ட புறநானூற்று ஆறாவது பாடலும் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். அதிலும் முதுகுடுமிப் பெருவழுதிக்கு இவ்வெல்லை குறிக்கப் பெற்றுள்ளது. இவ்வாறு தமிழ் மன்னர்கள்—மூன்று குலத்திலும் பிறந்த சிறந்த மன்னர்கள் - இமயம் வரை சென்றுள்ளார்கள் எனக் காண்கின்றோம்.

பாண்டியன் நெடுஞ்செழியனும், சோழன் கரிகாற் பெருவளத்தானும், சேரன் இமயவரம்பனும் செங்குட்டு வனும் இமயம் வரை சென்று கயல், புலி, வில் இவற்றைப் பொறித்தார்கள் எனக் காண்கின்றோம். பாண்டியர் இமயம் வரை சென்றதை,

'கயல் எழுதிய இமய நெற்றியின்
அயல்எழுதிய புலியும் வில்லும்
நாவலம் தண்பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பார்அர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன்'

(சிலம்பு. 17: 1-5)

என இளங்கோவடிகள் எடுத்துக்காட்டுகின்றார். இனி, அவரே சோழன் கரிகாற்பெருவளத்தான் இமயம் வரையில் சென்றதையும் அவன் பெற்ற வெற்றிச் சிறப்புக்களையும் குறிக்கின்றார்.

"செருவெங் காதலின் திருமா வளவன்
......................................
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு

மாநீர் வேலி வச்சிர நல்நாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபின் தோரண வாயிலும்”
*(சிலம்பு. 5: 90, 97—104)*

என்று இளங்கோவடிகள் திருமாவளவன் வடநாட்டு இமயப் படை எடுப்பைக் குறிக்கின்றார். இது சிலப்பதிகாரக் காலத்துக்கு நெடுநாட்கு முன்னரே நடைபெற்ற நிகழ்ச்சி என்பதை அவரே, புண்ணிய திசைமுகம் போகிய அந்நாள், (சிலம்பு. 5: 94) என இறந்த காலத்தால் சேய்மை சுட்டி விளக்குகின்றார். சிலம்பின் காலத்தில் திருமாவளவன் வாழவில்லை என்பதை வரலாறு காட்டுகின்றது. இளங்கோவடிகள் இப்படி விளக்கிக் கூறிய ஒன்றைத்தான் பட்டினப்பாலையில் உருத்திரங்கண்ணனார் ‘வடவர் வாட’ (276) என மிகச் சுருக்கமாகக் கூறிவிட்டார். இவ்வாறு பாண்டியரும் சோழரும் இமயம்வரை சென்றாலும், ‘இமயவரம்பன்’ என்ற சிறப்புப் பெயர் சேரனுக்கே அமைந்துள்ளதைக் காண்கின்றோம். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனவே அவன் குறிக்கப் பெறுகின்றான். அவனைக் குமட்டூர்க் கண்ணனார் பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தால் பாராட்டிப் பேசுகின்றார்.

இரண்டாம்பத்தில் பதிகம் அவன் வென்றியைச் சிறப்பித்துப் பாராட்டுகின்றது.

‘அமைவரல் அருவி இமயம் விற்பொறித்து
... ...................................................
பேரிசை மரபின் ஆரியர் வணக்கி’

ஆண்டவன் எனப் பதிகத்தால் அவன் புகழப்பெறுகின்றான். இமயம் வரை ஆண்ட மன்னர் அவன் வாய்மொழி வழி

ஒழுகி நின்றார்கள் என்பதையும் அவ்விமயத்து ஆரியர்கள் இருந்தார்கள் என்பதையும், அந்த இமயம் இயற்கையொடு பொருந்திய பெருமலை என்பதையும் புலவர் குமட்டூர்க் கண்ணனார்,

'கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்துஇலங்கு அருவியொடு நரந்தம் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறம்தபக் கடந்தே!

(பதிற். 11: 21—25)

எனக் காட்டுகின்றார். இமயவரம்பன் கொடையைக் கூற நினைத்தபோது புலவருக்குப் பாரதப் போரும், அதில் இடை நின்று உதவிய அக்குரன் பெயரும் நினைவுக்கு வர,

'போர்தலை மிகுத்த ஈர்ஐம் பதின்மரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை ஆண்மை
அக்குரன் அனைய கைவண் மையையே.'

(பதிற். 14: 5-7)

எனப் பாராட்டுகின்றார். இவ்வாறு இமயவரம்பன் என்ற பெயர் பொருந்தும் வகையில் இவன் இமயம் வரையில் வெற்றி கொண்டு, அவ் வடநாட்டவரோடு தொடர்பு கொண்டிருந்தான் என்பதைக் காண்கின்றோம்.

இவனுக்குப் பின் ஆண்ட சேரன் செங்குட்டுவனும் இமயம் வரை இரு முறை படையெடுத்து வந்தவன் என இலக்கியங்கள் குறிக்கின்றன. இவனைப் பரணர் பதிற்றுப் பத்து ஐந்தாம் பத்தால் பாராட்டிச் சிறப்புச் செய்திருக் கின்றார். அவர் இவன் இமயம் வரை பெற்ற வெற்றிச் சிறப்பினை,

'கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயம் ஆக,
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்

முரசுடைப் பெருஞ்சமம் ததைய, ஆர்ப்புஎழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!'
(பதிற். 43: 6-11)

எனச் சிறப்பிக்கின்றார். இவன் பத்தினிக் கடவுளுக்குக் கல் வேண்டி இமயம் சென்றதை இப் பத்தின் பதிகம்,

'கடவுள் பத்தினிக் கல்கோள் வேண்டிக்
கான்நவில் கானம் கணையின் போகி
ஆரிய அண்ணலை வீட்டி, பேரிசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி!'
(5-ஆம் பதிகம், 4-7)

எனக் காட்டுகிறது. இவ்வாறு இங்குப் பாராட்டப்பெற்ற இவன் சிறப்பும், போரும், விழாவும், வாழ்த்துமே சிலப்பதிகாரத்தில் வஞ்சிக்காண்டமாக உருப்பெற்றுள்ளன. சிலர் தம் கொள்கையை நிலைநாட்டுவதற்காக இச்செயலை மறுக்க வேண்டிச் சிலப்பதிகார வஞ்சிக்காண்டமே இளங்கோவடிகளால் எழுதப்பட்டது அன்று என மறுப்பர். இப்படித் தம் கொள்கையை ஆராயும் நூல்களில் புகுத்தி முடிவு காண முயன்றால், நாட்டில்—உலகில்—எத்தனையோ நூல்கள் அழிக்கப்பட வேண்டியிருக்கும். இந்தக் காலத்தில் பிந்திய செங்குட்டுவன் படை எடுப்பே இராது என்றால், பிறவற்றை யெல்லாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? தென்னாட்டு இலக்கியங்களும், வடநாட்டுக் காவியங்களும் இரு நாடுகளுக்கும் வரலாற்றுக்கு நெடுநாட்கள் முன்னிருந்தே உள்ள தொடர்பினைக் காட்டுகின்றன. இவை முழுக்க முழுக்கக் கால எல்லையில் நின்று வரலாற்றுக்குப் பயன்படா என்பது ஓரளவு உண்மை என்றாலும், இவை வரலாற்றுக்கே பொருந்தா எனக் கொள்வதும், தம் கொள்கைக்கு மாறுபட்ட கருத்துடைய இலக்கியங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் நல்ல வரலாற்றறிஞர் செய்கை ஆகாது என்பது துணிபு.

இவ்வாறு சில ஆயிரமாயிரமாண்டுகளுக்கு முன்பே வடக்கே உள்ள இமயமும் தெற்கே உள்ள குமரியும் பலப் பல வகைகளில் பின்னிப் பிணைந்து நின்றன. 'குமரியொடு' வட இமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்' என்று இளங்கோவடிகள் கூறியபடி இந்த நாடு முழுவதும் திராவிட மொழியும், அதன் அடிப்பட்ட பண்பாடும் நாகரிகமும் பரவி இருந்தன என்பது வரலாறு அறிந்த ஒன்றாகும். இன்றும் கிழக்கே காமரூபமாகிய அசாமிலும், மேற்கே பலுசிஸ்தானத்திலும், மத்திய இந்தியாவில் சூடிய நாகபுரியின் பக்கத்திலும் இத் திராவிட மொழிச் சிதறல்கள் இருப்பதைக் காண்கின்றோம். அக்காலத்தில் இம்மக்களால் அனைத்திந்தியாவிலும் போற்றி வழங்கப்பட்ட பலவகை நல் இயல்புகள் இன்றும் பல்வேறு வகையில் உறழ்ந்தும், பிறழ்ந்தும், மாறியும் வாழ்வதைக் காண்கின்றோம். அன்று தென்கோடியில் வாழ்ந்த தமிழ் மக்கள் அன்பாலும், ஆணையாலும், பண்பாலும், பாராட்டாலும் இமயம்வரை தங்கள் கலையையும் நாகரிகத்தையும் வளர்த்து வாழ வைத்தார்கள். அவர்தம் 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும்' நல்ல பண்பினால் மெள்ள மெள்ள வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுக்கு வழிவிட்டுத் தெற்கே வந்தனர். தெற்கே அவர்கள் வாழ்ந்திருந்த பெருநிலப் பகுதியை இயற்கை கொண்டு, கடலால் அழிந்தது. இவ்வாறு இரு புறத்தும் இயற்கையாலும் செயற்கையாலும் வாழ்விழந்த தமிழ் மக்கள், இன்றும் வாழிடம் எல்லையில் சுருங்கிய போதிலும் 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்ற பரந்த மனப் பான்மையின் உணர்வையும் உள்ளத்தையும் விரிவாக்கியே வாழ்ந்து வருகின்றார்கள். வரலாற்றுக்கு முற்பட்ட அந்த நெடுங்காலத்தில் இவர்கள் எவ்வெவ்வாறு வடநாட்டோடு தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதை இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக உணர்ந்து பார்ப்பின் இவர்கள் பெருமை இனிது விளங்கும் என்பது உறுதி.

# 4. சிந்து வெளியும் தென்னாடும்

உலக வரலாற்றை ஆராய்கின்ற அறிஞர்கள், தொன்மை காண்பதற்கு எகிப்து, மேசபட்டோமியா போன்ற பகுதிகளையே எடுத்துக் காட்டிய காலம் ஒன்றிருந்தது. இந்திய வரலாற்றை எண்ணுபவருக்கு அலெக்ஸாந்தர் படையெடுப்புத்தான் வரலாற்றுக் கால எல்லையாய் அமைந்தது. அதற்கு அப்பால் சற்று ஆழ்ந்து சிந்திப்போருக்கு இன்னும் ஓர் ஆயிரமாண்டுகளுக்கு முன் வந்த ஆரியரைப் பற்றியும், அவர்கள் சிந்து வெளியில் தங்கிப் பிறகு கங்கைக் கரை வந்து இருக்கு வேதம் செய்த வரலாறு பற்றியும் காண வாய்ப்பு உண்டு. ஆயினும், அவை வரலாற்றில் வைத்து எண்ணத் தக்க முறையில் இல்லை என்றும், அலெக்சாந்தர் படையெடுப்பே இந்திய வரலாற்றின் எல்லைக்கோடு என்றுமே அறுதியிட்டனர் ஆய்வாளர். அந்த அலெக்சாந்நர் நாட்டிய பன்னிரு வெற்றித் தூண்களைக் காண, வரலாற்றறிஞர் சிந்து வெளியைத் துருவி ஆராய்ந்த போதுதான் அவர்களுக்குச் சிந்து வெளியின் தொன்மையைக் காண வாய்ப்பு உண்டாயிற்று. அங்கே அகழ்ந்து எடுக்கப் பெற்ற பல பகுதிகளில் மோகஞ்சோதாரோ, ஆரப்பா போன்ற பல இடங்கள் புதையுண்டு கிடப்பதை அறிந்தார்கள். அவற்றை நன்கு கண்டு ஆராய்ந்த போது அந்த நாகரிகம் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதைத் தெள்ளத் தெளியக் கண்டு கொண்டார்கள். எனவே, அன்று தொட்டு இந்திய வரலாற்று ஆராய்ச்சி நிலையே மாறுபட்டது. எகிப்து, பாலத்தீனத்தினும் பழமை வாய்ந்தது என்றும்,

ஆரியர் இந்திய மண்ணில் கால் வைப்பதற்கு நெடுங்காலத்துக்கு முன்னரே இங்கே வாழ்ந்த மக்கள் சிறந்த நாகரிகத்துடன் வாழ்ந்தார்கள் என்றும், அவர்தம் நாகரிகமும், வாழ்க்கை முறையும், பிற இயல்புகளும் மிகு தொன்மை வாய்ந்தவை என்றும் ஆராய்ந்து அறுதியிட்டார்கள். அங்கே கண்டு எடுக்கப்பெற்ற பொருள்கள் ஐயாயிரமாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனித வாழ்வின் ஏற்றத்தை விளக்குவனவாய் அமைந்துள்ளதை யாரே அறியாதார்!

இந்தியாவில் புதையுண்ட பொருள்கள் அளவற்றன. அதற்கென ஆராய்ச்சி செய்து, அகழ்ந்து உண்மை காண இந்திய அரசாங்கத்தார் அன்றே தொல்பொருள் ஆய்வுப் பகுதி ஒன்றை அமைத்தனர். அதன் வழியே பலப்பல இடங்களில் அகழ்ந்து எடுக்கப்பட்ட பொருள்கள் நாட்டின் பழமையொடு கலந்த பண்பாடு, வாழ்க்கைமுறை முதலியவற்றை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அகழ்ந்து கண்டெடுக்கப்பட்ட பொருளால் பல உண்மைகளை உணர முடிகின்றது. சில வேளைகளில் இருவேறு தொடர்பற்ற நாடுகளில் காணும் தொல்பொருள்களால் இன்று தொடர்பற்ற அந்த இரு நாடுகளும் பண்டு தொடர்பு கொண்டு வாழ்ந்தன என்பது உணர முடிகின்றது. தமிழ் நாட்டோடு கிரேக்க உரோம நாடுகள் கொண்ட தொடர்பினைப் பழம்பொருள்கள் கொண்டு ஆராய்ந்து காட்டுவர் வரலாற்றறிஞர். அந்த நிலையிலே சிந்து வெளியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்கள் அந்த நிலப் பகுதியோடு இணைந்த பிற பகுதிகளை உணர்த்துவதுடன் அவை இந்திய நாட்டுத் தொன்மை வரலாற்றைக் காட்டவும் உதவுகின்றன.

ஆரியர்கள் இந்திய மண்ணில் கிறித்து பிறக்க 1500 ஆண்டுகளுக்கு முன்—இன்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன்—கால் வைத்தார்கள் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். ஆனால். சிந்து வெளியில் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்ட நாகரிகம் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

எனவே, அஃது ஆரியருக்கு முற்பட்ட ஒரு நாகரிகத்தின் அடிப்படையிலே அமைந்தது என்பது பொருந்தும். சிந்து வெளி நாகரிகம் ஆரிய நாகரிகமே எனச் சிலர் இக் காலத்தில் பேசியும் எழுதியும் வருகின்றனர். என்றாலும், சிறந்த வரலாற்று அறிஞர்கள் அந்தக் கொள்கை தவறானது என எடுத்துக்காட்டி, உண்மையை வற்புறுத்தி வருகின்றார்கள். பம்பாய் ஜெய் இந்து கல்லூரிப் பேராசிரியர் திரு. C. L. மாரிவாலா அவர்கள் தமது 'மோகஞ்சோதாரோ' என்னும் நூலில் அத்தகைய போக்காளர்தம் கொள்கைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டி, ஒன்றும் நிலை பெறக் கூடியது அன்று என்றும், சிந்து வெளி நாகரிகத்துக்கும் ஆரியருக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் விளக்கியுள்ளார்கள்.[1] எனவே, இன்றைக்கு ஐயாயிரமாண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்துக்குத் தொடர்புள்ளவர் யாவர் என்னும் ஆராய்ச்சி எழுதல் இயல்பேயாகும். மாரிவாலா அவர்களே திட்டமாக வேறு ஆராய்ச்சி வழிப் புது முடிவு காணப் பெறும் வரையில், சிந்து வெளி நாகரிகத்துக்குத் திராவிட மக்களே அடிப்படையாவார்கள் என்ற கொள்கையே மறுக்காது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனத் திட்டமாகக் குறித்துள்ளார்.[2] அவர் மட்டுமன்றி, இந்தச் சிந்து வெளி நாகரிகத்தின் ஆராய்வுக்குக் காரணர்களாயிருந்த ஜான்மார்ஷல், ஈராஸ் பாதிரியார் போன்றவர்களே இந்த உண்மையை ஏற்றுக் கொண்டிருப்பதோடு, இதற்கெனப் பல காரணங்களையும் விளக்கிக் காட்டியுள்ளார்கள். அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக

---

1. Mohan - Jo - Daro, by C. L. Marlwalla, pp. 69, 79.

2. The case for the Dravidian authorship of the Indus Civilization in the present state of knowledge, seems worthy of acceptance, till the future offers a more trust-worthy evidence to alter this conclusion, Ibid. p. 79.

ஆராய்வோமாயின், அந்த நெடுந்தொலைவிலுள்ள வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில்—உலக வரலாற்றிலேயே மிகப் பழைய காலமெனக் கணிக்கப்படும் அந்தத் தொன்மை நாளிலே—வடக்கும் தெற்கும் எவ்வாறு இணைந்து வாழ்வு நடத்தியுள்ளன என்பதை நன்கு அறிய இயலும். அறிஞர் பலர் இவ்வழியில் ஆராய்ந்துள்ளனர். நாமும் ஒரு சில கண்டு அமைவோம் :

ஸ்மித்து என்பார் தமது இந்திய வரலாற்று நூலில் சிந்து வெளி நாகரிகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[1] அதில் அவர் சிந்து வெளி நாகரிகம் ஆரியர் இந்தியாவுக்கு வருமுன்பே அமைந்த சிறந்த நாகரிகம் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்; அங்குள்ள எழுத்தும் பிற அமைப்புக்களும் மெசபட்டோமியாவை ஒத்த நிலையில் உள்ளன எனக் காட்டுகின்றார். சிலர் எகிப்தும் இந்த நாகரிக அமைப்பில் பங்கு கொள்ளக்கூடும் என்ற கொள்கையினையும் ஆராய்கின்றனர். எகிப்து, சிந்துவெளி நாகரிகம் இரண்டும் மெசபட்டோமியா நாகரிகத்திலிருந்து கடன் வாங்கினவையாய் இருக்கலாம் என்றும், அவை இரண்டும் தத்தம் நாட்டுச் சூழலுக்கு ஏற்பவும், அங்கங்கே அதனதன் முன்னர் நிகழ்ந்துள்ள நாகரிகம் பண்பாடு முதலியவற்றிற்கேற்ப மாறியிருக்க வேண்டும் என்றும் காட்டுகின்றார். எனவே, அக்காலத்தில் சிந்துவெளியிலும் அதை அடுத்த பரந்த இந்திய நாட்டிலும் தனித்த பண்பாடும் நாகரிகமும் நிலவியிருக்க வேண்டும் என்ற கொள்கையை அவர் நினைப்பூட்டுகின்றார். அந்தக் கொள்கை தென்னாட்டு மக்களுடைய கொள்கையாகத்தான் இருக்க வேண்டும் என்பதை வரலாற்று ஆசிரியர் பலர் உறுதி செய்துள்ளனர்.

கல்கத்தா பல்கலைக் கழகத்து வரலாற்றுப் பேராசிரியர்களான திருவாளர்கள் சின்னாவும் பானர்ஜியும்

1. Oxford History of India, by Vincent A. Smith (Third Edition), pp. 26-32.

எழுதிய இந்திய வரலாற்றில் சிந்துவெளி நாகரிகம் ஆரியர் வருகைக்கு முற்பட்டதெனவும், அது திராவிட, எகிப்து, மெசபட்டோமிய நாகரிகங்களின் சேர்க்கையாய் இருக்கலாம் எனவும் காட்டுகின்றனர். எனினும், சிலர் அதைத் திராவிட நாகரிகமே என எடுத்துக் காட்டுவதை விளக்கி அதை மறுக்காமல் ஏற்றுக்கொள்கின்றனர்.[1]

பல பல்கலைக் கழகங்களில் பணியாற்றிய திரு. R.D. பானர்ஜி என்பார், தம் 'வரலாற்றுக்கு முற்பட்ட இந்தியா'வில் சிந்துவெளி நாகரிகத்தைக் குறித்து, அது திராவிட நாகரிகமே என நிறுவியுள்ளனர்;[2] அக்கால நகரங்களாகிய மோகஞ்சோதாரோ, ஆரப்பா போன்ற நகரங்கள் திராவிடர்களாலோ திராவிடர் போன்றவர்களாலோ அமைக்கப்பட்டன என்கின்றார். அவர் அதற்கு ஆதாரமாக ஒருகாலத்தில் திராவிடர் இந்தியா முழுவதும் பரவி யிருந்தனர் என்பதை விளக்கி, இன்று பலுசிஸ்தானத்திலும், அசாமிலும், மத்திய இந்தியாவிலும் திராவிட மொழிக் குடும்பங்கள் வாழ்வதை எடுத்துக் காட்டியுள்ளார்; திராவிடர்கள் பலுசிஸ்தானத்தில் கட்டிய அணைகள் பல இடங்களில் அங்கே சிதறிக்கிடக்கின்றன எனவும் காட்டு கின்றார்; பலுசிஸ்தானத்திலும் சிந்து சமவெளியிலும் திராவிடரின் பழங்கால மட்பாண்டங்கள், இன்று கண்டு பிடித்து எடுக்கப் பெற்றன என்பதையும் காட்டுகின்றார். இவ்வாறு பரந்த இந்திய நிலப்பரப்பிலும், பிற நாடுகளிலும் பரவியிருந்த திராவிட மக்களை வடநாட்டு வளமார்ந்த மண்ணிலிருந்து ஆரியருக்கு முன் வந்த வட்டமுகமுடைய ஓர் இனத்தார் தெற்கே துரத்திவிட்டனர் எனவும், பிறகு அவர்கள் ஆரியருக்கு அடங்கி வழி விட்டார்கள் எனவும்

---

1. History of India, by Dr. N. K. Sinha and Dr. A. C. Banerji, pp. 29, 30.

2. Prehistoric, Ancient and Hindu India, by R. D. Banerji, M. A., pp. 9, 34,

அவர் காட்டுகின்றார்; அவ்வாறு வந்தவர்கள் திராவிடருடைய நாகரிகம் பண்பாடு முதலியவற்றைப் பின்பற்றியே வாழ்ந்தார்கள் எனவும் காட்டுகின்றார்.

இச்சிந்துவெளி நாகரிகம் பற்றி ஆராய்ச்சி செய்த பேராசிரியர் சேஷ ஐயங்கார் அவர்கள், இது பற்றிப் பலப்பல கொள்கைகளையும் முடிவுகளையும் எடுத்துக் காட்டி, இந்த நாகரிகம் ஆரியருக்கு முற்பட்ட நாகரிகம் எனவும், இது திராவிட நாகரிகமாகவே இருக்கலாம் எனவும் வரையறை செய்கின்றனர்.[1] மற்றும், அவர் சிந்து வெளியில் கண்டெடுக்கப் பட்ட பல பொருள்களும் தமிழகத்துத் தென்கோடியில் உள்ள ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களும், சித்தூர் பக்கத்தே கண்டெடுக்கப்பட்ட பொருள்களும், பாண்டங்களும் ஒத்திருத்தலைக் காட்டுகின்றார்;[2] அவை மேலை நாட்டுக் கிரீட்டு, பாபிலோனியா நாட்டுப் பண்டைப் புதை பொருள்களை ஒத்துள்ளமையையும் காட்டுகின்றார். எனவே, இச்சிந்து வெளி நாகரிகத்துக்கு முன் பாபிலோனிய எல்லை தொடங்கி, தமிழ் நாட்டுக் குமரி முனை வரையில் இடைப்பட்ட சிந்து வெளி உட்பட, திராவிடர்களே வாழ்ந்தார்கள் என்பதையும் அவர் விளக்குகிறார். அதற்கு ஏற்ற வகையில் பேராசிரியர் ராப்சன்[3] அவர்கள், திராவிடர்கள் வடமேற்குக் கணவாய் வழி வந்தவர்கள் என்பதைக் காட்டி, இன்றும் பலுசிஸ்தானத்தில் திராவிடமொழிக் குடும்பம் வாழ்வதை விளக்கி, சிந்துவெளி நாகரிகம் திராவிடருடைய நாகரிகமே என்பதை நிறுவுகின்றார்.

அண்மையில் இத்துறையில் ஆராய்ச்சி செய்த பிரெஞ்சு ஆசிரியர் திரு. J. பிலியோசட்டு[4] என்பார் தமது புது ஆய்வு நூலில்[5] சிந்து வெளி நாகரிகத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்து

1. Dravidian India, p. 44,
2. Dravidian India, p. 53   3. prof. Rapsan.
4. J. Filliozat   5. Political History of India.

பல உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்; சிந்து வெளி நாகரிகம் வழிபாட்டு முறையாலும் வேறு பல வகையாலும், திராவிட நாகரிகத்தை ஒத்ததே எனத் திட்டமாகக் குறிக்கின்றார். ஆரியர் இந்தியாவுக்கு வருமுன் இந்தியாவில் முண்டா[1] நாகரிகமும் திராவிட நாகரிகமும் இருந்தன என்றும், அவற்றுள் சிறந்தது திராவிட நாகரிகமே என்றும், வேதங்களில் சொல்லப் பெறாத சிவன், சக்தி முதலியவர்களை வழிபடும் முறைகளால் சிந்து வெளி நாகரிகம் திராவிட நாகரிகமேயாகும் என்றும் எடுத்துக் காட்டி விளக்குகின்றார்.[2] ஆரியருடைய சிவ சத்தி வழிபாட்டு முறை, இந்நாட்டில் அவர்கள் நன்கு கலந்து பழகிய பிறகு, இந்நாட்டுப் பழைய சமய அடிப்படையிலே மேற்கொள்ளப் பெற்றதென்பதையும் அவர் நன்கு விளக்குகின்றார்.[3] மற்றும் அவர் ஆரியர் இந்தியாவுக்கு வரும்போது திராவிடர் சிறந்த நாகரிகத்துடன் வாழ்ந்தனர் எனக் குறித்து, கிரேக்க நாட்டு ஹெலன் காலத்துக்கு முன்பே தமிழர்கள் சிறந்திருந்தார்கள் எனவும், சேர சோழ பாண்டிய நாடுகள் சிறக்கத் தெற்கே ஓங்கி இருந்தன எனவும், கிரேக்க நாட்டு ஹெரடோட்டஸ் அவர்களைப் பற்றிக் குறிக்கின்றார் எனவும் காட்டுகின்றார்.[4] ஹெலன் காலம் கி.மு. 5-ஆம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதாகும் என்பர் ஆராய்ச்சியாளர். எனவே, தென்னாட்டுப் பெரு மன்னர்களாகிய மூவேந்தர்களும் சிந்து வெளி நாகரிகக்

1. Munda.

2. Political History of india, P. 88.

3. Siva and his Sakti do not appear in the Vedas, but only in more recent texts from a period when new religions were being formed by fusion of indigenous cults with the Vedic and Brahminical belief. (Political History of India, p. 87)

4. Pre-Hellenic iage of Greece.

காலத்திலிருந்து சிறந்து வந்துள்ளார்கள் என்பது புலனாகின்றது.

டாக்டர் ஹால்[1] என்பார் திராவிடர்கள் சிந்து வெளி நாகரிகத்துக்கு முன் சிந்து, பஞ்சாபு, பலுசிஸ்தானம் உட்பட்ட வடவிந்தியாவை வாழிடமாகக் கொண்டு சிறந்திருந்தார்கள் என்று காட்டுகின்றார்.[2] மற்றும், அவர் புறத்தோற்றத்தில் 'மண்டை ஓடு' முதலியவற்றை நோக்கிச் சிலர் அம்மக்கள் திராவிடரினும் வேறுபட்டவர் என நினைப்பினும், உண்மையில் ஆராய்ந்து பார்ப்பின், திராவிடர் மெசபட்டோமியாவிலிருந்து வந்ததாகக் கொள்ளினும், அன்றி இந்திய நாட்டுப் பழங்குடிகளே எனக் கொள்ளினும் சிந்துவெளி நாகரிகம் அவர்களுடையதே என அறுதியிடலாம் எனவும் காட்டுகின்றார்;[3] இந்த நாகரிகம் வேத காலத்துக்கு—அதாவது ஆரியர் இந்தியாவுக்கு வருதற்கு முற்பட்டது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றார்.[4] இவ்வாறு பலரும் சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என்பதை வலியுறுத்திக் காட்டியுள்ளனர்.

சிந்துவெளியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆரப்பாவைப் பற்றி விளக்கமாக எழுதியுள்ள ஆசிரியர்,[5] மோகஞ்சோதாரோவைப் போன்றே அங்குள்ள பல்வேறு அமைப்புக்களையும், வாழ்வியற்பொருள்களையும், வழிபாட்டுப் பொருள்களையும் பிறவற்றையும் எடுத்து விளக்கி, அவை அனைத்தும் திராவிடருடையவற்றை ஒத்துள்ளன என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். இதே உண்மையினை அண்மையில் அகழ்ந்

1. Dr. H. R. Hall.
2. Mohenjo - Daro and Indus Civilization, Vol. I, p. 109.
3. Mohenja-Daro and Indus Civilization, p. 107.
4. Ibid. p. 111
5. Excavation in Harappa, by Manho Sarup Vats, M. A.

தெடுக்கப் பெற்றவேறு சில இடங்களும்[1] விளக்கும் என்பதை யும் அவர் எண்ணிப் பார்க்கின்றார்; சிறப்பாகப் பெண்கள் வளை அணிவதையும், அவை சங்கால் ஆகியதையும் குறிப் பிடுகின்றார். பரந்த கடற்பரப்பை எல்லையாக உடைய தமிழ் மக்கள் கடலிலிருந்து சங்குகளை எடுத்து விதம் விதமான வளைகளைச் செய்து அவற்றை அணிந்திருந்தார் கள் என்பதை நம் சங்க இலக்கியங்களிலும் காண்கின்றோம். சங்குக்கே 'வளை' என்பது பெயர். பெண்கள் இச்சங்கை வளையல்களாக அறுத்து அணிந்துகொண்டார்கள் என்று கூறுவதே பொருத்தமாகும். தமிழ் நாட்டில் இந்தச் சங்குகளை அறுப்பதற்கெனவே ஒரு குலம் இருந்ததென்பதை யும் அக்குலமே நக்கீரர் குலம் எனக் கூறப்படுவதையும் நாம் அறிவோம். கடல் படு முத்தும் சங்கும் பவளமும் தமிழர் தம் சிறந்த அணிகலன்களல்லவோ? ஆம்! இந்தச் சங்கு வளையல்களே சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவற்றைச் சான்றாகக் கொண்டே அதைத் திராவிட நாகரிகமெனக் காட்ட இயலும் என்கின்றனர் அறிஞர்.[2] மற்றும், பெண்கள் கொண்டையில் மலர்களையும் தழைகளையும் அணிந்திருந்த சிறப்பும்,[3] பல இலிங்கங்களின் அமைப்புக்களும்,[4] முத்துச்சிப்பிகளின் அமைப்புக்களும்,[5] தமிழ் நாட்டுக் குத்து விளக்கைப் போன்று நான்கு முகமுடைய விளக்குகளும்,[6] கோயில் அமைப்புக்களும் அவற்றின் நகைகளும்,[7] நகைகளைக் கோத்து வைத்துள்ள

1. Chak Purbane Syal and Kotla Nihang Khan in Punjab.
2. Excavation in Harappa, pp. 89, 432.
3. ibid. p. 297, 299.
4. ibid. p. 370.
5. ibid. p. 373.
6. ibid. p. 374.
7. ibid. p. 443.

நூற்கயிறுகளின் அமைப்புக்களும்,[1] பிறவும் ஆரப்பா நாகரிகம் இக்காலத்துத் தமிழ் நாட்டு நாகரிகத்தையும் பண்டைய திராவிட நாகரிகத்தையும் ஒத்து விளங்குகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றன என்பதை நன்கு விளக்குகின்றார். மற்றும், வண்ணம் தீட்டப் பெற்ற மட்பாண்டங்களும், தானியக் களஞ்சியங்களும், வேறு பல அமைப்புக்களும் இன்றைய தமிழ் நாட்டுக் களஞ்சியங்களையும், பாண்டங்களையும் உணர்த்துகின்றன என்பதையும் ஒன்றன்பின் ஒன்றாக விளக்குகின்றார். இவ்வாறு ஆரப்பாவும் பிற சிந்துவெளி அகழ்பொருள்களும் காட்டும் பண்டைய நாகரிகத்தையும் அது திராவிட நாகரிகத்தை ஒத்திருப்பதையும் ஜான்மார்ஷல் தம் நூலில் நன்கு விளக்குகின்றார்.[2] அவர் அடிபற்றி ஆராய்ந்த ஹீராஸ் பாதிரியார் போன்ற அறிஞர் பலர் இவ்வுண்மையை மேலும் மேலும் ஆராய்ந்து விளக்கிக் கொண்டேயிருக்கின்றனர்.

வடநாட்டு மேனாட்டு ஆராய்ச்சியாளர் பலரால் திராவிடருடைய—தென்னாட்டு மக்களுடைய—தொடர்பு கொண்ட நாகரிகமே சிந்துவெளி நாகரிகம் என்பதை எவ்வாறு காண முடிந்தது? அச்சிந்து வெளியில் அகப்பட்ட பல்வேறு பொருள்களைக்கொண்டே இந்தக் கொள்கையை அவர்கள் எண்ணிப் பார்த்து அறுதியிட முடிந்தது. இதன் அடிப்படை ஆசிரியரான ஜான் மார்ஷல் என்பவர், தம் பெருநூலில் இவற்றிற்கெல்லாம் விளக்கம் தருகின்றார். அவற்றுள் ஒரு சிலவற்றை நாமும் காண்போமானால், உண்மை நன்கு தெளிவு பெறும் என்பது உறுதி.

சிந்துவெளி நாகரிகத்தில் சத்தி வழிபாடு முக்கிய இடம் பெற்றுள்ளது. இச்சக்தி வணக்கம் ஒரு காலத்தில் இந்தியா

1. Excavation in Harappa p. 466.

2. Indus Civilization, by Sir John Marshall, pp, 51, 52.

முழுவதும் பரவியிருந்தது இந்தியாவில் மட்டுமன்றி, மெச பட்டோமியா, சிறிய ஆசியா, பால்கன் நாடுகள், எகிப்து முதலிய நாடுகளிலும் இச்சத்தி வணக்கம் இருந்து வந்தது. அந்தக் காலத்தில் இச்சத்தி மக்களின் கொடுந்துன்பங்களை நீக்குபவளாய், ஊர்தோறும் மக்கள் வணங்கும் கோயில் பெற்றவளாய் விளங்கினாள். தமிழ் நாட்டில் ஊர்தோறும் இன்றும் கொண்டாடப் பெறும் கிராம தேவதைகளை நாம் அறிவோம். ஊரில் யாதொரு தீங்குவரினும், மக்கள் அவளிடம் முறையிட்டுக் கொள்வதும், அவள் நேரில் வந்து வரந்தந்து நீக்குவதாக நம்புவதும் இன்றும் நாம் காணும் நிகழ்ச்சிகளே. மாரியம்மன் என்றும் பிடாரி என்றும் பல வேறு வகையில் அவள் பாராட்டப் பெற்றிருப்பதையும் நாட்டு வரலாறு காட்டுகின்றது சிலப்பதிகாரத்தில் இந்தக் கொற்றவை வழிபாடே வேட்டுவ வரியில் விளக்கப் பெற்றுள் ளது. இச்சத்தியே எல்லாத் தெய்வங்களுக்கும் முற்பட்ட தெய்வம் என்னும் உண்மையை இளங்கோவடிகள்,

> ''அரி, அரன், பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்
> விரிகதிர்அம் சோதி விளக்காகி யேநிற்பாய்!''
>
> (*12: உரைப்பாட்டு மடை, 8*)

என்று விளக்குகின்றார். மற்றும் இந்தச்சத்தி பூசை ஆரியர் கள் இந்திய நாட்டுக்கு வருமுன்பே இருந்து வந்த ஒன்று. ஆரியர்தம் வேதத்தில் இச்சத்தி பூசை விளக்கமாகக் கூறப் படவில்லை. இருக்கு வேதத்தில் இரண்டோர் இடங்களில் 'பிருதுவி' யாகிய பூதேவிக்குரியதாக இப்பூசை கூறப்படினும், இஃது அவர்கள் சிந்துவெளி தாண்டிக் கங்கைச் சமவெளியில் வந்து தங்கிய போது அங்குள்ளவர்கள் செய்யும் சத்தி வழிபாட்டைக் கண்டு, பிறகு தங்கள் வேதத்தும் இதை அமைத்துக்கொண்டார்கள் என்பதே பொருந்துவதாகும். அவ்வழிபாடும் நில மகளுக்கு அமைந்த ஒன்றேயன்றி, அனைத்தையும் ஆக்கும் 'சத்தி'க்கு அமைந்ததாகாது. இந்த உண்மையை இன்றும் தமிழ் நாட்டுச் சத்தி வழிபாடு நன்கு

விளக்கும். தமிழ் நாட்டு ஊர்த் தெய்வங்களாகிய கொற்றவை, மாரி, பிடாரி என்பவற்றிற்கு இன்றும் ஆரியரோ, அன்றி அவரொடு சேர்ந்தவரோ பூசை செய் வதில்லை. அக்கோயில்களில் எல்லாவிடங்களிலும் ஆரிய ரல்லாத பழங்குடி மக்களாலேயே பூசை செய்யப்படுகின்றது. வெற்று வழிபாட்டுக்கும் கூட ஆரியர்கள் அக்கோயில் களுக்குச் செல்வதில்லை. அதற்கென உள்ள வழிபாட்டு முறையும் தமிழிலேதான் உள்ளது. எனவே, இந்தத் தமிழ் நாட்டுச் சத்தி வழிபாடுதான் சிந்துவெளி நாகரிக காலத்தில் அங்கே சிறந்திருக்க வேண்டும் என்று கொள்வதில் தவறு இல்லை.

இனி, சிவ வழிபாட்டைப் பற்றி நோக்குவோம்: மொகஞ்சதாரோ, ஆரப்பாவில் எத்தனையோ சிவலிங் கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவை பல அளவில் அமைந்துள்ளன. வீடுகளில் வைத்து வழிபடும் சிறுசிறு இலிங்கங்களும் பொது இடங்களில் வழிபடப் பெறும் பெரிய இலிங்கங்களும் உள்ளன. செல்லுமிடமெல்லாம் கையில் உடன் கொண்டு சென்று பூசை சென்ய்யும் இலிங்கங்களும் உள்ளன. கல்லிலும் மண்ணிலும் இந்த இலிங்கங்கள் செய்யப்பட்ட கல்வழிபாடு இந்திய நாட்டில் ஆரியர் வருகைக்கு முன்னரே அமைந்த ஒன்று.[1] இந்திய நாட்டில் மட்டுமன்றி, பலுசிஸ்தானத்திலும் அசாமிலுங்கூட இத்தகைய வழிபாடு இருந்திருக்கின்றது. இத்தகைய இலிங்க வழிபாடு இன்றும் தமிழ் நாட்டில் ஊர்தோறும் இருக்கக் காண்கிறோம். சத்தியாகிய மாரியும் கொற்றவை யும் ஊர்தோறும் உள்ளமை போன்றே, இலிங்கமும் ஊர் தோறும் கோயில் அமைத்துப் போற்றப்படுவதை அறியாதார் யாரே! அவற்றின் வழிபாட்டு முறைகளும் வைதிக முறை யாகிய வேதவிதிப்படி அமையாது, பிற் காலத்து, கலந்த,

1. Indus Civilization, p. 58.

ஆகம அடிப்படையிலே உள்ளன. கோயில்களின் அமைப்புக் களும் அப்படியே. எனவே, இலிங்க வழிபாடு ஆரியர் வருமுன் தமிழ் நாட்டில் மட்டுமன்றி, இந்தியா முழுவதும் மட்டுமன்றி, பிற இடங்களிலும் பரவியிருந்ததென்பது நன்கு புலனாகும்.

சிவனுடைய உருவமும் சிந்து வெளியில் அன்றே அமைந்துள்ளது. அது மூன்று முகங்களோடு கூடியுள்ளது. சிவவழிபாடு மிகப் பழமையானது. திருவாரூரில் புற்றிடங் கொண்ட இறைவனைப் பாடும் திருநாவுக்கரசர், அவன் கோயில் கொண்ட நாளை எண்ணி எண்ணிப் பார்த்து, முடிவில் எல்லை காண முடியாது திகைக்கின்றார்.[1] சிந்து வெளிச் சிவவழிபாட்டை நினைத்து ஜான் மார்ஷலும் அவ்வாறே வியக்கின்றார். சிவன் உருவம் மூன்று முகங்க ளோடு இருப்பதுடன் அதன் அடியில் யானை, புலி, காண்டா மிருகம், எருமை போன்ற உருவங்களும் உள்ளன. இவை இறைவன் 'பசு பதி' என்பதை நன்கு எடுத்துக் காட்டுகின் றன. இவற்றை ஆராய்ந்து ஆராய்ச்சி வல்லுநராகிய கோபிநாதராவ் அவர்கள், சிந்து வெளியின் சிவ உருவம், தமிழ் நாட்டில் வடவார்க்காட்டு மாவட்டத்திலுள்ள மேச்சேரியில் உள்ள மூன்று முகங்கொண்ட சிவ வடிவத்தை ஒத்துள்ளது எனத் திட்டமாக எழுதியுள்ளார்.[2] ஜான் மார்ஷல் அவர்கள் தனித்த இலிங்க வழிபாட்டுடன், பிற வகை வழிபாட்டு முறைகளும் சேர்த்தே இவ்வுருவ வழி பாட்டுக்கு அடிகோலியிருக்க வேண்டும் எனக் காட்டுவர். தமிழ் நாட்டுச் சைவ சமய உண்மையாகிய 'முப்பொருள் உண்மை'யே உலகில் மிகப் பழைய கருத்து என்றும், அது இந்தியாவில் மட்டுமன்றி அந்தப் பழைய காலத்தில் மெசபட்டோமியாவிலும் பரவியிருந்தது என்றும் காட்டுகின்

1. திருவாரூர்த் திருத்தாண்டகம், அப்பர்.
2. Elements of Hindu Iconography, by T. A. Gopinathan Rao, p. 380.

றனர்[1] இந்த மூன்று முகச் சிவவடிவத்தைப் பின் வந்தவர் திரிமூர்த்தி என மாற்றிக் கூற முயன்று வெற்றி காணாது விட்டுவிட்டனர்.

மற்றும் அந்தச் சிவவுரு 'யோகநிலை'யில் உள்ளது. யோகம் இந்தியாவின் பழங்காலத்து முறைகளுள் ஒன்று. ஆரியர் வருமுன்பே இந்தியாவில் யோகம் பயின்றோர் பலர் இருந்தனர். காப்பிய காலத்துக்குப் பிறகே அஃது ஆரியர் வாழ்வில் இடம் பெற்றது.[2] இந்த உருவமே பின்னால் ஆரியர்களின் உருத்திரனாகக் கொள்ளப்பட்டது. சிந்து வெளிச் சிவ உருவத்தில் தலையில் உள்ள இரு பிரிவுக் கொம்பே, அஃது ஆரிய நாகரிகத்துக்கு முற்பட்டது என்பதைக் காட்டுகின்றது. இதையே பின்னால் ஆரியர் 'திரிசூல'மாக்கி, ஆயுதம் என்றனர்.[3] மற்றும் சிவன் உருவம் மான்தோல் ஆசனத்தில் இருந்து உபதேசம் செய்வது போல அமைந்துள்ளது. மான் தோல் ஆசனம் உபதேசத்துக்குக் கொள்ளும் நல்லாசனமாகப் போற்றப்படுகின்றது.

'சிவன்' என்னும் சொல் ஆரியருடையதன்று. வேதத்தில் சிவனைப் பற்றிய குறிப்பு இல்லை. பின்னர், 'உருத்திரன்' என்றே அவன் குறிக்கப்பெறுகின்றான். ஆனால், தமிழில் இச்சிவன் பழங்காலத்திலிருந்து வழக்கில் இருந்து வருகின்றான். 'செம்மை' என்ற பண்பின் அடியாகவே சிவன் பிறந்தான் என்பர்[4] எனவே, சிவன் என்பது திராவிடர் வேர்ச்சொல்லாகிய 'செம்மை'யிலிருந்தே பிறந்திருக்க வேண்டும்.[5] மற்றும், சத்தியும் சிவமும் இணைந்த வழிபாடு

1. Sir Shamash and Ishtar.

2. Indus Civilization, by Sir John Marshall, p. 54
3. ibid. p. 55

4. 'சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மான்.' (தேவாரம்)

5. Indus Civilization, p. 56.

தமிழருடையது. இரண்டையும் பிரிக்க முடியாது. 'சிவமின்றேல் சத்தி இல்லை; சத்தி இன்றேல் சிவமில்லை,' என்ற உண்மையே சைவ அடிப்படை. சத்தி தோற்ற அழிவு செய்பவள். இந்தச் சிவசத்தி நிலை தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் மட்டுமன்றி, மத்தியதரைக் கடற்பிரதேசங்களிலும் இருந்தது இந்தச் சத்தியைப் பற்றியும் இதனோடு இணைந்த சிவத்தைப் பற்றியுமே பிற்காலத்தில் பலப்பல பாடல்கள் உருவாயின.

மேலும், இந்தச் சிந்து வெளியின் வழிபாட்டு உருவம் தமிழ்நாட்டு ஐயனார் வழிபாட்டை நமக்கு நினைவுறுத்தும். தமிழ் நாட்டில் பல ஊர்களில் உயர்ந்த மரங்களின் கீழ் ஐயனார் சிந்துவெளிச் சிவனைப் போன்று நிமிர்ந்து தம் அடியின்கீழ் உயிர்களை அடக்கி வைத்திருப்பது போன்று உள்ளதை இன்றும் காணலாம். ஐயனார் என்றும், காத்தவராயன் என்றும், மன்னார்சாமி என்றும் பல பெயர்களால் ஐயனார் வழங்கப் பெறுகின்றார். மற்றும் இக்காலக் கோயிலிற்காணும் தட்சிணாமூர்த்தி என்பதும் இந்த அடிப்படையில் அமைந்ததேயாகும். அதன் பெயரே அது தென்னாட்டுக் கடவுள் என்பதை நமக்கு விளக்குகின்றதே! (தட்சிணம்-தெற்கு, மூர்த்தி-கடவுள்.) தென்னாட்டுக்கு உரிய கடவுளே அவர் என்பதைத்தான் அப் பெயரால் வழங்கினார்கள். பின்பு அது தென்முகக் கடவுளாய் நிற்கும் திசை நோக்கி அமையலாயிற்று. எனவே, தமிழ் நாட்டு ஐயனார் உருவைப் போன்றதே சிந்துவெளியில் உள்ள 'சிவன்' உருவம் என்பது தேற்றம்.[1]

இந்த உருவங்களைத் தவிர்த்து, மர வழிபாடும், விலங்கு வழிபாடும், நாகர் வழிபாடும் சிந்து வெளி நாகரிகத்தில் நாம் காண்பனவாகும். மரத்தை அறிவு வளர்ச்சியின் அடையாளமாக வழிபட்டனர். கல்லாலமரத்தின்

1. Indus Civilization, p. 56.

அடியிலிருந்தே தட்சிணாமூர்த்தி சொல்லாமல் சொல்லிப் பல உண்மைகளை விளக்கினார். புத்தருக்குப் போதி மரத்தின் அடியிலேயே அருள் நோக்கு அமைந்தது. தமிழ் நாட்டுக் கோயில் வரலாற்றில் மரங்களே முக்கிய இடம் பெற்றுள்ளமையை யாவரே அறியாதார்! ஆரியர் காலத்துக்கு முன்பே தமிழ் நாட்டிலும், பரந்த இந்திய நிலப்பரப்பிலும் இம்மர வழிபாடு இருந்து வந்தது.

விலங்கு வழிபாடு தமிழ் நாட்டிலும் சிந்து வெளியிலும், மெசபட்டோமியாவிலும், சுமேரியாவிலும் சிறந்திருந்தது[1] மனித முகத்தோடு கூடிய விலங்குகளும், விலங்கு முகத்தோடு கூடிய மனித உடலும் போற்றப்பட்டன. புலியும் யானையும் சத்தியுடன் இணைத்து வழிபடப்பட்டன. காண்டாமிருகம், காட்டு எருமை போன்றவை சிவ வழிபாட்டுடன் இணைக்கப் பட்டன. அனைத்துக்கும் மேலாக 'எருது' சிறந்த முறையில் வழிபடப் பெற்றது. சிந்து வெளி நாகரிகத்தில் எருது முக்கிய இடம் பெற்றுள்ளது. வழிபாட்டிலும் மக்கள் வாழ்விலும் அது பெரும்பங்கு கொண்டிருந்தது என்பதை அனைவரும் நன்கு அறிவர். சிறப்பாக எருதுகளின் கொம்புகள் தூய்மை கருதி வழிபடப்பெற்றன.

அனுமன் வழிபாடு ஆரியர்களுக்கு முன்பே நாட்டில் உள்ளவர்களால் வழிபடப் பெற்று வழக்கத்தில் இருந்தது. அனுமன் என்ற பெயரே தமிழ்ப்பெயர் என்பதையும் அதுவே பிறகு மாறி ஆரியமொழியில் இடம் பெற்றதென்பதையும் வரலாற்று அறிஞர்கள் நன்கு காட்டியுள்ளார்கள். ஆண்+மந்தி என்ற சொற்களின் சேர்க்கையே ஆண்மந்தி யாகிப் பின் அனுமன் ஆகிப் பின்னும் ஹனுமான் என ஆரிய மரபைத் தழுவியது. பாதி விலங்கு பாதி மனித நிலையைக் காட்டலே-மனிதன் குரங்குவழி உருவானான் என்ற உண்மை யைக் காட்டலே-இக்குரங்கு வழிபாடு அக்காலத்தில் அமைந்

1. Indus Civilization, p. 67.

திருந்ததோ என்றுகூட எண்ணத் தோன்றுகின்ற தன்றோ!

நாகர் வழிபாடும் தொன்மை வாய்ந்த ஒன்றாகும். நல்ல பாம்பைப் பற்றிய குறிப்பு வேதத்தில் இல்லை. நாகர் வழிபாடும் ஆரியருக்குத் தெரியாத ஒன்று. ஆனால், தமிழர்கள் மிகுபழங் காலந்தொட்டே நாகர்களை வழிபட்டு வந்தார்கள். இன்றும் தமிழ் நாட்டு மூலை முடுக்குகளிலெல்லாம் நாகர் வழிபாட்டைக் காணலாம். நாகத்தைப் பூசிப்பதற்கு இரண்டு காரணங்கள் முக்கியமாகலாம். ஒன்று, அச்சத்தின் வழி நிகழ்ந்திருக்கலாம்; மற்றொன்று, அவை பூமிக்கடியில் இருந்து வருவதால் இறந்து புதைக்கப்பட்டவர் மீண்டும் அந்த உருவத்தில் வெளிவருகின்றனர் என அப்பழங் காலத்தில் நம்பியிருக்கலாம்; தமிழ் நாட்டில் வீடுதோறும் 'மனைப் பாம்பு' என்று நாகத்தைப் போற்றி வழிபடுவதும், அவற்றைக் கண்டாலும் அவற்றிற்கு ஊறு செய்யாமல் விட்டுவிடுவதும், அவற்றிற்குப் பொங்கல் இட்டுப் பூசை செய்வதும் இன்னும் நாம் காண்பனவே. மற்றும் நாகப் பட்டினம், நாகூர் போன்ற ஊர்களும், நாக நாடு, நாக கன்னிகை போன்றவையும் தமிழர் நாகரோடு கொண்ட தொடர்பினை நன்கு விளக்குவனவாகும்.

நீர் வழிபாடும் நாட்டில்-சிந்துவெளி நாகரிக காலத்தில்-இருந்தது எனக் காண்கிறோம்.[1] தமிழ் நாட்டிலும் நீரைத் தெய்வமாக வழிபட்ட வரலாறு பழமையானது. தொல்காப்பியத்தில் நெய்தல் நிலத் தெய்வமாக வருணனை வணங்குவது இந்த அடிப்படையிலேயாம். இன்னும் ஆற்றில் புது வெள்ளம் வரும்போது தமிழ் நாட்டு மக்கள் அதைப் போற்றுவதைக் காண்கின்றோம். ஆரியர் வழக்கத்திலும் வருணன் வழிபாடும் புது வெள்ளம் போற்றலும் உள்ளன என்றாலும், அவர்கள் வருமுன்பே சிந்துவெளி நாகரிக

1. Indus Civilization, p. 75.

காலத்தில் இந்நீர் வழிபாடு இந்தியா முழுவதுங் பரவி இருந்தது எனக்கொள்ளல் பொருந்துவதேயாகும். இந்த நீர் தம்மைத் தூய்மைப்படுத்துகின்றது என்ற உண்மையை உணர்ந்தவர் தமிழர். சிந்து வெளியில் அமைக்கப்பெற்ற குளமும், குளக்கரையிலிலுள்ள குளிக்குமிடங்களும், தென்னாட்டுக் குளங்களையும் அவற்றைச் சார்ந்தவற்றை யும் ஒத்திருத்தல் காணலாம். மற்றும், இந்த நீர் வழிபாட்டு முறையிலேதான் ஆற்றங்கரை நாகரிகங்கள் உலகம் முழுவதும் உண்டாகியிருக்க வேண்டும் எனக் கொள்ளல் தவறாகாது. சிந்துவெளி நாகரிகமும், காவிரிக்கரை நாகரிகமும், எகிப்து, மெசட்டோமியா, சீன நாகரிகங்களும் ஆற்றங்கரை நாகரிகங்களேயல்லவா? எனவே, அத்தகைய முதல் வாழ்வை நல்கிய ஆற்றையும் அதுவழியே பெருக் கெடுத்தோடிவரும் நீரையும் யாரே போற்றாதிருப்பர்!

கிருட்டிணன் வழிபாடு சிந்துவெளி நாகரிகம் அறியாத ஒன்று. கிருட்டிணன் வழிபாடு காலத்தாற் பிந்தியது [1] மற்றும், கட்டடக்கலை, வண்ணக்கலை முதலிய பலவும் சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பை விளக்குவதோடு அவை பழந்தமிழ் நாட்டு - திராவிட நாட்டு - திராவிடர் தம் பண்பாட்டையும் வாழ்வையும் உணர்த்துகின்றன என்பது உண்மையேயாகும்.

ஜான் மார்ஷல் கூறுகின்றபடி அக்காலத்து இந்திய நாகரிகம்—சிந்து வெளி அடிப்படையில் அமைந்த நாகரிகம்— அக்காலத்தே உலகில் வாழ்ந்த பிற சுமேரிய எகிப்திய நாகரிகங்களைக் காட்டிலும் மிக மிகச் சிறந்ததாய் விளங் கிற்று என்பதில் ஐயமில்லை.[2] இவ்வாறு இன்றைக்கு ஐயாயிரமாண்டுகளுக்கு முன்பே பரந்த இந்தியநாட்டின் தெற்கும் வடக்கும் பல்வேறு வகைகளால் இணைந்து

1. Indus Civilization, p. 77.
2. ibid. p. 77

இயைந்து சிறந்து செம்மை நலமுற்று ஓங்கி இருந்தன வென்றும், இந்தநிலை - ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவியிருந்த பண்பாடும் பிறவும் சிறந்தநிலை - காலப் போக்கில் மெள்ள மெள்ள வந்த மற்றவர்களுக்கு இடம் விட்டு, தெற்கே ஒரு புறத்தில் இன்று அமைந்துவிட்டது என்றும் கொள்வது பொருந்தும். எனவே, இந்தியநாட்டு வடக்கும் தெற்கும் மட்டுமின்றி, மேற்கே எகிப்து, மத்திய தரைக்கடல் நாடு வரையில் இன்றைய தென்னாட்டுப் பண்பாடும் நாகரிகமும் பிற நல்லியல்புகளும் பரவி நிறைந் திருந்தனவென்றும், இந்த உண்மையை இன்றைய நல்ல வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து உணர்த்திக் கொண்டே இருப்பதும், அதுவழியே உலகு உண்மையை உணர்ந்து தெளிவதும் வரலாற்றுச் செம்மைக்கு வழி காட்டியென்றும் அறிதல் வேண்டும்.

இனி, இறுதியாக ஜான் மார்ஷல் அவர்கள் தம் நூலின் இறுதியில் சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றியும், அதன் வழி அவர் தெளிந்த உண்மையைப்பற்றியும் கூறியதை அவர் வாக்கிலேயே நானும் காட்டி அமைகின்றேன்.[1] அவர் வழி சிந்து வெளி நாகரிக ஆராய்ச்சி மேலும் வளர்ந்து உலகுக்கு நலம் பயப்பதாக!

---

1. As mistake as it seems to me, that has too often been to take the modern jungle tribes as the lineal representatives of the Pre-Aryan and to assume that they have perpetuated all that is worth perpetuating of the cultural and religious traditions of the latter. India has always had her jungle tribes. She had them five thousand years ago, as she has them to-day. But side by side with them she also had her cultured classes of the cities and the gulf between the two was probably as great as it is now. As to the premitive beliefs of these jungle folks, they may, it is true, be reckoned as part and parcel of Hinduism, which have ever been ready to

admit within its fold any and every kind of teaching, creed, or cult, from the most transcendental docirtne of theology to the most degraded type of festishim. This has been a characteristic of Hinduism far back as its history can be traced, still earlier Indus religion which preceded it, only that in remoteage there was presumably less diversity of bellef than now. To this limlted extent, than, we are justified in belieivng that the non-Aryan jungle trlbes of today do, in fact, preserve for us some of the cruder and more elemental features of the Pre-Aryan religion. But to assume, as so many have done, that such features represent the sum total of that religion is irrationai as to suppose that the rude grass and mud hovels of these same jungle tribes are representatives of the massives edifices of Mohenjo-Daro and Harappa (Vol.I.p.78.)

# 5. வடமொழி - ஆரியம் - சமஸ்கிருதம்

இன்று தமிழ்நாட்டில் வடமொழி, ஆரியம், சமஸ் கிருதம் என்ற மூன்றும், தமிழல்லாத—தமிழில் வந்து வழங்கும் ஒரு வேற்று மொழியைக் குறிக்கும் சொற்களாக வழங்கப் பெறுகின்றன. சமஸ்கிருதம் என்பது இந்த நாட்டின் பழங்கால மொழியாக இந்தியா முழுவதும் கொள்ளப்படுகிறது. என்றாலும் அம்மொழியும் அம்மொழிக் குரிய மக்களும் பரந்த இந்தியநாட்டு எல்லைக்கு வெளியே இருந்து உள்ளே வந்தவர்கள் என்றும், அக்காலம் இன்றைக்கு 3,500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கும் என்றும் வரலாற்று ஆய்வாளர் கூறுகின்றனர். அவர்தம் மொழிக்கு அவ்வாறு வந்த அக்காலத்தில் தமிழிலோ பிற இந்திய மொழிகளிலோ என்ன பெயர் இட்டனர் என்பது திட்ட மாகக் கூற இயலவில்லை.

ஒரு நாள் என் மதிப்பிற்குரிய நண்பர் ஒருவர் வழியில் வரும்போது இம்மூன்று சொற்களும் ஒரே பொருளைக் குறிக் கின்றனவா எனக்கேட்டார். அப்போதுதான் அவை பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும் என்ற உணர்வு தோன்றிற்று, ஆய்ந்து பார்ப்பின், இம்மூன்றும் மூன்று வகையில் பொருள் தரத்தக்கன என்றும், சமஸ்கிருதம் என்ற மொழியைப் பிற இரண்டும் குறிப்பன அல்ல என்றும் எண்ணவேண்டி வரும். இக் கருத்தை மக்கள் முன் வைக்கின்றேன்; அறிஞர்கள் முடிவு கூறட்டும்.

வடசொல் என்பது தொல்காப்பியத்திலே கூறப்படு கிறது. எச்ச இயலில் சொற்களைப் பாகுபடுத்தும் ஆசிரியர்

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று நால்வகைச் சொற்களைக் குறிக்கின்றார். இங்கே வட சொல்லுக்கு உரை கூற வந்தவர்கள் வடசொல் என்பது ஆரிய சொற்போலும் சொல் என்றும் (இளம் பூரணர்) ஆரியச்சொல் (நக்கினார்க்கினியர்) என்றும் காட்டுவர். யாரும் 'சமஸ்கிருதம்' என்று குறிக்கவில்லை. மற்றும், உரையாசிரியர்கள் காலத்தில் ஆரியச் சொல்லும் வட சொல்லும் ஒன்றாகக் கருதப்பட்டனவென்பது தெளிவாயி னும், இளம்பூரணர் வழி, வடசொல் ஆரியச்சொல் போன்ற தமிழ்ச் சொல்லையே குறிக்கும் எனக்கொள்ளல் வேண்டும் இனி இந்த எச்ச இயல் ஐந்தாம் சூத்திரம் வடசொல் பற்றியே வருவது,

'வடசொற் கிளவி
வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த
சொல்லா கும்மே'

என்பது அது. அதற்கு உரையாசிரியர்கள் பலவகையில் விளக்கம் தருகின்றனர். 'வடசொற் கிளவி' என்று சொல்லப்படுவது 'ஆரியத்திற்கே உரிய எழுத்தினை ஒரீஇ இரு திறத்தார்க்கும் பொதுவாய எழுத்தினை உறுப்பாக உடையவாகும் சொல் என்றவாறு' என்பர் இளம்பூரணர். நச்சினார்க்கினியரும் சேனாவரையரும் இதே பொருள் காட்டுவர். தெய்வச்சிலையார் வடமொழிச் (பிராகிருதம்) சொற்களையும் சேர்ப்பார். எனினும், அச்சொற்கள் வழங்கும் முறைகண்டு 'வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட்கு உறுப்பாய் வாரா' எனச் சேனாவரையரும், 'திசைச் சொல்லும் வடசொல்லும் பெரும்பாலும் பெயர்ப் பெயராயும் சிறுபான்மைத் தொழிற் பெயராயும் வருதலின்றி ஏனைய வாரா' என நச்சினார்க்கினியரும் உரை கூறுவர். அனைவரும் இதற்குக் குங்குமம், நற்குணம், காரணம், காரியம் போன்ற சொற்களைக் காட்டுவர். எனவே உரையாசிரியர்கள் காலத்தே வடசொல் என்பது 'ஆரியச்

சொல் எனப் பெயர்பெற்றது. அதுவே பின் சமஸ்கிருதமாகக் காட்டப்பெறுவது என விளங்கும் எனினும் 'ஆரியச் சொல் போலும் சொல்' என்ற இளம்பூரணர் உரையையும் பிராகிருதத்தைச் சேர்த்த தெய்வச் சிலையார் உரையையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

உரையாசிரியர்கள் காலம் பிற்காலச் சோழர் காலம். அக்காலத்தில் தமிழ்நாட்டில் சமஸ்கிருத மொழிக்கு ஏற்றம் உண்டாயிற்று என வரலாறு காட்டுகின்றது. எனவே அக்காலத்தில் வாழ்ந்த உரையாசிரியர்கள் அவர்தம் காலத்தை ஒட்டி அவ்வாறே உரை எழுதி மேற்கோள் காட்டிச் சென்றார்கள். எனினும், சிந்திப்பின் ஓர் உண்மை புலப்படும் என்பது உறுதி.

வடமொழி என்பது தமிழ்ச்சொல்; தமிழகத்துக்கு வடக்கே உள்ள ஒரு மொழியைக் குறிக்கும் எனலாம். தமிழ்நாட்டு வடஎல்லை சங்ககாலத்திற்கு முன்பிருந்தே வேங்கடமாக அமைந்துள்ளதை நாமறிவோம். சங்க இலக்கியங்களிலே,

பனிபடு சோலை
வேங்கடத்து உம்பர்
மொழிபெயர் தேயம் (அகம். 211)

என்றும்,

தமிழ் கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த
பன்மலை இறந்தே (அகம். 31)

என்றும்,

'குல்லைக்கண்ணி
வடுகர் முனையது
வல்வேற் கட்டி
நன்னாட்டு உம்பர்
மொழி பெயர்
தேஎத்த ராயினும் (குறுந். 11)

என்றும் வேங்கடத்து அப்பால் வடுகர் நாடு தொடங்கிப் புல்மொழி பேசியவர் வாழ்ந்தனர் என அறிகிறோம்,

தெலுங்குமொழி பேசியவரையே, தமிழர், 'வடுகர்' என அழைத்து வந்தனர். 'வடுகன் தமிழறியான் வைக்கோலைக் கசுவென்பான்' என்ற ஒரு வேடிக்கைப் பழமொழி நாட்டில் வழங்குகின்றது. அவ்வடுகர் வேங்கடத்துக்கு அடுத்த ஆந்திர நாட்டில் வாழ்ந்தவர்களாவார்கள். தமிழ்நாட்டு வட எல்லையில் வாழ்ந்தவரை வடுகர் என்றும், மொழியை வடமொழி என்றும் தமிழர் அழைத்திருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்திலேயும் வடவேங்கடம் வடக்கு எல்லையாய் இருந்தமையின் அவர் கூறும் வடமொழியும் இவ்வடுகர் பேசிய மொழியைத்தான் குறிக்கும் என்பது கொள்ளத்தக்கதாகும். தமக்கு அடுத்து அண்மையில் இருக்கும் மொழிபற்றியும் அது தமிழில் வந்து வழங்கும் வழக்குப் பற்றியும் ஒன்றும் கூறாது, எங்கோ ஆயிரம் கல்லுக்கு அப்பாலுள்ள மொழி வழங்குவதுபற்றி இலக்கணம் கூறினார் என்றால் பொருந்தாது. உரையாசிரியர்களெல்லாம் அவர் காலத்தில் சமஸ்கிருதம் தமிழில் வழங்கியதறிந்தும் காலச் சூழலுக்கு உட்பட்டும் அவ்வாறு உரை எழுதினார்கள் என்று கொள்ளுவதே பொருத்தமானதாகும். மற்றும் தமிழில் வடுக மொழியாகிய தெலுங்கு மொழிச் சொற்கள் அதிகமாகப் பயின்று வந்தமையாலும், திராவிட மொழிக் குடும்பத்துள்ளே தமிழொடு அதிகத் தொடர்பு கொண்டமையானும் 'வடசொல்' என்றும் பிற சொற்களினின்றும் அதைத் தனியாகப் பிரித்துக் கூற வேண்டியதாயிற்று.

நிற்க, வடமொழி சமஸ்கிருதத்தைத்தான் குறிப்பதாயின், அது வழங்கிய நாடு மிக வடக்கே இருந்தது. அந்த ஆர்யவர்தத்திற்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் ஆயிரம் கல் தூரத்துக்குமேல் உள்ளது. இரண்டுக்கும் இடையில் தெலுங்கு போன்ற பல மொழிகள் வழக்கில் உள்ளன. அவை எல்லாம் சமஸ்கிருதத்தை எப்பெயரால் அழைத்தன? 'வடமொழி' என்று ஒவ்வொன்றும் அதைக் கூறியிருக்கிறதா? இல்லை என்பர் மொழி ஆராய்ச்சியாளர். எனவே

தொல்காப்பியத்தில் வரும் 'வட மொழி' சமஸ்கிருதத்தைக் குறிக்காது என்றும், தமிழ்நாட்டு வட எல்லையில் வழங்கிய பழந் தெலுங்கையே அது குறிக்கும் என்றும் கொள்வதுவே சிறந்ததாகும்.

'சமஸ்கிருதம்' என்றால் 'செய்யப் பெற்றது' அல்லது 'சொல்லப் பெற்றது' என்று பொருள் உண்டெனக் காண்கிறோம். எங்கே செய்யப் பெற்றது? எவ்வாறு சொல்லப் பெற்றது? என்பன எண்ணற்குரிய. மத்திய ஆசியாவிலிருந்து மேற்கே சென்று ஐரோப்பிய நாட்டில் தங்கிப் பின் பலவாறு பிரிந்து நின்ற பண்டைய மரபினர் தத்தமக்கு வேண்டிய மொழிகளைச் செய்து ஆக்கிக் கொண்டமை போன்று, அதே மத்திய ஆசியாவிலிருந்து ஏறக்குறைய அதே காலத்தில் தெற்கு நோக்கி வந்தவராக வரலாற்றாளர் கூறுகின்ற இப் பழைய இனத்தவர் சிந்துநதி எல்லையில் வந்தபோது புதிதாக ஆக்கிக் கொண்ட மொழியே 'சமஸ்கிருதம்' என்ற செய்யப்பட்ட, சொல்லப்பட்ட மொழியாகக் கொள்வதில் தவறில்லை. அவரே பின், 'வடவாரியர்' எனக் குறிக்கப்பெறுவாராவார்கள்.

இனி, ஆரியம் என்ற சொல்லைக் காண்போம். சமஸ்கிருதத்திலேயே 'ஆரியம்' என்பது அம்மொழியைக் குறிக்கவில்லை என்பர் அம்மொழியில் புலமை உடைய அறிஞர்கள். தமிழிலும் ஆரியம் என்ற சொல். காலத்தால் பிந்தியே வழங்குகின்றது. வடநாட்டிலிருந்து வந்தவரை ஆரியர் என்றும், அவர் மொழியை ஆரியமொழி என்றும் பிற்காலத்தில் கொண்டனர். எனினும் தமிழில் 'ஆரியம்' என்ற சொல்லுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் உள்ளன. ஆரியன் என்ற சொல்லுக்குப் பெரியோன், ஐயன் அறிவுடையோன், ஆரிய வர்த்தவாசி, உபாத்தியாயன் எனப் பற்பல பொருள்கள் உள்ளன. ஆரியப்பாவை என்ற தமிழ்க்கூத்து நாட்டில் பண்டைநாளில் வழக்கத்தில் இருந்தது. ஆரியம் என்றால் கேழ்வரகு என்ற ஒரு பொருளும் உண்டு. ஆரியவாசியம் என்பது ஓமத்துக்குப் பெயர். இப்படி மனிதரில்

உயர்ந்தவரையும் உணவுப் பொருளில் உயர்ந்ததையும், மருந்துப் பொருளில் உயர்ந்ததையும் 'ஆரிய' என்ற சொல் லாலே வழங்கினர் எனக் காணலாம். ஆரியன் என்றால் மிலேச்சன் என்ற பொருளும் உண்டு என்றாலும் பெரும்பாலான பொருள்களை நோக்கினால் 'ஆரிய' என்ற சொல் உயர்வைக் குறிக்கவரும் சொல்லாகவே இருப்பதை அறிகின்றோம். தமிழ் இலக்கியத்தில் வடக்கே உள்ள ஆரியரைக் குறிக்க 'வடவாரியர்' என்ற சொல்லே எடுத்தாளல் காணப்படுகிறது. எனவே வடவாரியர்' என்ற சொல் வேண்டுமாயின் ஆரிய வர்த்தத்தில் சமஸ்கிருதம் பேசிய மக்களைக் குறிக்கும் எனக் கொள்ளலாம். மற்றும் தமிழ்நாட்டில் வடமொழி பேசி, வேதத்தை வாழ வைக்கவும், அதை நிந்திப்பவரைத் தாக்கிப் பேசவுமே பிறந்தவராகத் தம்மைக் கூறிக்கொள்ளும் திருஞானசம்பந்தரை வட நாட்டவர் ஆரியர் என்றே கொள்வதில்லை. சங்கராச்சாரியார் அவரைத் 'திராவிட சிசு' என்றே குறித்ததாகக் கூறுவர். எனவே வேதத்தைக் கொண்டுள்ள சமஸ்கிருதத்தை 'ஆரியமொழி'யென அவர் களே கொள்ளவில்லை எனத் தெரிகின்றது. திருநாவுக்கரசர் 'ஆரியமும் தீந்தமிழும் ஆயினான்' என்று கூறுவதும் சமஸ் கிருதத்தை அன்று எனலாம். ஆரியமொழி என்றால் கிரந்த மொழி என்ற பொருளும் உண்டு. சமஸ்கிருத நூல்களிலே எங்கும் அம்மொழியைக் குறிக்கும் பெயர் ஆரியம் என்று காட்டப் பெறவில்லை என்பது அம்மொழியுணர்ந்த புலவர் துணிவு. எனவே தமிழில் வழங்கும் 'ஆரியம்' என்ற சொல் சமஸ்கிருதமல்லாத வேறு ஒன்றைக் குறிப்பதாகவே கொள்ள வேண்டும்.

ஆரியம் என்ற சொல்லுக்கு அழகு என்ற பொருளும் உண்டு. எனவே அழகிய ஒன்றை ஆரியம் எனக் கொள்ளல் பொருந்தும். அரியவற்றையும் ஆரியமாகக் கண்டனர். மக்களுள் கிடைத்தற்கரியவராய் ஒழுக்க சீலராய் விரதம் முதலியன மேற்கண்டவராக உள்ளவராய் வாழ்ந்த அறிவர்

ஆரியராயினர். இவர் சமஸ்கிருதம் பயின்றவரின் வேறு என்றும், அவருள் அறிவர், தாபதர் போன்ற பிரிவுகள் உள வென்றும், இலக்கணத்தால் அறிகிறோம். எனவே அரிய என்ற சொல்லில் இருந்து ஆரியம் என்ற சொல் பிறந்து, பண்பால் உயர்ந்த குணத்தால் சிறந்த உயர்ந்த பெரியோரை யும், அழகையும், பிற உடலுக்கும் உயிருக்கும் நலம் தரும் பொருள்களையும் குறித்தது எனலாம். ஒருவேளை வடவாரியர் தென்னாட்டுக்கு வந்தபோது இரு சொற் களையும் இணைத்து ஒன்றாக்கி விட்டார்களோ என்று கொள்ள இடம் உண்டாகிறது. எனவே தமிழில் வழங்கும் ஆரியர், ஆரியம் என்ற சொற்கள் தமிழில் உள்ள 'அரிய' என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றி உயர்ந்தவரை யும் உயர்பொருளையும் குறிப்பன என்று கொள்ளல் வேண்டும். தமிழில் தொல்காப்பியர் காலமுதற் கொண்டே - ஏன் - அதற்குமுன் இருந்துங்கூட அறிவர், தாபதர் போன்ற நல் உணர்வாளர் இருந்தார்கள் என அறிகிறோம். அவர்கள் 'பொன்னே கொடுத்தும் புணர்வதற்கு அரியராய் இருந்ததோடு' அவ்வப்போது மக்களுக்கு அறம் உணர்த்தும் ஒழுக்க சீலராய் விளங்கினார்கள் எனவும் காண்கிறோம். அவர்கள் வாழ்வு சற்றுத் தனிப்பட்ட முறையில் அமைந்து, தனி இடத்திலிருந்து எண்ணும் பண்பாட்டில் தலைசிறந்த தாக விளங்கியிருக்கும் என்பதைத் தொல்காப்பியம் முதலிய வற்றால் அறிகின்றோம். எனவே தமிழ் நாட்டு அரியராகிய அறிவரே 'ஆரியர்' எனப்பட்டார் என்பது பொருந்தும். இந்த ஆரியர் மிகப் பழங்காலந்தொட்டு, வடநாட்டு ஆரியர் சிந்துவெளிக்கு வருவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே - தமிழ் நாட்டிலும் தமிழ வழங்கிய பரந்த இந்தியப் பெருநிலத்திலும் வாழ்ந்தவராதல் வேண்டும்.

இனி, பின் இந்தியநாட்டுக்கு வாழ்வு வேண்டி வந்தவர் களாகிய ஓர் இனத்தாரும் தம்மை ஆரியரென்று கூறிக் கொண்டிருப்பதில் தவறில்லை. அவர்கள் எதனால் அப் பெயரிட்டு அழைத்துக்கொண்டார்கள் என்பதை இன்று

நம்மால் காண இயலாது. எனினும் அவர்களைத் தமிழர்கள் பிரித்தே, 'வட வாரியர்' எனவே வழங்கி வந்தார்கள், என்பதை இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இன்று இந்தியர் என்று பெயரிலே இரு நாடுகளில் ஒன்றுக்கொன்று எவ்வகையிலும் தொடர்பில்லாத இரு நாடுகளில் — வாழ்பவரை உலகம் குறிப்பதைக் காண்கின்றோம். எனினும் அமெரிக்க நாட்டை ஒட்டிவாழ்பவர்களைச் 'செவ்விந்தியர்' எனப் பிரித்திருப்பதையும் காண்கிறோம். இது போன்றே தமிழ் நாட்டு அரியராக வாழ்ந்த ஆரியரும் வடவாரியரும் பெயரளவில் ஒன்றுபட்டாலும் பிற அனைத்திலும் வேறுபட்டவராவார்கள். அந்த வடவாரியர் மொழியை அவர்கள் வேண்டுமாயின் ஆரியம் எனக் கொள்ளலாம். எனினும் நான் மேலே காட்டியபடி அவர்களே தம் சமஸ்கிருதத்துக்கு ஆரிய மொழி என்று பெயரிட்டதாகக் காண முடியவில்லை. எனவே தமிழ் இலக்கண இலக்கியங் களில் வரும் வடமொழி, ஆரியம் என்பன இன்றைய 'சமஸ்கிருதத்'தினும் வேறுபட்டவை என்பதும், வடமொழி தமிழ்நாட்டு எல்லையில் வடக்கே—பக்கத்திலேயே வழங்கிய தாக இருக்கவேண்டும் என்பதும் ஆரியம் தமிழ்நாட்டிலேயே ஒழுக்க நெறியில் உயர்ந்த அரியர் வழங்கிய குழூக்குறி மொழியாகவோ அன்றி வேறு வகையாகவோ இருக்க வேண்டும் என்பதும், இம் மொழியையும் பின் வடக்கிலிருந்து வந்த சமஸ்கிருதத்தையும் 'ஆரிய மொழி' என்ற பெயரால் ஒற்றுமைப்படுத்தி இருக்கவேண்டும் என்பதும் விளங்கு கின்றன. தமிழ்நாட்டில் அழகின் அடியாகப் பிறந்த 'முருகு' என்னும் முருகனையும் புராணக் கடவுளாகிய கந்தனையும் ஒருவராக்கி வழிபடும் வரலாறு நாடறிந்ததே. இவற்றைப் பற்றியெல்லாம் நன்கு ஆராய்ந்து வரலாறு, மொழி, கலை ஆகியவைபற்றி ஆராயும் வல்லவர்கள் உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

# 6. அகத்தியர் யார்? எங்கே?

இமயமும் குமரியும் நெடுநாட்களுக்கு முன்பே இணைந்து வாழ்ந்தன என்பது வரலாறு உணர்த்தும் உண்மை. அந்த உண்மையின் அடிப்படையில் பிற்காலத்தில் வரலாற்றுக்கு மாறுபட்ட எத்தனையோ புனைந்துரைகளும், கதைகளும், பிறவும் உண்டாயின. ஒரு சில வரலாற்று எல்லையில் அமைந்து எண்ணக் கூடியனவாய் இருப்பினும், பல வெறுங்கற்பனைக் கதைகளாகவே அமைந்துவிடுகின்றன. அகத்தியரைப் பற்றி இன்று நாட்டில் பலகதைகள் வழங்குகின்றன. அவற்றுள் பெரும்பாலன கற்பனைகளாகவே உள்ளன என்பர் ஆராய்ச்சியாளர்.[1] தமிழ் நாட்டில் எத்தனையோ அகத்தியர் பேசப்பெறுகின்றனர். அகத்தியர் மருத்துவநூலும், அகத்தியர் பாட்டிசை நூலும், அகத்தியர் இலக்கணமும், அகத்தியர் பாராயண நூலும், பிறவும் நாட்டில் உலவுகின்றன. இந்த அகத்தியரெல்லாரும் எவ்வெக்காலத்தவர் என்றும், இவர்கள் எந்த வகையில் தமிழ் நாட்டுக்கு உரியவர்கள் என்பதும் எண்ண இயலாதன.

கந்தபுராண வரலாற்றின்படி அகத்தியர் இமயத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தவர் என்பர். வடமொழியில் உள்ள கந்தபுராணத்தில் அவரைப்பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. அவரைத் தமிழ் அறிந்த முனிவராகக் கந்தபுராணம் எங்கும் குறிக்கவில்லை. அவர் இறைவனை

1. Agasthia in Tamil Land, by K. N. Sivaraja Pillai

ஒத்தவர் எனினும், தமிழில் மொழிபெயர்த்த கச்சியப்பர் அந்த அகத்தியரைத் தமிழ் அகத்தியர் என்றே குறிக்கின்றார். 'மலயத்து வள்ளல்' என்றும்,[1] தமிழ் மாமுனி[2] என்றும் கந்தபுராணம் காட்டுகின்றது. எனவே, அப்படி அகத்தியர் சிவபெருமான் மணம் காணச் சென்றிருந்தாலும், அவர் தமிழ் நாட்டிலிருந்து சென்றார் எனக் கொள்ளல் வேண்டும். ஆனால், சில புராண வரலாறுகள் வடமொழி, தமிழ் இரண்டையும் சிவபெருமான் உலகுக்கு அருளினார் என்றும் வடமொழியைப் பாணினிக்கும், தமிழை அகத்தியருக்கும் அறிவுறுத்தினார் என்றும் காட்டுகின்றன. மொழியியல்பு அறிந்தாருக்கும், வரலாற்று அறிஞர்களுக்கும் இக்கருத்து முழுதும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அன்று என்பது நன்கு விளங்கும். புராணங்கள் பிந்திய காலத்தில் சமயமும் பற்றும் பின்னிப்பிணைந்த காலத்துப் புலவன் உள்ளத்தில் உதித்த கற்பனைகளே என்பதை இன்று சமயநெறி உணர்ந்த தக்கவர்களே ஏற்றுக்கொள்ளுகின்றார்கள்.

மற்றும் கந்தபுராணத்தில் காட்டப்படும் அகத்தியர், அப்புராணத்தை ஒட்டிக் காளிதாசர் எழுதிய குமார சம்பவத்தில் காட்டப்பெறவில்லை. சிவபெருமான் திருமணத்துக்கு எத்தனையோ கடவுளரும் முனிவரும் வந்தனர் எனக் காட்டும் ஆரியர் அகத்தியர் வந்ததாகக் குறிக்கவில்லை என்பதை வடமொழி வாயிலாகக் கற்ற அறிஞர்கள் நன்கு விளக்கிக் காட்டுகின்றார்கள். எனவே, அந்தப் புராண வரலாறே அகத்தியரைப்பற்றி மாறுபட்ட கருத்துக்களைத் தருகின்றது.

இனி அந்த வரலாற்றை அப்படியே ஏற்றுக்கொள்வோமானாலும், அவரை வரும் வழியில் விந்தியம் தடுத்ததென்றும் அவருக்கு வழி விடாது அது உயர்ந்தது என்றும் கூறுவதை நோக்கினால், மற்றோர் உண்மை புலப்படும்.

---

1. கந்தபுராணம், திருமணப்படலம், 50. 2. ஷ 54.

அகத்தியர் அப்படி வந்ததாகவே வைத்துக் கொண்டாலும், அது இராமாயணகாலத்துக்கு முற்பட்டதாகவே இருக்க முடியும். அக்காலத்தில் வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்குத் தம் கலாசாரக் கொள்கையைப் பரப்பப் பலர் வந்திருக்கலாம். அவர்களில் அகத்தியரும் ஒருவராய் இருந்திருக்கலாம் என்று கொள்ளுவதே பொருத்தமானதாகும். அப்படி வந்த அகத்தியருக்கு விந்தியம் வழி விடவில்லை என்று புராணக்காரர் கூறிய கதையால் அவரைத் தென்னாட்டுக் கலாசாரமும் பண்பாடும் விந்திய எல்லையிலேயே தடுத்து நிறுத்தின என்று கொள்வது பொருந்தும். விந்தியமலைச் சாரலை அடுத்த தண்டகவனத்தில் (தண்டகாரணியம்) அகத்திய முனிவர் தங்கியிருந்தார் என்றும், இராமன் சீதையுடனும் இலக்குவனுடனும் தெற்கு நோக்கி வரும்போது அங்கே அந்த அகத்தியர் ஆசிரமத்தில் தங்கியிருந்தான் என்றும் ஆரணிய காண்டம் நன்கு காட்டுகின்றது. எனவே, வடநாட்டிலிருந்து வந்த அகத்தியர் அங்கே தங்கித் தம் காலத்தைக் கழித்தவராக வேண்டும். அவர் இராமனைக் கண்டு, அவனோடு கலந்து மகிழ்ந்ததோடு, அந்த இராம இலக்குமணர்களை அங்கே தம்முடன் தங்கியிருக்க வேண்டினார். எனினும், இராமன் அரக்கர்களைக் கொல்ல வேண்டியுள்ளமையின், மேலும் தெற்கே செல்ல வேண்டுவதன் தேவையைக் கூறிப் புறப்பட்டான்.[1] இந்தப் படலத்தில் அகத்தியரின் பல சிறப்புக்களையும் குறிப்பிடுகிற கம்பர், 'நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்' எனவும் குறிக்கின்றனர். அவர் காலத்திலேயே அங்குள்ள அகத்தியர் தமிழ் அகத்தியர் என்ற எண்ணம் உண்டாகியிருக்க வேண்டும். என்றாலும், அவரே அடுத்துச் சுந்தர காண்டத்தில் பொதியமலையையும் அகத்தியரையும் காட்டுகின்றார்.

1. கம்பராமாயணம், அகத்தியப்படலம், 53. 2. ஷெ 54

'தென்தமிழ்நாட்டு அகன்பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்,
என்றும்அவன் உறைவிடமாம் ஆதலினால்
அம்மலையை இறைஞ்சி ஏகி"

(நாடவிட்ட படலம், 31)

என்று சுக்கிரீவன் அனுமன் முதலிய வானர வீரர்களுக்கு வழி கூறி அனுப்புகிறான். எனவே, அங்கே ஆரணிய காண்டத்தில் கண்ட அகத்தியர் வேறு என்பதும், பொதியமலை அகத்தியர் வேறு என்பதும் கொள்ளவேண்டியுள்ளன. கம்பர் தாம் முன் கூறியதைப் பின்னும் வலியுறுத்தும் கொள்கை உடையவர் என்பதை இராமாயணம் பல இடங்களில் எடுத்துக்காட்டும். இங்கு அகத்தியரைக் கூற வருமுன் சுக்கிரீவன் வாக்கிலேயே,

'பண்டுஅகத்தியன் வைகிய தாப்பகர்
தண்டகம்'

(நாடவிட்ட படலம், 17)

என முன் அகத்தியர் வைகிய இடம் எனக் காட்டுகின்றார். அவர் பண்டு அங்கே தங்கிய அகத்தியரே பிறகு பொதியிலில் சேர்ந்திருப்பார் என எண்ணி இருப்பதில் தவறில்லை. ஆயினும், அவர் தண்டகாரணியத்தில் சில நாட்களே தங்கியிருப்பவராயின், அங்கே தம்முடன் இராம இலக்குவர்களைத் தங்கியிருக்க வேண்டினர் என்று கொள்வது எவ்வாறு பொருந்தும்?[1] திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் தம் தொல்காப்பிய எழுத்ததிகார முன்னுரையில் அகத்தியர் இருவர் இருந்தனர் எனவும், அவர் இருவரும் பல்வேறு வகையில் வேறுபட்டு வாழ்ந்தவராவர் எனவும் குறிக்கின்றார்.[2] என்றாலும், இதில் உள்ள தவறு எண்ணத் தக்க ஒன்று. இருவரையும் ஒருவரெனக் கருதிய கம்பர், இடர்ப்பட்டு

1. அகத்தியப் படலம், 54.
2. தொல். எழுத். நச்சி. முன்னுரை பக்கம், X-XVIII (கழகப் பதிப்பு.)

இவ்வாறு கூறினாலும், வான்மீகியார் இவற்றையெல்லாம் சொல்லவில்லை. மற்றொன்றும் நோக்கற்பாலது: மேலே நாம் காட்டியபடி, இராம இலக்குமணர் சீதையுடன் அகத்தியரிடம் தங்கிப் பிறகு தெற்கு நோக்கி நெடுந் தொலைவு வந்து பல அசுரரைக் கொன்று, பின்பு சீதையை இழந்து, அவளைத் தேடிக்கொண்டு தெற்கில் நெடுந் தொலைவு வந்த பிறகு கிட்கிந்தையில் அனுமன் முதலிய வர்களைக் காண்கின்றனர். அங்கிருந்து தெற்கே அனுப்பப் பெறும் அனுமன் முதலியவர்களுக்கு மறுபடியும் வடக்கே விட்டு வந்த அகத்தியர் இருந்த இடத்தைப்பற்றிச் சொல்லுவது பொருத்தமானதாகுமா? எனவே, உண்மையில் அகத்தியர் இருவர் இருந்திருக்க வேண்டும் என்பதும், அவர் இருவரையும் கம்பர் ஒருவரெனக் கருதியதால் வந்த தடுமாற்றமே இது என்பதும் நன்கு விளங்கும். அகத்தியர் இருவராய் இருக்கலாமோ என ஸ்மித்து என்பாரும் ஐயுறுகிறார்.[1]

இனி, இக்காலத்தில் இவ்வாறு வரலாற்றுக்கு ஒவ்வாத கதைகளும் கருத்துக்களும் உள்ளமையின், அகத்தியர் கதையே வெறுங் கற்பனை என்றும், அது வட நாட்டவர் ஆதிக்கத்தை அந்த வரலாற்றுக்கு முற்பட்ட நாளிலே தென்னாட்டின்மேல் செலுத்த ஆண்ட வெறுங் கதையே என்றும் கூறுவர் அறிஞர்.[2] சற்று ஆராய்ந்து பார்ப்பின், இப்படி முடிவு செய்வதிலும் வடநாட்டு அகத்தியரின் வேறாகத் தமிழ்நாட்டின் பொதிய மலையில் வேறு ஓர் அகத்தியர் இருந்தார் எனவும், அவருக்கும் வடமொழிக்கும் தொடர்பு ஒன்றும் இருந்ததில்லை எனவும், பெயர் ஒற்றுமை யால் இடைக்காலத்தில் இருவரையும் ஒருவரெனக்

1. The oxford History of India, by V.A. Smith. p. 42 (1958 Edition)
2. Agasthia In Tamil Land, p. 63.

கருதியமையே இத்தகைய கற்பனைக் கதைகளுக்கும் பிறவற்றிற்கும் இடம் கொடுத்ததெனவும், உண்மையை எண்ணின், இருவேறு பகுதிகளில்—வடக்கிலும் தெற்கிலும் —இருவேறு அகத்தியர் வாழ்ந்தனர் எனக் கொள்ளலாம் எனவும், அவர்தம் பெயர் ஒற்றுமையைத் தவிர வேறு எதிலும் அவர்க்குள் தொடர்போ வேறு ஒற்றுமையோ இருந்ததில்லை எனவும் கொள்ளுதல் பொருத்தமாகும் என எண்ணுகின்றேன். எனினும், இக்கருத்து அறிஞர்தம் ஆராய்ச்சிக்கு உரியதேயாகும்.

•

தமிழ் இலக்கியங்களில் வரும் அகத்தியரைப் பற்றி இனி எண்ணிப் பார்க்கலாம்: பல இலக்கியங்கள் அகத்தியர் பொதிய மலையில் தங்கியவர் என்றும். அவர் இன்னும் அங்கேயே இருக்கிறார் என்றும் கூறுகின்றன. அக் கூற்றுக்கள் எவ்வளவு உண்மை என்பதை நான் இங்கே காட்டத் தேவை இல்லை. பொதியமலை தமிழ்நாட்டுத் தென்கோடிக்கருகில் இனிய தென்றலை வாரி வீசிக் கொண்டிருக்கின்றது. அதன் இனிமை மெள்ளத் தவழ்ந்து வடக்கே சென்றது. மதுரைக்கு அண்மையில் அத் தென்றல் வீசிய சிறப்பைப் 'பொதியத் தென்றல் போந்தது காணீர்' என இளங்கோவடிகள் உணர்ந்து போற்றுகிறார். தென்றல் இனிமை தருவது; தமிழும் இனிமை தருவது இரண்டையும் பிணைத்துத் தென்றலும் தமிழும் பொதியத்திலிருந்து புறப்பட்டன எனக் கூறினார்களோ எனக் கருத வேண்டியுள்ளது. அன்றியும், தமிழகத்துக்குத் தெற்கே இருந்த பரப்பாகிய குமரிக் கண்டத்தில் (Lemuria) தமிழ் மொழி தோன்றியதென்ற ஒரு கொள்கை இருப்பதாலும், அப்பகுதி அழிய, மெள்ள மெள்ள வடக்கே வளர்ந்து அம்மொழி வளம் பெற்றதாய் இருப்ப தாலும், தெற்கே இன்று உயர்ந்துள்ள குன்றிலிருந்து அது தோன்றி வளர்ந்தது என்று கொண்டார்களோ என நினைக்க வேண்டியுள்ளது. பொதிய மலையில் அகத்தியர் வாழ்ந்தார் எனக் கொண்டு அவர் தமிழை வளர்த்தார் எனக் கொள்வது தவறு அன்று என்றாலும், அவரைப் பற்றித்

தமிழ்நாட்டில் வழங்கும் கதைகள் வேடிக்கையாய் அமைந்துள்ளன.

முதற்சங்க நூல் அகத்தியம் எனக் குறிக்கின்றது இறையனார் களவியல் உரை. அச் சங்கத்தே 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த குமரவேளும்' ஒருங்கிருந்து தமிழ் ஆராய்ந்தனர் என்ப. எனவே, அந்த வரலாற்றில் அகத்தியர் கடவுளர்களோடு சார்த்திப் பேசப் பெறுகின்றார். கடவுளர் தமிழ்நாட்டில் வந்து தங்கித் தமிழ் வளர்த்தனர் என்று பேசுவன யாவும் புராண மரபாய் அமைவனவேயன்றி, வரலாற்றுக்கோ ஆராய்ச்சிக்கோ ஏற்ற மரபாய் அமையமாட்டா. அப்படியே அவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தார்கள் எனக் கொள்ளினும், அது நம் நினைவுக்கு எட்டாத நெடுங்காலத்துக்கு முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சியாகக் கொள்ளத்தக்க ஒன்றாகும். மற்றும், தொல்காப்பியர் தம் ஆசிரியராய் வாழ்ந்த அகத்தியர் அக் காலத்திலேயே இருந்து, அன்றே—பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே—தமிழ் வளம் பெற்றதாய் இருந்திருக்க வேண்டும் எனக் கொள்ளல் வேண்டும். இது வரலாற்றுக்குப் பொருந்தாத ஒன்று. எனவே, பொதிய மலையில் அகத்தியர் வாழ்ந்தார் எனக் கொள்ளினும், அவரைக் கடவுளர்களோடு சார்த்திப் பேசுதல் முறையன்று எனக் கூறி மேலே செல்லலாம்.[1]

இடைச்சங்க காலத்திலும் அகத்தியமும் தொல்காப்பியமும் இருந்தன என்பதைக் காண்கிறோம்; அத் தொல்காப்பியர்தம் ஆசிரியராகவே அகத்தியர் அமர்ந்து தமிழ் வளர்த்திருக்கின்றார். ஆயினும், தொல்காப்பியத்தின் ஒரு சூத்திரமும் கெடாத வகையில் நாம் அதை முழு நூலாகவே பெறுகின்றபோது அகத்தியத்தின் இரண்டொரு சூத்திரங்களையே நம்மால் பெற இயல்கின்றது.

1. Agasthia in Tamil Land

இதற்குக் காரணம் என்ன? அகத்தியம் மட்டும் எவ்வாறு அழிவு பெற்றது? சிவராசப் பிள்ளை அவர்கள் தம் நூலில் அவ்வாறு ஒரு நூல் இருந்திருக்க இடமே இல்லை எனக் குறிப்பிடுகின்றார். அவர் கூற்றும் ஓரளவு உண்மையே என எண்ண இடமிருக்கின்றது. அந்நூல்—தொல்காப்பியத் தின் முதல் நூல்—அத்துணைச் சிறந்த ஒன்றாய் இருந் திருப்பின், அது காலங் கடந்து வாழ வேண்டுமல்லவா? இறையருளால் மொழியறிந்து, இலக்கண வரம்பறிந்து, அவ் விலக்கணத்தை எழுதிய அகத்தியருக்கே, அந்நூல் வழக் கிழந்து அழிந்தது என்பது இழிவைத் தேடித் தருவதாகும். எனவே, அவ்வாறு அழிந்தது எனக் கொள்வதினும் இல்லை என்று கொள்வதே பொருந்தும் எனக் கருதினார்கள் போலும்!

தொல்காப்பியம் தோன்றிய பின் அகத்தியம் வழக் கழிந்தது எனக் கூறினாலும், அகத்தியர் பெருமை குறைக்கப் பட்டே தீரும். தம் மாணவர் நூலின் முன் தம் நூல் வாழ்விழந்துவிட்டதென அகத்தியர் அறியின் வருந்துவா ரன்றோ? மேலும், சிறந்த நூல் இயல்பாக நெடுங்காலம்—காலம் கடந்து வாழும் என்பது முறை. தொல்காப்பியம் அவ்வாறு வாழ, அகத்தியம் அழிந்தமையே அதன் பெருமை இன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அகத்தியச் சூத்திரம் எனக் குறிக்கும் இரண்டொரு சூத்திரங்களும் சிறந்தவை எனக் கொள்ளக்கூடியன அல்ல. எனவே, இருக்கும் ஏதோ இரண்டொன்றைக் கண்டு அவற்றின்வழி அகத்தியர் பெரு நூல் செய்தார் எனவும் அது மறைந்தது எனவும் கொள்ளுவ தினும் அந்நூல் எழவில்லை என்றே கொள்ளல் பொருத்த மானதாகும்.

இனித் தொல்காப்பியனாருக்கும் அகத்தியனாருக்கும் இடையில் உள்ள உறவு பற்றிய ஒரு கதை நகைப்பிற்குரிய தாகும். அகத்தியனார் தம் மாணாக்கராகிய தொல் காப்பியரைத் தம் மனைவியாரை அழைத்துவர அனுப்பிய

தாகவும், அழைத்து வரும் வழியில் வெள்ளம் காரணமாகக் கோலொன்றின் முனையை அவரைப் பற்றிக்கொள்ளச் செய்து தொல்காப்பியர் அவரை அழைத்து வந்ததாகவும், அதனால் அகத்தியர் அவரைச் சபித்ததாகவும், அவரும் பதிலுக்கு ஆசிரியருக்குச் சாபம் கொடுத்ததாகவும் கதை அமைந்துள்ளது. இக்கதை நல்லாசிரியர் மாணவருக்கு இடையில் இருக்கவேண்டிய அன்பையும் பண்பையும் அகற்றுகின்றதன்றோ? அகத்தியனார் தம் மாணவரைப் பற்றித் தகாத வகையில் எண்ணியிருந்திருப்பாராயின், பின்பு அவர்கள் வழி இலக்கணம் எப்படிப் பிறந்து வாழ்ந் திருக்கக் கூடும்? இக்கதை போன்றவை எல்லாம் தேவை யற்றன என ஒதுக்கப் படுதல் வேண்டும்.

மற்றும், தொல்காப்பியத்திலோ, அதன் பாயிரத் திலோ, அகத்தியனாரைப் பற்றிய குறிப்பு ஒன்றும் நாம் பெறவில்லை. பாயிரத்திலே அரில் தபக் கேட்ட அதங் கோட்டு ஆசான் குறிக்கப்பெறும்போது, அகத்தியர் அத் தொல்காப்பியரின் ஆசிரியராய் இருந்திருப்பாராயின், எப்படி விடப்பட்டிருப்பார்? தொல்காப்பியரை 'ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியன்' எனப் பாயிரம் குறிக்கின்றதே அன்றி, 'அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன்' எனக் குறிக்கவில்லை. ஐந்திறமா, ஐந்திரமா என்னும் ஐயமும் நீங்குதல் வேண்டும். அது பற்றிப் பின்பு ஓரிடத்தில் கூடுமாயின் காணலாம். எனவே, அகத்தியருக்கும் தொல் காப்பியருக்கும் எவ்வாறு தொடர்பு கற்பித்தார்கள் என்பது விளங்காத புதிராய் உள்ளது.

அகத்தியனாரைப் பற்றித் தமிழ் இலக்கியங்கள் வேறொரு கதையையும் சொல்லுகின்றன. தமிழ்நாட்டு வற்றா வளஞ்சுரக்கும் காவிரியே அவர் கமண்டலத்திலிருந்து புறப்பட்டதாம்.

'அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை,'

என்று மணிமேகலைப் பதிகம் (அடி, 11, 12) காட்டுகின்றது. அகத்தியர் அங்கு மைசூர் நாட்டு எல்லையில் குடகு மலையில் இருந்ததாகவும், அதுபோது சீகாழியில் இந்திரன் வைத்துக் காத்த பூந்தோட்டம் நீரின்றி வாடியதாகவும், விநாயகர் காக்கை வடிவம் கொண்டு சென்று அந்த அகத்தியர் கமண்டல நீரைக் கவிழ்த்ததாகவும், அதுவே பின்னர்க் காவிரியாய்ப் பெருகிப் பின்பு கொள்ளிடமாகவும் காவிரியாகவும் சீகாழிக்கு இரு மருங்கும் ஓடி அப் பூந்தோட்டத்தைச் செழிக்கச் செய்ததாகவும் கதை எழுதியிருக்கிறார்கள். இதைப் பின்னால் வந்த புலவர் ஒருவர் பாட்டாகப் பாடி விநாயகர் வணக்கமாக அமைத்துள்ளார்.

'சூர்கு லாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினோன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளும் தலைக்கணி யாக்குவாம்,'[1]

எனப் பாடுகின்றார். இதில் மற்றொரு கதையும் அடங்கியுள்ளது. அகத்தியர் கடலை உண்டவர் என்ற கதையே அது இவ்வாறாய கதைகள் கேட்பதற்கு வேடிக்கையாய் அமையினும், வரலாற்றுக்கு ஒவ்வாதனவாகவே உள்ளன. எனவே, இத்தகைய புராண மரபுக் கதைகளோடு பொருந்திய ஒரு முனிவர் அகத்தியர் என்ற பெயரோடு வாழ்ந்தார் எனக் கொள்வதினும், அகத்தியர் என்ற தமிழ் அறிஞர் வாழ்ந்தார் எனவும், அவர் பொதிகையில் சில காலம் தங்கியிருந்தார் எனவும், அவர் வாழ்ந்த காலத்தில் அவர் பெருமதிப்புப் பெற்று விளங்கினார் எனவும் கொள்ளுதல் பொருத்த முடையதாகும் என நினைக்கின்றேன்.

எனவே, தமிழ் நாட்டில் பழங்காலத்திலே ஓர் அகத்தியர் வாழ்ந்தாரா என்பது ஐயத்திற்குரியதாய்

1. கந்தபுராணம், காப்புச் செய்யுள்.

உள்ளது என்பதும், அப்படி வாழ்ந்திருந்தாலும், அவர் தொல்காப்பியர்தம் ஆசிரியராய் இருந்திருத்தலியலாது என்பதும், அவரும் வடக்கிருந்து வந்த அகத்தியரும் ஒருவரே அல்லர் என்பதும், அவர் பொதியமலையில் தங்கித் தமிழ் பயின்று அதை வளர்த்து நிற்க, மற்றவர் வடக்கிருந்து வந்தவர் விந்திய மலைச் சாரலிலேயே தங்கியவராதல் வேண்டும் என்பதும், இருவரையும் ஒருவராகக் கருதி, அந்த வழியில் ஆராய்ச்சி செய்வது பொருத்தமற்றதென்பதும், அகத்தியம் என்ற இலக்கணம் சிறந்ததாய் இருந்திருப்பின், அது தொல்காப்பியத்தை ஒட்டி வாழ்ந்திருக்கும் என்பதும், இருந்ததாகக் கொள்ள நினைத்தாலும் அதன் காலம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் செல்வதால் ஆராய்ச்சி பொருந்தாது என்பதும் அறிய வேண்டுவனவாகும். பொதிய மலையில் தமிழ் அறிந்த நல்ல பண்பாடுடைய ஒரு புலவர் வாழ, அதே பெயரோடு வடக்கே இமயத்திருந்து வந்து விந்திய மலையில் மற்றொரு புலவர் வாழ்ந்தார் என்று கொள்ளுவதே அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்துவதாகும்.

'தென்தமிழ்நாட்டு அகன்பொதியில் திருமுனிவன்—என்றும் அவன் உறைவிடம்' என்று கம்பன் காட்டுவது போன்று தமிழ் அகத்தயன் என்றும் பொதியில் வாழ்ந்தான் என்றும் வடநாட்டிலிருந்து வந்த அகஸ்தியன் விந்திய மலைச்சாரலில் தங்கினான் என்றும் ஏற்றுக் கொள்ளல் நலம்.

# 7. தொல்காப்பியத்துக்கு முன்னும் பின்னும்

தமிழிலே காலத்தால் முந்திய நூல் என்று கொள்ளப் படுவது தொல்காப்பியமேயாகும். அதற்கு முன்பே பல இலக்கியங்களும் சில இலக்கணங்களும் இருந்தன என்பது உண்மையேயாயினும், அவற்றுள் ஒன்றேனும் இன்று நாம் பெற இயலவில்லை. தொல்காப்பியர் பல முடிபுகளைக் கூறும்போது 'என்ப,' 'என்மனார் புலவர்' என்னும் சொல்லை யும் சொற்றொடரையும் பயன்படுத்துவதனாலேயே அவருக்கு முன்னரே இலக்கணப் புலவர் பலர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது நன்கு தெளிவாகின்றது. இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் மரபாதலின், இந்தப் பேரிலக்கண நூலுக்கு முன் பல இலக்கிய நூல்கள் இருந் திருக்கவேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே, தொல்காப்பியர் காலத்துக்கு முன் தமிழ் வளம் பெற்ற ஒரு மொழியாய் இருந்தது என்பது தெளிவு.

இத் தொல்காப்பியத்தின் காலம் வரலாற்றுக்கு முற் பட்ட காலம் என்பது ஆராய்ச்சியாளர் கண்ட முடிவு. இந்தியநாட்டு வரலாறு சுமார் 2500 ஆண்டுகள் அளவிலே அடங்குவதை ஆராய்ச்சியாளர் அறிவர். அதற்கு முற்பட்ட காலமெல்லாம் வரலாற்று எல்லைக்கு அப்பாற்பட்டதே யாம். தொல்காப்பியர் காலத்தை இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னது என்று கூறுவர் வரலாற்று ஆய்வாளர். தமிழ் இலக்கியங்கள் அக்காலத்தை 'இடைச்

சங்க காலம்' எனக் கூறும். இறையனார் களவியல் உரை தொல்காப்பியம் இடைச்சங்க காலத்தில் எழுந்த நூல் என்றும், அவ்விடைச் சங்கம் கபாடபுரத்தில் இருந்த தென்றும் குறிக்கின்றது. எனவே இடைச்சங்க காலத் துக்கும் கடைச்சங்க காலத்துக்கும் இடையில் ஓர் ஊழி தோன்றியிருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில் வரும்,

' அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கை இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!'

என்னும் அடிகளின் வழி ஓர் ஊழி உண்டாயதென்றும் அதற்கு முன்னரே தொல்காப்பியர் தம் நூலை இடைச் சங்கத்தில் இயற்றினர் என்றும் கூறுவர். ஊழிக்கு முன் இருந்த நிலையைப்பற்றியும் அக்கால நாட்டு நிலை பற்றியும் தொல்காப்பிய எழுத்ததிகார முன்னுரையில் (கழகப் பதிப்பு) திரு. கா. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் விளக்கியுள்ளார்கள். இக் காலத்துக் குமரி முனைக்குத் தெற்கே பரந்த நிலப்பரப்பு இருந்ததென்பதை இன்றும் நூல் ஆராய்ச்சியாளர் சிலரும், தொல்பொருள் ஆராய்ச்சி யாளர் சிலரும் கண்டுள்ளனர். 'இழந்த இலெமூரியாக் கண்டம்'[1] என்று ஆங்கிலத்தில் ஆழ்கடலின் கீழ்ச்சென்ற அந்த நாட்டைப் பற்றி ஒரு நூல் எழுதப்பட்டுள்ளது. மற்றும் தமிழ்நாட்டுப் பழங்கால இலக்கியங்களிலும் இவை பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. 'பஃறுளியாற்று மணலினும் பல' நாள் வாழ வேண்டுமென மன்னரை வாழ்த்திய அடிகள், புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.[2] சிவதருமோத்திரம் என்ற சைவ நூல் பொதியிலுக்குத்

1. Lost Lemuria, Scott Elliot. 2. புறம். 9.

தென்பால் மகேந்திரமலை எனப் பெயரிய மலைத்தொடர் இருந்ததெனவும், அதன் அடியில் பொன் மயமான இலங்கை இருந்ததெனவும் கூறுகின்றது. சிலப்பதிகார அடிகளுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், பஃறுளி, குமரி என்ற இரண்டு ஆறுகளுக்கு நடுவே நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன என்பர். அவற்றையே இறையனார் களவியல் உரை குறித்திருக்கலாம். எனவே, இவற்றின் எடுத்துக் காட்டுக்களால் இக்காலத்துக் குமரிமுனைக்குத் தெற்கே ஒரு பெரிய நிலப் பரப்பு இருந்தது என்பது உறுதி. இந்த நிலப் பரப்பிலேயே கபாடபுரம் இருந்து அழிவு பெற்றிருக்கலாம். அது காலைத் தொல்காப்பியத்தோடு, சில உரைகளில் காணப் பெறும் ஒரு சில இலக்கிய, இலக்கண, இசை நூல் களும் பிழைத்திருக்கலாம். காலவெள்ளத்தால் அனைத்தும் கெட, தொல்காப்பியம் இன்றளவும் வழ்கின்றது எனக் கொள்ளலாம்.

தொல்காப்பியர் காலம் 3000 ஆண்டுகளுக்கு முன்னது என்றும், கடைச் சங்ககாலம் கிறிஸ்து பிறந்த பொழுது என்றும் கொண்டால், அந்த ஆயிரம் ஆண்டுகள் எல்லையில் ஒரு பெரிய ஊழி நடந்திருக்குமா என்பது ஆராய்தற்குரிய ஒன்று. நிலவரலாற்று ஆராய்ச்சியாளர், கடைசியாக நடந்த பேரூழி சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருக்க வேண்டும் எனக் கணக்கிடுவர். எனவே, தொல்காப்பியர் காலத்துக்கும் கடைச்சங்க காலத்துக்கும் இடையில் அத்துணை பேரூழி நடைபெற்றது எனக் கொள்ள முடியாது. எனினும், மேலே காணும் பல்வேறு சான்று களினால் ஒரு சில நிலப்பகுதிகளாவது அந்த ஆயிரமாண்டு எல்லையில் மறைந்திருக்கலாம் என்றும் எண்ண இடமுண்டு அல்லவா?

ஊழி தோன்றியிருப்பினும், அன்றித் தோன்றாதிருப் பினும், அதுபற்றிய ஆரய்ச்சி இங்கு நமக்கு வேண்டா. கடைச்சங்க காலத்துக்கு நெடுநாட்களுக்கு முன்பே

இருந்தது தொல்காப்பியம் என்பதும், அதன் கால எல்லை இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதுமே இங்கு நாம் கொள்ள வேண்டுவன. அதன் தோற்றம் குமரிக்குத் தெற்கே அழிந்த நிலப்பரப்பில் இருந்திருக்கலாம் எனக்கொள்வதும் தவறு அன்று.

இனி இத்தொல்காப்பியத்தைப் பற்றி இந்த நூற்றாண்டில் அறிஞர் சிலர் ஆராய்ந்துள்ளனர். சிலர் ஆரியர் தமிழ் நாட்டுக்கு வருதற்கு முன்பே தொல்காப்பியம் தோன்றியது என்பர். சிலர், அதில் ஆரியர் பற்றியும் அவர்தம் வாழ்வு பற்றியும் குறிப்புக்கள் வருவதால், அது ஆரியர் வருகைக்கு நெடுங்காலம் பிந்தியே தோன்றியிருக்க வேண்டுமென்பர். முன்னவர் அத்தகைய சூத்திரங்களெல்லாம் இடைச் செருகல் எனத் தள்ளுவர். எனினும், சற்றுச் சிந்தித்து நோக்கின், இருவர் கொள்கைகளிலும் தவறு உள்ளமை காணலாம். ஆரியர் கொள்கைகள் எனப் பின்னர்க் கொள்ளும் அத்தனையும் அவர்களையும் அவர்களுடைய கொள்கைகளையும் பற்றியன அல்ல. அப்படியே ஆரியர் பற்றிய எல்லாச் சூத்திரங்களையும் இடைச்செருகல் எனத் தள்ளவும் உண்மையில் ஆராய்ச்சி இடம் தராது. நமக்குத் தேவையற்ற—நம் ஆராய்ச்சிக்கு மாறுபட்ட—கருத்துக்களையெல்லாம் இடைச்செருகல் என்று தள்ளும் ஒரு முறை ஏற்பட்டுவிடுமாயின், எந்த இலக்கியத்தையும் எந்தக் காலத்துக்கும் கொண்டு வரலாம். இந்திய நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் பொதுவாக அக்காலத்தில் பரவி இருந்த கொள்கைகளையும் பிறவற்றையும் ஒரு சாராருக்கு உரியனவாக்கி, அவர்கள் வந்த பிறகே இவை இங்கு இடம் பெற்றன எனக் கொள்ளுவதும் பொருந்தாததாகும். எனவே, காய்தல் உவத்தல் அகற்றி, நடுவுநிலை நின்று நோக்கின், உண்மை ஓரளவு வெளிப்பட்டே தீரும்.

ஆரியர்கள் இந்தியாவில் கால் வைத்த காலம் கி. மு. 1500 என்பதை அனைவரும் ஒரு சேர ஏற்றுக்

கொள்ளுகின்றனர்.[1] அக்காலத்தில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும்—வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும்—அந்த ஆரியரினும் பல வகையினும் வேறுபட்ட ஓரினத்தார்—திராவிடர்—சிறக்க வாழ்ந்திருந்தனர்.[2] அதை வலியுறுத்தும் வகையில் இன்றும் மேற்கே பலுசிஸ்தானத்திலும், கிழக்கே அசாம் மலைப் பகுதிகளிலும், மத்திய இந்தியாவில் சாத்பூரா மலைப் பகுதிகளிலும் திராவிட மொழிகளைப் பேசும் மக்களும், திருந்தாத திராவிட மொழிகளும் நிகழ்ந்து வருகின்றன என்பதைக் கால்டுவெல் அறிஞரும் பிறரும் உலகுக்கு நன்றாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். எனவே, ஆரியர் இந்தியாவுக்கு வந்த காலத்தே இந்நிலப்பகுதி முழுதும் பரவியிருந்த மக்கள் இன்று தென்னாட்டில் வாழும் திராவிட இன மக்களின் முன்னோரே என்பது தேற்றம். 'வேதகால இந்தியா' என்னும் நூலின் எட்டாவது கட்டுரையில் திரு S.K. சட்டர்ஜி, M.A.,D.Litt என்பார், அந்தக் காலத்தில் ஆரிய மொழியால் திராவிட மொழி அமைப்புக்களும் சொற்றொடர்களும் கலந்து அந்தப் புது மொழியை வளர்க்க உதவின என்பதைத் திட்டமாகப் பல எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குகின்றார்.[3] பூசை என்ற சொல்லை அவர் திராவிட மொழிச் சொல் என்றே நிறுவுகின்றார். பூக் கொண்டு செய்யப்படுவது பூசையாகும். (பூ+செய்= பூசெய்: பூசை) அப்படியே ஆண்+மந்தி என்ற இரு

1. The Vedic Age, Vol. I. p. 154.
2. But there is evidence, both indirect and direct, that in Central India, in North India, in Western India and possibly also in Eastern India, Dravidian was one time fairly widespread (The Vedic India, Edited by R.G. Majumdar, Vol. I p. 55).
3. The Vedic India, pp, 154-158,
4. Ibid. p. 160

சொற்களே அனுமன் ஆயிற்று என்றும் வேதத்தில் அனுமனுக்கு அப்பெயரே இல்லை என்றும், 'விருஷகபி' என்ற பெயரே ஆளப்பெறுகின்றது என்றும் காட்டுகின்றார்.[1] இருக்கு வேதத்தில் (X: 86) இந்த ஆண்மந்தி வழிபாடு ஆரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற கருத்தை அவர் ஆதாரமாகக் காட்டுகின்றார்.[2] இப்படியே திரு. P.T. சீனிவாச ஐயங்கார் அவர்கள், 'இந்தியாவின் கற்காலம்' என்ற தமது ஆங்கில நூலிலே சிவன், கண்ணன், திருமால், முருகன் ஆகியோர் திராவிடர்களே என்றும், இருக்கு வேதத்தில் கண்ணன், சிவன் இருவரும் ஆரியருக்கு மாறுபட்ட காரணத்தாலே ஆரியர்கள் அவர்களோடு போரிட்டார்கள் என்றும் காட்டுவர். அதற்கென அவர் இருக்குவேத மேற்கோள்களைக் குறித்துள்ளார்.[3] சிவனைப்பற்றி முதன்முதல் அதர்வண வேதத்திலேதான் உருத்திரனாக வணங்கும் முறையில் குறிக்கப் பெற்றுள்ளதாம். இருக்கு வேதத்தில் சிவன் சில தலைவர்களுடன் சேர்த்து எண்ணப்பட்டு, இந்திரனுக்கு எதிரியாகக் காட்டப்படுகின்றான். இருக்கு வேதம் VII : 21-5, X : 9-8, VII : 18-7, X : 27-9, X : 27.9 ஆகிய பகுதிகளில் இந்தக் குறிப்புக்கள் உள்ளன என்பர்.[4] சிவனைத் தவிரக் கண்ணன் அல்லது திருமால் எனப்படும் கிருஷ்ணனும், ஆரியருக்கும் அவர் தலைவனாகிய இந்திரனுக்கும் மாறுபட்டவன் என்பதை இருக்குவேதத்தின்[4] VIII : 85 : 13

1. The Vedic India p. 169
2. ibid. p. 164.
3. The Stone Age in India, p. 49.
4. Together came the Pakthas, the Bhatanns,
   the Alinas, the Sivas the Vistranins
   Yet to the Tritsus came the Arya's comrade
   through love of spoil and heroes' war to lead them.
   R. V. VII : 187.

The Pakthas and rest mentioned in the first two lines of the stanza appear to have been non-aryan tribes opposed to the Tritsus.

to 15, I : 11 : 20-7, IV : 16:13, VIII : 85:16, II : 42 ஆகிய பகுதிகள் விளக்குகின்றன என்பதை அவரே எடுத்துக்காட்டு கின்றார். அதில் திருமால் கறுப்பனாய், அரக்கனாய், விரும்பத் தகாதவனாய், ஆரியருக்கு மாறுபட்டவனாய்க் (The Dusky brood- the dark aborignes who opposed the Aryan Black Rakshasa, one among seven enemies) காட்டப்படுகிறான். இவையெல்லாம் ஆரியர் வடவிந்தியா வில் கால் வைத்து, இருக்குவேதம் எழுதப்பட்ட காலத்தன வாகும். யசுர்வேத தாருண முதற்பிரசினத்துள்ள ஐந்தாம் அன்வாக முதற்பஞ்சாதியில் இந்திரன், அக்கினி, முதலியோர் உருத்திரனுக்கு விரோதிகள் என உள்ளதை ரா. ராகவய்யங்கார் காட்டியுள்ளார். என்றாலும் பின்னர் இந்நாட்டு மக்களோடு வாழ்ந்து அவர்தம் பழக்கங்களையும் வழிபாடுகளையும் மேற்கொண்டாலன்றித் தமக்கு வாழ்வில்லை எனக் கண்ட பிறகு அவர்தம் கடவுளையும் தமது வேதத்தில் போற்றத் தொடங்கினர். காலப்போக்கில் வேதம் பலர் கூட்டுறவால் வளர வளர, முதல் முதல் இவர்களெல்லாம் கடவுளாக அதர்வண வேதத்தில் (X: 7ல்) போற்றப்படுகின்றனர். எனவே, கி.மு. 1500ல் இந்தியாவில் கால் வைத்த ஆரியர் முதலில் தம் கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் அங்கே வாழ்ந்த பழைய மக்களின்மேல் ஏற்றக்கருதி முயன்று போரிட்டு, முடியாத காரணத்தால் சிலவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டி வந்தது. எனவே, இன்று ஆரியர் கொள்ளுகின்ற அனைத்தும் அவர்களுடை யனவென்றும், திராவிடருடைய மொழி, கலை, வாழ்வியல் முதலியன அதில் கலக்கவில்லை என்றும் கூறமுடியாது என்பதைத் தெளிந்த வரலாற்று ஆசிரியர்கள் திட்டமாகக் காட்டியுள்ளார்கள். தமிழ் மொழி வரலாற்றைப் பற்றி எழுதிய வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் அவர்கள், 'தமிழரிடத்திருந்த பல அறிவியல்களையும் மொழிபெயர்த்து தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாம் அறிந்தன போல வும், வடமொழியினின்று தமிழுக்கு அவை வந்தன போலவும்

காட்டியுள்ளனர்,'[1] என விளக்கி இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார்கள். ஏறக்குறைய வடநாட்டில் மாறாட்டங்களைப் பெற்ற இந்தக் காலத்தை ஒட்டித்தான் தமிழ்நாட்டில் தொல்காப்பியம் தோன்றிற்று.

இவ்வாறு தொல்காப்பியம் தோன்றிய இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் தமிழ் இனத்தவர் மட்டுமே வாழ்ந்தனர் எனக் கொள்ள முடியுமா? மேலை நாடுகளிலிருந்தும் கீழை நாடுகளிலிருந்தும் பலர் தமிழ்நாட்டில் அக்காலத்திலேயே குடியேறியிருக்க முடியும். அன்றி, வாணிபத்தின் பொருட்டாவது அவர்கள் இந் நாட்டுக்கு வந்திருக்க முடியும். எகிப்திய தலைநகரம் தொல்காப்பியர் காலத்துக்கும் முந்தியதாகும். உரோம, கிரேக்க நாகரிகங்களே யவன நாகரிகம் என்ற பெயரோடு தமிழ்நாட்டில் நெடுங்காலப் பழக்கத்தில் வந்துள்ளன. இதே நிலையில் அன்றைக்கு ஒரு சில ஆண்டுகளுக்குமுன் வடவிந்தியாவில் நுழைந்த ஆரியருள் ஒரு சிலர் தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டுக்கும் வந்திருக்கலாம். எனவே, பல வேற்று மொழியாளரும் பண்பாட்டாளரும் தமிழ்நாட்டில் அக்காலத்தில் கலந்து வாழ்ந்தனர் என்பதில் ஐயமில்லை. என்றாலும், அவருள் ஆரியர் இந் நாட்டு நல்லியல்புகளைக் கொண்டு சென்று தம் இலக்கியத்திலும் வாழ்விலும் அமைத்துக்கொண்டனர். பின் காலம் அவர் தம் சார்பிலிருந்ததால், வடக்கிலிருந்து வந்த தென்னாட்டுஆதிக்கத்தைக் கைப்பற்றி வளர்ந்தகாலத்து, இங்கிருந்து கொண்டு சென்று உடன் திருப்பிக் கொண்டு வந்தனவற்றையே முதல் என்றும், தமிழ்நாட்டுத் தொன்மைச் சிறப்புக்களை வழி என்றும் செய்ய முயன்றனர். ஒரு சிலவற்றுள் அவர்கள் வெற்றி பெற்றார்கள் என்றாலும், அவ் வெற்றி நிலைபெறாததோடு, பிறவற்றின் உண்மைகளும்

1. தமிழ் மொழி வரலாறு ப. 15.

உலகுக்குப் புரியலாயின. இதையே வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் முன் சொன்னபடி நன்கு காட்டுகின்றார். திரு. சட்டர்ஜி அவர்கள் தமிழ்ச் சொற்களின் அமைப்பே அவற்றின் தொன்மையைக் காட்டுவன என விளக்கி யுள்ளார்.[1]

தொல்காப்பியர் காலத்தில் வடமொழி வாணர் சிலர் வந்திருக்கக் கூடும் என்றேன். ஆயினும், அவர்கள் கருத்தினையும் கொள்கையினையும் அக்காலத்தில் நாட்டில் புகுத்தியது மிகக்குறைவே. என்றாலும், இன்று வாழ்வாருட் பலர் ஆரியர் பின் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் கொண்டு வந்த பலவற்றை வைத்துக் கொண்டு தொல்காப்பியர் அவர் வழிதான் இலக்கணம் எழுதினார் எனச் சாதிக்க நினைக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் தொல்காப்பியப் பாயிரத்துக்கு விருத்தி உரை எழுதிய ஆசிரியர் சிவஞான சுவாமிகள் நல்ல பதிலைத் தந்துள்ளார்.[2] அதில் ஆசிரியர் ஆரிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள அடிப்படை வேற்றுமைகளையெல்லாம் நன்கு அலசிக் காட்டி, தமிழ் இலக்கண அமைப்பே தமிழரது நீண்ட நாள் வாழ்வையும், வரலாற்றையும், பண்பாட்டையும் விளக்க வல்லது என்பதை எடுத்துரைத்து, பொருளதிகாரத்தின் சிறப்பே ஆரிய மொழியின் வேறுபட்ட நிலையை விளக்கும் என்பதைக் குறிப்பிட்டுத் தொல்காப்பியர் வடநூலார் மதம் பற்றி இலக்கணம் செய்தார் எனல் பொருந்தாது எனக் காட்டியுள்ளார். அவர்தம் கருத்தை ஒட்டியும், நச்சினார்க்கினியர் உரை நலம் முதலியவற்றைக் காட்டியும் அறிஞர் வி. கோ. சூ. அவர்கள் 'வடமொழிக் கலப்பு' என்னும் தலைப்பிலே தமிழ் வடமொழி இலக்கண அமைப்பிலிருந்து முற்றும் வேறுபட்ட நிலையை நன்கு விளக்கியுள்ளார்கள்.[3]

---

1. The Vedig Age, p.159
2. தொல். பாயிர விருத்தி.
3. தமிழ் மொழி வரலாறு, பக் 14—26.

இந்த அடிப்படையில் இனித் தொல்காப்பியத்தைப் பற்றிக் காண்போம்.

தொல்காப்பியரைப் பற்றி வழங்கும் கதை நாட்டுக்குப் புதுவதென்று. தொல்காப்பியருக்கு ஆசிரியர் அகத்தியர் எனவும், அவர் தம் 'பத்தினி'யை அழைத்து வரும்போது அவளைத் தொடலாகாது என ஆணையிட்டதாகவும், வழியிடை வெள்ளம் காரணமாகக் கோல் வழித் தொல்காப்பியர் 'பத்தினி'யைப் பற்றிக் கரை சேர்த்தார் எனவும், அதனால் ஆசிரியரும் மாணவரும் ஒருவரை ஒருவர் சபித்தனர் எனவும் வழங்கும் கதை நாட்டுக்கும் மொழிக்கும் இழுக்குத் தருவதாகும். இக்கதை நடந்தது என யாராவது நம்ப முடியுமா? நம்பினால், யாரைச் சந்தேகிப்பது? பத்தினியையா' தொல்காப்பியரையா? அவர் ஆசிரியராகிய அகத்தியரையா? எனவே, இது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று அன்று.

மற்றும் அகத்தியனாரே தொல்காப்பியருக்கு ஆசிரியர் என்பதற்குச் சான்று என்ன? அப்படியே இருந்தாலும், அவர் எந்த அகத்தியர்? அகக்தியர் என்ற பெயருடன் ஒருவருககு மேற்பட்டவர் வாழ்ந்தார் என்பதை நான் இந்நூலில் மற்றொரு கட்டுரையில் காட்டியுள்ளேன். திரு. கா. சு. பிள்ளை அவர்கள் இக்கருத்தை வற்புறுத்தியுள்ளார்கள்.[1] எனவே, எந்த அகத்தியர் எனக் காட்டுவது? அப்படியே தொல்காப்பியர் அகத்தியரிடம் பயின்றார் என்றாலும். அதை எங்காவது அவர் நூல் வழி எடுத்துக் காட்ட முடியுமா? பாயிரத்தில் அவரோடு பயின்ற மாணவரும் (அதங்கோட்டு ஆசான்) குறிக்கப் பெறுகின்றார். அகத்தியர் முன் அரங்கேற்றியதாக இல்லை. அகத்தியமே இன்று நாட்டில் வழக்கொழிந்துவிட்டது, பன்னிரு படலம் போன்ற

1. தொல். எழுத்து. உரை. முன்னுரை, பக் XXXIII.

இரண்டொரு பிந்திய நூல்களில் வரும் குறிப்பைக் கொண்டு எப்படிச் சரி எனக் கொள்ளமுடியும்? அகத்தியர் நீடு வாகிழ்ன்றவர் ஆதலின், அக்காலத்தில் அவர் மறைந்துவிட்டார் என்றும் கொள்ள முடியாது. எனவே, அவர் அகத்தியனாரிடம் தமிழ் பயின்றார் என்பதே பொருந்தாது. உண்மை இதுவாக, அவரையே திரண தூமாக்கினியாக்கி, வடநாட்டிலிருந்து வந்த அகத்தியரே அவருக்குத் தமிழ் பயிற்றுவித்தார் என்ற கதையும் கூறுவது பொருந்தாது. அவருக்கு முன் அகத்தியம் என்ற இலக்கணம் இருந்திருக்கலாம். அதில் இரண்டொரு சூத்திரங்கள்கூடப் பின்னால் இன்றுவரை வாழலாம், ஆனால், அவற்றைக்கொண்டே அந் நூலுடையாரே தொல்காப்பியருக்கு ஆசிரியர் எனக் கொள்ளல் எப்படிப் பொருந்தும்? மற்றும் தொல்காப்பியரை 'அகத்தியம் நிறைந்தவன்' என்னாது, 'ஐந்திரம் நிறைந்தவன்' எனவே பாயிரம் காட்டுகின்றது. ஐந்திரமா, ஐந்திறமா என்பது ஆராய்தற்குரியது எனக் கா. சு. பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள்.[1] இந்திர வியாகரணம் என்ற நூலே ஆரிய மொழியில் இல்லை என K. சீனிவாசப்பிள்ளை அவர்கள் காட்டுவர். இனி, சிலர் சொல்வது போன்று இவர் ஜமதக்கினியின் மைந்தர் என்பார் கூற்றுப் பொருந்தாது எனவும் இவரே காட்டியுள்ளார்.[2]

இனிப் பாயிரத்தின் வழித் தொல்காப்பிரைக் காணலாம். தொல்காப்பியத்தைக் கேட்ட அதங்கோட்டாசான் என்பவர், 'நான்மறை முற்றியவர்' எனக் குறிக்கப்படுகின்றார். இந் நான்மறை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பார் சிலர். அவை அல்ல என்பதை உரை எழுதவந்த நச்சினார்க்

1. தொல். எழுத். நச். உரை. முன்னுரை-பக். XXVII. Ibid. p. XXXIX.

2. தமிழ் வரலாறு-K. சீனிவாசப் பிள்ளை.

கினியர் திட்டமாக எடுத்து விளக்குகின்றார்.[1] அவர் உரையின்படி சாமவேதமாகிய இசை இருவருக்கும் பொதுவாய் உள்ளது. அமைப்பு முதலியன மாறியிருந்தாலும், பெயர் ஒன்றாய் உள்ளது. அந்த ஆய்வு நமக்குத் தேவை இல்லை. வேதவியாசர் வேதம் செய்வதற்குமுன் தொல்காப்பியர் நூல் செய்தார் என்பது இதனால் தெரிகின்றது. கங்கை சிந்து சமவெளியில் வந்து குடியேறிய ஆரியர் மெள்ள மெள்ள வேதங்களைச் செய்தார்கள் என்பதை அறிகிறோம். அவர்கள் வந்த காலத்தில் இருந்த இருக்கு வேதமே காலத்தால் மெள்ளப் பெருகிற்று என்றும் பின்பு நான்கு வேதங்களும் உருவாயின என்றும் கூறுவர் ஆராய்ச்சியாளர்.[2] எனவே, தொல்காப்பியர் வேதங்கள் உருவாவதன் முன்பே தம் காப்பியத்தை எழுதினார் எனக் கொள்ளல் வேண்டும். மன்னன் நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்து நூலை அரங்கேற்றினர் என்பது கூறப் பெற்றுள்ளது. அவனது காலமும் கடைச்சங்க காலத்துக்கு நெடுங்காலத்துக்கு முந்தியது என்பது ஆராய்ந்து உரைக்கப் பெற்றது. எனவே, கடைச்சங்க காலத்துக்கு நெடுங்கால முன்னரே தொல்காப்பியம் எழுந்து வாழ்ந்தது எனக் கொள்ளல் பொருந்தும். இனி, இத்தொல்காப்பிய நூல்வழி இரண்டொரு கருத்துக்களைக் காணல் ஏற்புடைத்தாம் என எண்ணுகின்றேன். இதுவரை கண்ட பாயிரம் அவரைப் பற்றிப் பிறர் எழுதியது. இனி அவர் எழுதிய நூல் வழியே சில கருத்துக்களைக் கண்டு அமைவோம்.

---

1 நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமை யான் 'நான்மறை' என்றார். அவை தைத்திரியமும், பௌடிகமும், தலவகாரமும், சாமவேதமுமாம். இனி, இருக்கும், யசுவும், சாமமும், அதர்வணமும் என்பாருமுளர். இது பொருந்தாது. இவர் இந்நூல் செய்த பின்னர்ச் சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராகலின். (பாயிர உரை, நச்சி.)

2. Vedic Age V M. Apte p. 385.

தொல்காப்பியர் ஆரியர் தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன் வாழ்ந்தவர் என்பது பொருந்துவதாகாது என்பதைக் காட்டினேன். ஆம். கி.மு. 1500-ல் வடவிந்தியாவில் நுழைந்த ஆரியர், அடுத்து ஐந்நூறு ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு வந்திருப்பார் எனக் கொள்வது பொருத்தமேயாகும். எனவே, தொல்காப்பியர் காலத்தில் ஆரியர்கள் தமிழ்நாட்டில் இருந்தமையாலும், பொருளதிகாரத்தில் நாட்டு நிலையை உள்ளபடி காட்ட வேண்டிய முறை உண்மையாலும் அவர்தம் வாழ்க்கை முறைகள் இரண்டொன்றையும் இவர் எடுத்துக் காட்டினார் எனக் கொள்ளல் தவறாகாது. இரண்டொரு சூத்திரங்கள் அந்த வகையில் அமைகின்றன என்றாலும், இன்று இவர் காட்டுவது போன்று பலவற்றை வடநூல் மதம் பற்றி எழுதினார் எனக் கொள்வது பொருந்தாது. இரண்டோர் ஆரியச் சொற்கள் கலந்து வந்துள்ளன என்பதை அறிஞர் கா. சு. அவர்களே ஏற்றுக்கொள்கிறார்கள்.[1] எனினும், 'வடசொற்கள் தமிழில் பயிலுதற்கு இந்நூல் விதி வகுத்திருப்பதால், ஆரியரோடு தமிழருக்குத் தொடர்பு இவ்வாசிரியர் காலத்தே ஏற்பட்டிருக்கக் கூடுமென்பது யூகிக்கப்படும்.'[2] என்று அவர்கள் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ள இயலாது. வடசொல் வேறு ஆரியச் சொல் வேறு என்பதை நான் முன்னரே ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளேன்.[3] 'வடசொல்' என்பது ஆரியமொழியைக் குறித்ததாகாது. தமிழில் வடசொல் எனவே குறிக்கப்பெறுவன வேங்கடத்துக்கு அப்பால் வழங்கப்பட்ட தெலுங்கு தொடங்கி, இன்றைய காஷ்மீரி வரையிலுங்கூடக் கொள்ளலாம். வடசொல் ஆரிய மொழியாகிய சம்ஸ்கிருதத்தைத்தான் குறிப்பதென்பதற்குச் சான்று இல்லை. பின் வந்த நன்னூலார் அவர் காலத்துக்கு ஏற்ப, வடமொழியை ஆரியம் என்னும் பெயரால் விளக்கியிருந்தார்.

---

1. எழுத். உரை. p. XXXIX.    2. ஷை p. XXVIII
3. கொய்த மலர்கள், கட்டுரை எண் 13.(இந்நூலிலும் உள்ளது)

என்றாலும், தொல்காப்பியர் அந்த வகையில் சொல்ல வில்லை.

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.' (எச்ச .5)

என்ற சூத்திரமே இங்கு எண்ணத்தக்கது. இதிலோ, இதற்கு முன்போ வடசொல் எது என்பதே விளக்கப்பெறவில்லை. வேங்கடத்துக்கு வடக்கே உள்ள நாட்டைக் குறிக்கும் பண்டை ஆசிரியர்கள் 'மொழிபெயர் தேயம்' எனவே குறிக்கின்றார்கள். தெலுங்கை இன்றும் 'வடுகு' என்கின்றோம். எனவே, தொல்காப்பியர் வடமொழி என்றது தெலுங்கு முதலிய வடதிசைக்கண் வழங்கிய எல்லா மொழியினையும் குறிக்கும். அவற்றை எடுத்து வழங்குவது அக்காலத்தில் தடுக்கப்பெறவில்லை. சிலர் நினைப்பது போலத் தடுக்கவும் இயலாது. எனவே, அதற்கென ஓர் இலக்கணம் தேவைப்பட்டது. அம்மொழிச் சொற்கள் தமிழில் வருமானால் அவற்றைத் தமிழ் மரபு கெடாமல், அவ்வம்மொழி எழுத்துக்களை நீக்கித் தமிழ் எழுத்துக்களால் ஆக்கி ஏற்றுக்கொள்ள வேண்டும் என இலக்கணம் வகுத்தார் தொல்காப்பியர். இன்றும் சிறந்த மொழிபெயர்ப்பாளர்கள் இந்த முறையையே கையாண்டு வெற்றி பெறுவதை அறிவோம். எனவே, தொல்காப்பியர் காலத்தில் ஆரியர்கள் தமிழ்நாட்டில் இருந்தார்கள் என்று கொண்டாலும் அக் கொள்கைக்கு இச்சூத்திரம் உறுதுணையாகாது எனக் கூறி மேலே செல்லலாம்.

கடவுள் வாழ்த்துப் பற்றித் தொல்காப்பியர் சொல்லு கின்றார். எனவே, ஆரியர் காலத்துக்கு அவர் முற்பட்டவர் அல்லர் என்பர் சிலர். 'கடவுள் வாழ்த்து' உலகில் எல்லா மக்களுக்கும் உரிய ஒன்றாகவே இருந்தது. எகிப்தில் 4000 ஆண்டுகளுக்கு முன்பே கோயில்கள் இருந்தன. மற்றும், அங்கே இறந்தார் உடம்பின்மேல் மணமிக்க மலரையும் பிறவற்றையும் தூவி அந்த இறந்தவர்களை மறு உலகம்

அனுப்பச் செய்யும் சடங்குகளும் அவர்களுக்கெனக் கட்டிய 'பிரமிடு'களும் (கோபுரங்களும்) சமய அடிப்படையில் உண்டாயினவே[1] அப்படியே தமிழ்நாட்டிலும் பழங்காலந் தொட்டே சமயநெறி போற்றப்பட்டு வந்தது. சிவன், திருமால், முருகன், கொற்றவை போன்ற தெய்வங்கள் தமிழர் அல்லது திராவிடர் கடவுளர்களே என ஆராய்ச்சி யாளர் கூறுவர்.[2] வடக்கே ஆரியர் இந்திரன், அக்னி போன் றோரைக் கடவுளராகவும் தம் வெற்றிக்குத் துணை செய் பவராகவும் கொண்ட அந்த நாளிலேதான் தொல்காப்பி யத்திற் கண்ட கடவுள் நெறி தமிழ்நாட்டில் போற்றப் பெற்றது.

'கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.' (புறத். 27)

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் மிழர் கடவுள் வாழ்த்தியல் முறை ஓரளவு விளக்கப்படுகின்றது. இவற்றுள் கந்தழி என்ற யாதொரு பற்றுக்கோடுமற்று அனைத்துக்கும் அப்பாலாய் உள்ள ஆண்டவனை வழிபடும் சிறப்புடன், கண்ணில் தோற்றும் சூரியனையும், சந்திரனையும் வழிபட்டார்கள் எனப் பொருள்பட நச்சினார்க்கினியர் உரை வகுத்துள்ளார். எனவே, கடவுள் நெறி அப்பாலுக்கப்பாலாய ஊர் பெயர் ஒன்றுமற்ற இறைவனைப் பற்றியது என்றும், அதே வேளையில் உலகுக்கு ஒளியும், மழையும், பிற தேவை களையும் அளிக்கும் கதிரவனையும் திங்களையும் தமிழர்கள் போற்றினார்கள் என்றும் கொள்ள வேண்டியுள்ளது. சிலப்பதிகாரத்தில் முதலில் வாழ்த்தாக ஞாயிறு, திங்கள், மழை இவற்றைப் போற்றுவதும் இந்த அடிப்படையிலேதான் போலும்!

1. Encyclopaedia of Social Science, Vol. III, p. 644.
2. Vedic Age, Vol. I. pp. 157, 158

இனி, தொல்காப்பியனார் திணை நிலத் தெய்வங்களை குறிப்பிடும்போது,

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.'

(அகத்திணை, 5)

எனக் காட்டுகின்றார். இதில் வரும் மாயோனைக் கண்ண னாகவும், சேயோனை முருகனாகவும், வேந்தனை இந்திரனா கவும், வருணனைக் கடற்றெய்வமாகவும் காட்டுவர் நச்சி னார்க்கினியர். இக் கண்ணனும் முருகனும் தமிழ்நாட்டுக்கே உரிய கடவுளர் என்பது திரு.வி.க. அவர்கள் எழுதிய முருகன் அல்லது அழகு என்ற நூலாலும் பிற நூல்களாலும் நன்கு விளங்கும். மாயோன் திருமாலாகிப் பின் விஷ்ணுவானான். முருகன் பின் சுப்பிரமணியனானான். முருகனுடைய பிறப்பை பற்றிய பரிபாடலும், கந்தபுராணமும் இரு வேறு வகைப்பட்ட கருத்துக்களைக் காட்டுவதே இதற்குச் சான்றாகும். இனி, வேந்தனை இந்திரனாகக் காணும் நச்சினார்க்கினியர் எப்படி அப்பொருளைக் கொண்டார் என்பது தெரியவில்லை. பின் வந்த இலக்கணப் புலவர் சிலர் இந்த அடிப்படையிலேயே வேந்தன் என்பதற்குப் பதில் இந்திரன் எனவே குறித்துள்ளனர். எனினும், தொல்காப்பியர் காலத்தில் இந்திரன் வடநாட்டு வேத மரபின்படி அவர்தம் சிறந்த தலைவனாகவும் வழிபடு கடவுளாகவும் போற்றப்படு கின்றான். அவனை இங்கே ஒரு திணை நிலத் தலைவனாகத் தொல்காப்பியர் கொண்டிருக்க மாட்டார். எனவே, வேந்தன் என்பது இந்திரனைக் குறியாது எனக் கொள்ள லாம். வருணன் கடற்றெய்வம். கடற்கரையில் வாழும் மக்கள் அக் கடலையே நம்பி வாழ்ந்த காரணத்தால் வருண னைத் தெய்வமாகக் கொண்டார்களோ என்பது ஆராய்தற்

குரியது. இவ்வருணன் ஆரியரின் நான்கு கடவுளரில் ஒருவனெனஎண்ணப்படுகின்றான். எனினும், அவர்களின் பெயர்களைப் பற்றி ஆராயும் திரு. கோஷ்[1] அவர்கள் அப்பெயர்கள் ஆரியர்தம் பெயர்களோ அன்றி மத்திய மேற்கு ஆசியாவிலிருந்து கடன் வாங்கியவையோ என ஐயுறுவதோடு, அவர்தம் மொழி பலவற்றிலிருந்து கடன் வாங்கி வளர்க்கப்பட்டதே என்பதையும் விளக்கு கிறார்.[2] எனவே, வெறும் பெயர் மட்டும் கொண்டு அக் கடவுள்ரைப் பற்றி முடிவு செய்ய இயலாது. அன்றியும், அக்காலத்தில் ஆரியர் இங்கு வந்தமையின் அவர்கள் வழங்கிய பெயரைத்தான் தம் கடற்றெய்வத்திற்கு இட்டார்களோ என எண்ணுபவரும் உள்ளனர்.

நீர்த்தெய்வத்தைப் பற்றி மற்றொன்றும் நிர்ணயிக்க வேண்டியுள்ளது. சிந்துவெளி நாகரிகத்திலேயே நீரைத் தெய்வமாகப் போற்றினார்கள் என்பதைத் திட்டவட்டமாக ஜான் மார்ஷல் என்பார் கூறுகின்றார்.[3] எனவே, ஆரியர்களுக்கு முன்னரே இந்நாட்டில் உள்ளவர் நீர்த் தெய்வத்தை—வருணனை — கடற்கடவுளை—வணங்கி வந்துள்ளார்கள் என்பது புலனாகும். தொல்காப்பியர் அதைத்தான் இங்கு இவ்வாறு கூறியிருக்க வேண்டும். பல வழக்குகள் இரு மொழிகளிலும் வெவ்வேறு பெயர்களின் அடிப்படையில் காண்கின்றபடி இவ் வருணனும் தமிழிலும் ஆரிய மொழியிலும் அதே பெயரில் வழங்கப் பட்டானோ என எண்ணுவதும் தவறாகாதே!

தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ்மொழி வழங்கும் எல்லை 'வடவேங்கம் தென்குமரி' இடைப்பட்டதாகவே அமைந்துவிட்டது. இமயம் வரையில் போர்மேற்சென்று

1. B. K. Ghosh, D. Phil (Munich), D. Litt. (Paris)
2. The Vedic India, p. 204.
3. Indus Civilization, p. 75.

வெற்றி கொண்டோ, அல்லது நண்பு கொண்டோ வட நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் அக்காலத்து மன்னர்கள். என்றாலும், தமிழ் மொழிக்கு அக்காலத்தில் வேங்கடமே எல்லையாய் அமைந்துவிட்டது. அதற்கு அப்பாற்பட்ட பகுதிகள் யாவும் 'மொழிபெயர் தேயம்' என்றே வழங்கப்பெறுகின்றன. எனவே, தொல்காப்பியர் காலத்தில் தெற்கே தமிழ்நாட்டு எல்லை விரிந்திருந்ததோ இல்லையோ என்று முடிவு செய்ய முடியாவிடினும், வடக்கே வேங்கடம் இன்றே போன்று தமிழ் மொழி வழங்கும் எல்லையாகவே இருந்தது. எனவேதான் பாயிரம் பாடிய பனம்பாரனார் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து' எனத் தொடங்குகின்றார். வடக்கே வேங்கடம் இன்றும் அதே பெயருடன் விளங்குகின்றமையின், வேறுபாடு தோன்றவில்லை. எனினும், தென்குமரி ஆறா, மலையா, இன்றைய குமரிமுனையா என்பதே ஐயப்பாடு. உரையாசிரியர் யாவரும் யாறு என்றே கொள்கின்றனர். அரசஞ்சண்முகனார் அதை மலை என்கின்றார். அக்குமரி பற்றி வழங்கும் பழைய புறநானூற்றுப் பாடல்களும் அது எது என்பதைத் திட்டமாக அறுதியிடவில்லை; 'தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்' (புறம். 6) எனவும், 'தென் குமரி வடபெருங்கல்' (புறம். 17) எனவும் கூறுகின்றன. பின் வந்த காக்கை பாடினியாரும், இளங்கோவடிகளும் 'குமரிப் பௌவம்' எனக் கடலாகவே குறிக்கின்றார்கள், எனவே, தொல்காப்பியர் காலத்து அது மலையாகவோ அல்லது ஆறாகவோ இருந்திருக்கலாம் எனக் கொள்வர் ஆராய்ச்சியாளர்.

தெய்வ வழிபாடு தொல்காப்பியர் காலத்திலேயே இருந்தது எனக் கண்டோம். அதைப் பல வகையில் அவர் வற்புறுத்துகின்றார்.

'காமப் பகுதி கடவுளும் வரையார்,
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்.'
(புறத்திணை. 23)

'வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப,' *(செய். 106)*

''கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'. *(புறத். 27)*

*என்னும் சூத்திர அடிகளால் தொல்காப்பியர் தெய்வம், கடவுள் என்ற சொற்களைக் கொண்டு பொருள் விளக்கு கின்றமையாலும், பிற குறிப்புக்களாலும் கடவுள் வாழ்த்து அக்காலத்தில் இருந்தது எனக் கொள்வதே சிறப்புடைத்து. முழுமுதற் கடவுளாகப் பற்றற்ற 'கந்தழி'யையும், திணை நிலக் கடவுளர் பிறரையும் வழிபட்டார்கள் அக்காலத் தமிழர்கள் எனக் கொள்ளல் பொருந்தும். 'வருணன்' என்ற திணை நிலக் கடவுளன்றி வேறு வடமொழிக் கடவுளரோ, வழிபாட்டு முறையோ இதில் காணப்பெறவில்லை.*

*இனி, தொல்காப்பியர் 'மந்திரம்' என்னும் ஒன்றை விளக்குகின்றார். அதைச் சிலர் பின் ஆரியர்கள் வழி பாட்டுக்குக் கொண்டு வந்த 'மந்திர வழிபாடு' எனக் கருதுவர். அது பொருந்தாது. அவரே திட்டமாக,*

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப.' *(செய். 171)*

*எனக் காட்டுவர். எனவே, 'நிறைமொழி மாந்தர்' என்று போற்றப் பெறும் அறிவும் அருளும் நிறைந்தவர் ஆணை யினால் தோற்றிய மறைமொழியே மந்திரமாகும். 'மறை' என்பது ஆரிய வேதத்தைக் குறியாது என்பதை முன்னரே கண்டோம். அறிவுடைய நல்ல அருளாளர் வாய்ச் சொல்லே மறையாகப் போற்றப்பட்டது. இதையே பின் வந்த திருவள்ளுவர்,*

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும.'

*என்று விளக்கிக் கூறினார், இதை விடுத்து, சென்னைப் பல் கலைக் கழகத்து அகராதி* (Lexicon, Vol. V. P. 3068) *'மந்திரம்' என்பதற்கு 'வேதமந்திரம்' என்றே பொருள்*

குறித்திருப்பது அதைத் தொகுத்தோர் மனநிலையை நன்கு காட்டுகின்றது. இரண்டையும் கூறியிருப்பினும் பொருத்தமாய் இருக்கும்.

இனி, மணவினைகளில் சில கரணங்கள் புகுத்தப்பட்ட காலம் தொல்காப்பியர் காலம் எனவும், அவை ஆரியர் தம் தீ வளர்த்தல், அம்மி மிதித்தல் போன்றன எனவும் சிலர் கூறுவர்; இதற்கு எடுத்துக்காட்டாக,

'கரணத்தின அமைந்து முடிந்த காலை' (கற். 5)

'பொய்யும் வழுவும் தோனறிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.' (கற். 4)

எனத் தொல்காப்பியர் கூறுவதைக் காட்டுவர். இவற்றிற்கு உரை கூறவந்த நச்சினார்க்கினியர், இந்தக் கரணங்களை வடநூலாரைக் கருதிச் சொன்னார் எனக் காட்டுகின்றனர். மற்றும், இக் கரணம் பற்றிக் கூறும்போது, 'இவ்வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின் முதல்நூல் ஆசிரியர் கூறியவாறே களவு நிகழ்ந்த பின்னர்க் கற்பு நிகழந்ததென்று கூறித் தாம் நூல் செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் கரணம் யாத்தவாறும் கூறினார்,' எனக் காட்டுவர். அவர் கூற்றின்படி ஓர் ஊழிக்கு முன்பே தொல்காப்பியர் இந்நூல் செய்தார் என்பதும், இதற்கு முதல் நூல் தமிழ் மரபு பற்றிய இலக்கணமே என்பதும், அவர் காலத்தில் ஆரியர் கரணத்தொடு நாட்டில் வந்தமையின் அதையும் சேர்த்தே இதில் கூறினார் என்பதும் கொள்ளத்தக்கனவாய் உள்ளன. அவற்றை அப்படியே கொள்வதில் தவறு இல்லை. எனினும், அக்காலத்தில் ஆரியர் கரணம் அத்துணை அளவில் தமிழ்நாட்டில் கால் கொண்டுவிட்டது எனக் கொள்ள முடியாது. வடக்கே அக்காலத்தில் தம் வாழ்வுக்கும் வளத்துக்கும் ஆரியர் போராடிய காலமே அது. ஒருசிலர் இங்கே வத்தனர் எனக் கொள்ளவன்றி, அவர்தம் காரணங்களைத் தென்னாட்டில் புகுத்தும் அளவிற்கு அவர்தம் கை

ஓங்கி இருக்கவில்லை என்பதும் தேற்றம். அன்றி, அது அப்படியே அவர்தம் கரணம் என்று கொள்வதிலும் இழுக்கில்லை, நாட்டில் அவர் புகுந்த நிலையையும் கரணம் புகுத்திய நிலையையும் இச் சூத்திரங்கள் விளக்குகின்றமையின்.

இன்னும் ஆரியர் கருத்துக்கள் சில தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருப்பது உண்மையே. 'வானோர் அமுதம் புரையுமால் (கற். 5) என அமிர்தம் குறிக்கப்பெற்றுள்ளது

'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீலோர்க் காகிய காலமும் உண்டே.' (கற். 3)

என நால்வகை மக்கட் பாகுபாடு பேசப்பெறுகின்றது. மரபியலில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பிரிவும் அவரவர் வாழ்வு முறையும் பிறவும் பேசப் பெறுகின்றன.

'நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயும் காலை அந்தணர்க் குரிய,' (மரபு 66)

என அந்தணரையும் அவர்தம் பொருளையும் இதில் குறிக்கின்றார் தொல்காப்பியர். இது ஆரியரைக் குறிக்கும் என்பர் சிலர். எனினும், 'அந்தணர்' என்பது தமிழ்நாட்டுச் செந்தண்மை பூண்டொழுகும் ஒழுக்க சீலரையே குறிக்கும் சொல் என்பதும், வள்ளுவரும் பிறரும் இதை அதே பொருளில் எடுத்தாளுகின்றனர் என்பதும் காணலாம். தமிழ் நாட்டிலும் அறிவர், தாபதர் போன்ற நல்ல உள்ளமும் பண்பும் அருளும் உடைய துறவியரும் பற்றற்றவரும் வாழ்ந்து வழி காட்டியுள்ளார்கள் எனக் காண்கின்றோம். அவருக்கு நூல் ஆகிய அறச்சுவடியும், பிறவும் இருந்திருக்கலாம். எனவே, அவரையே குறித்தன இவை எனக் கொள்வதில் தவறு இல்லை. இவரே மற்றோர் இடத்தில்,

'பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.' (செய் 189)

என்று கூறுகின்றார். இவர்களும் சிறந்த அறிவு பெற்ற பண்பாட்டாளர்களே. எனினும், தமிழ்நாட்டுக்குப் பழக்க மில்லாத நால்வகை மக்கட்பிரிவை இவர் கூறுவதனால், ஆரிய மரபு அக்காலத்தில் வந்துவிட்டதென்பது பொருந்தும் என்பர் சிலர். அவர் கூற்றுப்படி இதைக் கொள்ளினும் தவறு இல்லை. எனினும், அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு அறிவுரை கூறும் அளவுக்கு அந்நாள் அறிவராயினார் என்பது பொருந்தாது.

மற்றும் எழுத்ததிகாரத்தே எழுத்துக்கள் பிறக்கும் இடங்களின் அமைதி கூறும்போது தமிழுக்கும் வட மொழிக்கும் உள்ள மாறுபாட்டை இவர் எடுத்துக் காட்டுகின்றார்.

'அளபிற் கோளல் அந்தணர் மறைத்தே'
'அஃது இவண் நுவலாது,' (பிறப்பியல். 20, 21)

என இரண்டையும் வேறுபடுத்துவர். இங்கு அந்தணர் என்பது ஆரியரைக் குறிக்குமே என்பர். அவர்தம் எழுத் துக்கள் பிறப்பது போன்று இல்லாது தமிழ் எழுத்துக்கள் வேறு வகையாற் பிறக்கும் என்ற உண்மையை அவருக்கு முன் தமிழ் இலக்கண நூலோர் கூறியபடியே காட்டுகின்றார். இந்த எடுத்துக்காட்டாலும் ஆரியர் அக்காலத்தில் தமிழ் நாட்டில் அடியெடுத்து வைத்துள்ளனர் என்பர் ஒருசாரார். இவர் கூற்றுப் பொய் என்றும், அதற்குச் சாதகமாகச் சில சூத்திரங்களை இடைச் செருகல் என்றும் நாம் தள்ளத் தேவையில்லை. ஆரியர் அக்காலத்தில் தென்னாட்டுக்கு வந்து தமது மொழியையும் வாழ்க்கை முறையையும் பரப்ப முனைந்தனர் என்று கொள்வது பொருந்தும்.

இதுகாறும் கண்டவற்றால் தொல்காப்பியம் இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் அப்பெயர் கொண்ட சிறந்த தமிழ் மகனாராலேயே, தமிழ் மரபு கெடாதபடி செய்யப் பட்டதென்பதும், அதே வேளையில் வடநாட்டில் சற்று 500

ஆண்டுகளுக்கு முன் அந்தப் பகுதியில் அடியெடுத்து வைத்த ஆரியர் அங்குள்ள திராவிட மக்களையும் பிறரையும் அடித்துத் துரத்தித் தம்மை நிலை பெறுத்திக்கொண்டு இருக்கு முதலிய வேதங்களை யாத்தனர் என்பதும், அவருள் ஒரு சாரார் மெள்ள விந்திய மலையைக் கடந்து தமிழ் நாட்டிலும் புகுந்து தம் பழக்க வழக்கங்களைப் பரப்ப முயன்றார்கள் என்பதும், சிறந்த ஒழுக்க நெறியும் பண்பாடும் பிற நல்லியல்புகளும் கொண்ட தமிழர் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும், இரண்டொரு கரணங்களை எப்படியோ மெள்ளப் புகுத்தினர் என்பதும், தொல் காப்பியர் அவை பற்றியெல்லாம் எண்ணி எண்ணி அளந்தே சொன்னார் என்பதும், அவர் காலத்திற்குப் பிறகு தமிழ் நிலம் குறுகியிருக்கலாம் என்பதும், அவர் ஆரிய நூலார் வழி இலக்கணம் பயின்றார் என்பது பொருந்தா என்பதும், அவர் காலத்துக்குப்பின் ஆரியர் மெள்ள மெள்ளத் தம் ஆதிக்கத் தைப் பல வகையில் - பண்பாடு, கலை, வழக்கம் முதலிய வற்றால் - செலுத்த முயன்று ஓரளவு வெற்றி பெற்றனர் என்பதும் அறியக் கிடக்கின்றன. அவர்கள் பெற்ற வெற்றி நிலையான ஒன்று அன்று என்பதையே அன்றுதொட்டு இன்றுவரை வடநாட்டுத் தென்னாட்டுப் போராட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதையே வெல்ஸ் என்பார் தம் வரலாற்று நூலில் ஆரியர் திராவிடர் மேல்கண்ட வெற்றி— வடநாட்டார் தென்னாட்டார் மேல் கொண்ட வெற்றி— நிலையான ஒன்று அன்று என்றும், மேலுக்குத் தென்னாடு வடநாட்டுக்குத் தாழ்ந்துவிட்டது போலத் தோன்றினும் உண்மையில் அது சரியன்று என்றும், அவ்விரண்டின் போராட்டம் இன்னும் நடந்துகொண்டே இருக்கிறது என்றும் கூறுவர்.

இவ்வாறு தொல்காப்பியர் காலத்துக்கு முன்னும் பின்னும் வடநாடும் தென்னாடும் பல வகையில் இணைந்தும் பிணைந்தும் சில வகையில் மாறுபட்டும் இருந்தன என்பது தேற்றம்.

# 8. சோறளித்த சேரன்

தமிழ்நாட்டில் வடமொழியிலிருந்து வந்து வழங்கும் கதைகள் இரண்டு : ஒன்று, இராமாயணம்; மற்றொன்று, மகாபாரதம். இராமாயணமும் பாரதமும் தமிழில் முற்றும் மொழிபெயர்க்கப்பட்ட காலம் பிந்தியது என்றாலும், அக்கதை பற்றிய பல குறிப்புக்கள் சங்க காலத்திலும் அதற்கு முன்னும் தமிழ்நாட்டில் வழக்கத்தில் உள்ளன என்பது இலக்கியங்களால் நன்கு தெரிகின்றது. இரண்டு கதைகளும் நடைபெற்றனவா அன்றிக் கற்பனையா என்பதை நாம் இங்கே எண்ணிப் பார்க்கவேண்டா. நூல் களைக் கொண்டு நோக்கின், அவற்றால் அக்காலத்திலேயே வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் தொடர்பு உண்டு என்பதைக் காணலே இன்றியமையாததாகும்.

சங்க இலக்கியங்களில் பல கடைச்சங்க காலத்தனவே யாயினும், ஒருசில இடைச்சங்க காலத்துப் பாடல்களென வும், கடல் கோள்களுக்கு முற்பட்டன எனவும் கொள்ள இடமுண்டு. புறநானூறு போன்ற சங்க இலக்கியத் தொகுப்புக்களைப் பின்னால் தொகுத்தனர். அவர்கள் எந்த அடிப்படையில் தொகுத்தார்கள் என்பதை நம்மால் அறிய முடியவில்லை. தொகுத்தவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் எனவும், அவர் தாமே கடவுள் வாழ்த்து ஒன்று பாடி அதையே முதலாகக் கொண்டு நூலைத் தொகுத்தார் எனவும் அறிஞர் கூறுவர். அவ்வாறு அவர் பாடிய கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடியாக உள்ள பாடல்

சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியதாகும். இப் பாட்டைப் பாரத காலத்துப் பாடல் என்பர் ஆய்வாளர். இதில் வருகின்ற ஒருசில அடிகள் பாரதக் கதையைக் குறிக்கின்றன என்பது அவர் கொள்கைக்கு அரண் செய்கின்றது.

"அலங்குஉளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலம்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈர்ஐம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!"
—(புறம். 2: 13-16)

என்னும் அடிகளுக்கு உரைகண்ட ஆசிரியர், பாண்டவரும் நூற்றுவரும் செய்த குருசேத்திரப் போரில் சேரன் இரு படைக்கும் இறுதி வரையில் உணவளித்துக் காத்தான் என்று பொருள் கொள்ளுகின்றனர். இக்கருத்தே ஆராய்தற் குரியதாக நாம் இங்கே கொண்டதாகும். பாரத காலத்தில் தமிழ்நாட்டு வேந்தன் அங்குச் சென்று உணவிட்டானா? என்பதே கேள்வி!

பாரதம் வரலாற்றுக்கு அத்துணை உதவி செய்யாது எனப் பலர் கூறினும், வரலாற்றறிஞர் சிலர் அதன் காலத்தை நன்கு துருவித்துருவி ஆராய்ந்திருக்கின்றனர். அவருள் ஒருவர் ஹேம் சந்திர ராய்சவுத்திரி[1] என்ற வரலாற்றுப் பேராசிரிராவர். அவர் தமது நூலில்[2] பாரதப் போர் நடைபெற்ற நாளைக் கணக்கிட்டிருக்கிறார். பரீட்சித்து மன்னனது ஆட்சிக் காலத்தை ஒட்டி அவர் ஆராய்ச்சி அமைகின்றது. கிறிஸ்து பிறப்பதற்கு முந்திய 14-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் பரீட்சித்து இருந்தானென்பதும், அக்காலத்தை ஒட்டியே பாரதப்போர் நடை

1. Hemchandra Raychaudhri, M.A. Ph. D.
2. Political History of Ancient India (Published) by Calcutta university.

பெற்றிருக்க வேண்டுமென்பதும் அவர் நூல்வழி காணப் பெறுகின்றன.[1] எனவே, பாரதப் போர சுமார் இன்றைக்கு 3,500 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றிருக்கவேண்டும் எனக் கொள்ளல் பொருந்தும். அறிஞர் பலரும் இக் கருத்தை ஏற்றுக்கொள்ளுகின்றனர். நாமும் இதன்வழிக் காணின், பெருஞ்சோற்றுதியன் இன்றைக்கு மூவாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவனாய் இருத்தல் வேண்டும் எனக் கருதலாம். ஸ்மித்து அவர்கள் அப் பாரதப் போரில் தென்னாட்டவர்களும் கலந்திருக்க வேண்டும் என எண்ணு கிறார்.[2]

பாரத காலத்தில் தமிழ்நாட்டுக்கும் வட நாட்டுக்கும் தொடர்பு உண்டா என்னும் ஐயம் ஒரு சிலர் மனத்தில் எழலாம். மற்றும் அக்காலத்திலேயே இவ்வளவு தெளிவாக நல்ல பாடல்களைப் பாடும் தமிழ்க் கவிஞர்களும் அவர் களைப் பாராட்டும் மன்னர்களும் இருந்தார்களா என்னும் ஐயம் சிலருக்கு எழுதல் உண்டு. தொல்காப்பியர் காலத்தை இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பர் ஆய்வாளர். அவர் காலத்தில் அத்தகைய சிறந்த இலக்கண நூல் எழுதப்பெற வேண்டுமானால், அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நல்ல இலக்கியங்கள் நாட்டில் உருப்பெற்றிருக்க வேண்டும் என்பது ஒருதலை. அவர் கூறும் பல சூத்திரங்களில் 'என்ப', 'என்மனார் புலவர்' எனக் கூறுகின்றமையின், அவருக்கு முன்பே இலக்கியப் புலவர் மட்டுமன்றி, இலக்கணப் புலவரும் இருந்திருப்பர் என்பது தேற்றம். எனவே, 3,500 ஆண்டுகளுக்கு முன் இதுபோன்ற சிறந்த இலக்கியம் தமிழில் எழுதப்பெற்றது என்று கொள்வதில் இழுக்கு ஒன்றும் இல்லை. இக் காலத்தையே இடைச்சங்க காலமெனக் கூறினர் எனக் கொள்ளலாம்.

1. Political History of Ancient India 20.
2. Oxford History of India. p. 6.

பாரத காலம் பெரும்பாலும் கி.மு. 1,400 என்று கூறுவர். ஆரியர் இந்தியாவுக்கு வந்த சிறிது காலத்துக்குப் பின் இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கலாம் என்பதை ஆராய்ச்சி வல்லுனர் பலர் ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்து பஞ்சாபுப் பகுதியில் வாழத் தொடங்கிய காலத்து, திராவிடர்கள் இந்தியா முழுவதும் பரவியிருந்தார்கள் என்றும், அவர்களுடைய அரசுகள் பல இடங்களில் நிலைத்திருந்தன என்றும், அவற்றுள் வடக்கில் மகதமும் காமரூபமும் சிறந்திருந்தன என்றும், தெற்கில் கலிங்க, சோழ, சேர, பாண்டி நாடுகள் சிறந்திருந்தன என்றும் திரு. R.D. பானர்ஜி அவர்கள் தம் ஆராய்ச்சியின் முடிவை நன்கு எடுத்துக் காட்டுகின்றார்.[1] இவர் தம் ஆராய்ச்சியின் வழியில் ஆராய்ந்தால் பாரத காலத்தில் இந்தியா முழுவதும் சிறந்திருந்தவர் திராவிடர் என்பதும், அவருள் சிறந்த மன்னராய் வைத்து எண்ணப்பட்ட சேரர் பரம்பரையில் ஒரு மன்னன் அப் பாரதப் போரில் நடுவு நிலையில் நின்று அவர் தம் இரு படைகளுக்கும் சோறு அளித்தான் என்று கொள்வதும் தவறு இல்லை எனவே எண்ணுகின்றேன்.

மற்றும் இந்த அடிகளில் பாரதப் போரில் இரு படைகட்கும் இறுதி வரைக்கும் வரையாது சோறு வழங்கினவன் இவன் எனக் குறிக்கப்பெறுகிறான். இதனால், நாம் மற்றொன்றும் காணமுடிகின்றது. வடநாட்டில் நடந்த ஒரு குடிப் போரில் தமிழர் யார் பக்கமும் சேரவில்லை என்பதும், அவர் தம் போரில் துன்பமுற்றார்க்கு உற்றுழி உதவினர் என்பதும் தெரியவரும். இன்றும் பெரும் போர்க்களங்களில் நாட்டு வேறுபாடு அற்றுச் செஞ்சிலுவைச் சங்கத்தார் (Red Cross Society) அடிபட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவுவதை அறிகிறோம். இதே நிலையில் அன்று

1. Pre-Historic, Ancient and Hindu India, by R.D. Banerji p. 30.

மாறுபட்ட போர்க்களத்தே நடுவுநிலையாளராயிருந்து, இன்னார் இனியார் என்னாது, உற்றார் அற்றார் என்னாது உதவிய பெருமை தமிழ் மன்னரைச் சார்ந்ததாகும். அக்காலத்து வாழ்ந்த பாண்டியர் மரபில் அருச்சுனன் பெண் கொண்டான் என்றும் கூறுவர். எனினும், தமிழர் தமக்கு வேண்டியவர் வேண்டாதார் என்று வேறுபாடு காட்டாது, அனைவருக்கும் போர்க்களத்தில் உதவினர் எனக் கொள்ள வேண்டும்.

இனி, இக் கருத்துக்குச் சிலர் மாறுபட்டு இந்த அடிகளுக்குப் புது உரை கற்பிக்கின்றனர். அது பொருந்துமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இதில் வரும் 'ஐவர்' என்னும் சொல் பாண்டவர்களைக் குறியாது. பாண்டியரைக் குறித்ததெனவும், பாண்டியருக்கும் பஞ்சபாண்டியர் என்ற பெயர் வழங்கி வந்ததெனவும் அறிஞர் கருதுகின்றனர். அந்த நிலையில் ஐந்து பாண்டியர் பரம்பரை பரம்பரையாய் நெடுங்காலம் பாண்டிநாட்டை ஆண்டவர் எனவும் குறிக்கின்றனர். ஒரே காலத்தில் வெவ்வேறு ஊர்களிலிருந்து ஐவர் பாண்டியர் ஆண்டனர் எனக் காட்டுகின்றனர். தலைமைப் பாண்டியன் மதுரையிலும், இளவரசன் கொற்கையிலும், பிறர் வெவ்வேறு இடங்களிலும் இருந்து ஆண்டனர் என்பர். இவற்றிற்கு ஆதாரங்கள் இல்லை. பின்னால், பதின்மூன்றாம் நூற்றாண்டில் மார்க்கோபோலோ, வாசபு போன்ற பிற நாட்டு யாத்திரிகர்கள் வந்த காலத்தில் நாட்டில் உண்டான குழப்பம் காரணமாக நாடு பலவகையில் துண்டாக்கப்பட்டுப் பாண்டி நாட்டை ஐவர் ஆண்டனர் என்பதை அவர்கள் காட்டும் குறிப்பின்வழிக் காண்கின்றோம் அவர்தம் வேறுபாடே, அவர்வழித் தமிழ்நாட்டில் மற்றவரை ஆணை செலுத்த வழி உண்டாக்கித் தந்தது. இந்தக் காலம் தவிர்த்துப் பாண்டிநாட்டில் ஐவர் பாண்டியர் சங்க காலத்தோ அதற்கு முன்னோ ஆண்டதாகக் குறிப்பு நாம் காணவில்லை. கொற்கையில் இளவரசன் ஆண்டான் என்பது உண்மை. அது சிலப்பதிகாரத்தாலும் தெரிகிறது.

ஆனால், அவன் தனி அரசனாய் இல்லை. அரசன் தன் மக்கள் அரசியல் அறிவுபெற அவர்களை இளவரசராக்கி அமர்த்தும் வழக்கம் உண்டல்லவா? 'வேல்ஸ் இளவரசர்' (Prince of Wales) இருந்ததை நாம் அறிவோம். பிற்காலச் சோழர் காலத்தில் தந்தை அரசாளும்போதே மகனை இளவரசனாக்கியிருப்பதைத் தொடர்ந்து காண்கின்றோம். இவ்வாறு ஒரே அரசாகப் பாண்டியர் இருந்தனரே அன்றி, ஐவர் பாண்டியராய் அந்தப் பழங்காலத்தில் இருந்ததற்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. சேரன் செங்குட்டுவன் காலத்தில் சோழ நாட்டில் ஒன்பது மன்னர் இருந்ததாகக் காண்கின்றோம். சேரர் மாபெரிய இரு கிளையாய் இருந்ததை அறிகிறோம். எனினும், 'மார்க்கோபோலோ' காலம் தவிர்த்து வேறு எக்காலத்தும் பாண்டியர் ஐவராய் இருந்ததில்லை.

இனி ஐவரைப் பாண்டிராக்கி, ஈரைம்பதின்மரை நூறு சேனைத் தலைவர் எனவும் கொள்கின்றனர். மற்றும், ஈரைம்பதின்மர் ஈரொன்பதின்மராக இருக்கலாம் என எண்ணிப் பதினெட்டுச் சேனைத் தலைவர் எனவும் கொள் கின்றனர். இவ்வாறு கொண்டு ஐவர் பாண்டியருடனே சினம் கொண்டு, அவர்தம் பதினெட்டுச் சேனைத் தலைவரும் படும்படி பெருஞ்சோறு அளித்தவன் உதியன் எனக் காட்டுகின்றனர். இது பொருந்துமா? ஐவர் பாண்டியர் என்பது பொருந்தாது என்பதைக் கண்டோம். அவர்களுக்குப் பதிணெண்மரோ அன்றி நூற்றுவரோ சேனைத் தலைவர் இருந்தார்களென்றோ, அவர்களை வென்ற படை என்றோ, பொருள் கொள்வது சிறவா தன்றோ? தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும் மன்னரோடு நேர்நின்று அம் மன்னர்களை வெற்றி கொள்வதையும், அவர்தம் நாட்டை எரியூட்டுவதையுமே பெருமையாகப் புலவர்கள் பாடியிருக்கிறார்களே ஒழிய, அவர்தம் சேனைத் தலைவரை வென்ற பெருமையைப் பேச வில்லை. அப்படிப் பேசுவதும் அவர்தம் புகழுக்கு இழுக்கே

யாகும். எனவே, சேனைத் தலைவரை வென்றவருக்குச் சோறு அளித்தான் என்பது பொருந்தாது. மற்றும் இதில் யாருக்கு அளித்தான் என்பது விளக்கமாகவில்லை. தனது சேனைக்கு அளித்தான் என்றே கொள்ளவேண்டும் போலும்! ஆம்! அதற்காகத்தான் தொல்காப்பியப் பெருஞ்சோற்று நிலையும், புறம்பொருள் வெண்பா மாலையும் மேற் கோளாகக் கொண்டு காட்டப்பெறுகின்றன. அவற்றையும் பொருந்துமா என ஆராயலாம்.

தொல்காப்பியத்திலும், புறப்பொருள் வெண்பா மாலையிலும் வரும் பெருஞ்சோற்று நிலை, வஞ்சித் திணையில் இடம் பெற்றுள்ளது. சேனை போர்மேல் மண் குறித்துப் புறப்படுமுன் அதைச் சிறப்புப்படுத்தவும், அச் சேனை சிறக்கச் செயலாற்றவும் கருதி அதற்குச் சோறு இட்டுச் சிறப்பித்துப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி அனுப்புதல் மன்னர்தம் கடனும் முறையுமாகும். இதைத்தான் இரு நூல்களும் குறிக்கின்றன. அன்றித் தும்பைத் திணையில் பெருஞ்சோற்று நிலை இல்லை. நம் புறநானூற்று அடியிலோ 'பொலம்பூந்தும்பை' என்றே குறிக்கப் பெற்றுள் ளது. எனவே, தும்பை சூடிப் போர் செய்வார் இடையில் வழங்கிய சோறுதான் இதில் குறிக்கப் பெறுவது. ஆக, பாண்டவரும் கௌரவரும் செய்த போருக்கு இடையில் யாதொரு வேறுபாடும் இன்றி இருவருக்கும் உணவு வழங்கினவன் உதயன் சேரலாகும். இருவருக்கும் சோறு வழங்குவது பொருந்தாது என்பர் சிலர். அதுவே பொருந்து கின்றது என்பது நான் முன் விளக்கிய செஞ்சிலுவைச் சங்கத் தொண்டின் மேற்கோளால் நன்கு விளங்கும். போர்க் களத்தில் நடுவுநின்று இரு சாராரிலும் அற்றார்க்கும் அலந் தார்க்கும் உற்றுழி உதவுதல் மிகச் சிறந்த அறமல்லவோ!

மற்றும் தொல்காப்பியமும் வெண்பாமாலையும் அரசன் தன் சேனைக்குச் சோறு அளித்தலையே குறிக்கின்றன. ஆனால், அதை ஒரு மன்னன் பெருமையாகக் கருதிக் கொள்வதும், அந்தப் பெருமையை ஒரு புலவர் பாட்டாகப்

பாராட்டுவதும் மரபு அல்ல. தனது சேனைக்கு உணவு அளித்தல் அரசன் கடன். இன்றும் நம் நாடு உட்பட உலகில் பாதுகாப்புப் படைக்குச் செலவு செய்வதுதானே நீதியாகக் காண்கின்றோம்? அதிலும் வீரர்கள் உயிரைப் பணயம் வைத்துப் போருக்குப் புறப்படும்போது—அவன் வாழ அவர்கள் மடியப் புறப்படும் போது—எல்லா வகையான சிறப்புக்களையும் செய்து அவர்களை வழி அனுப்புவது மன்னன் கடமையாகும்—தலை சிறந்த கடமையாகும். அந்தக் கடமையைத் தன் புகழாக ஒருவன் கருதுவானாயின், அவன் புலவரால் போற்றப் படுவானோ? அவ்வாறு அவனைப் போற்றும் புலவரும் புலவராவாரோ? அப்படிப் போற்றினாலும், அப்பாடல் கால வெள்ளத்தைக் கடந்து இத்துணை நாளும் வாழுமோ? எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே, சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் கைம்மாறு கருதாது. போர்க் காலத்து வாடுபவருக்கு உதவ வேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடு, பாரதப் போரில் நின்று, இரு திறப் படைகளுக்கும் இறுதி வரையில் சோறு அளித்துச் சிறந்தான் என்று சொல்வதில் தவறு ஒன்று மில்லையன்றோ! தன் சேனைக்குக் கொடுப்பதினும் மற்றவர் சேனைக்கு - மாறுபாடு இல்லாத வகையில் இருவருக்கும் - வரையாது கொடுத்தல் சிறந்த செயல் அன்றோ? அச் செயலே அவனை இன்றளவும், எத்தனையோ மக்கள் இறந்தும்—அவன் பின் வந்த பெருமன்னர் மறைந்தும்—வாழ வைக்கின்றது. 'அவன் வாழ்க!' என்று நாமும் வாழ்த்துவோம்.

இனிப் பாண்டியருடன் போர் நேர்ந்ததற்குக் காட்டும் காரணம் எண்ணிப் பார்க்க வேண்டுவதாகும். இவன் முதலில் சோழனை வென்றானாம் அது கண்ட பாண்டியர் தம் நாட்டுக்கு நலிவு வரும் என அஞ்சி, ஒன்றுசேர்ந்து இவனை எதிர்த்தார்களாம். இது எப்படிப் பொருந்தும்? இவன் அரசியல் அறிவு பெற்றவனாயின், சிறுசிறு நிலப்பகுதி

களை ஆண்ட பாண்டியரைத் தனித்தனி பொருது வெற்றி கொண்டபின் அல்லவா பெருஞ்சோழனை எதிர்க்கச் சென்றிருப்பான்? இந்த நூற்றாண்டில் ஹிட்லர் சிறுசிறு நாடுகளை வென்ற பிறகுதானே ரஷ்யா மீது திரும்பினான்? இதுதான் அரசியல் தந்திரமும் முறையும். இந்த உண்மை கூட அறியாத இவன் எப்படிப் பெருமன்னனாக முடியும்? மற்றும் இவன் சோழனை வென்றதற்கு அறிஞர் காட்டும் சான்று இப்பாடலில் வரும் அடிகளாகும்.

'நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந! (2: 9-11)

என்பன அவை. இவற்றில் சூரியன் அவன் கடலிலே பிறந்து, அவன் கடலிலே மறைகின்றது என்கின்றார். உண்மைதான். இதற்குச் சோழநாட்டுக் கரைக்கு வர வேண்டுவதில்லையே! குமரி முனையில் நாள்தோறும் இக் காட்சியை இன்றும் நாம் காண்கிறோம் குமரி முனை சில காலம் பாண்டியரிடமும் சில காலம் சேரரிடமும் இருந்தது என்பதை வரலாறு காட்டுகின்றது. எனவே, இவன் காலத்தில் குமரிமுனை சேரர் ஆணையின்கீழ் இருந்திருக்கும். சில ஆண்டுகளுக்கு முன்னரே, நம் கண் முன்னேயே அது சேர நாட்டோடு சேர்ந்து இருந்ததைக் கண்டோமல்லவா? எனவே, இதைக் கொண்டே இவன் சோழனை வென்றான் என்றும், அதனால் பாண்டியர் மாறுபட அவரை வென்ற படைக்குச் சோற்றளித்தான் என்றும் கூறுதல் எவ்வாறு பொருந்தும்? ஒரு கருத்தை முடிவு செய்துவிட்டு அதற்கேற்பப் பிற கருத்துக்களை மாற்றிக் கொண்டு போவது பொருந்துவதன்றே!

இவ்வாறு வேற்றுப் பொருள் கொள்வதற்கு அவர்கள் ஒரிரு காரணங்களைக் கொள்ளலாம். ஒன்று 3,500 ஆண்டுகளுக்கு முன் இம் மன்னனும் புலவரும் இருந்திருக்க முடியாது என்பது. அவர்கள் கடைச்சங்க காலத்தவர்களே

என்பர். அவர்கள் கடைச்சங்க காலத்தவர் என்பதற்குச் சான்று எங்கே உள்ளது? அப்படியே அப் பெயர் கொண்ட மன்னன் ஒருவேளை கடைச்சங்க காலத்தில் இருந்ததாக வைத்துக்கொண்டாலும், அப்பெயருடனே அவருக்கு முன் அக்குடும்பத்தில் வேறு ஒருவரும் இல்லை என்று சொல்ல முடியுமா? வரலாற்றில் இந்த முறை எங்கெங்கும் காணும் ஒன்றல்லவா? சேரமான்கள் பலர் சங்ககாலத்தில் வருகின்றனர். இவனுடைய சோறு இட்ட சிறப்பைக் கருதியே இவன் 'சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்' என வழங்கப்பெறுகின்றான். இவனுக்கு உரிய பாடல்களும் இல்லை. அதுபோன்று முரஞ்சியூர் முடி நாகராயர் என்பார் இந்த ஒரே பாடலைத் தவிர வேறு பாடலும் பாடவில்லை; எனவே, இது காலத்தால் முந்திய பாடல் என்று கொள்வதில் தவறு இல்லை. தொகுத்த புலவர் தமது கடவுள் வாழ்த்துக்குப் பின் காலத்தால் முந்தியதாகிய இப் பழம் பெரும் பாடலையே தேர்ந்தெடுத்திருப்பார் எனக் கொள்வது சிறந்ததன்றோ! இம்மன்னனை ஒத்த பேரும் புகழும் பெற்ற பழம்பெரு மன்னரைப் பற்றிய பாடல்களுட் சில அடுத்து வருவதும் எண்ணத்தக்கது

இந்த ஆசிரியர் பெயர் 'முடிநாகராயர்' என இராது என்றும், 'முடிநாகரியர்' என இருக்கும் என்றும் காட்டும் முறைபற்றி நாம் கவலை கொள்ளவேண்டா. எத்தனையோ பெயர்கள் காலப்போக்கில் சிதைவதும் கெடுவதும் உண்டு. இப்பெயர் அவற்றுள் ஒன்றா அல்லவா என்பது பற்றி இங்கே நாம் ஆராயத் தேவையில்லை. இரண்டும் பொருந்துவனவே! பலர் 'முடிநாகராயர்' எனவே கொள்கின்றனர் என்ற முடிவோடு நாம் அமைவோம்.

இனி, இப்பாடல் பொருள் மாற்றம் காண்பதற்கு மற்றொரு காரணம் அக்காலத்தில் வடநாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் தொடர்பு இருந்திருக்குமா என்ற ஐயமாகலாம். ஆனால் வரலாற்று வழியும் இப்பாட்டின் வழியும் அது இயல்வதே என்று கொள்ளல் பொருந்தும். சிந்துவெளி

நாகரிகம் திராவிட நாகரிகமே எனவும், பல தமிழ்நாட்டு அமைப்பு முறைகளை இங்கே காண இயலும் எனவும் அறிஞர் அறுதியிடுகின்றனர். 5000 ஆண்டுகளுக்கு முன் அங்கெல்லாம் பரவியிருந்த திராவிடர், பின்வந்த ஆரியருக்கு மெள்ள மெள்ள இடங்கொடுத்துத் தெற்கு நோக்கி வந்தனர் என்பதையும் வரலாறு காட்டுகின்றது. தம் பண்பாடும் பிறவும் கெடாதபடி மெள்ள மெள்ளத் தெற்கே வந்தார் களாயினும், அவர்தம் தொடர்பு வடநாட்டுடன் அடியோடு அற்றுவிடவில்லை என்பது துணிபு. எனவே, பாரதப் போர்க் காலத்தில் தமிழ்நாட்டார் அங்குச் செல்லவில்லை என்றோ, அவர்களுக்கு உதவவில்லை என்றோ கூறமுடியுமா? இப் பாண்டியர் பரம்பரை பற்றிய குறிப்புக்கள் வடநாட்டு வியாச பாரதத்திலும் பிறவற்றிலும் இருந்தன என்பதன்றி, நெடுந்தொலைவில் இருந்த சாவக நாட்டுக் குறிப்பிலும், வீர சோழனது காக்கிநாடாக் கல்வெட்டிலுங்கூட உள்ளன என்பதைக் கல்வெட்டு ஆராய்ச்சிகள் நன்கு காட்டுகின்றன அல்லவா?[1] எனவே, மிகு பழங்காலந்தொட்டுப் பிற தொடர்புகள் இல்லையெனினும், அரசியல் கலாசாரத் தொடர்பு கொண்டு தெற்கும் வடக்கும் வாழ்ந்தன என்றும், அதன் வழியில் பாரத காலத்தில் உதியன் பெருஞ்சோறு அளித்துப் போர்க்களத்தில் உதவினான் என்றும் கொள்ளல் தகும். இவன் காலத்தில் வட இமயம் அறிந்த ஒன்று என்பதும், அதைக் கொண்டே அரசரை நெடுங் காலம் வாழ்க என்று வாழ்த்தும் வழக்கம் உண்டென்பதும், பொதியில் தெற்கிலும் இமயம் வடக்கிலும் சிறந்திருந்தன என்பதும், இவற்றின் இடையில் தமிழர் தம் பண்பாடு கெடாத வகையில் மக்கட்பணி புரிந்துவந்தனர் என்பதும் இப்பாடல் ஒன்றாலேயே நன்கு விளங்கும்.

1. (a) S.I.I. Vol. I, p. 59

(b) Hulzack, Political History of Ancient India, p. 11.

'பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்
நா அல் வேத நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ அத்தை—அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கின துஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே! *(17-24)*

*என்று வாழ்த்துகிறார் புலவர்; மன்னன் இமயத்தையும் பொதியிலினையும் ஒத்து வாழ வேண்டும் என்கின்றார். ஆம்! அவன் வாழ்கின்றான்; இன்னும் அவை வாழும் வரையில் வாழ்வான் என்பது உறுதி. உலகம் நிலைகெட்டு ஒழுகலாறு நிலைகெடினும் அவன் சுற்றத்தோடு நெடுந் தொலைவு புகழ்பெற்று விளங்க வேண்டுமென வாழ்த்து கின்றார் புலவர். அக்காலத்தில் இமயமும் பொதியிலும் தமிழருக்கு ஒன்றாகவே காட்சி தருகின்றன. இமயத்து அந்தணர் அருங்கடனும், அருகே மான்துஞ்சும் இயற்கை யும் அவர் உள்ளத்தைப் பிணிக்கின்றன. ஆம்! அப் புலவர் அவனுடன் அங்கே சென்று உடனிருந்து ஆரியர் துவன்றிய பேரிசை இமயம் கண்டு, அவன் சோறிட்ட ஏற்றத்தையும் கண்டு பாராட்டியவராதல் வேண்டும் எனக் கொள்வது மிகவும் பொருந்துவதாகும்.*

*இனி, இமயம் பற்றி எண்ணும்போது, மற்றொன்றும் தோன்றுகிறது; சேரர்களுக்கு 'இமயவரம்பன்', 'வான வரம்பன்' என்னும் பெயர்கள் இருப்பதைப் பற்றியும் அறிஞர் ஐயம் கொள்ளுகின்றனர்; 'இமயத்தை எல்லையாக உடையவன்', 'வானத்தை எல்லையாக உடையவன்' எனப் பொருள் கொள்ளுதல் தவறு என்கின்றனர். இது எப்படி பொருந்தும்? அவ்வாறு அரசாண்ட மன்னரே இல்லை என்கின்றனர். 'குமரியொடு வட இமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்' என்ற இளங்கோவடி களின் உரை பொருளுரை அன்றோ! 'கயலெழுதிய இமய*

நெற்றியில் அயல் எழுதிய புலியும் வில்லும்' என்ற அடிகள் வெறுங் கற்பனைதானா? தமிழ் வேந்தர் இமயம் வரை சென்றதையும், வடவேந்தர் பொதிகை வரை வந்ததையும், இந்திய வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்கின்றார்களே! இனி 'வானவரம்பன்' என்பதற்கு 'வானத்தை எல்லையாக உடையவன்' என்று பொருள் கொண்டாலும் தவறு என்ன? இப் பெயர் சேரனுக்கு உரியது. அவன் நாடு வானோங்கிய மலைகளைக் கொண்டது. வான முகட்டைத் தொடுவன என அஞ்சக் கூடியவை அவை. அவற்றின் உயர்ச்சியாலே அவ்வாறு வழங்கலாம். மற்றும் நான் முன்காட்டியபடி குமரிமுனையில் இருந்து நோக்கின், கடல் வானொடு கவிந்து வானமுகட்டைத் தழுவிய காட்சியில் அவனை வானவரம்பன் என வாயாரப் பாடுவதும் தவறு இல்லையே! தரை ஆதிக்கமும் அதைச் சூழ்ந்த கடலாதிக்கமும் அவனிடம் இருந்தனவல்லவா? எனவே, இரண்டும் அச்சேர மன்னனுக்கு ஏற்ற பெயர்களே என்று கொள்ளுவதில் தவறு ஒன்றும் இல்லை. எனவே, 'வானவரம்பன்' என்ற பெயர் சேரர் களுக்கு நன்கு பொருந்துவதேயாம். அவர்தம் வானோங்கிய மலை எல்லையும், வற்றாத கடல் எல்லையும் அவர்களுக்கு என்றென்றும் அப்பெயரை வாழ வைத்துக் கொண்டிருக்கும் என்பது உறுதி.

இவ்வாறு எண்ணிப் பார்ப்பின், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே—எண்ண எல்லைக்கு அப்பாற்பட்ட நாளிலிருந்தே—இமயம் வரையில் தமிழர்தம் வாழ்வும் வளமும் பண்பாடும் பிறவும் சிறந்து ஓங்கியிருந்தன என்பது நன்கு தெளிவுறும். மற்றும், இங்கே நான் காட்டியவைதாம் முடிந்த முடிபுகள் என்றோ, இவற்றினும் வேறு முடிபுகள் இல்லை என்றோ நான் எல்லை கோலவில்லை. அறிஞர்கள் இத்துறையில் இன்னும் நன்கு ஆராய்ந்து இதுபோன்ற பாடல்களுக்கு மாறுபாடற்ற சிறந்த உரை நலங்களைக் கண்டு உணர்த்துவதோடு, அவற்றால் தமிழர்தம் பண்பாட்டு நெறியும் புகழும் சிறக்க வழி காணவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

# 9. இராமனும் இராவணனும்

தமிழ்நாட்டில் வழங்கும் வடநாட்டுப் பெருங்கதைகள் இரண்டு: ஒன்று இராமாயணம்; மற்றொன்று பாரதம். இரண்டுமே ஆரியர்கள் சிந்துசமவெளிக்கு வந்த பிறகு நடந்த கதைகள்—அல்லது—எழுதி வைத்த கதைகள் என்பர் ஆராய்ச்சியாளர். அவற்றை வடமொழியிலும் தமிழிலும் நல்ல காவியமாகவும் இலக்கியமாகவும் சிறந்த புலவர்கள் எழுதி வைத்துச் சென்றார்கள். தமிழில் கம்பர் தம் முழு ஆற்றலையும் பயன்படுத்தி இராமாயணம் என்னும் சிறந்த காப்பியத்தை எழுதியிராவிட்டால், நாட்டில் இத்துணை நாள் அந்த இலக்கியமும் அதில் வழங்கும் வரலாறும் உலவமாட்டா என்பது உண்மை. அதுபோன்றே வடமொழியில் வான்மீகியாரது வாக்கே அவ்வரலாற்றை வாழ வைக்கின்றது. பாரதமும் வடமொழியில் வியாசராலும் தமிழில் வில்லிபுத்தூரராலும் வாழ்ந்துவருகின்றது. இரு பெரு வரலாற்றுக் காலத்தையும் பற்றி ஆராய்ச்சியாளர் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த காலம் இன்றைக்கு 3,500 ஆண்டுகளுக்கு உட்பட்ட காலமாகும். இந்த இரு கதைகளும் அக்காலத்துக்குப் பின் எழுதப்பட்டனவேயாகும். இரண்டில் எது முந்தியது என்பது இன்னும் முடிவு செய்யப் பெறவில்லை. சிலர் இராமாயண காலம் முந்தியது என்பர்; சிலர் பாரத காலத்தை முன்னுக்குக் கொண்டு செல்வர். திரு பானர்ஜி அவர்கள் மகாபாரதமே காலத்தில் முந்தியது

எனவும், இராமாயணம் மிக மிகப் பிந்தியதெனவும் காட்டுவர்.[1] இவரைப் போன்றே வேறு ஆசிரியர் சிலரும் குறித்துள்ளனர்.[2] எனினும், சிலர் இராமாயணமே காலத்தால் முந்தியதெனக் காட்டுகின்றனர். பின்னதினும் முன்னதே வலியுடைத்தென்பது பலருடைய வாதமாகும். பரதனுடைய வமிசத்தவரே பாரதர் என்பதும், அப் பரதன் வழியே இந்தியா பாரத நாடு என வழங்கப்பட்டதென்பதும் எனவே அப் பரதனுடைய பரம்பரையை விளக்கிக்காட்டும் பாரதமே முற்பட்டதென்பதும் பலர் காட்டும் ஏற்புடைக் காரணங்களாகும். வேதத்திலும் இராமாயணத்தைக் காட்டிலும் பாரதமே முன்னால் குறிக்கப்பெற்றுள்ளது.[3] மற்றும், இராமாயணம் எழுதிய வான்மீகியாரது காலம் விண்டர்நிட்ஸ் என்பவரால் கி. மு மூன்றாம் நூற்றாண்டெனத் தீர்மானிக்கப்படுகிறது.[4] ஆனால், பாரதத்தின் காலமோ, கி. மு. பதினான்காம் நூற்றாண்டாக இருக்க வேண்டுமென்று இராய் சௌதிரி அவர்கள் பல ஆதாரங்களைக் கொண்டு ஆராய்ந்து, அறுதியிடுகின்றார்.[5] வின்செண்ட் ஸ்மித்து அவர்கள் இரண்டும் ஏறக்குறைய ஒரே காலத்தனவாகத்தான் இருக்க வேண்டுமென்றும், பாரதத்தின் பெரும்பகுதி கி. பி. 200லே தான் எழுதப் பெற்றிருக்க வேண்டுமென்றும், இராமாயணத்திலும் சில பகுதி வான்மீகியால் எழுதப்படவில்லை என்றும் காட்டி

---

1 Pre-Historic, Ancient and Hindu India, by Banerji, p. 47.

2. Cambridge History of India Vol. I.

3. History of India, by Sinha and Banerji, p. 45

4. A History of India, by Winternitz, Vol. I.

5. Political History of Ancient India, by Hemchandra Raychaudhri p. 20

யுள்ளார்.[1] இவை பற்றிய ஆராய்ச்சிகளெல்லாம் நமக்குத் தேவை இல்லை. என்றாலும், வரலாற்று ஆசிரியர் பலர் காட்டியுள்ளபடி தமிழ் நாடு இலக்கிய வளம் சிறந்து விளங்கிய கடைச்சங்க காலத்தை ஒட்டியும் அதற்கு முன்னும் வடக்கும் தெற்கும் எவ்வகையில் இணைந்திருந்தன என்பதைக் காட்ட இவை ஓரளவு துணை செய்கின்றன என்னலாம்.

தமிழ் இலக்கியங்களில் இராமாயணம் பாரதம் என்னும் இரண்டுமே வழக்கத்தில் உள்ளதைக் காண்கிறோம். கடைச் சங்ககாலத்தில் அக் கதைகளை யாரும் தமிழில் மொழி பெயர்க்கவில்லை என்றாலும், அவற்றின் குறிப்புக்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெறுவதைக் காணலாம்.

'வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலிஅவிந் தன்றுஇவ் அழுங்கல் ஊரே.'
(அகம். 70 : 15-17)

என்று இராமன் கடற்கரையில் மந்திராலோசனை செய்யும் காலத்தில் அவன் பறவைகள் ஒலியை அடங்கினதைக் காட்டுகின்றது அகநானூறு.

'கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலம்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாஅங்கு'
(புறம். 378 : 18-21)

எனச் சீதையின் அணிகளைக் கிட்கிந்தையில் குரங்குகள் கண்ட சிறப்பினையும் இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றதையும் புறநானூறு குறிக்கின்றது.

---

2. The Oxford History of India, by Vincent A. Smith p. 57. (A. A. Macdonell's History of Sanscrit Litrature)

'இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமைஅமர்ந்து உயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல, என்று
*(கலி. 38 : 1-5)*

கலித்தொகை இராவணன் கயிலையை எடுக்க நினைத்த திறனை விளக்கிக் காட்டுகின்றது. இவ்வாறே பல பாரதக் கதைகளும் சங்க இலக்கியத்தில் காட்டப்பெறுகின்றன. பாரதப் போரில் சோறிட்டுப் புகழ் பெற்ற சேரமன்னனைப் பற்றி இந்நூலின் மற்றொரு கட்டுரை நன்கு விளக்கிக் காட்டுகின்றது இன்னும் அரக்கு இல்லில் தீ வைத்ததையும் (கலி. 25 : 1-4), கன்னன் சூரியன் மகன் என்பதையும் (கலி. 108 : 13), திரௌபதியின் கூந்தலைத் துச்சாதனன் பிடித்து இழுத்ததையும் (கலி. 101 : 13), வீமன் அரக்கு மாளிகையிலிருந்து ஐவரைக் காத்ததையும் (கலி. 25 : 7-8). வீமன் துரியோதனன் தொடையை முறித்து உயிர் குடித்ததையும் (கலி. 52 : 2, 3) கலித்தொகை வாயிலாகக் காணலாம். இவை பற்றிய ஆராய்ச்சிகளெல்லாம் ஈண்டு நமக்குத் தேவை இல்லை. இவையெல்லாம் கடைச்சங்ககாலத்திலேயே வடநாட்டு இரு பெருங்கதைகளும் தமிழ்நாட்டு மக்களுக்கு அறிமுகமாய் இருந்தன என்பதைக் காட்டுகின்றன.

இனி இராமாயணத்தில் வரும் இராமனையும் இராவணனையும் எண்ணிப் பார்த்தலே, இங்கு நான் செய்ய விழையும் பணி. இராமன் வடக்கிலிருந்து தெற்கே வந்தவன். இராவணன் தெற்கே ஒரு தீவில் ஆண்டவன். தெற்கே வந்த இராமனுடைய மனைவியை இராவணன் தூக்கிக்கொண்டு செல்ல, அதனால் போர் மூள, இராவணன் சுற்றத்தோடு கொல்லப்பட, இராமன் தன் மனைவியை மீட்டுச் சென்றான். இதுதான் இராமயணக் கதையின் அடிப்படை. சாதாரணமாக யாரும் வடக்குத் தெற்கு என்றதும் ஆரியர் திராவிடர் என்றே எண்ணிவிடுகின்றனர்;

இராமனை ஆரியன் என்றும் இராவணனைத் திராவிடன் என்றும் கூறிவிடுகின்றனர்; அதனால், வரலாற்றுக் காலத்துக்கு முன் நாடறியாத ஆரிய திராவிடப் போராட்டம் இருந்ததாக எண்ணி மாறுபடுகின்றனர். அதனால் பல சொற்போர்களும், கொள்கை மாறாட்டங்களும் நிகழ்கின்றன. சாதாரண மக்கள் மட்டுமின்றித் தெளிந்த வரலாற்று ஆசிரியர் சிலரும் இந்த வழியில் தவறிவிடுகின்றனர். வரலாற்றுக்கு முற்பட்ட இந்தியாவைக் காட்ட வந்த பானர்ஜி அவர்கள், இராமனுடைய மனைவியை ஒரு திராவிட மன்னன் கொண்டு சென்றான் எனவே குறிக்கின்றார்.[1] மேலைநாட்டு ஆராய்ச்சியாளர் சிலர் இராமாயணம் வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்குக் குடியேறிய ஆரியர் வரலாற்றை விளக்கும் கற்பனைக் காவியம் போன்றது எனக் கூறுகின்றனர்.[2] இவ் வரலாற்று ஆசிரியர்களும் இவ்வாறு வழங்குவதற்குக் காரணம் வடக்குத் தெற்கு என்னும் திசை மாறாட்டமேயன்றி வேறு அன்று.

ஏழாம் நூற்றாண்டில் சமயத்தைப் பரப்பிய ஞான சம்பந்தர் தம்மை வேதம் காக்கத் தோன்றியவராகவே பாடுகிறார். அவருடைய பல பாடல்களில் வேதம் பற்றியும், வேள்வி பற்றியும், அவற்றைப் பழிப்பார் கொடுமைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. அவர் வாய் மொழிப்படி அவரை ஆரிய மரபினர் எனக் கொள்ளவேண்டியுள்ளது. அவர் தம்மைத் தமிழ் விரகன், தமிழ் ஞான சம்பந்தன் என்றெல்லாம் போற்றிக்கொண்டாலும், அவர் வேதத்தைக்

---

1. The Ramayana is outcome of a hero land describing the triumph of a chief of Kosala clan, whose wife was carried away by a Dravidian Chief. (Pre-historic, Ancient and Hindu India, by Banerji, p. 47)

2. History of India, by Sinha and Banerji, p. 47.

காப்பதை விரதமாகக் கொண்டவர் என்பதை அவர் பாடல்கள் நன்கு விளக்கிக் காட்டுகின்றன. என்றாலும், அவரை உலகுக்கு அறிமுகப்படுத்த விரும்பிய சங்கராசாரியார் அவர்கள், அவரைத் 'திராவிடச் சிசு' என்று வழங்குவதைக் காண்கிறோம். இவ்வாறு வடக்கு என்றதும் ஆரியர் என்ற எண்ணமும் தெற்கு என்றதும் திராவிடர் என்ற எண்ணமும் உண்டாகிவிடுகின்றன. இன்றும் நாட்டில் இந்தப் போராட்டம் நின்றபாடில்லை, ஸ்மித்து கூறுவது போன்று, ஓரளவு ஆரியர் தம் போராட்டத்தில் திராவிடரை வென்றுவிட்டதாகக் காணப்படினும், இன்னும் அவர்தம் போராட்டம் நீங்கவில்லை என்பதை நாட்டு நிகழ்ச்சிகள் நன்கு காட்டுகின்றன.[1] எனவே, இவற்றை எண்ணி, இராமனையும் இராவணனையும்கூட ஆரியனாகவும் திராவிடனாகவும் காண்கின்றனர். இந்த அடிப்படையிலே நாட்டில் பல போராட்டங்களும் கட்சி வேற்றுமைகளும் வளர்கின்றன. ஆயினும், உண்மையில் ஆராய்ந்து பார்ப்பின், இந்த வேறுபாட்டுக் கொள்கைக்குச் சிறிதும் இடம் இல்லை என்பது நன்கு விளங்கும்.

தமிழ் அறிஞர் ஒருவர் இராவணனை ஆரியரின் வேறுபட்டவன் என்றே எழுதியுள்ளார்.[2] இராவணனைப் பெருவீரன் என்பதற்கு யாரும் பின்வாங்கமாட்டார்கள். என்றாலும், அவனுடைய மரபு பற்றி ஆராயும்போதுதான் வேறுபட்ட கருத்து உண்டாகின்றது. இராமாயணத்தில் குரங்குகளாகவும், அரக்கர்களாகவும் காட்டப்பட்டவர்கள் தமிழர்களே என்றும், எனவே அது திராவிடரைப் பழித்துரைக்கும் ஒரு நூலென்றும், அதை ஒதுக்க நினைப்பவர் சிலர். எனினும், காய்தல் உவத்தல் இன்றி

1. The Oxford History of India (Old edition) by A. V. Smith, p. 47

2. Ravana the great, by M. S. Pooranalingam Pillai.

இராமாயணத்தை ஆராய்ந்து நோக்கின், அதில் திராவிடர்கள்—சிறப்பாகத் தமிழர்களும் தமிழ்நாடும்-நன்கு போற்றப்படுகிறார்கள். கம்ப ராமாயணத்தில் சீதையைத் தேட வானரரை ஏவும் சுக்கிரீவன், அனுமன் முதலானோர்க்குத் தமிழ்நாட்டைப் பற்றி விளக்கும் பாடல்கள்[1] சிறந்தனவாகவே அமைகின்றன. வான்மீகியாரும் அப்படியே தமிழ் நாட்டைப் பாராட்டியுள்ளார் என வடநூல் அறிந்தவர் கூறியுள்ளனர். எனவே, இராமாயணத்தில் தமிழ்நாடும் அதைச் சுற்றியுள்ள திராவிட நாட்டுப் பிற பகுதிகளும் இழிவு படுத்தப்பெறவில்லை அந்தக் கதை வடக்கே ஆரிய பூமியில் பிறந்த இராமனுக்கும் எங்கோ தெற்கே ஒரு தீவில் வாழ்ந்த அசுரனாகிய ஆரிய இராவணனுக்கும் நடந்த ஒரு பெரும் போராகும். அந்த இராவணன் அறிவாலும் ஆற்றலாலும் பிறவற்றாலும் உயர்ந்தவன் என்பதைக் கம்பரும் வான்மீகியாரும் விளக்குவதாலேயே அறியலாம். எனினும், அவர்கள் அவனைத் திராவிடன் என்று எங்கும் குறிக்கவில்லை; அதற்கு மாறாக, அவனை ஆரியன் என்றே திட்டவட்டமாகக் குறிக்கின்றார்கள்.

திரு. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் தம் நூலில் இராவணன் பேராண்மை உடையவன் என்பதைக் குறிக்கின்றார். அவரும் அவனைத் திராவிடன் எனக் குறிக்கவில்லை. எனினும், சிலர் நாம் மேலே கண்டபடி, இராவணன் தெற்கில் இருந்தமையின் திராவிடன் எனக் கொள்ளுகின்றனர். தெற்கே இருப்பதால் அனைவரும் திராவிடராக மாட்டார். அதே போன்று வடக்கே இருப்பதால் அனைவரும் ஆரியராக மாட்டார். எனினும், இந்தக் கொள்கை எப்படியோ நாட்டில் நிலைத்துவிட்டது. ஆராய்ந்து பார்ப்பின், இராம இராவணர் போராட்டம் இரு வேறு வகைப்பட்ட ஆரிய மரபினருக்கு இடையில் நடைபெற்ற ஒரு போரே என்பது நன்கு விளங்கும்.

1. கிட்கிந்தா காண்டம், நாடவிட்ட படலம், 26-31.

தவறு இழைப்பவர், தோல்வியுற்று இறப்பவர் அனைவரும் தம் இனத்தவர் என்ற தாழ்வு மனப்பான்மை தமிழர் சிலரிடம் உள்ளமையே இந்த எண்ணத்துக்குக் காரணமாகின்றது. தோற்றவர் அனைவரும் தமிழர் என முடிவு செய்கின்றனர்; இரணியன், சூரபதுமன், இராவணன் அனைவரும் தமிழரே என்கின்றனர். எனினும், நன்கு ஆராய்ந்து பார்த்தால் அனைவரும் ஆரிய மரபினரே என்பது தெளிவாக விளங்கும். தோல்வி மனப்பான்மையை விட்டுத் தமிழர் எண்ணுவாராயின், இதை ஏற்பர்.

இந்தப் புராண இதிகாசங்களெல்லாம் ஆரியர் வட விந்தியாவுக்கு வந்த பின்னர் உண்டான நூல்களேயாகும். அவர்கள் தங்கள் கருத்துக்களைப் பரப்பவும், தங்கள் ஆதிக்கம் விரிந்துள்ளதைக் காட்டவுமே இராமாயணம் போன்ற கதைகளை எழுதினார்கள் என்பர் வரலாற்று ஆசிரியர். எனவே, இவை நடைபெற்றவை என்றே கொள்ளத் தேவை இல்லை. அன்றி, அவ்வாறு நடை பெற்றவை எனக் கொண்டாலும், அவர்களுக்குள் நடை பெற்ற ஒரு போராட்டமேஅன்றி, திராவிடருக்கும் இக்கதைக் கும் தொடர்பே இல்லை. ஆயினும், இராவணன் தெற்கே உள்ள ஒரு தீவில் வாழ்ந்தவனாகக் காட்டப் பெறுகின்றமை யின், அங்கே எப்படி ஆரியர் வந்திருக்கக் கூடும் என்ற ஐயம் எழுவது இயல்பு. இதை வெறுங்கற்பனைக் காவியம் எனக் கொள்ளின், தங்கட்கு மாறுபட்டவராகிய திராவிடர் வாழ்கின்ற தெற்கை எல்லையாக்கி ஆரியர் கதை எழுதினர் எனத் தள்ளிவிடலாம். அன்றி, உண்மையாகவே நடந்த தாகக் கொண்டாலும், அந்த இராவணன் ஆண்டதும் இன்றும் வீடணன் மாளாது அரசியற்றுவதுமாகிய தீவு திட்டமாக இந்த இலங்கை அன்று என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும். சிவதருமோத்திரம் என்னும் நூல் பொதிய மலைக்குத் தென்பால் மகேந்திர மலை இருந்ததெனவும், அதன் அடிவாரத்தில் பொன் மயமான இலங்கை இருந்ததெனவும் குறிக்கிறது.

'துங்கமலி பொதித்தென்பால் தொடர்ந்தஅடி வாரத்தில்
அங்கனக இலங்கையுமேழ் வரைச்சாரல் அடித்தேசம்'

என்பன அவ்வடிகள். இதன் உரையாசிரியர், 'மகேந்திர மலையின் அடிவாரத்திலுள்ள கனக மயமான இலங்கையின் பகுதி கடலுள் மறைந்ததென்று கூறப்பட்டுள்ளது' எனக் காட்டுகின்றார். இராமாயண காலத்திலோ, மகேந்திரத் திற்கும் இலங்கைக்கும் நடுவில் கடல் இருந்ததாகக் கூறப் பட்டுள்ளது. (கிட்கிந்தா காண்டம்). இன்றும் பொதிய மலைக்குத் தெற்கே அத்தகைய மலை ஒன்றும் இல்லை என்பதை நாம் அறிவோம். எனவே, அது கடலூழிகளுள் மறைந்திருக்க வேண்டும். இலங்கையும் அவ்வாறே அழிவு பெற்றிருக்க வேண்டும். இராவணன் வாழ்ந்த இலங்கைக்கும் இன்றைய இலங்கைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. வான் வழிப் பறக்கும் ஆற்றலும் மாயச் செயல் வல்ல தீரமும் பெற்ற ஆரிய நாட்டு இராவணன், வடக்கிருந்து வான் வழி வந்து யாரும் நுழைய முடியாத ஒரு தெற்குத் தீவின்கண் தன் நாட்டை அமைத்துக்கொண்டான் என்பதே பொருத்த மானதாகும்.

திரு. வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் அவர்கள் ஆரியர் கைபர் கணவாய் வழியாக இந்தியாவில் புகுமுன்னரே, மேலை நாட்டு ஆரியர்களோடு அரபிக் கடல் வழியே தமிழர் வாணிபம் செய்தனர் எனக் குறிக்கின்றார்.[1] அவ்வாறு தொடர்பு கொண்ட ஆரியருள் சிறந்த வீரன் அராபிக் கடல் வழியாகத் தெற்கேயுள்ள ஒரு தீவிற் புகுந்து, தன் ஆணையைச் செலுத்திச் சிறந்து விளங்கினான் என்று கொள்வதிலும் தவறு இல்லை. (சாத்திரியார் கொள்கைப் படி ஆரியர் ஐரோப்பாக் கண்டத்து ஸ்காந்திநேவியா விலிருந்து வந்தவராவர்.) எனவே, ஒரு பிரிவு தரை வழி வடவிந்தியாவுக்கும், ஒரு பிரிவு கடல் வழி இலங்கைக்கும்

1. தமிழ் மொழி வரலாறு, பக், 9, 10.

வந்தன எனக் கொள்வது பொருந்துவதாகும். மற்றும் உள்ள உலகங்களையும் அட்ட திக்குக்களையும் தன் ஆணை வழிப் படுத்திய ஒருவனுக்கு இஃது அரிய செயலன்று. எனவே, எப்படி எண்ணினாலும் அவனைத் திராவிடனாகக் கருதத் தேவை இல்லை என்பது துணிபு.

இனி, பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் இராவணன் மரபைப் பற்றி ஆராய்கின்றார்கள். அவர்கள் பின் எவ்வளவு காரணம் காட்டினாலும் அவன் பிரமன் மரபில் வந்தவன் தான் என்பதைக் கூறாதிருக்க இயலவில்லை. அவர்தம் மரபு வழியே அவனை ஆரியன் எனத் திட்டமாகக் காட்டுகின்றது. அவர் காட்டும் மரபுப் பட்டியலை உள்ளபடியே தருகிறேன்.

பிரமன்[1]

மரீசி | மனு | புலத்தியன்

புலத்தியன்
|
தேவ வாருணி
|
விச்சிரவசு

| | | | |
|---|---|---|---|
| குபேரன் | கரன் | திரிசிரன் | இராவணன் |
| தேவநிதி | மகோதரன் | தூஷணன் | கும்பகர்ணன் |
| (Devanini) | மாரீசன் | வித்யுத் | சூர்ப்பநகை |
| | பிரகத்தன் | சீவூகன் | விபீடணன் |
| | கும்பினாசி | கலை | கேகசி |
| | புஷ்போற்காதி | (Kalai) | (Kekasi) |
| | (Pushpothkathi) | | |

இவர்களைத் தவிர்த்து, பிரமன் மக்களுள் இருவராகிய மரீசி, மனு வழியேதான் இந்திரன், வருணன், சூரியன், அக்கினி, வாயு, சந்திரன் ஆகியோர் பிறந்ததையும் காட்டி

1. Ravana the great, p. 17,

யுள்ளார். இவற்றையெல்லாம் காணின், இராவணன் யாதொரு கலப்புமற்ற ஆரியப் பரம்பரையினன் என்பது நன்கு விளங்கும்.

என்றாலும், பிள்ளை அவர்கள் அந்தப் பரம்பரையினரை இரண்டு வகையாகப் பிரிக்கின்றனர். ஒரு வகையாரை யட்சர்களென்றும் மற்றொரு வகையாரை இராட்சசர்களென்றும் காட்டுகின்றார். யட்சர்கள் தேவர்களாகிக் கடவுளர்களால் விரும்பப்பட்டுத் தேவருலகத்தில் வாழ்ந்தார்களென்றும், இராட்சசர்கள் தேவர்களுக்கு விரோதிகளாகி வேறு காடுகளிலும் தீவுகளிலும் வாழ்ந்தார்களென்றும் குறிக்கின்றார். அவர் கூற்றின்படியே ஆராய்ந்தால், பிரமன் மரபிலே—அல்லது ஆரிய மரபிலே—பிறந்த இருவேறு மரபினர் இவ்வாறு தமக்குள் வேறுபட்டுப் பிரிந்தனர் என்று கொள்வதே பொருத்தமானதாகும். மற்றும் அந்த வேறுபாடு அவர்தம் முன்னோர்தம் உரிமை மகளிரின் வழிப் பிறந்த மக்களுக்கும், மற்ற மகளிர் வழிப் பிறந்த மக்களுக்கும் இடையில் எழுந்த போட்டியோ என நினைக்க வேண்டியுள்ளது. பின்னாள் நந்தர் மரபில் வேற்று மகளுக்குப் பிறந்த சந்திரகுப்தனுக்கும் நந்தருக்கும் ஆட்சி பற்றி நடந்த ஒரு போரைப்போன்றதே இந்த இராமாயணப் போர் என்று கருத இடமிருக்கிறது.

திரு. பிள்ளை அவர்கள் இராக்கதர்கள் நல்ல நிலையில் வாழ்ந்தார்கள் எனக் காட்டுகின்றார். அது இராமாயணத்திலேயே நன்கு விளக்கப்பட்டுள்ளது. அனுமன் போன்ற பகைவர் வாக்கிலேயே இலங்கையின் ஏற்றத்தையும் சிறப்பையும் புகழ்ந்து கம்பர் இலங்கை எனும் காவல் மாநகரைப் பாராட்டுகின்றார். எனவே, அது பற்றியும் ஐயம் கொள்ளத் தேவை இல்லை. பிள்ளை அவர்கள் அதற்குக் காட்டும் காரணத்தைக் காண்போம். 'ரக்ஷா' என்ற வடமொழிச் சொல்லிற்குக் காப்பாற்றல் என்ற பொருள் உண்டன்றோ? அந்த அடிப்படையில் 'ரக்ஷிப்பவர்' இராக்கதர் என்கின்றார்.

இரட்சகர் நாடு ஒரு சிறந்த நாடு (Welfare State) என்கின்றார். இவ்வாறு அகத்தியர் இராமனுக்குப் பஞ்சவடியில் விளக்கிக் காட்டி அவனைத் தென்னாட்டுக்கு அனுப்பினாராம். இது கம்பர் நூலிலில்லை. வான்மீகத்தில் உள்ளது போலும்! எப்படியாயினும், அக் கருத்துச் சரி என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இராவணன் சீதையைக் கொண்டு சென்ற ஒரு கொடுமையைத் தவிர, வேறு ஒரு கொடுமையும் செய்தறியாதவன் என்பதைக் கம்பரே தம்வாக்கால் விளக்கிக் காட்டுகிறார். அதையும் கண்டு மேலே செல்லலாம்.

'வையம் தந்த நான்முகன் மைந்தன் மகன்மைந்தன்
ஐயன் வேதம் ஆயிரம் வல்லோன் அறிவாளன்
மெய்யன்பு உன்பால் வைத்துள தெல்லாம் வினை வென்றோன்
செய்யும் புன்மை யாதுகொல், என்றார் சிலரெல்லாம்'
(காட்சிப் படலம், 149)

என்பது கம்பர் வாக்கு. இதில் அவன் வினைகளையெல்லாம் வென்ற மேலோன் என்றும் சீதையைக் கவர்ந்ததே அவன் சிறு தொழில் என்றும் அரக்கியர் கூற்றாகக் கம்பர் காட்டிய உண்மை நன்கு புலனாகும்.

இப்பாட்டு வழியே கம்பர் இராவணன் புலத்தியன் மரபில் பிறந்தவன் என்ற உண்மையை நன்கு நிலை நாட்டுகின்றார். இராவணன் உலகத்தை உண்டாக்கிய பிரமன் வழி வந்தவன் என்றும், வேதங்களில் வல்லவன் என்றும் கம்பர் காட்டுகின்றார். இவ்வாறு பல இடங்களில் இராவணன் ஆரியன் என்பதைக் கம்பர் காட்டுவதை மேற்கோளாகக் காட்டினாலே அவனைப் பற்றிப் பலர் திராவிடன் எனக் கொள்ளும் பான்மை அகலும் என எண்ணுகின்றேன்.

கும்பகருணனிடம் வீடணன் போர் தொடங்குமுன் வருகிறான்; வந்து, அவனையும் தன்னைப்போல இராமனிடம் சரண் அடையுமாறு வேண்டுகின்றான்; இராமனைச் சரண் அடைந்தால், இலங்கையைப் பெறலாம் என ஆசை

ஊட்டுகின்றான். எனினும், கும்பகருணன் அதற்காக அவன் பக்கம் செல்ல விரும்பவில்லை. ஆயினும், புலத்தியன் வழி வந்த தனது பிரம மரபு கெடக் கூடாது என்பதே அவன் ஆசை. தம்பி வீடணன் இராமன் பக்கம் சென்றதால், தாம் அனைவரும் இறந்த போதும் அவன் வழி தமது மரபு தழைக்கும் என உணர்ந்தவன் அவன்; எனவே, எதிர்பாராது அங்கே போருக்கிடையில் அவனைக் கண்டதும் பதறுகிறான்; அவனும், போரிடையில் இறந்துவிட்டால் மரபு பொன்றுமே எனக் கவன்று பேசுகிறான்.

'குலத்தியல்பு அழிந்த தேனும் குமரமற் றுன்னைக் கொண்டே
புலத்தியன் மரபு மாயாப் புண்ணியம் பொருந்திற்று என்றுன்
வலத்தியல் தோளை நோக்கி மகிழ்கின்றேன்!'

(கும்பகருணன் வதைப்படலம், 127)

எனக் கூறுகின்றான். இதிலும் அவர்கள் மரபு பிரம மரபு என்பது நன்கு காட்டப்பட்டுள்ளது. இனி மற்றோர் இடத்தில் கம்பர் பாடலுக்கு உரையெழுத வந்த வை.மு.கோபலாகிருஷ்ணமாசாரியார் அவர்கள், இராவணன் பிரம குலத்தவன் என்பதைத் தமது உரை மூலம் நன்கு நிலை நாட்டுகின்றார். சுந்தர காண்டத்து ஊர் தேடு படலத்துள் வரும் ஒரு பாடலுக்கு அவர் எழுதும் உரையைக் காண்போம்.

'முழுவா னவரால் உலகமொரு மூன்றும் காக்கும் முதல்தேவர்
மழுவாய், நேமி, குலிசத்தின் வாய்மை துடைத்த மார்பானை'.

(ஊர்தேடு படலம், 216)

என்பது கம்பர் வாக்கு. இதற்குச் சிறப்புரை கூற வந்த உரையாசிரியர், 'திரி மூர்த்திகளுள் போர் முயற்சி இல்லாது வேதம் ஓதிக்கொண்டிருப்பவனும் இராவணனது குலத்துக்கு ஆதி புருஷனுமான பிரமனை நீக்கி, இந்திரனைக் காட்டி, அம் மூவரது படைக்கலங்களும் இவனது மார்பில் பட்டு அதனை ஊறுபடுத்த மாட்டாமல் சிறப்பிழந்தன என இராவணனது மார்பின் வலியை வருணித்தார்,' (சுந்தர

காண்டம், 269 உரை) என எழுதுகின்றார். எனவே, பிரம குலமே இராவணன் குலம் என்பது தேற்றம்.

இன்னும் எத்தனையோ ஆதாரங்கள் இராமாயணத்திலிருந்து காட்டலாம். எனினும், இவை அமையும் என எண்ணுகின்றேன். மற்றும், இராவணன் வேதம் வல்லவன் என்பது அவன் கயிலையின்கீழ் இருந்து சாம வேதம் ஓதியமையால் நன்கு புலனாகும். மற்றும் சிலவிடங்களில் அவனை ஆசிரியர்கள் 'ஆரிய' என்றே விளிப்பதைக் காண்கின்றோம். அனுமன் அவனைக் கண்டபோது, பல மொழியில் வல்ல சொல்லின் செல்வனாகிய அவ்வனுமன், இராவணனுடன் எம்மொழியில் பேசுவது என எண்ணி, பின் அவனது ஆரியகுல மரபு நோக்கி, ஆரியமொழியில் பேசினான் என்று வான்மீகியார் கூறியுள்ளதாகக் காட்டுவர். எனவே, ஆரிய மன்னனாகிய இராவணனை வலியத் திராவிடனாக்கி, நாட்டில் இந்த ஆரியத் திராவிடப் போராட்டம் இல்லாத அந்தக் காலத்தில் இருந்ததாகக் கற்பனை செய்தல் நாட்டு நலனுக்குத் தேவை இல்லாதது; ஒரு சிறிதும் பொருந்தாது.

எனவே, இராமனும் இராவணனும் ஒரே பிரம குலத்தில் பிறந்தவர்களே என்பதும், தாய்வழித் தந்தை வழி முறையில் இருவேறு வகைப்பட்ட ஆரிய மரபினர்க்கும் யாகம் வளர்த்தல் முதலியவற்றில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்திருக்கலாம் என்பதும், அவர்கள் பெண் காரணமாகப் பெரும்போர் விளைத்து மாபெருங்காவியம் உண்டாகக் காரணமாய் நின்றார்கள் என்பதும் அந்தப் போருக்கும் தமிழ் நாட்டுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதும் இராவணனுடைய இலங்கை இன்றைய இலங்கையாய் இருந்திருக்க முடியாதென்பதும், இவற்றின் அடிப்படையை மறந்து இராமாயணம் ஆரிய திராவிடப் போராட்டத்தின் அடிப்படை என்று கூறுவது நாட்டிற்குத் தேவையற்ற வாதம் என்பதும், ஒரே மரபுக்குள் நடைபெற்ற ஒன்றை நடுவில் தம்மதாகத் தமிழர் கருதுதல் தவறு என்பதும் இந்தக் கட்டுரையால் நன்கு தெளிவாகும்.

# 10 நந்தரும் மௌரியரும்

இந்திய நாட்டு வடமேற்குக் கணவாய் வழியாகக் கடந்த நான்கு அல்லது ஐந்தாயிர வருடங்களாகப் பலப்பல இனத்தைச் சேர்ந்த மக்கள் மெள்ள மெள்ள உட்புகுந்து சிந்துநதிக் கரையிலும், அதன்பின் கங்கைச் சமவெளியிலும் குடியேறியிருக்கிறார்கள். மேற்கே கிரேக்க நாடு தொடங்கி, கிழக்கே மத்திய ஆசியா, சீன நாடு வரையிலிருந்து பல இனமக்கள் கூட்டமாகப் படையெடுத்தும், பண்பாட்டின் வழியும் வடவிந்திய எல்லை வந்து தங்கள் ஆதிக்கத்தையும் ஆணையையும் நிலைநாட்டியுள்ளார்கள். வரலாற்றுப் பேராசிரியராகிய ஸ்மித்து அவர்கள், ஆரியர் பல பாகங்களுக்குப் பிரிந்து போக, இந்திய எல்லையில் இவ்வாறு வந்தவர்களே இருக்குவேத ஆரியர்கள் என்று குறிக்கின்றார்கள்.[1] பார்னெட்டு என்பவர் செய்த ஆராய்ச்சியால் இரு முறை ஆரியர்கள் இந்தியாவில் புகுந்தார்கள் என்பதும், அவர்கள் கி மு. 2500 லும் 1500லும் வந்தவர்கள் என்பதும் புலப்படுகின்றன.[2] அக்காலத்திலெல்லாம் தெற்கே பாண்டியரும் சோழரும் சேரரும் ஆந்திரரும் ஆண்டனர் என்பதும், அவர்தம் மொழிகள் தமிழும் தெலுங்கும் என்பதும், தமிழ் எழுத்துக்கள் செமிட்டிக்கு (Semitic) இனத்தைச் சேர்ந்தவை என்பதும் புலப்படுகின்றன.[3]

---

1. Oxford History of India, Vol. I, pp. 70-72.
2. Antiquities of India, by Barnet, pp. 7 and 8.
3. Historical Inscriptions of South India, by Robert Sewell, p. 2.

எனவே, தென்னாட்டு மக்களாகிய திராவிடர்கள். ஆரியர்கள் இந்திய எல்லையில் புகுந்த அந்த நாளிலேயே தங்களுக்கெனத் தனிப் பண்பாடும் நாகரிகமும் மொழியும் பெற்று வாழ்ந்தார்கள் என்பது அறியக் கிடக்கின்றது. வடநாட்டிலும் ஒரு காலத்தில் அவர்கள் பரவி இருந்தார்கள் என்பதைச் சிதைந்த சிந்துவெளி நாகரிகம் நமக்கு நன்கு காட்டுகின்றதன்றோ?

வருவிருந்து பார்த்திருந்து, வந்தவர்களுக்கு வழிவிட்டு, தம் வாழ்வைத் தென்னாட்டு எல்லையிலேயே அமைதியாக அமைத்துக்கொண்ட திராவிடர் - சிறப்பாகத் தமிழர் - வடவிந்தியாவில் ஆணை செலுத்தவில்லை என்று கொண்டாலும், அன்றுதொட்டு இன்றுவரை வடவிந்திய மக்களோடு பல வகையில் தொடர்புகொண்டே வாழ்ந்தனர் என்பது தெரிகின்றது. தமிழ்நாட்டு இலக்கியங்களும், வடநாட்டு வரலாற்றுக் குறிப்புக்களும் இவ் வுண்மையை நன்கு விளக்குகின்றன. அவற்றுள் ஒன்று, மௌரியரின் தென்னாட்டுப் படையெடுப்பாகும்.

கி.மு. ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகு இந்தியாவில் சிறுசிறு அரசுகள் பல தோன்றலாயின. அவை தமக்குள் மாறுபட்டு போர் விளைத்துத் தம் ஆணையைப் பரப்ப முயன்று கொண்டிருந்தன. அதே வேளையில் மேலை நாட்டுக் கிரேக்க நாட்டிலிருந்தும், பாரசீகம் போன்ற பிற நாடுகளிலிருந்தும் சில அசுகள் வந்து இந்திய நாட்டில் தங்கள் ஆணையைப் பரப்ப முயன்றன. வடநாட்டுக்கு அரசியல் காரணமாக வந்த அந்த மேலை நாட்டினர் சிலர், வாணிபத்தின்பொருட்டுத் தென்னாட்டுக்கும் வந்தனர். தமிழ் நாட்டு மேலைக் கடற்கரையில் பொன்னும், மிளகும், வாசனைப் பொருள்களும் வாணிபம் செய்யப் பெற்றன. கீழைக் கரையில் பட்டு வாணிபம் சிறந்திருந்தது. இவ் வுண்மையைக் கி.மு. ஆறாம் ஐந்தாம் நூற்றாண்டில்

வாழ்ந்த கிரேக்க எழுத்தாளர் ஹெகேதயஸ்[1] என்பவர் நன்கு விளக்கியுள்ளார். ஆறாம் நூற்றாண்டில் பாரசீகத்தில் ஆண்ட சைரஸ் (Cyrus), டேரியஸ் (Darius) போன்றார் காலத்திலேயும் அவர்தம் படைகள் இந்தியாவுக்கு வந்தன என்பது தெரிகிறது. இந்தத் தொடர்பு பின்னும் சில நூற்றாண்டுகள் தொடர்ந்திருந்தது. அப் படையெடுப்புக் களுள் ஒன்றுதான் கிரேக்க அலெக்ஸாந்தரின் படையெடுப்பு.

கிரேக்க நாட்டு மன்னனான அலெக்ஸாந்தர் பாரசீக மன்னரை வெற்றி கண்டு, மெள்ள மெள்ளக் கிழக்கு நோக்கி, கி.மு. 326ல் சிந்து நதிக் கரையில் வந்து சேர்ந்தான். அக் காலத்தில் கங்கைச் சமவெளியை நந்தர்கள் ஆண்டு வந்தார் கள். அவர்கள் செல்வத்திலும் புகழிலும் சிறந்தவர்களாய் விளங்கினார்கள். அவர்கள் புகழ் தென்கோடி வரையில் பரவி யிருந்தது. அவர்களுடைய புகழையும் செல்வத்தையும் அக் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் பாராட்டியிருக்கிறார் கள். எனவே, அவர்கள் புகழின் அளவை நாம் அறியக் கூடுமன்றோ?

அக் காலத்திலேதான் அலெக்ஸாந்தர் இந்திய மண்ணில் கால் வைத்தார். அவருடைய படை வீரர்கள் நாடு திரும்ப வேண்டும் என்று புரட்சி செய்யாதிருந்தால், ஒரு வேளை அவர்கள் கங்கைச் சமவெளிக்கு வந்திருக்கக் கூடும். அதுகாலை தமக்கு ஆட்சியே வேண்டும் என்று முயன்று கொண்டிருந்த சந்திரகுப்த மௌரியர் அலெக்ஸாந்தரின் துணையை நாடியிருக்க வேண்டும். சந்திரகுப்தரின் எண்ணம் நந்தப் பேரரசை வீழ்த்தவேண்டுமென்பதே. அதற்கு அவர் அலெக்ஸாந்தரின் துணையை நாடினார். பிறகு சாணக்கி யரின் துணையும் கிடைத்தது. எனவே, அவர் பாடலிபுரத்தில் அரசாண்ட நந்தரை வென்று, தாமே அப் பரந்த நிலப் பரப்புக்குத் தலைவரானார்.

1. Hekataius of Miletus, B. C. 549-486

சந்திரகுப்தரின் மண்ணாசை அத்துடன் அமையவில்லை இந்திய நாடு முழுவதையும் அவர் தம் ஆணையின்கீழ்க் கொண்டுவரத் திட்டமிட்டார்.[1] எனினும், அவர் தம் விருப்பத்தை முழுதும் நிறைவேற்ற இயலவில்லை. தெற்கே உள்ள ஆந்திரரும் தமிழரும் அவரது படையை உள்ளே அனுமதிக்கவில்லை. அவருடைய ஆட்சியின் எல்லைகள் கிழக்கே கலிங்கநாடு (ஒரிசா) வரையிலும், மேற்கே வடக்கு மைசூர்ப் பகுதி வரையிலும் அமைந்துவிட்டன. என்றாலும், அவர் குமரி வரையில் தம் படையைச் செலுத்தத் திட்டமிட்டார். அதற்குக் காரணம் இரண்டு: ஒன்று, நாட்டு ஆசை; எப்படியும் பரந்த இந்தியா முழுவதையும் தம் ஆணையின் கீழ்க் கொண்டு வரவேண்டுமென்பது; மற்றொன்று, தமிழ் வேந்தர்கள் தனது பகைவர்களாகிய நந்தர்களுக்கு நண்பர்களாய் இருந்ததோடு அவர்கள் புகழை பாடத் தமிழ்ப் புலவர்களையும் அனுமதித்ததாகும். எனவே, எப்படியாவது தமிழ் நாட்டு வேந்தரைத் தாக்க வாய்ப்பை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார் சந்திரகுப்தர். ஆம்! அந்த வாய்ப்பும் கிட்டியது. தமிழ் நாட்டு மன்னரோடு கலந்து வாழ்ந்த கோசர், எக்காரணத்தாலோ மோகூர் அரசனுடன் மாறுபட்டனர் போலும்! அவனை அவர்களால் வெல்ல முடியவில்லை. எனவே, அவர்கள் சந்திரகுப்தரைத் துணைக்கு அழைத்தார்கள். அவரும் பொதியம் வரையில் வந்து சென்றனர். ஆந்திரநாடு வழியாக வர இயலாத அவர் கொங்கணிப்பாதை வழியாக, மைசூர் எல்லையிற் புகுந்து, அதில் சில பகுதிகளைக் கொண்டு, அப்படியே தமிழ்நாட்டில் புகுந்தனர் எனக் காட்டுகின்றார் பானர்ஜி அவர்கள்.[2] மைசூர்க் கல்வெட்டு ஒன்றும் சந்திரகுப்தர் தென்னாட்டுப்

1. Political History of Ancient India, by H. Raychaudhri and Alex XII by Plutarch

2. Pre-historic, Ancient and Hindu India, by R.D. Banerji, M.A., p.85

படையெடுப்பைக் குறிப்பதோடு அந்நாட்டுச் சில பகுதிகள் அவர் ஆணையின் கீழ் இருந்தன என்றும் குறிக்கின்றது.[1] அந்த நாளில் அவரது ஆட்சி எல்லையைக் குறித்த படம் அத்துடன் கீழே தரப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டு எல்லை வரை சந்திரகுப்தர் வந்தார் என்பது வெளிப்படை. திரு பானர்ஜி அவர்களின் எழுத்துப்படி[2] ஆரியர்கள் இந்தோ ஆரியர்களாகிப் பஞ்சாபில் தங்கள் ஆட்சி எல்லையைப் பெருக்கிக்கொண்டபோது வடக்கே மகத நாட்டிலும் காமரூப நாட்டிலும் ஆண்டவர்கள் திராவிட மன்னர்களே என்பது விளங்குகின்றது. எனவே, அக்காலத்தில் ஆண்ட திராவிடர் அல்லது தமிழ் மன்னர் தம் பரம்பரையின் கடைசித் தலைமுறையாக நந்தர்கள் மகதத்தை ஆண்டிருக்கக்கூடும். எனவேதான் அவர்களுக்கும் தமிழருக்கும் இருந்த நட்பினைக் காண முடிகிறது. தமிழ் இலக்கியங்களும் அவர்களைப் பாராட்டுகின்றன.

தமிழர் அல்லது திராவிடர் பரம்பரையை அழிக்கச் சாணக்கியருடன் சேர்ந்த சந்திரகுப்தர் முயன்றிருப்பது இயல்பானதே. எனவே, வடநாட்டு ஆதிக்கத்தை ஒழித்த அவர், அவரது தென்னாட்டு ஆணையை அழிக்கவும் காலம் பார்த்திருப்பார். அது கோசர்வழி ஓரளவு நிறைவேறிற்று என்பது பொருந்தும்.

அவர் காலத்தில் இருந்த அலெக்ஸாந்தருக்குப் பின் வந்த கிரேக்க நாட்டு மன்னர் செலூக்கஸ் (Selukos) என்பவர் மெகஸ்தனிஸ் என்பவரைத் தூதுவராக அவர் அவைக்கு அனுப்பிவைத்தார் என்பது நாடறிந்த வரலாறாகும். மெகஸ்தனிஸ் வடநாட்டோடு நின்றுவிடாது தென்னாட்டுக்கும் இலங்கைக்குங்கூட வந்து, அவ்வந்நாட்டு

1. Rice-Mysore & Coorg from the inscription, p. 10
2. Pre-historic, Anceient and Hindu India, p. 30

வளப்பத்தையும் வாழ்வையும், பாண்டியர் போன்ற மன்னரையும், பிற சிறப்பியல்புகளையும் குறித்துச் சென்றார் என்பதை அவருடைய எழுத்துக்கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.[1] தாம்பிரபரணி பற்றியும் ஈழநாடு பற்றியும் அவர் குறித்துள்ளார்.

சந்திரகுப்தர் கடைசி நாளில் மைசூர் நாட்டில் வந்து தங்கி, சமண உண்மைகளைக் கேட்டறிந்து, அந்த நாட்டிலேயே கி.மு. 298 அல்லது 297ல் மறைந்தார் என்பர்.[2] சந்திரகுப்தர் பத்திரபாகு (Bhatrabahu) என்ற சமண ஆசிரியருடன் மைசூர் நாட்டுச் சிரவணபெலகோலாவில் வந்து தங்கினார் என்றும், வந்ததும் பத்திரபாகு மறைந்ததாகவும், சந்திரகுப்தர் பின்னர்ப் பன்னிரண்டு ஆண்டுகள் சமண நியதிப்படி உண்ணா நோன்பிருந்து உயிர்விட்டதாகவும், பின்பு அவரைப் பின்பற்றிய பல்லோர் தெற்கே புன்னாடு (Punnad - புனல்நாடு) நோக்கிச் சென்றதாகவும் கூறுவர்.[3]

சந்திரகுப்தரையும், அவரது மௌரியப் பரம்பரையையும் நந்தர் பரம்பரையையும் அவர்தம் செல்வத்தையும் தலைநகரையும் குறிக்க வருகின்ற தமிழ்ப் பாடல்கள் சங்க இலக்கியத்தில் சில உள்ளன. கடைச் சங்ககால இலக்கியத் தொகுப்பு என்று அவை பொதுவாகக் கூறப்படினும், சில செய்யுள்கள் அக் கடைச் சங்கத்துக்கு (கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரை) முற்பட்டன என்பதை ஆராய்ச்சியாளர் நன்கு உணர்வர்.

1. Foreign Notices of South India (University of Madras), p. 41
2. Political History of Ancient India, p. 199.
3. Historical Inscriptions of South India, University of Madras, p. 6.

இடைச் சங்கப் பாடல்களோ என எண்ணத்தக்க சிலவும் உள்ளன. இங்கு நாம் காண இருக்கும் பாடல்களெல்லாம் கி.மு. நான்காம் நூற்றாண்டில் சிறந்த புலவர்களால் பாடப் பட்டனவாகும்.

செல்லலொடு
நாம்படர் கூரும் அருந்துயர் கேட்பின்
நந்தர் வெறுக்கை எய்தினும் மற்று அவண்
தங்கலர் வாழி தோழி! வெல்கொடித்
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொல்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத்து இரங்கத்
தென்முனை சிதைத்த ஞான்றை' மோகூர்
பணியா மையின், பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்' (அகம்.251:3-12)

என்றும்,

'புகையிற் பொங்கி வியல்விசும்பு உகந்து
பனிஊர் அழற்கொடி கடுப்பத் தோன்றும்
இமயச் செய்வரை மானுங் கொல்லோ?
பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇ, கங்கை
நீர்முதல் கரந்த நிதியங் கொல்லோ?
எவன்கொல் வாழி தோழி!' (அகம்:265;1—7)

என்றும் மாமூலனார் பொருள்வயின் பிரிந்த தலைவனை எண்ணி வருந்திய தலைவியைத் தோழி தேற்றிய வகையில் கூறுகின்றார். இரண்டிலும் நந்தர்தம் புகழும் செல்வமும் பேசப்படுகின்றன. நந்தர் தமிழ் மன்னருக்கு நட்பினராய் இருந்தமையாலும், அவர்தம் செல்வம் உண்மையில் அளவிறந்து நின்றமையாலும், அதை எல்லையாக வைத்துப் பேசுகின்றார் புலவர்; ஆனால், உடனே அவரை அழித்த புதியராய் வந்த மோரியர் கொடுமையையும் புலப்படுத்துகின்றார். பழையரான நந்தரைவிடப் பின்

வந்த மோரியர் புதியராதலின், அவரை 'வம்ப மோரியர்' என்றார் புலவர். 'வம்பு' என்ற சொல்லுக்குப் புதுமை என்றும் (பிங்கலம்) நிலையின்மை என்றும் (தொல்காப்பியம்) பொருள் உண்டு. தம் நண்பராகிய நந்தர்மேல் படை எடுத்து வந்தவரைப் புதியர் எனக் கூறியதன்றி, நிலையற்ற வாழ்வை உடையவர் என இழித்துரைத்தலும் இயல்வதேயாகும். நந்தர் தம்முடைய பெருஞ்செல்வத்தை - பாடலியில் சேர்த்து வைத்திருந்த செல்வத்தை - இப்புதிய மோரியருக்கு அஞ்சிக் கங்கைக் கரையில் மூடி மறைத்துவைத்தனர் என்பதை இரண்டாவது பாட்டு (265) நன்கு காட்டுகின்றது, நந்தர் பரம்பரையைப் பல்வேறு இன்னல்களுக்கு உட்படுத்தி, அவர்தம் ஆட்சியையும் செல்வத்தையும் சந்திரகுப்தர் கைப்பற்றினார் என்னும் உண்மையை ஸ்மித்து அவர்கள் நன்கு காட்டியுள்ளார்கள்.[1] மேலும், அவர் அவர்தம் பாடலிபுத்திரம் இப்போதைய பாட்னா அன்று எனவும், அது அக்காலத்தில் சோன் (sonn) நதிக்கரையில் இருந்தது எனவும் காட்டுகின்றார்.[2] எனவே, நந்தர் செல்வ நிலையையும், அதை அழித்த மோரியரையும் நினைத்த மாமூலனார், ஒரே பாட்டில் இருவரையும் குறிக்கின்றார்; மோரியரைக் குறிக்கும் போது அவர்தம் தமிழ் நாட்டுப் படை எடுப்பு நினைவுக்கு வர, அதையும் விளக்கிக் காட்டிவிடுகின்றார். மௌரியர் மேலைக் கடற்கரை வழியாக மைசூர்ப் பகுதியிற் புகுந்து தமிழ் நாட்டு எல்லையில் போர் கருதி வந்தனர் என வரலாற்று ஆசிரியர் காட்டியதை மேலே கண்டோம். ஆனால், அவர்கள் வரக் காரணமாயிருந்தவர்களைக் காண முடியவில்லையே! மாமூலனார் அந்த ஐயத்தை நன்றாக விளக்குகின்றார் தமது அகப்பாட்டிலே (251).

1. The Early History of India, by V. A. Smith, p. 124.
2. The Oxford History of India, p. 77.

தமிழ் நாட்டு எல்லைக்கு அப்பாலிருந்து சிறந்த படையை உடைய கோசர் என்பார், பொதியிலின் பக்கத்திலிருந்த பலரையும் வென்று, தம்மடிப்படுத்தினர். அது காலை ஆண்டு ஒரு பக்கத்திலிருந்த மோகூர் மன்னன் பணியவில்லை. அவனை வெல்லும் ஆற்றல் தமக்கு இல்லாமையைக் கண்ட கோசர், வேற்றவர் துணையை நாடினர். அதே வேளையில் தமிழர்மேல்—தம் மாற்றலர் நண்பர்மேல்—பழி தீர்க்க நினைத்த சந்திர குப்தர் மைசூர் எல்லையில் வந்து தங்கியிருப்பர். அவர் செல்வத்தையும் படை வலியையும் கோசர் கேள்வியுற்றிருப்பர். எனவே, அவரை அழைத்திருக்கலாம். காலம் பார்த்திருந்த அவரும் துணை செய்திருக்கலாம். அவரே பொதியில் வரையில் வந்தார் என்று கொள்ள வேண்டுவதின்று. அவருடைய படைகள் அனுப்பப்பட்டிருக்கலாம். அப்படையுடன் கோசர் வந்து மோகூரைப் பணிய வைத்திருக்கலாம். எனினும், அவர்கள் நெடுங்காலம் தமிழ்நாட்டில் தங்கினார்கள் என்றோ, அன்றி ஆண்டார்களென்றோ கூறுதல் இயலாது. நாட்டின் நிலையும் மக்கள் எழுச்சியும் அவர்களைப் பிறகு விரட்டி அடித்திருக்கக் கூடும். எனினும், அவர்கள் துணையுடன் தமிழ் நாட்டில் வந்த 'கோசர்' நிலைத்துத் தங்கி விட்டனர் என்பது நன்கு தெரிகின்றது.[1] திரு. இராகவையங்கார் அவர்கள் தம் ஆராய்ச்சி நூலில் சந்திர குப்தர் மகிஷ மண்டலமாகிய மைசூர் நாட்டில் சிரவணவேள்குளத்து (சிரவணபெலகோலா)த் தங்கினார் என்பதையும் காட்டுகின்றார்.[2]

திரு. இராகவையங்கார் அவர்கள் மதுரைக் காஞ்சி அடிகளையும் அகநானூற்று (251) அடிகளையும் ஒன்றாக

1. கோசர்-ஒரு சிற்றாராய்ச்சி—ரா. இராகவையங்கார் (அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு, 1951.)
2. ஷை ப. 17.

இணைக்க முயல்கின்றார். வடுகரை முன்னிறுத்தி (அகம் 281) வந்தவர் மோரியர் எனவும், அவர்கள் மோகூர்ப் பழையனை எதிர்த்த போது கோசர் மோகூர்ப்பழையனுக்குத் துணையாய் இருந்தனர் எனவும், எனவே, மோரியர் கோசரையும் மோகூர்ப்பழையனையும் எதிர்த்தவர் எனவும் குறிக்கின்றார்.[1] எனினும், அகநானூற்று 251-ஆம் பாடல் கோசர் தமிழ் நாட்டு வெளியிலிருந்து சூறைக்காற்றெனத் தமிழ் நாட்டுத் தென்கோடி வரையில் சென்றனர் எனவும், மோகூர்ப் பழையன் பணியவில்லை எனவும், அதற்கெனவே மோரியர் வந்தனர் எனவும் நன்கு காட்டுகின்றது. மற்றும், அகம் 281ல் குறிக்கும் 'வடுகர்' எனப்படுவார் கோசரே யாவர். அவர்கள், கி. மு. நான்காம் மூன்றாம் நூற்றாண்டில் தமிழ் மன்னரோடு மாறுபட்டுப் படையெடுத்து இந்நாட்டுக்கு வந்தவராயினும், சில நூற்றாண்டுகள் கழித்து, மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சி பாடிய காலத்து, அவர்தம் பகைவனாகிய மோகூர்ப்பழையனுடன் நண்பராகவே விளங்கினர் எனக் கொள்ளல் பொருந்தும். இது பற்றிப் பின்னும் காண்போம்

மேலும், ஐயங்கார் அவர்கள் மோரியர் குறைத்த அறைவாய் கள்ளக்குறிச்சி மலையிடை வழியாகும் என்றும், கோசர் பாடி என்னும் ஊர்கள் அப்பக்கத்திலே உள்ளன வென்றும் காட்டுகிறார், எனவே, சந்திரகுப்த மௌரியர் அந்தப் பழங்காலத்தே தமிழ்நாட்டுள் புகுந்து போர் செய்த னர் என்பது நன்கு விளங்குகிறதன்றோ!

இந்தப் போராட்டத்தைப் பற்றி இந்த இரு அகப் பாடல் மட்டுமன்றி வேறு சில பாடல்களும் குறிக்கின்றன. மோரியர் பற்றிய குறிப்புக்கள் புறப் பாடல்களிலும் உள்ளன. அவற்றையும் காண்போம்.

---

1. கோசர்—ஒரு சிற்றாராய்ச்சி, ப. 16

பரங்கொற்றனார் என்ற புலவர், அகம் 69ல் இம் மோரியர் திகிரி திரிதரக் குறைத்த நிலையைக் கூறி அதன் எல்லை கடந்து சென்றவராயினும், பொருள்வயின் சென்ற தலைவர் காலம் நீட்டிக்காது வந்துவிடுவார் எனக் காட்டுகின்றார்.

'விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறைஇறந்து அகன்றன ராயினும் எனையதூஉம்
நீடலர் வாழி தோழி!' (அகம்.69:10—13)

'வெண்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறைவாய் நிலை இய
மலர்வாய் மண்டிலத்து அன்ன, நாளும்
பலர்புரவு எதிர்ந்த அறத்துறை நின்னே,'
(புறம், 175)

என்று வேங்கடமலை எல்லையில் வாழ்ந்த ஆதனுங்கன் என்ற மன்னனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடிய பாட்டு அமைந்துள்ளது. இதில் மோரியர் பற்றிய குறிப்பு வருவதைக் காணலாம். எனவே, மோரியர் அல்லது மௌரியர் தமிழருக்குத் தெரிந்தவரே என்பதும், அவர்கள் காலத்தில், அதாவது கி.மு. நான்காம் நூற்றாண்டில், தமிழ் நாட்டவர்கள் செல்வத்தாலும் பிற சிறப்பாலும் மேலோங்கி இருந்ததோடு, இமயம் வரை பல மன்னர்களுடன் நல்லுறவு கொண்டு சிறந்திருந்தார்கள் என்பதும், நந்தர் பரம்பரையினர் இவர்களுக்கு உற்ற நண்பர்களாகவே, அவர் தம் மாற்றார் காலம் பார்த்துக் கோசர்களுக்காக இவர் தம் நாட்டின்மேல் படை எடுத்தனர் என்பதும் அறியக் கிடக்கின்றன.

இனி, நம் குறிப்பில் வரும் கோசர் யார்? அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்? அவர்களுக்கும் தமிழ்

நாட்டுக்கும் என்ன தொடர்பு? இவை பற்றி ஒரு சிறிது காணலாம்: கோசர்களைத் தமிழ் இலக்கியங்கள் 'நான் மொழிக்கோசர்' (மதுரைக்காஞ்சி), 'செம்மற்கோசர்' (அகம். 15), 'புனைதேர்க் கோசர்' (அகம். 251), 'இளம்பல் கோசர்' (புறம். 146), 'கருங்கட் கோசர்' (அகம். 90), 'பல்வேற் கோசர்' (அகம். 113), 'ஒன்றுமொழி கோசர்' (அகம். 196), 'வளங்கெழு கோசர்' (அகம். 205), 'பல்லிளங் கோசர்' (அகம். 216), 'முதுகோசர்' (அகம். 262) எனக் குறிக்கின்றன. எனவே, அவர்கள் தமிழ் நாட்டுக்கு நெடு நாள் பழக்கமானவர்களானதோடு, சிறந்த வீரர்களாயும் உண்மை பேசுபவர்களாயும் இருந்தார்கள் எனக் கொள்ள வேண்டும். அவர்களை வரலாற்று ஆசிரியர் 'சத்திய புதத்திரர்கள்' என்பர். ஒரு சிலர் இக்கொள்கைக்குத் தக்க சான்றுகள் இல்லை எனக்கூறி மறுப்பினும், பலர் அவர் களைச் சத்திய புத்திரர் எனவே கொள்ளுவர். அவர்கள் கள் வாழ்ந்த அல்லது ஆணை செலுத்திய இடம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் இருப்பினும், திரு. தோமா' (P. J. Thoma) அவர்கள் கூற்றே ஏற்றுக்கொள்ளக் கூடிய தாய் உள்ளது. அவர் கூற்றுப்படி, அவர்கள் நாடு, வட மலையாளப் பகுதியும், தென்கன்னட காசக்கோடு பகுதி யும் உள்ளடங்கிய நாடு என்று கொள்வதே பொருத்த மாகும். அப்பகுதி 'சத்திய பூமி' எனவும் வழங்கப் பெறுகிறதாம்.[1] இது சந்திரகுப்தர் மைசூர் வழியை மேற் கொண்டதற்கு ஒரு காரணமாகவும் அமையலாம். மற்றும் பிற்காலத்தில் இப்பகுதியை ஆண்ட செங்குட்டுவனுக்கும் பழையனுக்கும் போர் நடந்ததும் பதிற்றுப்பத்தால் அறிய இயல்கின்றது.[2] இப்போர் நீண்ட காலம் நிலவியது போலும்!

1. Journal of Royal Asiatic Society, 1923, p. 412.
2. பதிற்றுப்பத்து (44:11-18; 49: 7-16)

இவ்வாறு கோசருக்காக வடக்கே பாடலியில் வாழ்ந்து மைசூர் வரை ஆண்ட சந்திரகுப்தர் தமிழ் நாட்டின்மேல் படை எடுத்தார் என்பது முழுதும் பொய் என்று அறிஞர் சிலர் துணிந்து எழுதுகின்றனர். எனவே, அவர்தம் கருத்துப் பற்றி ஆராய்ந்து, அக்கருத்தும், அதற்கு அவர் காட்டும் சான்றுகளும் பொருத்தமற்றவை என்று எடுத்துக்காட்ட வேண்டுவதும் நம் கடமையன்றோ? அவர்கள் மோரியர் என்ற சொல்லே சந்திரகுப்த மௌரியரையோ, அவர் பரம்பரையையோ குறியாது என்பர். அதற்கு அவர்கள் காட்டும் சான்று, புறம். 175ஆம் பாட்டுக்கு உரையாசிரியர் எழுதிய உரையாகும். அதில் உரையாசிரியர் மோரியர் என்ற சொல்லுக்கு 'நிலமுழுதும் ஆண்ட வேந்தர்' எனக் குறித்துள்ளாராம். அதைக் கொண்டு, மோரியர் ஓர் இனமாயின், அதைக் குறியாது இப்படிப் பொதுப்பட எழுதுவாரா எனக் காட்டி, எனவே மோரியர் என்ற சொல் ஓரியராகத்தான் இருக்கவேண்டும் என வாதிடுவர். 'ஓரியர்' என்ற சொல், 'ஊலி' என்ற சொல்லை முதலாகக் கொண்டது என்றும், அதற்கு 'அகன்ற நிலப்பரப்பை உடையது' என்றபொருள் உண்டு என்றும் காட்டி, அந்த வட சொல்லே இங்கு எடுத்தாளப் பெறுவது என்பர். இது பொருந்துமா? புறநானூற்று உரையாசிரியர் அவர் காலத்தில் வழங்கிய எம்முறை கொண்டு அத்தொடருக்கு இப் பொருள் கொண்டாரோ யாமறியோம்! எனினும், அவர் கொண்ட அதே பொருளிலும் இழுக்கு ஒன்றும் இல்லையல்லவா? ஒரு சிறு பகுதியாகிய தமிழ் நாட்டை மூன்று பிரிவுகளாகக் கொண்டதோடு, இவற்றுக்குள்ளும் சிறுசிறு அரசுகளை அமைத்துக்கொண்டு அடிப்படுத்தி ஆளும் இந்த நிலை நோக்க, இமயம் முதல் மைசூர் வரை ஆண்ட மன்னர் பெருநிலப் பரப்பை உடையவர் என்று கொள்ளுதல் தவறில்லையே! மற்றும் இந்திய வரலாற்றிலேயே, வரலாற்று எல்லைக்கு உட்பட்ட காலத்தில் முதல் முதல் இத்துணைப் பரந்த நிலப்பரப்பைக் கொண்டு ஆண்ட

பெருமை அந்த மோரிய பரம்பரையைச் சார்ந்ததுதானே? இதைக் கொண்டாலும் அவருக்கு இவர் காட்டிய உரை பொருந்தியே தோன்றும். மற்றும், இதே சொல்லுக்குப் பிறவிடங்களில் வரும் பொருள்களையும் நோக்கின், உண்மை தெளிவாகுமல்லவா? மற்றும் ஓரே பாட்டில் நந்தரையும் அவருக்கு மாறுபட்ட மோரியரையும் கொண்டு வந்து காட்டும் மாமூலனார் கருத்து என்ன? நந்தர்களுக்கு வேறு எப்படி உரை காண்பது? மோகூர்ப் பழையன் பணியாமையின் கோசர் மோரியரை அழைத்து வந்தனர் என்ற உண்மையைத் திட்டமாகக் காட்டுகின்றாரே! இதை எக்காரணம் கொண்டு மறைக்க இயலும்?

'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு'

(அகம் 281)

என்று அகநானூற்றிலே இதே மாமூலர் தெள்ளத் தெளிய வடக்கே உள்ள வடுகர் முன்னுற, அவர் பின் தென்திசை வந்த மோரியர் எனக் காட்டுகின்றாரே! இதற்கு என்ன பொருள் கொள்ள முடியும்? எனவே, மோரியர் தம் தென்னாட்டுப் படையெடுப்பு உறுதி எனக் கொள்ளலாகும்.

மற்றொரு காரணம் காட்டியும் இப்படையெடுப்பை மாற்ற நினைப்பர். அதையும் எண்ணிப் பார்க்கலாம். மோரியர் 'கோசர்'களுக்காகத்தானே தமிழ்நாட்டுக்கு— அதிலும் சிறப்பாகப் பொதியத்தின் பக்கல் வாழ்ந்த பழையன் நாட்டுக்கு வந்தார்கள் எனவும், ஆனால் கோசரும் பழையனும் நண்பர்களாய் உள்ளார்கள் என மதுரைக்காஞ்சி மூலம் நாம் காண்பதால் அவர்கள் மாறுபடவில்லை எனவும், அவர்வழி மோரியர் படையெடுப்பு இல்லையெனவும் காட்ட முனைவர். மதுரைக்காஞ்சியில் வரும் அடிகள் இவையே :

'பழையன் மோகூர் அவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன'

(மதுரைக்காஞ்சி, 508-9)

இவற்றில் கோசர்கள் மோகூர்ப் பழையனுக்கு நண்பர்களாய் இருந்தார்கள் எனக்கொள்ள இடமுண்டாகின்றது. இதனால் கோசருக்கும் பழையனுக்கும் போர் உண்டாகவில்லை என்று கொள்ள முடியுமா? மாமூலனார் காலத்துக்கும் மாங்குடி மருதனார் காலத்துக்கும் இடையில் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளாவது கழிந்திருக்க வேண்டும். எனவே, பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் நண்பராய் இருந்த இருவரும் அதற்கு முன்னோ பின்னோ மாறுபடவில்லை என்று யார் கூற முடியும்? இக்காலத்திலும் இவ்வுண்மை நமக்கு நன்கு தெரிகின்றதே! வரலாற்றில் எத்துணைப் பெரு மன்னர்கள் ஒருகால் இணைந்து சிறந்தும், அடுத்தொருகால் மாறுபட்டுப் போரிட்டும் வேறுபடுவதைக் காண்கின்றோம்! இன்றும் நேற்று எதிர்க் கட்சியில் இருந்தவர் இன்று மாற்றுக் கட்சியிற்புகுந்து தலைவராதலையும் பழைய கட்சியைப் பழிப்பதையும் காண்கின்றோமே! நேற்றைய நண்பர் இன்றைய பகைவராயும், நேற்றைய பகைவர் இன்றைய நண்பராயும் மாறுதல் அரசியலில் மிக எளிமையாக நடக்கக் கூடியனவேயாகும். இந்த மதுரைக் காஞ்சியின்படி கோசர் பழையனுக்குக் கண்ணும் கவசமும் போன்று அருகிருந்து பிழையா நெறி காட்டும் நாற்பெருங்குழுவென இருந்தார்கள் என்று கொள்ள முடிகின்றது. எனினும், அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன் அவர்கள் மாறுபடவில்லை என்று எப்படி கொள்ள முடியும்? எனவே, இதைக்கொண்டு மோரியர் படை எடுப்பு இல்லை என அறுதியிட முடியாது.

எனவே, கி.மு. நான்காம் நூற்றாண்டில், வடக்கே மோரியப் பேரரசு தழைத்த காலத்தில், தமிழகமும் சிறந்து நின்றதென்பதும், தமிழர் புகழும் பண்பும் இமயம்வரை சென்றன என்பதும், சந்திரகுப்தர் நாடு தமிழ் நாட்டு எல்லை வரை இருந்ததென்பதும், அவர் தமிழ்நாட்டின்மேல்

கோசருக்காகப் படை எடுத்து வந்தனர் என்பதும், படை எடுப்பினும் தமிழ்நாட்டை அடக்கி ஆள முடியவில்லை என்பதும், எனவே அக்காலத்தில் தென்னாடு வடநாட்டினும் ஏற்றம் பெற்றே விளங்கியதென்பதும், அக்காலத்தில் வந்த கிரேக்க நாட்டுத் தூதுவர் மெகஸ்தனிஸ் இத்தமிழ் நாட்டையும் புகழ்ந்துள்ளார் என்பதும், தமிழர் தலைநகரங்களில் சீன நாடு தொடங்கிக் கிரேக்க நாடு வரை உள்ள வணிகர்கள் மண்டிக் கிடந்தார்கள் என்பதும் தேற்றமாகும்.

★

# எடுத்தாண்ட நூல்கள்

## தமிழ்

1. தொல்காப்பியம்
2. இருக்கு வேதம் (மொழி பெயர்ப்பு)
3. அதவர்ண வேதம் ,,
4. அகநானூறு
5. புறநானூறு
6. கலித்தொகை
7. குறுந்தொகை
8. முல்லைப்பாட்டு
9. மதுரைக்காஞ்சி
10. பதிற்றுப்பத்து
11. பரிபாடல்
12. சிலப்பதிகாரம்
13. மணிமேகலை
14. அப்பர் தேவாரம்
15. நச்சினார்க்கினியர் உரைப்பாயிரம்
16. கம்ப ராமாயணம்
17. கந்த புராணம்
18. சிவதருமோத்திரம்
19. சிவஞான முனிவர் பாயிரவிருத்தி
20. தமிழ் மொழி வரலாறு- திரு.வி.கோ. சூரியநாராயண சாத்திரியார்
21. தமிழ் வரலாறு—திரு. K. சீனிவாசப்பிள்ளை
22. தொல். எழுத்து. நச்.உரை - முன்னுரை திரு.—கா. சுப்பிரமணியப்பிள்ளை
23. கோசர்-ரா. இராகவையங்கார்
24. கொய்த மலர்கள்—அ.மு.ப.
25. ஏழுநாடுகளில் எழுபது நாட்கள் அ.மு.ப.

## ENGLISH


1. Adolf Daegl — Rig Veda
2. Apte, V.M. — Vedic Age
3. Banerji R.D. — Pre-Historic, Ancient and Hindu India
4. Barnett — Antiquities of India
5. Bhandarkar, M.A. — Asoka
6. Bhandarkar, R.G. — Early History of Deccan
7. Caldwell — Dravidian Comparative Grammar
8. Chatterji, S.K. — Race movements and Pre-historic Culture
9. Filliozat, Z. — Political History of India
10. Ghosh, B.R. — In Vedic India
11. Gopinatha Rao, T.A. — Elements of Hindu Iconography
12. Hulzack — Political History of Ancient India
13. Hall, H.R. — Mohenjo-Daro and Indus Civilization
14. John Marshall — Indus Civilization
15. Macdonell — India's Past
16. Manho Sarup Vats — Excavation in Harappa
17. Majumdar, R.G. — Vedic India
18. Marlwalla, C.L. — Mohan-Jo-Daro
19. Megasthenes (Notes) —
20. Plutarch — Alexander, XII
21. Pulaskar, A.D. — Treditional History from the earliest times to the accession of Parikshit
22. Puranalingam Pillai, M.S. — Ravana the Great
23. Periplus (Notes) —
24. Rapson (Prof.) — Ancient India

25. Ray Chowdri, H. — Political History of Ancient India

26. Rice — Mysore & Coorg from the Inscriptions

27. Robert Sewell — Historical Inscriptions of South India

28. Scott Eliot — The Lost Lemuria

29. Sesha Iyyangar — Dravidian India

30. Sinha & Banerji — History of India

31. Smith, Vincent, A. — Early History of India, Oxford History of India (III Edition) Cambridge History of India

32. Srinivasa Iyyangar, P.T. — Stone Age in India

33. Shamash & Ishtar — Indus Civilization

34. Sivaraja Pillai, K.N. — Agastiya in Tamil land

35. University of Madras — Foreign Notices of South India

36. " Historical Inscriptions of South India

37. Varahamihira — Brihat Samhita (Translation)

38. Winternitz — A History of India

39. Encyclopaedia of Social Science — (Vol. III)

40. South Indian Inscriptions — (Vol. I)

41. Journal of Royal Asiatic Society — (1923)

42. Indian Antiquity

43. Madras Mail (Daily)

## அ. மு. ப. அவர்களின் 90 நூல்களில்

### தற்போது கிடைப்பவை

| | | |
|---|---|---|
| கொய்த மலர்கள் | 8 | 00 |
| தொழில் வளம் | 15 | 00 |
| எல்லோரும் வாழவேண்டும் | 7 | 00 |
| வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள் | 10 | 00 |
| மலைவாழ் மக்கள் மாண்பு | 16 | 00 |
| பல்கலைக்கழகச் சொற்பொழிவுகள் | 20 | 00 |
| வையைத் தமிழ் | 8 | 00 |
| கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | 10 | 00 |

### புதியவை

| | | |
|---|---|---|
| ஏழு நாடுகளில் எழுபது நாட்கள் | 36 | 00 |
| திரும்பிப் பார்க்கிறேன் திகைத்து நிற்கிறேன் | 12 | 00 |
| வரலாற்றுக்குமுன் வடக்கும் தெற்கும் | 6 | 00 |
| தமிழர் வாழ்வு | 16 | 00 |
| ஓங்குக உலகம் | 16 | 00 |
| கவிதையும் வாழ்க்கையும் (மறுபதிப்பு) | 20 | 00 |
| வரலாற்றுப் புதையல் | 4 | 00 |
| தாய்மை | 20 | 00 |

### ஆங்கில நூல்கள்

| | | |
|---|---|---|
| Ancient Temples of Tamil Nadu | 30 | 00 |
| Historical Studies of Thevara Hymns | 12 | 00 |